# சாமிநாதப் பள்ளு

பதிப்பாசிரியர்

த. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சென்னை - 600 113

# சாமிநாதப் பள்ளு

பதிப்பாசிரியர்

**த. பூமிநாகநாதன்**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Cāminātap paḻḻu |
| Author | : | Mr. D. Boominaganathan |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113. |
| Edition | : | First |
| Date of Publication | : | 2000 |
| Publication No. | : | 353 |
| Language | : | Tamil |
| Paper Used | : | 16 kg.TNPL Super Printing |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 11 points |
| No. of Pages | : | xvi + 192 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 45/- |
| Typeset by | : | Shri Vignesh Printers<br>158/4, Lake View Road<br>West Mambalam, Chennai - 600 033 |
| Printed by | : | United Bind Graphics<br>189, (101-D), Royapettah High Road<br>Mylapore, Luz, Chennai - 600 004 |
| Subject | : | Minor Literature - Paḻḻu |

Printed and published with the Financial Assistance from the Government of India, Ministry of Education & Culture, National Archives, Janpath, New Delhi, vide sanction letter F.No. 31-1(16)/96 Grants dt. 04-03-1997 and copyright vests with the Director, International Institute of Tamil Studies, Chennai - 113.

**முனைவர் ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - *600 113.*

## அணிந்துரை

தொல்காப்பியர் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தார். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். அவற்றுள் மருதம் என்பது வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகும். அந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் உழவுத் தொழிலைச் செய்து வந்தனர். அவர்களுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்டு கவிஞர்கள் அக்காலத்தில் பாடல்கள் புனைந்தனர். உழத்திப் பாட்டு என்பது அவ்வாறு உருவான இலக்கிய வகையாகும். உழத்தி அரசனை வாழ்த்தி, உழவுத் தொழிலின் மேன்மையைப் பத்துப் பாடல்களில் கூறும் இலக்கிய வகை 'உழத்திப் பாட்டு' என்று பன்னிருபாட்டியல் என்ற இலக்கண நூல் கூறுகிறது (பன்னிருபாட்டியல் *216*). உழவர் வாழ்க்கையைப் புனைந்துரைப்பதால் இதனை உழத்திப்பாட்டு என்றனர். உழத்திப் பாட்டு எனும் இலக்கிய வகை உருவாவதற்குரிய கரு, தொல்காப்பியச் செய்யுளியலில் காணப்படுகிறது. நூலுக்குரிய எட்டு வகை வனப்புகளில் ஒன்றான 'புலன்' என்ற வகையைத் தொல்காப்பியம் பின்வருமாறு சுட்டுகிறது (செய்யுளியல் *553*).

சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே

'வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு, ஆராய வேண்டாமல் பொருள் விளங்குவது புலனென்னும் செய்யுளாம்' என இளம்பூரணர் இந்நூற்பாவிற்குப் பொருள் எழுதியுள்ளார்.

இப்பகுதிக்குத் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர், 'அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன என்பது கண்டுகொள்க' என்று மொழிந்துள்ளார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களின் குறிப்புகளில் இருந்து அக்காலத்தில் பாமர மக்களின் வழக்குச் சொற்களை அடிப்படையாக வைத்து இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திலும் ஆக்கப்பட்டன என்பதும் அவ்வகை இலக்கியங்களில் ஆடலும் பாடலும் இடம் பெற்றிருந்தன என்பதும் அவை நாடகங்கள் என அழைக்கப்பட்டன என்பதும் நாம் உணரத் தக்க செய்திகள் ஆகும்.

சிலப்பதிகாரத்தில் உழவுத் தொழிலின் சிறப்புக் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. உழவர், அல்லது உழத்தியர் தனியாகவோ, குழுவாகவோ கழனியில் வேலைசெய்துகொண்டு இருக்கின்றபோது அவர்களுக்கு வேலைப் பளு தெரியாமல் இருப்பதற்காகப் பாடல்களைப் பாடுவர். வயலில் நாற்று நடும்போது பெண்கள் பாடிய பாடலை 'விருந்திற்பாணி' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

உழவர்கள் முதன்முதலாக நிலத்தை உழுவதற்கு முன்னர் ஏரைப் போற்றிப் பாடலைப் பாடுவார்கள். இப்பாடலுக்கு 'ஏர்மங்கலம்' என்று பெயர். இதனைப் 'பொன்னேர் பூட்டுதல்' என்றும் 'நாளேரிடல்' என்றும் குறிப்பிடுவர். உழவர்கள் பாடும் ஏர்மங்கலப் பாடலைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

நிலத்தில் நெற்கதிர்கள் முளைத்து அறுவடை செய்த பின்னர் அவற்றை மேட்டுப் பகுதியில் இட்டுக் காளைகளை வைத்து மிதிக்க விடுவார்கள். அப்போது உழவர்கள் பாடுகின்ற பாடலின் பெயர் 'முகவைப் பாட்டு' என்பதாகும். 'பொலிப்பாட்டு' என்றும் இதனைக் குறிப்பிடுவர்.

இயல் பாடல்களைக் காட்டிலும் இசைப்பாடல்கள் மிகவும் எளிமையானவை. இவ்வகைப் பாடல்கள் வரிப்பாடல்கள் எனப்பட்டன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலிய வரிப்பாடல்கள் எளிய நடையில் அமைந்துள்ளன.

உழவுத் தொழிலைப் பற்றியும் உழவர்கள் சிறப்பைப் பற்றியும் பாவாணர்கள் பாடிய பாடல்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி உழத்திப் பாட்டாக உருப்பெற்றது என்று குறிப்பிடலாம். கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிருபாட்டியல் என்ற இலக்கண நூல் உழத்திப் பாட்டுக் குறித்து இலக்கணம் கூறுகிறது. இலக்கியம் கண்டதற்குத்தான் இலக்கணம். அவர் காலத்தில் உழத்திப் பாட்டு என்ற இலக்கிய வகை இருந்திருக்கலாம். . ஆயின் இன்று அவை நமக்குக் கிடைக்கவில்லை.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய நவநீதப்பாட்டியலில் உழத்திப் பாட்டுப் பகுதியில் பிற்காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்ற நான்கு மிகைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் முக்கூடற் பள்ளுவை மனதில் கொண்டு எழுதப்பட்டவை என எண்ணத் தோன்றுகிறது.

மேலும் அந்நூல் 'உழத்திப் பாட்டு' பற்றி விளக்கம் சொல்லுகின்ற போது உழத்திபாட்டைப் 'பள்ளும்' என்பர் என்று குறிப்பிடுகிறது.

வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதியில் உழத்திப்பாட்டும் பள்ளுப்பாட்டும் ஒன்றே என்ற குறிப்புக் காணப்படுகிறது. இவ்வாறு நவநீதப்பாட்டியலில் இடம் பெற்றிருந்த மிகைப் பாடல்கள் காரணமாக உழத்திப் பாட்டும் பள்ளுப்பாட்டும் ஒன்றே என்ற கருத்து உருவாயிற்று எனலாம்.

குறத்திப் பாட்டு, குறவஞ்சி இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தது போல் உழத்திப்பாட்டு பள்ளு இலக்கியம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது என்று கருதுவதே ஏற்புடையதாகும்.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பள்ளு இலக்கியம் தமிழ் இலக்கியத்தில் தோற்றம் பெற்றது. 96 வகை சிற்றிலக்கியங்களுள் பள்ளு,குறவஞ்சி, நொண்டி நாடகம் மக்களிடையே செல்வாக்குப்பெற்ற இலக்கியங்கள் ஆகும்.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கமலை ஞானப்பிரகாசரால் எழுதப்பட்ட திருவாரூர்ப் பள்ளு எனும் தியாகேசர் பள்ளு எனும் நூல் பள்ளு இலக்கியத்தில் வெளிவந்த முதல் நூல் என்று கருதப்படுகிறது. இந்நூல் ஞானப்பள்ளு என்றும் ஆதிப் பள்ளு என்றும் பிற பெயர்களால் குறிக்கப்படுகிறது. கோயிலில் இப்பள்ளு பாடப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

பள்ளு நூல்கள் பல வெண்பா, கலித்துறை, விருத்தம், சிந்து முதலிய பா மற்றும் பாவினங்களால் இயற்றப்பட்டுள்ளன.

பள்ளு நூல்களின் வழி வரலாற்றுச் செய்திகளையும் பள்ளர் வாழ்க்கையையும் அறியலாம். மேலும் மழை வருவது குறித்தும் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து வருவது குறித்தும் நெல் வகை, மாட்டு வகை,ஏர் வகை முதலியவை குறித்தும் அறிந்துகொள்வதற்கு இந்நூல்கள் துணை செய்கின்றன.

பள்ளன் இருவேறு ஊர்களில் வாழ்ந்த இருவேறு சமயத்தைச் சார்ந்த பெண்களை மணந்துகொள்கிறான். பள்ளன் இளைய பள்ளியிடம் மோகம் கொண்டு அவளிடமே தங்கிவிட, மூத்த பள்ளி பண்ணைக்காரனிடம் பள்ளனைப்

பற்றி முறையிடுகிறாள். பண்ணைக்காரன் இளைய பள்ளி வீட்டில் இருந்த பள்ளனை வேலைக்கு வரச்சொல்கிறான். ஆயின் பள்ளன் அவனுடைய பணியில் கவனம் செலுத்தாமல் இருக்கவே பண்ணைக்காரன் மாட்டுத் தொழுவத்தில் அவனைக் கட்டிவிடுகிறான். மூத்த பள்ளி தன்னுடைய கணவனின் இன்னலைக் கண்டு வருந்திப் பண்ணைக்காரனிடம் அவனை விடுவிக்கச் சொல்கிறாள். மூத்த பள்ளியின் வேண்டுகோளை ஏற்று, பண்ணைக்காரன் பள்ளனை விடுவித்து விடுகிறான்.

பள்ளன் நிலத்தை உழத் தொடங்குகிறான். அப்போது மாடு முட்டிப் பள்ளன் கீழே விழுகிறான். அங்கே மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் வருகின்றனர். ஒருவரை ஒருவர் ஏசுகின்றனர். பள்ளன் மயக்கத்தில் இருந்து விழிக்கிறான். இரு பள்ளியரும் மகிழ்ந்து இணைகின்றனர். பள்ளு நூல்களில் காணப்படும் பொதுவான கதை அமைப்பு இதுவாகும்.

'நெல் வகையை எண்ணினாலும் எண்ணலாம், பள்ளு வகையை எண்ணவே முடியாது' என்பது நெல்லை மாவட்டத்தில் வழங்கும் பழமொழி. பள்ளு இலக்கியத்தின் பெருக்கத்தையும் அவை மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கையும் இப்பழமொழி மூலம் அறியலாம்.

பள்ளு நூல்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது 'முக்கூடற் பள்ளு' என்பதாகும். கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சித்திரா நதியும், கோதண்டராம நதியும் பொருநை நதியுடன் கூடும் இடத்தில் 'முக்கூடல்' எனும் ஊர் அமைந்துள்ளது. அவ்வூரில் எழுந்தருளியுள்ள அழகர் மீது பாடப்பட்டது முக்கூடற் பள்ளு என்னும் நூலாகும்.

முக்கூடற் பள்ளு என்னும் இந்நூலை கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேளான் சின்னத்தம்பி என்னும் பெயரை உடைய என்னயினாப்புலவர் நாடகமாக அமைத்துள்ளார். முக்கூடற் பள்ளு நெல்லை மாவட்டத்தில் சிறப்பாகப் பாடப்படுகிறது. கல்வி கற்க விரும்பும் சிறுவர்களுக்கு முதன் முதலாக இந்நூலை ஆசிரியர்கள் கற்றுத் தருகிறார்கள்.

பள்ளு நூல்களில் பாட்டுடைத் தலைவர்களாக இறைவனும், இறைவியும் அமையப்பெற்றுள்ளனர். திருவாரூர்ப் பள்ளு, தில்லைப் பள்ளு, சிவசைலப்பள்ளு, கோட்டூர்ப்பள்ளு முதலிய பள்ளு நூல்களில் சிவபெருமான் பாட்டுடைத் தலைவனாக விளங்குகிறார். கண்ணுடையம்மன் பள்ளு என்ற நூலில்

உமையாள் பாட்டுடைத் தலைவியாக விளங்குகிறாள். வையாப்புரிப்பள்ளு, திருமலை முருகன் பள்ளு, கொடுமளூர்ப் பள்ளு, கதிரைமலைப் பள்ளு ஆகிய நூல்களில் முருகன் பாட்டுடைத் தலைவனாக அமையப்பெற்றுள்ளான். ஈழத்தில் வெளிவந்த பறாளை விநாயகர் பள்ளு என்ற நூலில் விநாயகர் பாட்டுடைத் தலைவனாக அமையப்பெற்றுள்ளார்.

முக்கூடற் பள்ளுவில் அழகர்(திருமால்),ஞானப்பள்ளுவில் ஏசுநாதர், திருமக்காப் பள்ளுவில் நபிகள் நாயகம் ஆகியோர் பாட்டுடைத் தலைவர்களாக அமையப்பெற்றுள்ளனர்.

குருகூர்ப் பள்ளு என்னும் நூலில் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் பாட்டுடைத் தலைவனாக அமையப்பெற்றுள்ளார். திருநீலகண்டர் பள்ளு என்னும் நூலில் நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டர் பாட்டுடைத் தலைவராக அமையப்பெற்றுள்ளார்.

சிற்றரசர்களும் வள்ளல்களும் பள்ளு நூல்களில் பாட்டுடைத் தலைவர்களாக விளங்குகின்றனர்.

வடகரைப் பள்ளு என்ற நூலில் வடகரை சமீந்தார் பெரியசாமித்துரையும் செண்பகராமன் பள்ளுவில் செண்பகராமனும் சேற்றூர்ப் பள்ளுவில் சேற்றூர் சமீந்தாரும் தண்டிகைக் கனகராயன் பள்ளுவில் கனகராயனும் கங்கநாயக்கர்ப் பள்ளுவில் கங்கநாயக்கரும் பாட்டுடைத் தலைவர்களாக அமையப்பெற்றுள்ளனர்.

சாதியின் பெருமையை விளக்கும் வகையில் பள்ளு நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. ஏழுநகரத்தார் பள்ளு என்ற நூல் நகரத்தாரின் பெருமையையும் வைசியப் பள்ளு என்ற நூல் வைசியரின் சிறப்பையும் எடுத்து இயம்புகின்றன.

முக்களால் என்றும் போற்றப்படுகின்ற பள்ளு நூல்களின் வரிசையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் **'சாமிநாதப் பள்ளு'** எனும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறது.

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் கொங்கு நாட்டின் ஒரு பகுதியான தென்கரை நாட்டை ஆட்சிசெய்த அரசனான சுவாமி நாதேந்திரன் என்பவன் ஆவான். எனவே, இந்நூல் 'சாமிநாதப் பள்ளு' என்று பெயர்பெற்றது. இந்நூலின் ஆசிரியர் சிவப்பெருமாள் கவிராசன் என்பவர்.

ஏஞ்சித மோங்குஞ் சிவப்பெருமாள் கவி
ராசன் றமிழ் தனைக் கேட்டே புகழ்
மிஞ்சவே நாற்பத்தி யஞ்சு சலகைநெல்
வெந்தயச் சம்பாவில் அளந்தேனே *(148)*

என்ற இந்நூலின் வரிகள் தரும் குறிப்பின் வாயிலாக இந்நூலின் ஆசிரியர் சிவப்பெருமாள் கவிராசன் என்பது தெளிவாகிறது. மேலும் 'தரணி மகிழுஞ் சிவப்பெருமாளுகந்த செந்தமிழ் *(148)* என்ற பாடல் வழியாக இந்நூலாசிரியர் சிவப்பெருமாள் கவிராசன் என்பது உறுதியாகிறது.

ஓலைச் சுவடியில் எழுதப்பட்டு இதுவரை நூல் வடிவம் பெறாமல் இருந்த **'சாமிநாதப் பள்ளு'** எனும் இந்நூலினைப் பதிப்பித்த திரு. த. பூமிநாகநாதன் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர் தொடர்ந்து இப்பணியில் ஈடுபட்டு மேலும் சிறந்த நூல்களை எழுத வாழ்த்துகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. சு. இராமகிருட்டிணன் இ.ஆப. அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் ஒளிக்கோர்வை செய்துதந்த விக்னேஷ் அச்சகத்தார்க்கும், அச்சிட்டுத் தந்த யுனைடெட் கிராபிக்ஸ்க்கும் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ் மொழியின்கண் பொதிந்து கிடக்கும் அளவிடற்கரிய பல்லாற்றானும் சிறப்புடைய செய்திகளைப் பலதுறைகளின் வாயிலாக ஆய்வுகள் நடத்தி வெளிக்கொணரும் அரும்பெரும் தொண்டினைக் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து செய்து வருகின்றது. இந்நிறுவனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாகிய சுவடியியற் புலத்தில் இலக்கியம், இலக்கணம், மருத்துவம் போன்ற துறைகளில் பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு அவை நூல்களாக வெளி வந்துள்ளன.

அவ்வகையில் சுவடியிலிருந்து நூலாக வெளிக்கொணரும் பணி இப்புலத்தில் ஆய்வு செய்வோரால் முதன்மைப் பணியாக ஏற்கப்பட்டுப்பல நூல்கள் வெளி வந்துள்ளன. சிற்றிலக்கிய வகைகளில்அந்தாதி, சதகம், தூது,பிள்ளைத்தமிழ் போன்ற பொருண்மைகளில் பல நூல்கள் வந்துள்ளன. அவ்வகையில் பள்ளு இலக்கியத்தில் முதல் நூலாக வெளிவந்த எட்டையபுறப் பள்ளுக்கு அடுத்து இந்நூல் இரண்டாவது நூலாக வெளிவருகிறது.

நாம் இலக்கிய வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் சமூகப் பிரச்சனைகளை உள்வாங்கி இலக்கியம் படைத்த சங்கப் படைப்புகள் போன்ற ஆழமான படைப்புகள் அதற்குப் பின்வந்த காலகட்டங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பக்தி இலக்கியக் காலம் அல்லது சிற்றிலக்கியக் காலகட்டத்தில் பக்தி, துதிபாடுதல், அதீத கற்பனை, புராண, தொன்மச் செய்திகளை வெளிக் கொணர்வதில் ஈடுபாடு போன்ற பொருண்மைகளில் இலக்கியங்கள் பல துளிர்த்தன. இவை சங்க இலக்கியத்தை நினைவுபடுத்துவனவாக அமையவில்லை. ஆதேசமயத்தில் இக்காலகட்டத்தில் எழுந்த பள்ளு இலக்கியம் சங்க இலக்கியம் போன்று சமூகப் பிரச்சனைகளை உள்வாங்கிப் பல படைப்புகளாக மலர்ந்தன. புறநானூற்று மறவனின் வீரத்தையும் அகநானூறு காட்டும் பெண்மையின் மென்மையையும், தகவற் பெட்டகமாக விளங்கும் பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை போன்ற நூல்களின் சாயல்களையும் ஒரு சேரக் கொண்டு இலங்கியது

பள்ளு இலக்கியம். எளிய மருத நில மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் எண்ணக் கனவுகளையும் இன்சுவையோடு எடுத்து இயம்புவதில் வெற்றியும் பெற்றது. ஆகையால்தான் தமிழகத்தில் இவ்விலக்கியம் பற்றிக் கூறும்போது 'நெல்லை எண்ணினாலும் எண்ணலாம் பள்ளு இலக்கியத்தை எண்ண முடியாது' என்ற மரபுத் தொடர் ஒன்று பண்டுதொட்டு புழக்கத்தில் இருந்து வருவதைக் காணமுடிகிறது. அத்தகைய படைப்புகளில் ஒன்றுதான் தற்போது அச்சு நூலாக வர இருக்கும் **சாமிநாதப் பள்ளு.**

இதுவரைப் பதிப்பிக்கப்படாத சுவடி நிலையில் உள்ள சாமிநாதப் பள்ளு என்ற இந்நூலை அச்சு நூலாக உருவாக்கு வதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிய வணக்கத்திற்குரிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு உளங்கனிந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் ஆக்கத்தின் போது, பெரிதும் என் சுமை குறைத்த நண்பர் மொ. மருதமுத்து அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூற் பணி குறித்து, கொங்கு நாடு பற்றி எனக்கு நல்ல பல தகவல்களை நல்கிய சுவடித்துறைப் பொறுப்பாளர் முனைவர் டி. மகாலட்சுமி அவர்களுக்கும் இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும், கேட்டபொழுதெல்லாம் வேண்டிய தரவு நூல்களைத் தந்து உதவிய நிறுவன நூலகக் காப்பாளர் திருமதி. யோகம், திருமதி. பார்வதி, திரு. வெங்கடா சலபதி, திரு. பெருமாள் ஆகியோருக்கும், உ.வே. சாமிநாதையர் நூலகத்தார்க்கும், சென்னை அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத் தார்க்கும், மறைமலை அடிகள் நூலகத்தார்க்கும், இந்நூல் விரைந்து வெளிவரப் பெரிதும் துணை நின்ற ஸ்ரீ விக்னேஷ் அச்சகத்தார்க்கும் மற்றும் தோன்றாத் துணையாக நின்ற அனைவருக்கும் என கரம் குவித்து வணக்கத்தையும் என் மனம் விரித்து நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

பதிப்பாசிரியர்

**த. பூமிநாகநாதன்**

# பதிப்புரை

நல்ல நிறுவனங்கள் வாயிலாகத் தமிழ் ஆய்வது என்பது பண்டுதொட்டு வரும் மரபு. முதல், இடை, கடை என்று சங்கங்கள் அமைத்து அருந்தமிழ் ஆய்ந்தனர் அன்றைய மூவேந்தர்கள் என்பது வரலாறு தரும் குறிப்பு. காலப்போக்கில் அரசியல் மாற்றங்களால் அரசனின் அத்தாணி மண்டபத்தி லேயே மன்னன் நடுவிருக்க, கற்ற வல்லுநர்கள் தங்கள் படைப்புக்களை மக்கள் முன்படைத்தனர். அத்தகைய பெரும் புலவர்தம் அவையில்தான், தர்க்கங்களும், தத்துவங்களும், பேரிலக்கியங்களும், புராணங்களும், சிற்றிலக்கியங்களும் முகிழ்த்தன என்பதை இலக்கிய வரலாறு நமக்குத் தெளிவு படுத்தும்.

பாண்டித்துரைத் தேவர் என்ற பெருமகனார் பிற்காலத்தில் நான்காம் சங்கம் மதுரையில் ஏற்படுத்தித் தமிழ் அறிஞர்களை ஒன்றுகூட்டி, நற்றமிழ் ஆய்ந்து நானிலம் சிறக்கப் பயனுறு நூல்களை வெளிக் கொணர்ந்தார் என்பதைத் தமிழ் உலகம் நன்கறியும்.

வள்ளல் சீதக்காதி, எட்டையபுர சமீன், இராமநாதபுர சமஸ்தானம், தஞ்சை மன்னர்கள் இன்னும் பல்வேறு பாளையங்கள், தமிழ்ப் பாவலரை ஒருங்குகூட்டி ஆற்றிய தமிழ்த்தொண்டு அளப்பரியது.

இன்றைக்கு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வடிவமைக்கப்பட்டு, முத்தமிழறிஞர், தமிழக முதல்வர் முனைவர் கலைஞர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழின் பெருமையை உலகோர் அறிதல் வேண்டும் என்ற பேரவாவில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது உயர்தமிழ் ஆய்வுக்கு வழி வகுக்கும் வகையில், தன்னேரில்லாத நிறுவனமாக 1968 ஆம் ஆண்டு முகிழ்த்தது. இந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1972 ஆம் ஆண்டிலிருந்து தன்னார்வ ஆய்வு நிறுவனமாகப் பொலிவு பெற்றது.

இந்நிறுவனம் மேற்கொண்டுள்ள பணிகள் பல. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம், தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், சமுகவியல் கலை மற்றும் பண்பாட்டுப்

புலம் அயல்நாட்டுத் தமிழர் குலம் என அமைந்த புலங்களில் முதலாவதாக அமைந்த புலத்தில் தான் சுவடித்தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. தொன்மையான தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங்களையும், பிற சாத்திரங் களையும் நம் முன்னோர்கள் ஓலைச் சுவடிகளிலேயே பதிவு செய்திருந்தனர். அச்சுக்கலை, தமிழகத்தில் காலூன்றிய காலகட்டத்தில் சுவடியில் பதிவு செய்யும் பழக்கம் மறையத் தொடங்கி, சிந்தனைக் கருவூலங்கள் அத்தனையுமே தாளில் தஞ்சம் புகலாயின. இத்தகைய அறிவியல் மாற்றத்தால், சுவடியில் எழுதும் வழக்கம் குன்றியதோடு, பண்டைச் சுவடிகளைப் படிக்கும் பழக்கமும் அருகி வரலாயிற்று.

இக்காலகட்டத்தில்தான் தமிழ் செய்த தவப் பயனாக டாக்டர் உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் போன்றோர் தோன்றிப் பண்டைய ஏட்டு நூல்களை அச்சு நூல்களாக மாற்றலாயினர். மறைந்து, நம் மனதை விட்டு மறந்து போகும் நிலையில் ஊசலாடிக் கொண்டிருந்த சங்கப் பனுவல்கள், பக்தி இலக்கியங்கள், தத்துவ நூல்கள் போன்ற எத்தனையோ அறிவுப் பெட்டகங்கள் இவர்களால் பாதுகாக்கப்பட்டு நமக்கு இன்றைக்குத் தரவு நூல்களாகத் தரப்பட்டுள்ளன.

தனித்து நின்று பெருந்தமிழ்ப் பணி செய்த மேற்சொன்ன அப்பெரியோர்கள் காட்டிய வழியில் நின்று இன்று நாம் நிறுவனங்கள் என்ற அமைப்பின் வழியாக அத்தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறோம். அத்தகைய சிறப்புறு நிறுவனங்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் ஒன்று.

ஓலைச் சுவடிகளின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தும் வகையில் 1979 முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடியியல் பட்டய வகுப்பை முதன் முதலில் தொடங்கி இன்றுவரை ஒவ்வொரு ஆண்டும் சிறப்புற நடத்தி வருகின்றது. சுவடியியல் பட்டய வகுப்பு மாணவர்கள் இப்பயிற்சியின்போது, பதிப்புக்கலை பற்றியும் அறிந்து கொள்கின்றனர். ஈண்டுப் பணி செய்யும் உயராய்வு அலுவலர்கள் திட்டப்பணியாக இதுவரை வெளிவராத

சுவடியிற் காணும் அரிய நூல்களைத் தேடிக் கண்டுபிடித்துப் பதிப்பித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதிப்பு செய்தற்கு வேண்டி நல்ல சுவடிகளை இந்நிறுவனம் எங்கிருந்தாலும் அங்குத் தனது ஆய்வாளர்களை அனுப்பிப் படி எடுத்துக் கொண்டுவரச் செய்து, அதனைச் செப்பம் செய்து, தக்க ஆய்வு நூலாக ஆக்கும் பணியைத் தனது பணிகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது.

இலக்கியம் மற்றும் சுவடிப் புலத்தில் இவ்வகையில் நிறுவன ஆய்வாளர்களாலும் ஆய்வு அல்லது பட்டய மாணவர்களாலும் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனைச் சிறப்பு மிக்க இப்புலத்தின் வாயிலாக வெளிவந்த **எட்டையப்புரப் பள்ளு** என்ற தென்பாண்டி நாட்டுப் பள்ளு நூலுக்கு அடுத்து, கொங்கு நாட்டுச் சிறப்பைக் கூறும் **சாமிநாதப் பள்ளு** என்னும் இந்நூல் தற்போது வெளிவருகிறது.

பண்டைய இலக்கியங்கள் யாவுமே சுவடிகளில் பொதிந்து கிடந்தவையே. காலத்தின் தேவையாலும் பண்டையோர் பெற்ற பட்டறிவைத் துணைக்கோடல் வேண்டும் என்ற அவாவினாலும் அறிவு வேட்கையினாலும் அறிவியல் தந்த அச்சுக்கலையின் வரவாலும் பல சுவடிகள் அச்சு வடிவம் பெற்று நூல்களாயின என்பதை முன்னரே கண்டோம். இருப்பினும், எண்ணற்ற இலக்கியங்கள் அச்சேறாமல் இன்னும் சுவடிகளாகவே உள்ளன.

அச்சில் வெளிவராது சுவடிகளிலேயே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கியங்களுள் மருத்துவத்திற்கு அடுத்து மிகுதியாக விளங்குபவை சிற்றிலக்கியங்களும் நாட்டுப்புறக் கதைப் பாடல்களும் ஆகும். சிற்றிலக்கிய வகையான பள்ளு என்ற வகையைச் சார்ந்த இச் சாமிநாதப் பள்ளு இதுவரையில் அச்சில் வெளிவராததாக விளங்குவதோடு, மக்கள் இலக்கியமாக மண்ணின் மணத்தோடு அமைந்து விளங்குகிறது.

தமிழகத்தின் தலைசிறந்த நூலகங்களில் தொன்மை வாய்ந்த அரசினர்க் கீழ்த்திசைச் சுவடி நூலகம் எனப் பெயரிய

நூலகம் சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ளது. அந்நூலகத்தில் 'சாமிநாத பூபதி பள்ளு' என்ற பெயரில் சுவடி எண் R.4383 என்ற முகவரியோடு இவ்வேடு இடம் பெற்றுள்ளது. இந்த ஓலைச் சுவடிக்கான கையெழுத்துப் பிரதி ஒன்று R.4944 என்ற எண்ணில் பதிவாகியுள்ளது.

நூல் உருவாக்கத்திற்கு முதலில் கிடைத்தது இக் கையெழுத்துப் பிரதியேயாகும். இக் கையெழுத்துப் பிரதி R. லலிதா என்பவரால் **1953-54** ஆண்டு பிரதி செய்யப்பட்டது. இக்குறிப்பு இந்நூலின் முகப்பிலேயே தரப்பட்டுள்ளது. இப்பிரதியில் பிழைகள் மலிந்திருக்கின்றன. ஆகவே, மூலச் சுவடி கிடைத்தாலன்றி, இப்பிரதியை வைத்து ஆய்வு செய்வது கடினம் என்பதை உணர்ந்த நான், மூலச் சுவடியைத் தேடலானேன். இடம் மாறிப் போய்விட்ட அச்சுவடியை அந்நிறுவன ஊழியர்களின் துணையோடு ஒருவழியாகக் கண்டுபிடித்து ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டேன்.

இந்தச் சுவடியின் நீளம் 40.5 செ.மீ. இதன் அகலம் 3.5 செ.மீ. இவ்விலக்கிய ஏடு 39 இதழ்களைப் பெற்றதாகும். தொடக்கம் முதல் இறுதிவரை இவ்வேட்டில் நூல் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சுவடியின் புற அமைப்பு:** சுவடியின் மேலும் கீழுமாகப் பாதுகாப்புக் கருதி எல்லா ஏடுகளிலும் இடம் பெற்றுள்ளது போன்று இதிலும் மெருகு ஏற்றப்பட்ட ஓலை இரண்டு இடம் பெற்றுள்ளது. ஏட்டின் மேல் நூலகத்தார் குறிப்புக் கோப்பு உள்ளது. ஏடுகளுக்கு முறையாகப் பூச்சித் தடுப்பு மருந்து போடப்பட்டுள்ளது. புறஅமைப்பைக் கொண்டு ஏட்டின் வயதைக் கணக்கிட்டால் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது எனத் தோன்றுகிறது.

**சுவடியின் அக அமைப்பு :** சுவடியின் தொடக்கத்தில் இரு வெற்று ஏடுகளும் ஏட்டின் இறுதியில் ஒரு வெற்றேடும் ஓலையும் அமைந்துள்ளன. சுவடியின் வலது இடது பகுதிகள் காலத்தின் காரணமாக முனை சிதைந்தும் தெறித்தும் காணப்படுகின்றன. சில இடங்களில் ஏடுகள் கிழிந்தும் உள்ளன. இராமபாணப் பூச்சிகளின் தாக்கம் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரண்டு காணப்படுகின்றன.

முதல் ஏட்டில் 'சுவாமிநாத பூபதி பேரில் பள்ளு' என்று எழுதப்பட்ட குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அதற்கு அடுத்த ஏட்டில்

'மாமினா ளோங்கு மணிப்புய மால(ன்)ன வந்து
சாமினா தேந்....மேல் சாற்றுமியல் பள்ளிசைக்கே
கோமினாள் வேணியன் சொற் குஞ்சரமுங் கஞ்சமலர்ப்
பாமினாள் விந்தைப் பதாம்புயங் காப்பாமே'

என்ற பாடல் இரண்டாம் ஏட்டில் பதிவாகியுள்ளது.

ஏட்டின் இடது ஓரத்தில் வழக்கம்போல நன்றாக குரு வாழ்க குருவே துணை என எழுதப்பட்டுள்ளது. இதழ்கள் தோறும் தமிழ் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதழ் ஒன்றுக்கு ஒருபக்கத்தில் 8 முதல் 9 வரிகள் இடம் பெற்றுள்ளன.

**எழுத்துக்கள் :** இப்பதிப்பிற்கு எடுத்துக் கொண்ட சுவடியில் எழுதப் பெற்றுள்ள எழுத்துக்களில் சில எழுத்துக்கள் கூட்டு எழுத்துக்களாக அமைந்துள்ளன. இந்த ஓலைச்சுவடியைப் படி எடுத்தவர் பெயர் எங்கும் குறிப்பிடப் படவில்லை. ஆனால், இறுதி ஏட்டில் வீராச்சிமங்கலத்தி லேயிருக்குஞ் சாமிநாதப் பிள்ளைப் பள்ளுப் பிரபந்தம் நிறைந்தது. சம்பூர்ணம். அண்ணாமுலையார் துணை. தெண்டாயுதபாணி ரெட்சிக்க வேண்டியது. மீனாட்சியம்மன் துணை. தம்பாப்பிள்ளை மகன் சுப்பய்யர் பள்ளு யெடுத்தவன் குடுக்கவும்.

'அறுமுகவனை நாறுமலர் கொடு
கூறு மடியவன் பேறு பெறுபேறே'

சபாபதி துணை என்ற ஒரு குறிப்புக் காணப்படுகிறது.

ஓலைச் சுவடிகளைப் பிரதி எடுத்தவர் எந்தப் பகுதியைச் சார்ந்தவர் என்பதை அறியக்கூடவில்லை. ஆனால் தென்பாண்டி நாட்டு ஏடுகள் போன்று இதிலும் ல-ள; ழ-ல; ழ-ல; ற-ர; த்-தற்ற போன்ற மாற்றங்கள் உள்ளன.

இப்பதிப்பில் தேவையின்றிக் கூடுதலாக இடம் பெறும் ஒற்றெழுத்துக்கள் அல்லது பிற எழுத்துக்கள் போன்றவை நீக்கப்பட்டுவிடாது மூலச்சுவடிக்கு ஊறு நேராதவாறு அவை

பிறைக்குறியில் உள்ளபடிக்குக் காட்டப்பட்டுள்ளன. விடுபட்ட எழுத்துக்கள் அடைப்புக் குறியில் உள்ளடக்கிக் காட்டப்பட்டுள்ளன. பாடல்களில் பயின்று வரும் அரிய சொற்களுக்கு அருஞ்சொற்பொருள் விளக்கம் தரப் பட்டுள்ளது. பாடல் எண்களே அருஞ்சொற் பொருள் விளக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று சொல்லகராதிக்குரிய தரவுகளுக்கு அவ்வப் பாடல்களின் எண்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

'முன்னோர் மொழிபொருளே யன்றி, அவர் மொழியும் பொன்னே போற் போற்றுவர்' என்ற நன்னூல் காட்டும் கோட்பாட்டிற்கேற்பச் சொற்களின்திரிந்த வடிவங்களுக்குரிய நேரான வடிவம் வருவிக்கப் பெற்று அருஞ்சொற் பொருள் பகுதியில் காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக சக்கிரபதி என்ற சுவடிச் சொல்லுக்கு ஏற்ற நேர் வடிவம் சக்ரபதி எனத் தரப்பட்டள்ளது. பேச்சுமொழி சொற்கள் அவற்றின் பழமைச் சிறப்புக் கருதி நூலில் எப்படி எழுதப் பெற்றுள்ளதோ அப்படியே கையாளப்பட்டுள்ளது. இந்நூலின் சிறப்புக் கருதிப் பொதுச் சொல்லகராதியும் தயாரித்து இணைக்கப்பட்டுள்ளது.

பதிப்பின்போது சீர்திருத்த எழுத்துமுறை பின்பற்றப் பட்டுள்ளது. சிறப்பான முறையில் நூல் ஆய்வு ஒன்று இந்நூலில் சேர்க்கப்படுகிறது. கூடுமானவரை சங்க இலக்கியத்தோடு ஒப்புமை காட்டி, வேளாண் தொழில் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன. கற்றோர் இக்கன்னி முயற்சியை ஏற்பர். அறிவாளர் அன்னப் பறவைபோல் குறை மறந்து நிறை ஏற்று மகிழ்வாராக. முன்னோர் அணிவித்த அணிகலன் அணிந்து மகிழும் தமிழ் அன்னை இந்நூலையும் தனது அணிகலனாக ஏற்று அருள் பாலிப்பாராக.

**த. பூமிநாகநாதன்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அணிந்துரை | iii |
| 2. | முன்னுரை | vii |
| 3. | பதிப்புரை | ix |
| 4. | நூல் ஆய்வு | 1 |
| 5. | நூல் மூலமும் உரையும் | 66 |
| 6. | சொல்லகராதி | 164 |
| 7. | பாடற் முதற்குறிப்பு அகராதி | 191 |
| 8. | துணைநூற் பட்டியல் | 193 |

# நூல் ஆய்வு

'மக்கள்தமை முதலளித்த மாண்புடைய
தமிழ்நாட்டில் மன்னுநாடு
மிக்கமலை புனல்வளமும் வேளாளர்
மெய்வளமும் மேவு நாடு
எக்கலையு முறைநாடென் றிசைப்புலவர்
திருக்கூட்டம் எய்துநாடு
குக்குடத்தான் கோயிலொடு குழைக்காதன்
கோயில் கொளுங் கொங்குநாடு.'[1]

என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. போற்றும் கொங்கு நாடு, தமிழ் நாட்டின் ஓர் அங்கம் ஆகும். இத்திருநாட்டின் தொன்மை பற்றியும் சிறப்பு பற்றியும் ஈண்டுக் காண்போம்.

தமிழகத்தின் வரலாற்றைச் சங்ககாலத்திலிருந்து கணக்கிடுவர் அறிஞர் பெருமக்கள். சங்க காலத்துத் தமிழகம் ஆறு உட்பிரிவுகளைக் கொண்டிலங்கியது. துளுநாடு, சேரநாடு, பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு என்பன.

துளுநாடும், சேரநாடும் மேலைக் கடலை ஒட்டியும், சோழநாடு கீழ்க்கடலைச் சார்ந்தும், பாண்டிநாடு தெற்கே இந்தியப் பெருங்கடல் வரை விரிந்தும், தொண்டைநாடு வடபெண்ணை ஆற்றங்கரை வரை அகன்றும் விளங்கின. கொங்குநாடு மட்டும்கடற்கரை இல்லாத உள்நாடாகத் திகழ்ந்தது.

இப்பெரு நாட்டின் எல்லையைப் பற்றிக் கூறும் பழம் பாடல்களில் குறிப்பிடத் தகுந்த ஒன்று கொங்கு மண்டல சதகப் பாடல் ஆகும். அது வருமாறு:

மதிற்கரை கீட்டிசை தெற்குப்பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளிமலை பெரும்பாலை கவின் வடக்கு
விதித்துள்ள நான்கெல்லை சூழவளமுற்றும் மேவி விண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்தி டிவ்கொங்கு மண்டலமே.[2]

மற்றும் தனிப்பாடல்களாக விளங்கும் கீழ்வரும் இரு பாடல்கள் கொங்கு நாட்டின் எல்லைகளை வரையறுத்துக் கூறுகின்றன.

'வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கிழக்கு
கழிந்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவே கொங்கு'[3] எனவும்

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு'[4] எனவும்

'வடக்குப் பெரும்பாலை வையாறு தெற்கு
குடக்குப் பொருப்பு வெள்ளிக்குன்று - தடக்கீழ்
கழித்தண் டலையளவு காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவு கொங்கு'[5] எனவும்

கொங்கு நாட்டின் எல்லையை வகைப்படுத்திக் காட்டுவதைக் காணலாம்.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடி ஒன்று (சுவடி எண் டி 3036) உரைநடை வாயிலாகக் கொங்கு நாட்டின் எல்லையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அது வருமாறு :

'வடபுறம் மறம் சோகரமலை
மதுகரைக்கு மேற்கு
வறாக கிறிக்கு வடக்கு
வெள்ளி மலைக்கு கிழக்கு

என அச்சுவடி சதுரம் கட்டிக் காட்டுவதைக் காணலாம். கொங்கு மண்டலச் சதகம் போன்றே, சுவடியும் கிழக் கெல்லையாக மதுகரையைக் குறிக்கிறது. மதுகரை என்பது இன்றைய மதுக்கரை என அழைக்கப்படுவதாகும். இது மதிற்கரை எனவும்படும். இவ்வூர், திருச்சி மாவட்டம், குளித்தலைக்கு மேற்கே காவிரிக் கரையில் உள்ளது.

இன்றைக்கு இக்கொங்கு நாடு, தற்போதைய மாவட்டப் பிரிவுகளின்படி, கோவை மாவட்டம் முழுவதும், பெரியார் மாவட்டம் முழுவதும், தருமபுரி மாவட்டத்தில் சில பகுதிகளும் சேலம் மாவட்டத்தில் ஓமலூர், திருச்செங்கோடு, சேலம் நாமக்கல் வட்டங்களும், கரூர் மாவட்டத்தில் கரூர் குளித்தலை

வட்டங்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி திண்டுக்கல் வட்டங்களும் என்ற நிலையில் சிதறிப்போய் கிடப்பதைக் காணலாம். ஆறைநாடு, ஒருவங்கநாடு, வாரக்கநாடு, பொன்கலூர் நாடு, காங்கேய நாடு, குறும்பு நாடு, காஞ்சிக் கோயில் நாடு, வடகரை நாடு, பூந்துறை நாடு, அரய நாடு, தென்கரை நாடு, மணநாடு, வெங்கால நாடு, தட்டய நாடு, கிழங்கு நாடு, தலைய நாடு, அண்ட நாடு, வையாபுரி நாடு, நல்லுருக்கா நாடு, காவடிக்க நாடு, ஆனைமலை நாடு, பூவாணிய நாடு. வாழவந்தி நாடு, இராசிபுர நாடு எனக் கொங்கு மண்டலச் சதகம் கொங்கு மண்டலத்தின் உள்ளடங்கிய பகுதிகளை இருபத்திநான்கு நாடுகளாகக் கூறும்.

இந்நாடுகளில் ஒன்றான தென்கரை நாடுதான் இப்பள்ளு இலக்கியம் பயின்ற நாடு. இம்மண்ணின் மன்னவனே இந்நூலின் பாட்டுடைத் தலைவன். இவனைப் பற்றிக் கூறும்போதெல்லாம் அவன் வளநாடும் இணைத்தே கூறப்படுவதைக் காணலாம்.

**''சேனை காவலன் மால் சாமிநாத வசீகரன்**
**தென்கரை நாடு எங்கள் நாடே''** (பா.18) எனவும்,

**''அஞ்சலார் பணிமால் சாமிநாத**
**அதுலன் தென்கரை நாடெங்கள் நாடே''** (பா.20) எனவும்,

**''தானவாரணன் சாமிநாதேந்திரன் தயாலு**
**தென்கரை நாடெங்கள் நாடே''** (பா.22) எனவும்

**''ஞாலமேழும் புகழ்சாமிநாத நரேந்திரன்**
**தென்கரை நாடெங்கள் நாடே''** (பா. 24) எனவும்

**''ராசர்க்கே நிகர்மால் சாமிநாதேந்திரன்**
**தென்கரை நாடெங்கள் நாடே''** எனவும்

போற்றப்படுவதிலிருந்து மேற்சொன்ன கூற்றை அறியலாம்.

தமிழகத்தை முடிமன்னர் மூவர் ஆண்ட காலம் முதல் அதே தமிழகத்தைச் சிறுசிறு கூறுகளாக் எழுபத்திரண்டு பாளையங்களாகக் கூறுபோட்ட நாயக்கர் காலம் வரை இம்மண்ணின் வரலாறு முழுமையானதாகவும் போற்றுதற் குரியதாகவும் விளங்குவது என்றால் மிகையாகாது. ''பொருணை'' என்ற பெயரில் நதி ஒன்று இத்தென்கரை

நாட்டை வளப்படுத்தி இருமருங்கிலும் சோலைகளை உருவாக்கியுள்ளதாக இப்பள்ளு இலக்கியத்தின் வழியாக அறிய முடிகிறது.

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கம், தமிழகத்தில் மிகுந்த குழப்பத்தை உருவாக்கியிருந்தபோதிலும் விசயநகரப் பேரரசால் உருவாக்கப்பட்ட தமிழகத்து எழுபத்திரண்டு பாளையங்களில் ஒருசிலவற்றில் நடைபெற்ற ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியுடனேயே இருந்தனர். அப்படிப்பட்ட நாடுகளில் ஒன்றுதான் தென்கரை நாடு. கொங்கு மண்டல சமஸ்தானங்களில் தென்கரையில் தென்றல் வீசியது. தெள்ளு தமிழுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. வேளாண் தொழில் குறைவின்றி வளமோடு பேணப்பட்டது. மக்களின் நலன் கருதியே மன்னனின் செங்கோல் செயல்பட்டது. நீதியும் நிதியும் திருவுடன் இம்மண்ணில் இலங்கியது. மன்பதை பசிப்பிணி அறியவில்லை. புரவலன் கண் துஞ்சாது செய்த ஆட்சியில் அரசியல் காழ்ப்புகள் கதிரோன் கண்ட பனியென மறைந்தன. இம்மண்ணைப் பற்றியும் மண்ணின் மன்னவர் பற்றியும் பல பிரபந்தங்கள் முகிழ்த்தன. அப்படித் தோன்றியவற்றில் ஒன்றுதான் சாமிநாதப் பள்ளு.

**நூற்பெயர்க் காரணம் :** பொதுவாகப் பள்ளு இலக்கியங்களின் பெயர்கள் பாட்டுடைத்தலைவன் பெயரிலோ அல்லது அப்பாட்டுடைத் தலைவனின் நாட்டின் பெயரிலோ, அல்லது ஓர் ஊரில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயராலோ அல்லது சிறப்புமிகு இறைவன் எழுந்தருளிய ஊரின் பெயராலோ அமைவது மரபு. **குருகூர்ப் பள்ளு** என்ற நூல் குருகூர் என்ற ஊரின் பெயராலும், **செங்கோட்டுப் பள்ளு** என்பது 'திருச்செங்கோடு' என்ற ஊரின் பெயராலும், **பாளை விநாயகர் பள்ளு** என்ற நூல் இறைவனாகிய விநாயகப் பெருமான் பெயராலும், **எட்டையப்புரப் பள்ளு** என்ற நூல் எட்டையபுரத்து வம்சாவளியினர் மீதும் பாடப்பெற்ற நூல்களாகத் திகழ்வதைக் காணலாம். அவ்வகையில் இந்நூல் தென்கரை நாட்டு மாமன்னர் 'சுவாமிநாதேந்திரன்' என்பார் மீது பாடப் பெற்றது. ஆகவே இந்நூலுக்கு, சாமிநாத பள்ளு என்ற பெயர் அமையலாயிற்று.

தார்பூத்த சுந்தர குணசீலன்
சகலோற்கு மன்புரு மனுகூலன்
தருசாமினா தேந்திர பூபாலன்
தழைக்கும் பள்ளிசைக்கே' (பா.2)

என்ற வரிகள் கொண்டும்,

யெண்ணார் பணிந் தேற்றிய போசன்
யெண்ணாங்கா மியற்று விலாசன்
யெங் கோபி சாமநாத குபேரன்மே
லிசைக்கும் பள்ளிசைக்கே (பா.3)

என்ற பாடல் வரிகளின் வாயிலாகவும்,

ததிபால் நெய் தூய்த்திடு கனிவாயன்
தரியாரை வெற்றிகள் புரிதூயன்
தருசாமினாதேந்திர சகராயன்
தழைக்கும் பள்ளிசைக்கே (பா.4)

என்ற வரிகள் வாயிலாகவம் இந்நூலுக்கு ஏற்ற தலைப்பு 'சாமிநாதப் பள்ளு' என்பதே எனத் துணிந்து கூறலாம். மேலும், இந்நூலாசிரியர் இறைவனை வணங்கிப் பாடிய பாடலில்,

தனாளும னோரத முற்ற திதி
சாமிநாத வசீகர கர்த்தன் மிசை
சாற்று பள்ளே சலையே

என்ற வரிகள் இந்நூலுக்கு 'சாமிநாதப் பள்ளு' என்ற பெயரே மிகப் பொருத்தமானதாக அமையும் என்பதற்குத் தக்க சான்று எனலாம். ஊர் அல்லது நாட்டின் பெயரான 'தென்கரை நாடு' என்ற சொல் இந்நூலில் பழகி வந்திருந்தாலும் குறிப்பிடும் படியாக, அது அமையவில்லை. எவ்வாறு எனில் பாட்டுடைத் தலைவனோடும் துணைப் பாத்திரங்களுடனும் 'தென்கரை நாடு' இணைத்துக் கூறப்பட்டுள்ளதால் அதன் சிறப்புத்தன்மை பாட்டுடைத் தலைவனுக்கு மிஞ்சியதாக அல்லது ஏற்புடைத்த தாகக் கொள்ள முடியாமல் போனதால் பாட்டுடைத் தலைவன் பெயரே இப்பள்ளு நூலுக்கு சாலப் பொருத்தமாக அமையும் படியாக உள்ளது. இதனை இந்நூலின் இறுதியாக அமைந்த மங்களப் பாடல்,

'செந்தமிழ் அருமை அறிவாகரகன்
சாமிநாதேந்திர மகராசன் எந்நாளும்
தழைத்தினிது வாழிதானே'

என்ற வரிகள் சாலப் பொருத்தமாகத் தென்கரை நாட்டு மன்னனைப் போற்றுவதால், இந்நூலின் பெயரை 'சாமிநாதப் பள்ளு' என அறிமுகப்படுத்துவதே சிறப்புடைத்ததாகும்.

**நூலாசிரியர் :** இந்நூலைப் பாடியவர் சிவப்பெருமாள் கவி என்பது இந்நூலின் வாயிலாக அறிய முடிகிறது. இந்நூலிற் காணும் பாடல் 148; பல்வேறு தரப்பினர்களுக்கும், காரியங் களுக்கும் தரப்பட்ட நெற்கொடைப் பற்றிப் பேசுகிறது.

ரஞ்சித மோங்குஞ் **சிவப்பெருமாள் கவி**
**ராசன்** றமிழ்தனைக் கேட்டே புகழ்
மிஞ்சவே நாற்பத்தி யஞ்சு சலகைநெல்
வெந்தயச் சம்பாவில் அளந்தேன்'

என்ற வரிகளின் வாயிலாகக் கவிராசனுக்கு அவன் தமிழ்ப்பணி தொடர, சாமிநாதேந்திரன் அரசு, அரசு கட்டளையாக வெந்தயச் சம்பா என்ற உயர்ரக நெல்லில் இருந்து நாற்பத்தியஞ்சு சலகை நெல் அளித்துப் பெருமை பெற்றதாகக் குறிப்பு உள்ளது.

இக்குறிப்பின் வாயிலாக இந்தச் சிவப்பெருமாள் கவிராசனே இந்நூலை யாத்தவர் என்ற துணிபுக்கு நாம் வரலாம். இதற்கு இன்னும் உரம் சேர்ப்பது போன்று இந்நூலின் இறுதிப் பாடலான மங்களப் பாடலில் **'தரணிமகிழுஞ் சிவப் பெருமாளுகந்த செந்தமிழ்'** என்ற வரியினைக் காண முடிகிறது. இதனைக் கொண்டு இந்நூலாசிரியர் சிவப்பெருமாள் கவிராயன் என்பாரே என நாம் கருதலாம். இவர் கொங்கு நாட்டில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்? இவர் பலம் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு ஏற்புடைய விடைகளைக் காண முடியாதபடி இவரது வாழ்க்கை வரலாறு பற்றிய சரியான தரவுகள் நமக்குக் கிடைக்கவில்லை. இது குறித்துக் களப்பணி செய்திட்டால் ஏதேனும் தகவல்கள் கிடைக்கலாம். ஆயின் காலத் தட்டுப்பாடு காரணமாகப் பதிப்பாசிரியர் என்ற முறையில் என்னால் இயலாமல் போய்விட்டதால் இதற்கும் மேலான இது தொடர்பான பிற செய்திகள் இணைக்க இயலவில்லை.

**நூலில் வரும் பாத்திரங்கள்:**

நூலின் பாட்டுடைத் தலைவனாக அமைந்தவன் சாமிநாதேந்திரன் என்பான் ஆவான். இவன் சிறப்பையும் இவனது வம்சாவளிகளின் பெருமையையும் இந்நூலாசிரியர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் போற்றிப் புகழ்வதைக் காணலாம். மனித நேயம் மிக்க அம்மன்னவனை ஒவ்வொரு பாடலிலும் புகழ்ந்து கூறுவதைக் காண முடிகிறது. இம்மன்னனுக்குத்தான் எத்தனைச் சிறப்புடைய அடைகளை ஆசிரியர் வாரி வழங்கியுள்ளார் என்பதனைக் கீழ்வரும் சான்றுகளால் அறியலாம்.

'உதவு தியாகன்', வழுத்து விபேகன் (2)
தார்பூத்த சுந்தர குணசீலன்
சகலோற்க்கு மன்புரு மனுகூலன்
தருசாமினா தேந்திர பூபாலன்' (2)
சாமிநாத குபேரன் (15)
சாமிநாத சிங்கம் (16)
தான கர்ணனென வந்த சாமிநா தேந்திர திட
மான பரன் (29)
தாதுபுனை திண்புயத்தான் சாமிநாதேந்திரன் (31)
பார்த்திபன் சாமிநாதேந்திர கீர்த்திமான் (37)
சட்டமிட்ட சொற் பிரசித்த சாமிநாதேந்திரன் (42)
தழைத்த புகழ் செழித்த முகில் சாமிநாதேந்திரன் (44)
செல்வம் புகழ் சாமிநாதேந்திரன் (54)
சேரலர் போற்றிய சோமன்
..... ..... ..... .....
தருமன் சாமிநாதேந்திரன் (55)
நம்பினோரைக் காக்குஞ் சாமி நாதேந்திரன் (59)
வண்டாடும் பூங்குவளை வாய்த்தமணிமார்பன் மலர்
தண்டாமரை முகத்தான் சாமிநா தேந்திரவேள் (61)
சாமிநாதேந்திர முகில் (90)
மண்டலத்தோர் சாமிநாத யோக்கியன் (113)
கருணி யாதிபன் கோமான் சாமிநாதேந்திரன் (139)
அஞ்சிலர்க்கு இடியேறு புகழ்
மிஞ்சு கற்பகத் தாரு வளர்
அங்கசன் சாமிநாதேந்திர தெய்வேந்திரன் (143)
'செந்தமிழ் அருமை யறிவாகரன்
சாமிநாதேந்திர மகராசன்' (153)

என்ற பாடல்களின் வரிகள் மூலம் பாட்டுடைத் தலைவனின் வீரம், அருட்குணம், மற்றும் ஆட்சித்திறம் முதலியன வெளிப்படும்படியாக இணைத்துப் பேசியுள்ளதைக் காணலாம்.

தலைமைப் பாத்திரத்தின் பண்புகளைப் பலபடித் துதிக்கும் பள்ளு நூல் அந்நூலின்கண் உலவிடும் துணைப் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் பாங்கே தனித்தன்மை யானது. பள்ளு இலக்கியத்தின் இலக்கியக் கோட்பாட்டுச் சிறப்பில் எண்ணிப் போற்றத்தக்கது. துணைப் பாத்திரங்களின் தனிப்பட்ட பெயர்களைச் சுட்டிக் காட்டாது பொதுநிலையில் கூறுவதேயாகும். தொல்காப்பியம் அக இலக்கியத்திற்கு வகுத்துக் கொண்ட 'சுட்டி ஒருவர் பெயர் கூறார்' என்ற விதியை இப்பள்ளு இலக்கியம், சமூக நடைமுறைகளை விளக்க வேண்டிய கடப்பாடு கொண்டதனால் முன்னோர் வகுத்த நெறியை ஏற்று, அவ்வழியிலேயே சென்று தனது இலக்கியத்திலும் பெயர் சுட்டும் வழக்கைப் பெறவில்லை என்பது ஈண்டு எண்ணத்தக்கது.

சங்க இலக்கியத்தில் உலவும் அகப் பாத்திரங்கள் தங்கள் இயற் பெயரையோ, ஊரையோ எந்த வகையிலுமோ இன்னும் குறிப்பாகச் சொன்னால் எந்த குறியீட்டு மூலமோ வெளிப்படுத்துவதில்லை. ஆனால், பள்ளு இலக்கியத்தில் முக்கியப் பாத்திரங்களாகத் திகழும் மூத்த பள்ளி, சின்னப் பள்ளி, பண்ணைக்காரன், குடும்பன் போன்ற பாத்திரங்களின் பெயர்கள் பொதுவாகத்தான் அமைந்துள்ளதைக் காண முடிகிறது. ஆயினும், ஊர்ப்பேர் இவர்களுடன் இணைத்துக் கூறக் காண்கிறோம். சில பள்ளு இலக்கியங்கள் மூத்தபள்ளி அல்லது இளைய பள்ளி சார்ந்துள்ள சமயங்கள் கொண்டு அவர்களை அறிமுகப்படுத்துகின்றன. ஆகவே சங்க இலக்கிய அகமரபை ஓரளவு சார்ந்தும் தனக்கே உரிய நெறியாகச் சில விதிகளைத் தானே அமைத்துக் கொண்டும் பள்ளு இலக்கியம் முதன்மைப் பாத்திரங்களைத் தனக்கே உரிய பாங்கோடு பயில விட்டுள்ளதைக் காண முடிகிறது.

சங்க இலக்கிய அகப் பாடல்கள் படிப்போரைத் தன் வயப்படுத்தி விடுவது போன்று, எடுத்துக்காட்டாகப் பத்து பாட்டு நூல்களைப் படிக்கும் வாசகன், தானே அப்பாத்திரமாக

மாறி விடுவது போன்று, பள்ளு இலக்கியம் படிக்கும்போது, வாசகனே மூத்த பள்ளியாகவோ, இளைய பள்ளியாகவோ மாறிவிடக் காணலாம்.

பொதுவாக, சமூக நோக்குக் கொண்ட எந்தப் படைப்புகளிலும், குறிப்பாக நாடகங்களில், பாத்திரங்களின் பெயர்களைச் சுட்டிவிட்டால் அது நாடகத்தைச் சுவைப் போருக்கு ஒரு வகையில் துணைநின்றாலும் கூட, அது அந்நாடகம் ஏற்றுக்கொண்ட பொருண்மைக்கு அத்தனைச் சிறப்பை நல்காது. எவ்வாறு எனில், ஒரு நாடகம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றிப் பேசுவதாக வைத்துக் கொள்வோம். சமூகத்தின் பெயரோ, அல்லது அப்பாத்திரம் ஏற்றுக் கொண்ட பெயரோ அல்லது அதன் சாதீயப் பெயரோ கொண்டு உலவுமேயானால், அந்நாடகம் இன்ன இனம் அல்லது சாதியைக் குறித்தது என அமைந்துவிடும். அவ்வாறு இன்றி, ஒரு நாடகப் படைப்பாளன் தனது நாடகத்தை எந்தக் கட்டுப்பாட்டிற்கும் உட்படுத்தாது உலக நோக்கோடு, மானுட விழிப்புணர்வோடு, பொதுவாகப் படைப்பானேயானால், அந்நாடகம் விரிந்த எல்லையைப் பெறுகிறது. பெயர் சுட்டப்பட்டு, தன் வட்டத்தைச் சுருக்கிக் கொள்ளும் நாடகத்தில் படைப்பாளன் சுதந்திரமாக ஏற்றுக்கொண்ட கருத்தை வலியுறுத்த முடியாது. ஆகவே, சொல்லப்படும் கருத்துகளின் தன்மையைக் கொண்டு இரண்டுவிதமான நுகர்வோர்களை நாடகம் பெறுகிறது. அவை குறுகிய அடிப்படையில் அமைந்த இன, சாதியப் பெயர்களோடு அமையும் நாடகங்கள், பொதுநிலையில் கட்டுப்பாடற்ற பிரிதொன்று.

பள்ளு இலக்கியமும் நாடக அமைப்பைக் கொண்டதே. ஆகவேதான் பள்ளு இலக்கிய படைப்பாளன் தனது படைப்புக்களில் துணைப் பாத்திரங்களின் பெயரைக் கூறாது நாடு, சமூகம் என்ற பெரிய வட்டத்தின் வாயிலாக உலவ விடுகிறான். சாதீயம், இனம் என்ற சிறிய வட்டத்தினை அமைத்துத் தன்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை என்பதை ஈண்டு உணர்தல் வேண்டும். அவ்வகையில் மூத்த பள்ளி, இளைய பள்ளி, பண்ணைக்காரன், குடும்பன் ஆகிய பாத்திரங்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

**மூத்தபள்ளி :** இந்நூலின் தலைமைப் பாத்திரத்திற்கு அடுத்து இந்நூல் முழுக்கப் பவனி வருபவள் மூத்த பள்ளி ஆவாள். இந்நூலாசிரியர் இவளை எந்தச் சமயத்திற்கும் உரியவளாக அறிமுகப்படுத்தவில்லை. தனக்கென ஓர் கடவுளை ஏற்றுக்கொண்டு பரவுபவளாகவும் காட்டவில்லை. மாறாகத் தென்கரை நாட்டு மன்னவன் புகழ் பாடும் பெண் குயிலாகவே படைக்கப்பட்டுள்ளாள்.

இவளின் வருகை பற்றி ஆசிரியர் கூறும்போது, அவளின் தகைமை, சொல்லாற்றல், அழகு, நடையழகு போன்றவைகள் வெளிப்படும்படியாகவே இசைத்துள்ளார்.

அம்புய மானோங்கு புயத்தன் அண்ண(ல்) ரானா ருளே
நம்பியே மாலாஞ் சாமினாத முகிலைப் பணிந்தே
செம்பவளமோ யிலவோ செவ்வா யென்றாய்ந்து செக
மும்புகழ் வீராச்சிமங்கை மூத்தபள்ளி தோன்றினளே (பா.6)

என்ற பாடல் வழியாக மூத்த பள்ளியின் ஊர் வீராச்சிமங்கை நகர் என்பதை ஆசிரியர் நமக்குச் சுட்டுகிறார். அத்துடன் அவள் இதழ் மற்றும் உடல் நிறமானது செம்பவளமோ இலவமோ என்று ஐயுறும்படியாக அமைந்துள்ள தன்மையையும் சுட்டுகிறார். நம் கற்பனையை விட ஆசிரியரின் கற்பனை, அதீத கற்பனையாக அமைந்துவிடாமல், இயல்பாக விரிந்தும் பரந்தும் அமைந்து படிப்போர் உள்ளத்தைக் கவரும்படியாக அமைந்துள்ளதைக் காணலாம். மூத்த பள்ளியின் வருகையை விளக்க முனைந்த புலவரின் நயத்தைக் கீழ்வரும் பாடல் வாயிலாகக் காணலாம்.

அஞ்சுகம் போலக் கொஞ்சிய பேச்சுங்
கஞ்சனஞ் சனஞ்சூழ மஞ்சனைப் பூச்சும்
ஆய்ந்தெழில் சேர்பூந் துகிலிடையும்
மயில் விழிக் கடையும்
மிஞ்சியு தித்திடு தடமலை போல
நெஞ்சில் மத்ததேழு குடமுலை மேல்
மிக்க மணித் தாவட மசைய
மைக்குழலசைய
கஞ்ச மிலங்கிய பத மெல்ல
அஞ்சி நடந்ததிரச வெல்ல

கட்டி யெனத் தனிசரசங் காட்டி
கனபனி பூட்டி
மஞ்சி னஞ் சூழ்ந் திலகு வீராச்சி
மங்கை நகர்க்கி சைந்திடும் பண்ணை
மள்ள னுக்கே மனமகிழ் மூத்த
பள்ளி வந்தனளே. (பா.7)

என அவளது கேசாதி பாத வருணனையாகப் புலவர் காட்டியுள்ள சொற்சித்திரம் மூத்த பள்ளியின் எழில் பற்றி இயம்பும். அது மட்டுமல்ல, அவளைக் கண்டவர்கள் சற்று மயங்க, குறிப்பாகக் காமுகர் அவள்மேல் பித்தாகும் வண்ணம் அவளின் அழகு விளங்குவதாகக் கூறுகிறார் ஆசிரியர்.

தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும்போது, மூத்த பள்ளி இம்மண்ணின் மரபுப்படி, தான் மணந்த, வீராச்சிமங்கை பள்ளனின் துணைவி என அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். அப்படி அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது, தன்னைப் பெரிய பள்ளி என்றும் கூறிக் கொள்கிறாள்.

மன்னும் வீராச்சிமங்கை தன்னி லென்னாண்டவர்தான்
வந்து முகிற்தஞ் செய்த அந்த நாளினில்
கன்னல் செரிவயலிற் பொன்னேரிடும் பேர்தன்பாய்க்
கண்டு சரடுகட்டிக் கொண்ட னென்னைச்
சொன்னமொழி கடந்த ஒன்னலார் தம்மை வென்ற
துடிப்பள் ளனுக்கு மூத்தகுடி பள்ளினான்
நன்னயஞ் சேருஞ் சாமிநாத மகிபன் பண்ணை
நடத்தும் பெரிய பள்ளி னானே யாண்டே. (பா.10)

என்ற பாடலின் வழியாக வீராச்சிமங்கைக் குடும்பன் (பள்ளன்) தன்னை மணந்தவன் என்பதைச் சரடுகட்டிக் கொண்ட என்னை' என்ற சொல் மூலம் மூத்த பள்ளி தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதோடு, தானே மூத்தகுடி என்ற உரிமைக்கும் உரியவள் எனக் கூறுவதில் இருந்து அவளின் தெளிவான உள்ளத்தை உணரலாம்.

பெண் என்பவள் தன்னிடம் உள்ள எந்தப் பொருளையும் பிறர்க்குக் கொடுப்பதில் தாயுள்ளம் கொண்டவள். ஆனால், கொண்ட கொழுநனைப் பகிர்ந்து கொள்ள எந்தப் பெண்ணும் ஒப்பாள். வீராச்சிமங்கை நகர்ப் பள்ளன், மூத்த பள்ளியை

விடுத்து, மற்றொரு பெண்ணிடம் மயல் கொள்ளலானான். இதனை அறிந்த மூத்த பள்ளி பள்ளன் மேல் சினம் கொள்கிறாள். இது, தற்காப்புச் சினமே அன்றி அழிவுக்குரிய சினம் அன்று; அகந்தையுமன்று.

ஆம்! அவளைக் காத்துக்கொள்ள, அவள் கணவன் அவளுக்கு முழுமையாகக் கிடைக்க, வீராச்சிமங்கை நகர் பள்ளன் பற்றிப் பண்ணைக்காரனிடம் கூறுகிறாள். அப்போதும்கூட, அவனது தவறான முயற்சியைத் தடுக்கவே அவள் எண்ணுகிறாள். இதனைப் பின்வரும் பாடல் நமக்குத் தெளிவுறுத்தும்.

**உள்ள காரியம் பள்ளனை வைத்த**
**துழவுக் கோபின் களவுக்குத் தானோ**
**கன்னினா னென்று துள்ளி யுரைத்ததுங்**
**கர்த்தனே யுங்கள் சித்த மறியுங்**
**குள்ளிக் கண்ணியைப் புள்ளி குறித்துக்**
**குலவி பேனேற சலகை கொடுத்தான்**
**துள்ளியே யென்னைத் தள்ளி முடுக்க**
**துடிக்கிறான் தடுக்குங் காணாண்டே** (பா.67)

ஆனால், பண்ணைக்காரன் மிரட்டலுக்குப் பணிவது போல, பள்ளன் பதுங்கினாலும், மீண்டும் அதே தவறைச் செய்யத் துணிகிறான். மூத்த பள்ளி பள்ளனைத் தண்டிக்க எண்ணுகிறாள்.

**பட்டி வைக்கப் போனான் முன்பட்டி வைத்தாகவுஞ்சொற்**
**தட்டி வைத்த பள்ளனுடல் தட்டி வைத்தாலே நிமிருங்**
**குட்டிவைத்தீரே யவனுங் குட்டி வைத்தானென்ற சொல்லை**
**நட்டி வைத்து மூத்தபள்ளி..... டிடுறையிட்டாளே** (பா.92)

பள்ளனைக் குட்டி வைத்தாக வேண்டும் அதாவது கண்டித்து வைத்தாக வேண்டும் எனப் பண்ணையிடம் மூத்த பள்ளி கூறினாள். பண்ணைக்காரன் அவ்வாறே செய்வதாகக் கூறினான். ஆனால், வீராச்சிமங்கை நகர் பள்ளனோ தன் மூத்த பள்ளியைக் கண்டித்து (குட்டி) வைத்துவிட்டு மீண்டும் சென்று விடுகிறான். இதனால் வருத்தமுற்ற மூத்த பள்ளி மீண்டும் பள்ளனைத் நட்டி வைத்து (நிற்கவைத்து) தண்டிக்க வேண்டும் எனப் பண்ணைக்காரனிடம் முறையிடுகிறாள். அவ்வாறு தான் எண்ணியதை வலியுறுத்தும் வகையில்,

''சுருக்கெனப் பேசித்) திணமடித்
தொடுக்கு வீராண்டே'' (பா.94) எனவும்

''சந்தடி விலக்கி அவன்மீதி
லுன்தடி குலுக்கி சினங்கொண்டு
சாடுவி நாளுலக் காரியங்
கூடுங் காணாண்டே'' (பா.95) எனவும்

கூறுவதன் மூலம் அவனைத் தண்டிக்க வேண்டும் என்பதில் மூத்த பள்ளி முனைப்பாய் இருப்பதைக் காணலாம். நேர்மையான உள்ளம் கொண்ட மூத்த பள்ளி ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவள். ஆகவேதான் மேற்சொன்னவற்றிற்கெல்லாம் ஒருபடி மேலே சென்று, பிறன்மனை நோக்கும் தன் கணவனைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் எனக் கூறுகிறாள்.

''நித்தமும் வாது அவனுக்குச்
சத்திய மேது பிறர்மனை
நீடுங்கால் புழுக்கக் குட்டையில்
போடுங் காணாண்டே'' (பா.96)

என்ற இவ்வரிகள் மூலமாக வள்ளுவர் சொன்ன,

பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு
அறன் அன்றோ ஆன்ற ஒழுக்கு (பா.148)

பாட்டின் வழி அமைந்த கருத்தன்றோ.

மூத்த பள்ளி தன் கணவன்பால் அதிகமான கோபம் கொண்டாலும், அவன் குட்டையில் அடைக்கப்பட்டு வருந்தும்போது, இவளது மனமும் துயர் அடைகிறது. இவளே அவனுக்காகப் பண்ணைக்காரனைச் சந்தித்துத் தண்டனையைக் குறைக்கக் கூறுகிறாள். சின்னப் பள்ளியைத் தனது சகோதரியாகவும் ஏற்றுக் கொள்கிறாள். இறுதியில் இளைய பள்ளி வசம் சமாதானம் கொள்ளும்போது;

அக்கச்சி யென்றும் பாராமல் லொக்கச் சொல்கிறாய் - மனது
ஆராமலு மூப்பிளமை பாரா தென்னடி
பக்கதிலுள்ளோ ரெல்லாம் நகைக்கச் சொன்னதால் - கோபம்
பாராமலுனைத் தான் வைதபூராயமல்லோ

சொன்ன வசனம் பொறுத்தேன் முன்னம் போலவே வெகு
சொந்தமாயிருக்க வேணும் விந்தையாகவே
மன்னவன் சாமிநா தேந்திர கர்ணன் பண்ணையே அன்பாய்
வாழ்கிளை சூழ நின்றாய் வாழி சொல்வாயே.

என்பதன் மூலம் பெண்மைக்கேயுரிய பொறை என்னும் பொறுத்தல் குணம் மூத்த பள்ளியிடம் ததும்பி உள்ளதை அறியலாம்.

முதன்மைப் பாத்திரமாக விளங்கும் மூத்த பள்ளியின் வருகை மற்றும் அவள் இப்பள்ளு இலக்கியத்தில் பெற்ற இடத்தினைக் கண்டோம். எளிமை, இனிமை, பொறுமை என்ற முக்குணம் பெண்களுக்கே உரியது என்பதையும், மறத்தல், மன்னித்தல் என்ற பண்பே வாழ்க்கை, வாழ்வாங்கு வாழ வகை செய்வது என்ற உண்மையையும் இப்பாத்திரத்தின் மூலம் நூலாசிரியர் எடுத்தியம்பியுள்ளது இந்நூலைக் கற்போரால் உணர முடியும் அன்றோ.

**இளைய பள்ளி :** பள்ளு இலக்கியத்தின் இணை நாயகியாக விளங்கும் பாத்திரம் இளைய பள்ளி பாத்திரமாகும். இவள் பள்ளனை முறையாக மணந்தவள் இல்லை. இப்பாத்திரம் பெரும்பாலும் பள்ளு இலக்கியப் புலவர்களால் காண்போர்க்குக் காமத்தை உண்டாக்கும்படியான உடல் வனப்பைப் பெற்றவளாகவே கவர்ச்சியோடு காட்டப்படு கிறாள். மேலும் துடுக்குமிக்க பேச்சு உடையவளாகவும், பள்ளனை மிக விரும்பி நேசிப்பவளாகவும், சற்று மென்மை யுடையவளாகவும் மூத்த பள்ளி போல் விரைந்து சினம் கொள்ளாதவளாகவும் பாடப்பட்டிருக்கிறாள் என்பது குறிப்பிடத்தக்கது. இவண் சாமிநாதப் பள்ளு இலக்கியம் இப்பாத்திரத்தின் வருகையை அறிமுகப்படுத்தும் விதமே புதுமையானது.

இளைய பள்ளியின் வருகையைக் கட்டியம் கூறும் பாடலில்,

''வர்ணமயில் போலும் மதரதி போலுந் துதிசேர்
கன்னியெனுந் தாழைக்கரை நிகற்(த்த) பள்ளியவள்
சின்னயிடை துவள சித்திர முலைக் கோட்டைய
அன்னமெனக்காமுகர் கொண்டாசை கொள்ள வந்தாளே.,,,
(பா.8)

அவளது அங்கங்களை அளவெடுத்துக் கூறுவது போல வர்ணமயில், சின்னயிடையாள், சித்திரமுலையாள், அன்னம் போன்ற நடையாள், மதன் ரதி போன்று எழில் உடையாள் எனப் பல சொற்களாற் புலவர், புற அழகை வருணிப்பதைக் காணலாம். தாழை நகரிலே இவளுக்கு இணையாக யாரும் இல்லை என்பதைத் 'தாழைக்கரை நிகர்த்த பள்ளியவள்' எனவும் காமுகர் கொண்டாசை கொள்ள வந்தவள் என்பதன் மூலமும் கவர்ச்சிமிகு அவளின் எழில் மேனியின் சிறப்பை வருணிப்பதைக் காணலாம்.

இதற்கு மேலாக அவளைப் பற்றிய மொத்த வருணனை யாக அமையும் கீழ்வரும் பாடல் உரையின்றியே நமக்குப் பல செய்திகளை உள்ளது உள்ளவாறு உணர்த்தும்படியாக அமைந்துள்ளதைக் காணலாம்.

**வாசமிகு.....ய சவாது**
**மகாபுனுகுங் கமகம கமவென**
**வனமணி மேகலை மருங்கில்**
**கமதாதி விலக**
**தேசுல.... .... ட்டி**
**செழுமரனி கதமணி வடம் பூட்டி**
**திருக்க வாயிதழ் மெல்லப் பேசி**
**செங்கையை வீசி**
**நேசமிகுந்....பை யோங்க**
**ஆசை பொருந் தாடவ ரேங்க**
**நீல நிறக் குழல் வகுப்பெடுத்து**
**நேர்பெற முடித்து**
**பூசிய மஞ்சணை நிரந்து லங்கப்**
**போர்மத வேழ தனிமனங் கலங்க**
**புள்ளுயர் தடமுயர் தாழைக்கரைப்**
**பள்ளி வந்தனளே'** (பா.9)

இப்பாடலில் இளைய பள்ளி பயன்படுத்தும் ஒப்பனைப் பொருளாக சவ்வாது, மகாப்புனுகு ஆகியன குறிப்பிடப்படு கின்றன. இவற்றைப் பூசி நறுமணத்துடன் விளங்குபவள் என்றும் மரகதமணி வடம் அணிந்து தன்னை அழகுற ஒப்பனை செய்து கொள்பவள் என்றும், நீண்ட கருநீலக் குழலை வாரி முடித்து, இளையோர் நெஞ்சங்களைத் தன்வசம்

இழுக்க வல்லவள் என்றும், பேச்சிலே இனிமை கலந்து, அதிர்ந்து பேசாத தன்மை கொண்டவள் என்றும் பூசிய மஞ்சள் காரணமாக மங்களகரமான வசீகர முகத்தைக் கொண்டு, போர்மத வேழம் என விளங்கும் இளைஞர்களை அவர்கள் உள்ளம் இடிந்துபடும்படியாகச் செய்ய வல்ல திறம் படைத்தவள் என்றும் கூறுவதன் மூலம் இளைய பள்ளி இளமையின் இருப்பிடமாக விளங்குவதை அறியலாம்.

அழகியவள் என்றாலும் ஆணவம் அற்றவள். எதிலும் பொறுமையோடு இருப்பவள். இவள் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதாக அமைந்த பாடல்,

**'தங்காமதேனு சாமினாத குபேரன் பண்ணை**
**நாட்கொண்டு பள்ளடுமையியாள் கொண்டனாள்**
**சிங்காரமாக எந்தன் கொங்கைக் குடத்தைப் பார்த்து**
**தேட்டியே மகிழ்ந்து தாலி கட்டினா னென்னை**
**துங்கமிகும் பொருளை தங்குங்குண பால்கறைத்**
**துரைப் புள்ளுலாவுந் தாழைக்கரைப் பள்ளினான்**
**பங்கயஞ் சேர் வீராச்சி மங்கை நகரிற் பண்ணைப்**
**பள்ளன்தனக்குச்சின்னப்பள்ளினா னாண்டே** (பா.15)

வரிகளின் வாயிலாக, அவளைப் பள்ளன் திருமணம் செய்து கொண்டதற்கான காரணத்தைக் கூறும்போது, **'சிங்காரமாக எந்தன் கொங்கைக் குடத்தைப் பார்த்துத் தேட்டியே மகிழ்ந்து தாலி கட்டினான் என்னை'** எனக் கூறுவதன் மூலம் அறியலாம். மேலும் தன்னைப் 'பள்ளன் தனக்குச் சின்னப் பள்ளினான்' என்றும் தனது இடத்தை உலக வழக்குப் படித் தகுதிப்படுத்திக் கொள்கிறாள்.

மூத்த பள்ளி, பள்ளன் இளைய பள்ளியை நாடிச் சென்றது கண்டு சினமுற்று அவனைத் தண்டிக்கப் பண்ணைக்காரனை வேண்டிவிட்டு அவனுக்குச் சோறும் எடுத்து வருகிறாள்.

**'தாதுகொண்ட திண்புயமே சார்ந்த பண்ணனைக் காரனிடங்**
**கோதுகொண்ட குண்டனிகள் கூறிமன தாராமல்**
**வாதுகொண்ட பள்ளனையும் மரத்தினிற் போடென்றுமகா**
**சூதுகொண்ட மூத்த பள்ளி சோறு கொண்டு வந்தாளே** (பா.18)

என்ற பாடல் மேற்படி செய்தியை வலியுறுத்தும்.

பள்ளன் தண்டிக்கப்பட்டு விட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் இளைய பள்ளி மிகவும் துயரமடைந்தாள் என்பதனைக் கீழ்வரும் பாடல் எடுத்தியம்பும்.

பள்ளனையுங் குட்டை தனிற் போட்டா - னென்ற செய்தி
பண்புடனே யிளைய பள்ளி கேட்டாள்
தள்ளரிய துயர முற்றுக் கொண்டாள் - சீக்கிரத்தில்
தானோடி வந்தவனைக் கண்டாள்
வள்ள முலைமீது கண்ணீர் வடித்தாள் - மூத்த பள்ளி
வஞ்சினை யிதென்று பல்லைக் கடித்தாள்
மெள்ளவந்து பள்ளனிடத்துரைப்பாள் - உனக்கு வந்த
வினைய மறிந்தில னெனக்கை நெறிப்பாள் (பா.104)

என்று வருந்தியதோடு நில்லாது, மூத்த பள்ளியால் தண்டிக்கப் பட்டவன் அவள் கணவன் எனக் கூடக் கவலை கொள்ள வில்லையே என வருந்துகிறாள். அதனைப் பெரு அவமான மாகவும் கருதுகிறாள். இதனை,

'கொண்ட தொரு கணவனென்று மிலையே - சக்களத்தி
கூறினாள் திகழ் பொய்யும் புலையே
கண்டவர்கள் விண்டு சொல்வார் கோடி - சொன்னாலுங்
கைப்புண்ணுக்குண்டோ பெருங் கண்ணாடி
பண்டுமைக் கொண்ட பண்ணைக்காரன் - மூத்தபள்ளி
பச்சமுற நடக்குமதி சூரன்
மண்டலத்தி லறியேனிய பேச்சு - தலைமுறையில்
வாராத குறை வரவு மாச்சு' (பா.105)

என்ற பாடலின் மூலம் இளைய பள்ளி, தனது மனக் குமுறலைக் கொட்டியுள்ளதைக் காணலாம். இறுதியில் மூத்த பள்ளியோடு இணைந்து இருவரும் பள்ளனுடன் வாழ்வதைக் காணலாம்.

இளைய பள்ளி என்ற பாத்திரம் கவர்ச்சிப் பாத்திரமாக மட்டும் நில்லாது, தன் கொண்டவனுக்காக, அவன் தண்டனை யுற்றபோது வருந்தி, அதற்குக் காரணமான மூத்த பள்ளியின் மனதை மாற்றி மீண்டும் நன்னிலைக்குக் கொண்டுவந்து பள்ளனுடன் இணைத்துத் தானும் வாழ்வதைக் காணமுடிகிறது.

அழகு, திறமை, மென்மை என்ற முக்குணத்தோடு படைக்கப்பட்ட இளைய பள்ளி பாத்திரம் பள்ளு

இலக்கியத்தின் இனிய பாத்திரம் மட்டுமன்று நம் இதயம் நிறைந்த பாத்திரமுமாகும் அன்றோ!

**பண்ணைப் பணியாளன் (பள்ளன்)**

தலைமைப் பாத்திரமான அரசனே இப்பள்ளு இலக்கியத்தின் நாயகன் என்றபோதிலும் வாழ்த்துக்கும் புகழ்ச்சிக்கும் மட்டுமே அவன் பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒரு நிகழ்கதை மாந்தர் போன்று இப்பள்ளு இலக்கியத் தலைமைப் பாத்திரம் பல்வேறு உணர்ச்சிகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதில்லை என்பது அப்பாத் திரத்தின் இயக்கத்திலிருந்து அறியலாம். அனைத்துப் பள்ளு இலக்கியங்களும் அவ்வவற்றின் தலைமைப் பாத்திரங்களைக் கையாளும்போது அந்த அந்தப் பாத்திரங்களுக்கு ஏற்ப அதாவது கடவுள், காவலன், புரவலன் என்ற தகுதிகளுக்கு ஏற்ப, அவர்களை மாண்புடையவர்களாகவும் மக்கள் மனதில் என்றும் நிலைபெற்றவர்களாகவும் உயர்ந்த நோக்கில் காட்டுகின்றனவே அன்றி, வேறுவகையில் அவர்களைச் சித்திரிக்கவில்லை.

ஆனால், பண்ணைப் பணியாளனாக வரும் பள்ளனே இப் பள்ளு இலக்கியத்தின் கதைப் போக்கிற்கு ஏற்ப, பல்வேறு விதமான உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தும் பாத்திரமாகச் செயல்படுகிறான். பண்ணையாளனுக்குச் சிறந்த பணி யாளனாகவும் மூத்தபள்ளிக்கு ஏற்ற கணவனாகவும், இளைய பள்ளியின் காதலை ஏற்று அவளுக்கேற்ற நாயகனாகவும் ஏனைய பணியாளர்க்கேற்ற தலைவனாகவும் சுழன்று, இடத்திற்கு ஏற்ப அவனது உணர்ச்சி களையும் பன்முக நோக்கில் வழங்கும் பாத்திரமாகத் திகழ்கிறான்.

சாமிநாதேந்திரனின் புகழை எடுத்துக்கூறும் குடிமகனாக, வேளாண் பணியாளனாக இப்பள்ளன் அறிமுகப் படுத்தப் படுகிறான். பள்ளு இலக்கியங்களில் மூத்த பள்ளிக்கும் இளைய பள்ளிக்கும் நடைபெறும் சமயம், நாடு, ஊர் போன்ற பொதுமைகளில் யார் யாரை விடச் சிறப்புற்றவர் என்ற விவாதத்தின்போது ஏற்படும் சர்ச்சையில் இறுதியாக சந்து செய்விக்கும் பொறுப்பு பள்ளனைச் சார்ந்ததாக அமைப்பது பள்ளு இலக்கிய மரபு. ஆனால் இப்பள்ளு நூலில் பள்ளன்

முத்தபள்ளி மற்றும் இளைய பள்ளி ஆகிய இருவர் காதல் உணர்வில் விஞ்சி நிற்பது யார் என் றவினாவிற்கும், கணவன் என்ற நிலையில் பள்ளன் யாருக்கு உரியவன் என்ற கேள்விக்கும், யாரை அனுசரித்து நடக்க வேண்டும் என்ற வாதத்திற்கு விடை தருபவனாகவும் விடை தருகையில் ஒருவரை அறியாமல் மற்றொருவரை பாராட்டும் பண்புடையவனாகவும், அவன் துன்பப்பட்டபோது இருவரின் ஒத்த அன்பையும் பரிவையும் பாசத்தையும் பெறுபவனாகவும் விளங்குகிறான்.

குடும்பனின் வருகை பற்றி இப்பள்ளு ஆசிரியர் சித்திரிக்கும் பாங்கு இனிமையானது. இவனது ஊராக வீராச்சிமங்கை நகர் பேசப்படுகிறது. நல்ல உள்ளமும் உழைக்கும் எண்ணமும் கொண்ட பள்ளன் உருவத்தை நம்முன்னே படம் வரைந்து காட்டுகிறார் பள்ளு ஆசிரியர்:

**மொய்திடுங் கருங் கொண்டையை முடித்து**
**மேல்வீசை நன்றாய் முருக்கிக் கண்டையுரு**
**மாலி றுக்கிக் கட்டி சித்திர**
**வர்ணச் சோமனை வெளுத்துமே யிடையிற்**
**சேர்த்துச் செண்டு போலெழுந்து**
**தடிகொண் டுலாவியே துத்தியம் பெருகும்**
**நாச்சி முத்தன் வளவிலச்**
**சாராயச் சொம்புடன் குடித்து**
**மந்த தும்பி போலவே அஷ்த்திர**
**வேள்சாமி னாதேந்திர புத்திமான்**
**தென்கரை நாட்டி லடும்புகழ் சேரும்**
**பண்ணைக் குடும்பன் வந்தான்** (பா.11)

என்ற பாடலில் குடும்பனின் தலைப்பாகை அழகு அவன் உடுத்தும் வெள்ளுடையின் அழகு, அவன் அம் மன்னனிடத்துக் கொண்டுள்ள பக்தி முதலியன வெளிப்படும் படியாக அமைந்துள்ளதைக் காணலாம். அடுத்து அவன் பணிசெய்யும் பாங்கு குறித்துப் பின்வரும் பாடலில் இயம்புகிறார் புலவர்.

**சாமினாதேந் திரசிங் கார**
**நேம வான்பெரும் புகழைத்**
**தான்படியார்கள் நெஞ்சில்**
**தாம் படிப்பேன்**

காம னாந்தம் பாபிள்ளையை
பூமியில் வணங்கார் மேனி
களைப்பாச் சோ வென்றுளக்கோல்
களைப் பாச்சுவேன்
கோமனோர் புகழ் மருதனாய்
கந்தனைத் துதியாக் கொடுங்
கோல்மன் னரெலும் பைக்கொடுங்
கோல் செய்வேன்
நாம மேவீ ராச்சி மங்கை
நகரிற் பண்ணை தழைக்க
நலம் பெறும் பண்ணைப் பள்ளன்
நானே யாண்டே. (பா. 12)

என்ற இப்பாடலில் சாமிநாதேந்திரன் புகழைப் பாடாதாரை எவ்வாறெல்லாம் தண்டிப்பான் என்பதைக் கூறுவதன் மூலம் அவனுக்குள்ள நாட்டுப்பற்றை அறியலாம்.

குடும்பனின் வீரத்திற்கு ஒரு தளமாக விளங்குவது மாடு பிடிக்கும் விளையாட்டு ஆகும். இதன் தொடக்கத்தைப் பற்றிப் புலவர் வருணிக்கப் புகும்போது,

'தாதுபுனை திண்புயத்தான் சாமிநாதேந்திர திட
மாதவன் வாழ் வீராச்சி மங்கை நகர் பள்ளி ரெல்லாம்
நீதிபுனை காளியம்மன் நேந்தப் படங் கண்ணிக்குக்
காதுசினக்கே வட்டுக் கடாக்கள் பிடிப்பாரே' (ப.31)

என்ற பாடலின் வாயிலாக இவ்விளையாட்டில் இளைஞர்கள் கொண்டுள்ள ஆர்வத்தைப் 'பிடிப்பாரே' என்ற சொல்லின் மூலம் விளக்குவதைக் காணலாம். இவ்விளையாட்டிற் கலந்து கொண்டவர்கள் பற்றிய தகவலைக் கீழ்வரும் பாடலில் ஆசிரியர்:

தண்ணார் முகப்பிர தாபன் பிறமிப்
பண்ணாடி கண்ணன் தனக்குமே
சந்தனத்துடன் மாலை கொடுத்து
கந்த பொழுது விந்தையாய்ப்
பெண்ணா ரமுர்தங் காளி னாயகிப்
கண்ணாயிரத்தின் கருணையால்
பெருகும் பெரிய பழனியாண்டிக்
கருகி லொருவன் பரிசனுந்

துண்டும் பழனியாண்டியும் புகழ்
வேண்டும் பழனி யாண்டியுஞ்
சொல்லும் பொருப்பை வெல்லும் கருப்பன்
துன்னார் புகழும் வன்னியன்
பாண்டி நாட்டில் கூண்ட வீரப்
பண்ணாடி மகன் கண்ணனும்
பற்றலார் மீதிற் சினக்கும் புலிபோல்
பாஞ்ச குருக்குராஞ்சியும்
விற்பனன்சிவ னடியான் குழந்தை
வேலன் குருக்கு ராஞ்சியும்
விருதுபுனைமுத் திருளன் குழந்தை
வேலன் கருப்பக் குடும்பனுங்
கற்பகம் பெரும னஞ்சான் சொல்லுப
காரன் பெரிய வீரனுங்
கதித்த வேலன் பிரமனு மடைக்கலனுங்
குமரன் வீரனும் பார்புக ழும்பண்ணாடிக் கறுப்பன்'
(பா.32)

என ஒரு பட்டியில் இட்டுக் காட்டியுள்ளதைக் காணலாம்.

இம்மாடு பிடிக்கும் விளையாட்டில் குடும்பன் எவ்வொறல்லாம் முயன்று வெற்றி கொண்டான் என்பதை,

''கன்றிடாமலே பேசினான் செம்பொற்
குன்றுபோல் வெள்ளை வீசினான் கச்சைக்
கட்டினான் புயந்தட்டினான் மெள்ளக்
கால்வைத்தான் மீசைமேல் வைத்தான்
துன்றுசோமனை யெடுத்தா னுனக்கு
என்று வேலன் கைகொடுத்தான்திடஞ்
சொன்னான் பயல்சின்னா னும்வந்து
தொட்டினான் கச்சங் கட்டினான்
கொம்பிற் கூர்ந்த கடாவே மெள்ளச்
சிம்பிப் பாய்ந்து தடாவே மனங்
குறித்துப் பின்சிரித்து சஞ்
சரித்து சம்பரித்து கை
கொட்டிநீடு பகட்டையே தளை
கட்டியே பின்னக் கட்டுவே னென

வம்புற் றேபல் லைக்கடித் தான்மன
தன்புற்றே மெல்ல நடித்தான் பின்னும்
மாசற்று முலாசத் தோடு
பேசித் திரல் வாசிக்கிணை
வடிவு பெற்றொரு தடி சுழற்றி நல்
லடிபெ யர்த்தொரு துடிதுடித்துடன்
சோமனைக் கட்டினான் யிருகொம்புக்கே
கயரோட்டினான் மனதாவித்
திடமே வைத்து நடாவிச் செல் கடாவைக்
கையில் சமற்றிப் பிடித்துச்
சுழித்திட்டவன் தம்பிக் காதரவு
உரைத்தான் அவன் சோம்புற்றே மெள்ளச் சிரித்தான்[34]

என்ற இப்பாடலின் மூலம் குடும்பனின் வீர உணர்வைக் காணலாம்.

இத்தனை ஆண்மைச் சிறப்பு மிக்க குடும்பன் பெண்கள் விடயத்தில் மிகவும் சலனம் உடையவன் என்ற அவனது உளப்பாங்கு வெளிப்படும்படியாகப் புலவர் மூத்தபள்ளி வாயிலாக, அதனைக் கூறும்போது, நடைமுறை வாழ்வில் பல ஆண்களின் குணஅழகைப் படம் பிடித்துக் கூறுவதுபோல அமைந்துள்ள விதம் போற்றுதற்குரியது.

பணிக்குச் செல்வதாகக் கூறி, குடும்பன் இளைய பள்ளியைக் காணச் செல்கிறான் என்பதை,

நித்தமே யுரம்வைத்த வயலுக்கு
நீர்க் கட்டாதின்றைக்கு யோர்கட்டிப் போறான்
மெத்த வேலையில் தந்திரமாய் வாய்க்கால்
வெட்டினா லதற்கெட்டியும் பாரான் (பா.68)

எனவும்,

'மெய்ப்பதர்க் கலப்பை யெடுத்து வெளி
வந்தான் பின்னுழுதவன் போலக்
குப்பி மேலுஞ் சின்னப்பள்ளி- மேலுங்
குறித்த ஆசை வெறுத்திட மாட்டான்'

எனவும்,

பள்ளனின் பண்பினைத் தெளிவாகத் தெரிவிக்கிறாள். அதன் காரணமாக அவனைத் தண்டிக்க வேண்டுகிறாள்.

அவனும் தண்டிக்கப்படுகிறான். ஆனால் தண்டனையின் துன்பம் அவனை மிகவும் வருத்துகிறது. இத்தண்டனையைப் பொறுக்க முடியாமல் அவன் வருந்தி மூத்த பள்ளியிடம்

**தேகமெல்லா நோகுதடி மூத்தபள்ளி - என்னைச்**
**சிக்கென லட்சிக்க வேணு மூத்தபள்ளி**
**ஆகஞ்சினேக மெல்லா மூத்தபள்ளி - தெரி**
**யாதமெய் விரோதங் கொண்டாய் மூத்தபள்ளி'**

என மனம் விட்டுப் பேசும்போது, பள்ளன் என்ற இப்பாத்திரம் நம்மில் ஒருவராகப் படைக்கப்பட்டுள்ள தன்மையைக் காணலாம். குடும்பன் வேளாண் பணியில் சிறந்து விளங்குபவன் என்பதற்குப் பண்ணைக்காரன் அவனிடம் உரம்வைக்க ஆட்டுக் கிடைக்கு ஏற்பாடு செய்யக் கூறுவதிலிருந்தும், நெல்சலகை பற்றிச் சரியான கணக்கைத் தரும் வகையிலும் நாம் அறியும்படியாகப் பள்ளு இலக்கியப் புலவர் படைத்துள்ளார்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. உழைப்பு, உண்மை, மனித நேயம் என்ற மூன்று பண்புகளைக் கொண்டவானகக் குடும்பன் பாத்திரத்தைப் படைத்துப் பள்ளு இலக்கியம் முழுவதும் ஒளிரும்படியாக உலவ விட்டுள்ள ஆசிரியர் சிவப்பெருமாள் கவிராசரின் சிறப்பை எத்தனை பாராட்டினாலும் தகும் அன்றோ.

**ஆண்டை என்னும் பண்ணைக்காரன்**

பள்ளு இலக்கியத்தின் சிறப்புறு பாத்திரங்களில் 'பண்ணைக்காரன்' என்ற பாத்திரமும் ஒன்று. பள்ளு இலக்கியத்தின் அங்கதப் பகுதிக்கு இப்பாத்திரமே மூலக்கருவாகப் பயன்படுவது. சமூக ஏற்ற தாழ்வுகளையும், சமூகத்தில் காணும் சீர்கேடுகளையும் சித்தரிக்க ஒவ்வொரு படைப்பாளியும் புதிய உத்திகளைப் பயன்படுத்தி அற்புதமான பாத்திரங்களைப் படைப்பர். எடுத்துக்காட்டாக, நாடக ஆசிரியர் வில்லன் பாத்திரத்தையும் காப்பிய ஆசான், சூழ்ச்சிக்காரனையும், புதின எழுத்தாளன் மாறுபட்ட குணாதிசயம் உடையவனையும் படைத்துக் காட்டுவது படைப்பாளிகளின் மரபு. அப்படிப் படைக்கும்போது சமூகச் சீர்கேடுகளை விளக்கியும் அவற்றை அழிப்பதற்கான

உத்திகளையும் படைப்பாளன் நல்கத் தவறுவதில்லை. சில இலக்கியங்கள் சமூக சீர்கேட்டை இலைமறைகாயாக, அங்கத முறையில் பிற பாத்திரங்கள் வாயிலாகப் பேச வைத்து, மக்களை விழிப்படையச் செய்யும்.

அவ்வகையில் பள்ளு இலக்கியத்தில் பண்ணைக்காரன் எனப்படும் 'ஆண்டை' பாத்திரமும் மேற்சொன்ன பொருண்மையை விளக்குவதற்காகவே அமைந்தது. மேட்டுக்குடி மக்களுக்கும் கீழ்த்தட்டு மக்களுக்கும் உள்ள வேற்றுமைகளையும் கீழ்த்தட்டு மக்கள் மேல்தட்டு மக்களை எவ்வகையில் எல்லாம் எண்ணிப் பார்க்கிறார்கள் என்பதை விளக்கிக் காட்டவும் கீழ்த்தட்டு மக்களின் மன உளைச்சலை வெளிப்படுத்தவும் காணுகின்ற அல்லது படிக்கின்ற சுவைஞர்களைச் சிந்திக்க வைப்பதற்கும் பெரிதும் பள்ளு இலக்கியத்தில் பயன்படுவது இப்பண்ணைப் பாத்திரமே.

தீண்டாமைக்கு வித்திட்டு, சமூகத்தின் முதுகுத்தண்டை வளைக்கப் பார்க்கும் கொத்தடிமைச் சிந்தனை கொண்ட கொடியவர்களைக் கீழ்த்தட்டு மக்கள், அங்கத வடிவில் விமர்சித்துக் கொள்வது ஒரு சிறந்த உத்தியாகும். பள்ளியர் இருவரும் பண்ணைக்காரனைப் பற்றி வருணிக்கும் பகுதி நகைச்சுவையோடு அங்கதமும் கூடியதாகும். பொதுவாகக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்காத ஒரு கிராமத்துப் பெண் தனது உள்ளத்து வெறுப்பினை வெளிக்காட்டும்போது, உயர்ந்த ஆடம்பரமான சொற்களைப் பயன்படுத்த மாட்டாள். அவள் மனதில் பண்ணைக்காரன் பற்றி எழும் உருவத்தைச் சித்தரித்துக் காட்டும்போது அதனில் அவள் அறிந்த கிராமத்து நளினத்தையே அதிகமாகச் சேர்த்துக் காட்ட முடியும்.

பண்ணைக்காரனின் வருகையை எடுத்தியம்பும் இப்பள்ளு நூலின் புலவர்,

**தென்டிரை சேர் கப்பல் திரவிய மெல்லாம் பார்த்து**
**விண்டாதஞ்சேர் பண்ணை விசாரணையுஞ் செய்வதற்காயத்**
**தண்டமிழோர் கொண்டாடு சாமிநா தேந்திரமால்**
**கண்டுள மகிழ்கின்ற பண்ணைக் காரன் வந்து தோன்றினானே.**

(பா. 56)

என்ற இப்பாடலில் மேட்டுக்குடியாளனான இப்பண்ணைக் காரன் கப்பலில் இருந்து வந்த திரவியங்களைக் கண்டு, பின்

வருவதைகக் காட்டுகிறார். பள்ளு ஆசிரியர் இப்படிக் கூறினாலும், பண்ணைப் பணியாட்கள் இவரைப் பற்றிக் கூறுவதை ஈண்டுக் காண்போம்.

கிந்திய நடையும் பழங்கந்த லுடையும் மூளிக்
கீரிபோல் முகத்தினி லஞ்சாறு மயிருஞ்
சந்துபோய் முறிந்த கையுஞ் சிந்திய மூக்கும் பருஞ்
சட்டிபோல்தலையும்மாங்காய்க்கொட்டைபோல்பல்லும்
வெந்தயங் கடுகுபோல் பதிந்த கண்களும்
மேழிபோல் முதுகும் வண்ணான் தாழிவயிறுஞ்
சந்ததம் புகழ்ந்திடு வீராச்சிமங்கையூர் தன்னில்
தாறுமாறுக்காரப்பண்ணைக்காரனார்வந்தார். (பா.57)

அவனது உடையழகு, உடலழகு, அதிகார தொனி முதலியன வெளிப்படும்படியாக இப்பெண்கள் வருணித்திருப்பதை அறியலாம். மேலும் ஒருபடி மேலே சென்று இப்பள்ளியர்கள் அவனை வரவேற்கும் விதத்தில் பாடிய பாடல் வாயிலாக அவர்களின் அங்கதப் புலமையும் வெளிப்படும்.

கும்பிடுகிறோமும் மைக்கும்பிடுகிறோம் - வெள்ளைக்
கொக்கு மூஞ்சிப்பண்ணை யாண்டே கும்பிடுகிறோம்
செம்புநாறித் தம்பிரானே கும்பிடுகிறோ - னெட்ட
செருட்டுக் காதாண்டே கும்பிடுகிறோஞ்
சம்பு கண்ணுப் பண்ணையாண்டே கும்பிடுகிறோ - மொட்டுச்
சண்ணைக்கிடாப் பண்ணையாண்டே கும்பிடுகிறோம்
நம்பினோரைக் காக்குஞ்சாமி நாதேந்திர சீதரன் - பண்ணை
நயினாரே உம்மை நாங்கள் கும்பிடுகிறோம் (பா.59)

என்று வணக்கம் சொல்லும் முறையில் தங்கள் உள்ளத்து எண்ணங்களும் சொற்களா்க வெளிப்படும் வகையில் பள்ளியர்கள் கூறியவற்றிலிருந்து காணலாம்.

இப்பண்ணைக்காரன் ஓர் காமுகன் என்பதனைப் பள்ளியர்கள் சாடும் முறையிலிருந்து அறியலாம்.

துள்ளிப் பேசுறீர் நயந்தே பள்ளிக் காசையோ
பின்னுந் தூர நின்றீரே தனித்துச் சேர வந்தீரோ
தள்ளிப் போரீரே தனத்தைக் கிள்ளிப் பாரீரோ
பின்னுஞ்சாடைசொன்னீரேயுமைத்தான்தேடிவந்தோமே

நேமிநிதி மேது திக்குஞ் சாமிநாத வேள்முமை - நித்தம்
மகிழவே சிறந்த கர்த்தனே கேளுங்
சாமி என்றீரே யுடைத்தான் சாமி யென்றோமே- மிக்க
கண்ணைக் காட்டுறீர் இதேன்னோ பண்ணையாரே
(பா.63)

என்ற இப்பாடலின் வாயிலாகப் பண்ணைக்காரனின் மனப் பாங்கையும், இளமையோடு விளங்கும் எளிய பெண்களின் வளைவுகளைக் கண்டு எக்காளமிடும் பண்ணையின் அரவணைப்பில் வாழும் அதிகார வர்க்கத்தினரின் மனப் பாங்கையும், உணர்த்தும். மேலும் இத்தகு பண்ணையாரின் கீழ்மைக் குணத்தைக் கீழ்வரும் பாடலும் உணர்த்தும்.

வந்துநின்ற பள்ளிகளை வாருமென்பார் - சின்ன
மாடியெங்கே யென்று விளையாடிக் கொள்வாராம்
பிந்தியே அரியாள் வார்த்தை விந்தையென்பார் - யிந்தப்
பிரமியுஞ் சுத்தமுழுப் பேதையென்பராஞ்
சொந்தமாய்க் கறுப்பிவரச் சந்து சொல்வராம் - வெகு
சூரி கோபக்காரி சின்னமாரி யென்பராந்
சந்து செல்லக் கன்னியை வளைந்து கொள்வாராம் - உருச்
சண்ணைக்கிடாய்போன்ற நடைப்பண்ணைக்காரனார்.
(பா. 60)

இப்படி ஓர் பக்கம் இவன் சித்திரிக்கப்பட்டாலும் பள்ளு நூல்களிற் பண்ணைக்காரனிடமே மூத்த பள்ளி தன்குறைகளை முறையிடுவதும் அதன் காரணமாகப் பண்ணைக்காரன் குடும்பனிடம் சினம் கொண்டு கண்டிப்பதும் பள்ளு இலக்கியத்தில் ஓர் அங்கமாக அமைகிறது.

இப்பண்ணைக்காரன் என்னும் பாத்திரம் இப்பனுவலின் நடுவிற் காட்சியளித்து மறைந்து போகும் பாத்திரமாகும். கதை வளர்ச்சிக்கு முக்கியமான பாத்திரம் என்றபோதும், இவன் தோன்றி உலவும் காட்சிகள் மிகக் குறைவே. ஆயினும், வந்து செல்லும் ஒரு சில காட்சிகளில் இப்பாத்திரம் தான் ஏற்றுக்கொண்ட பணியைப் புலவரின் கட்டளைக்கேற்பப் படிப்போர் அல்லது காண்போர் மனதில் உறையுமாறு அமைந்துவிடுதல் இப்பாத்திரத்தின் சிறப்புத் தன்மையன்றோ.

**கோனார் வருகை**

நிலத்திற்கு உரம் இடுதல் என்பது வேளாண் பணிக்கு மிக இன்றியமையாதது என்பது யாவரும் அறிந்ததே. பள்ளு

இலக்கியப் புலவர்களும் ஏதோ ஒருவகையில் வேளாண் பணிகளுக்கு முக்கியத்துவம் தந்துள்ளனர். உரத்திலேயே சிறந்ததாக அன்று முதல் இன்றுவரைப் பண்டு தொட்டுக் கிடை இடுவதையே தமிழக வேளாண் மக்கள் உயர்வுடையதாகக் கருதி வந்துள்ளனர். ஆகவேதான் வேளாண் தொழிலுக்கு ஏற்புடைய துணைத் தொழிலை (கிடைஇடுதல்) மேற் கொண்டுள்ள கோனார்கள் பள்ளு இலக்கியத்தில் ஒருவகைப் பாத்திரமாக அறிமுகப் படுத்தப் படுகின்றனர்.

கோனாரைக் கிடையிட அழைத்துவரக் கூறும் பண்ணைக் காரன் சொல்லைக் கேட்டவுடன் குடும்பன் வளைந்து நெளிந்து செல்வதைப் புலவர் முதலில் கட்டியப் பாடலாக நமக்குப் படைத்துக் காட்டுகிறார்.

**கட்டுடனே பள்ளன் கடுகி வரைத்த மொழி**
**சட்டமுறவே மகிழ்ந்து தால மெல்லாங் கொண்டாடி**
**இட்டமதா யாடுபட்டி யெல்லாங் கொண்டேகி யிச்சிப்**
**பட்டிதனில் வாழிடையர் பண்புடனே தோன்றினரே. (பா. 88)**

எனக் கூறுவதன் மூலம் காணலாம். மேலும் அன்றைய ஆட்டுக்கிடை ஓட்டிவரும் கோனார் எவ்வாறு இருப்பர் என்பதைச் சற்று நகைச்சுவையோடு புலவர் விளம்புவதைக் காணலாம்.

**பச்சைப் பாலளைந்த வுடன் - நல்**
**கொசை தான் மிக வீச**
**பற்று கடக்கால் தூக்கி**
**சுற்றி மெள்ள நடந்து**

**தச்சு துணியுறு மாலைக்**
**குச்சுப் போலச் சேர்த்துத்**
**தலையசைத்துப் பெரிய பல்லுப்**
**பல்வரையைக் காட்டி**

**அச்சுடனே தடியூன்றி**
**மெச்சி நெற்றி நாமமிட்டு**
**அடுத்து வந்து பள்ளனுடன்**
**தொடுத்து வந்து பேசி**

**இச்சிநகர்தனில் வளர்ந்து**
**உச்சித மெல்லாம் அடைந்த**

இடையா லரினத் துடனே
அடவுடன் வந்தனரே (பா. 89)

உம்பர் கோனாட்டை மனம்
நம்பியே முன்னொருவன்
ஊரை விட்டுப் போனசெய்தி
ஆரியர் குடும்பா

சம்புக் கோனாடுமது
வம்புக்கோ நிசந்தானோ
தலத்தி லொருக்கால் தூக்கிக்
கிடக்குங் காண் குடும்பா

கொம்புக் கோனாடு மில்லை
வீடுமல்லை சந்தி தோறுங்
குடியாச்சுந் தமக்கு வந்து
விடியுமோ குடும்பா (பா.90)

என்ற பாடல் வாயிலாகக் கோனாரின் வருகை வருணிக்கப் படுவதையும் காணலாம்.

இயற்கையின் ஐம்பெரும் கூறுகளில் ஒன்று நீர். இப்புவியில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் உரிய உண்ணுபொருள்களில் மிக முக்கியமான ஒன்றாக விளங்குவது தண்ணீர் ஆகும். இதனாலேதான் சங்கப் புலவன், "நீர் இன்றி அமையாது உலகம்" என்றான். குவலயத்தார் நீரை அருவியிலிருந்தும் சுனை என்னும் மலை ஊற்றுகளில் இருந்தும் மலையினின்று விரிந்து ஓடும் ஆறுகளிலிருந்தும் பெற்று வருவதைக் காணலாம்.

உலக நாகரிகங்களின் வரலாற்றை உற்று நோக்கிய சமூகவியலார் அனைத்து நாகரிகங்களும் நதிக்கரையில்தான் முகிழ்த்தன என்பர். நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரிகமும், காங்கோ ஆற்றுப் படுகையில் கறுப்பர் இன நாகரிகமும் அமேசான் ஆற்றுப் படுகையில் செவ்விந்தியர் இன மக்களின் நாகரிகமும், டைக்கரிஸ் யூப்பிரிடிஸ் நதிக்கரையில் சுமேரிய நாகரிகமும், சிந்து கங்கை நதிக்கரைகளில் ஆரிய நாகரிகமும், பஃறுளி ஆற்றங்கரையில் பண்டைத் தமிழர் நாகரிகமும், ஹோவான்ஹோ, யாங்கடிசுகியாங், சிக்கியாங் நதிக்கரையில் சீன நாகரிகமும், அமராவதி நதிக்கரையில் பர்மிய நாகரிகமும் தோன்றியதாக வரலாற்று வல்லுநர்கள் கூறுவர்.

மனித சமூகம் ஏன் ஆற்றை நம்பி வாழ்ந்தது என்ற வினாவை எழுப்பி அதற்கான விடையைக் காணப் புகுவோமேயானால், உணவுக்கு ஆதாரமான உழவுத்தொழிலுக்கு இன்றியமையாத தேவைகளில் தண்ணீரும் ஒன்று என்பதாலேயே என்ற உண்மை தெளிவுறும்.

ஆகவேதான் ஆதிமனிதன் வானத்தையும் கார் மேகத்தையும் அச்சுறுத்தும் இடியோசையையும் கனல் பறக்கும் மின்னலையும் தெய்வங்களாக வணங்கினான். கால வளர்ச்சியில் இத்தெய்வங்கள் எல்லாம் உவமை வடிவங்களில் இலக்கியத்திற்கும் மெருகூட்டலாயின. சங்க இலக்கியத்தில் கார்காலம், மின்னல், இடி போன்றவைகள் பரவலாக உவமை வடிவில் பழகி வந்துள்ளன. தமிழன் மழையை, மழை பெய்யும் அழகை, மழை பெய்வதால் வையகத்தின் கண் நிகழும் பல்வேறு நிகழ்வுகளை இலக்கியத்தின் வாயிலாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளான். தொல்காப்பியர் மழைக் கடவுளாக வருணனைச் சுட்டுகிறார். சங்கப் புலவர்கள் கார்காலத்தைத் தலைமகன் தலைமகள் உறவினிடையே கொண்டு கூட்டிப் பேசும்போது, பிரிவிடைப்பட்ட தலை மகளுக்குப் புத்துணர்ச்சியூட்டும் புனிதமான காலமாக வருணிக்கின்றனர்.

சங்க இலக்கியமான முல்லைப்பாட்டு, முல்லைக்கலி, நெடுநல்வாடை முதலியனவும் சங்கம் மருவிய காலக் கீழ்க்கணக்கு நூல்களில் குறிப்பாகத் திருக்குறள், மழையின் தேவையை வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் அழுத்தமாகக் கூறியிருப்பதைக் காணலாம். தலைவனைப் பொருள்வழிக் காரணமாகவோ, கல்வியின் காரணமாகவோ அல்லது தூது காரணமாகவோ பிரிந்துள்ள இளங் கன்னியர்கள் தம் காதல் மெய்ப்பாட்டிற்குச் சீர்மிகு கார்காலம் எவ்வாறெல்லாம் துணை நிற்கிறது என்பதனைச் சங்கம் மருவிய இலக்கியமான பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் அகம் சார்ந்த கார் நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமாலை ஐம்பது மற்றும் கைந்நிலை போன்ற நூல்கள் பேசும்.

புரண்டு வரும் புதுவெள்ளத்தின் புதுப்புனற் பெருக்கைப் பொருநறாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை ஆகிய நூல்கள் பெரிதும் விதந்து கூறுப.

புராண இதிகாசங்கள் கடல் மற்றும் பிற நீர்நிலைகளைப் புனிதத் தன்மையோடு பேசுவதைக் காணமுடிகிறது. இன்றும் நம் பாரத நாட்டில் இமயம் தொடங்கி, குமரி வரை ஓடித்திரியும் பல ஆறுகள் அவற்றில் குறிப்பாகக் கங்கை, காவிரி, கோதாவரி, சரஸ்வதி, யமுனா, கோமதி, பிரமபுத்திரா, வைகை, தாமரபரணி போன்ற ஆறுகள் தொன்மத் தொடர்புடையனவாகச் காட்டப்பட்டுள்ளன. முனிவர்களும், தேவர்களும், யோகிகளும் இவற்றோடு தொடர்புபடுத்திப் பேசப் பட்டுள்ளனர். ஆறுகள் ஆன்மாக்களின் அசுத்தத்தைப் போக்கவல்லன என இந்து சமயமும் இயம்புறது. மும்பெரும் கடவுளர்களில் ஒருவரான சிவபிரான் தலையில் கங்கை எனும் ஆற்றைச் சுமப்பதாகக் கூறுவர். திருமால் பாற்கடலில் படுத்துக்கொண்டுள்ளதாகக் கூறுவர். நீர்வாழ் தாவரமான தாமரையின்மீது கலைமகளும், திருமகளும், படைப்புக் கடவுளான பிரமனும் அமர்ந்திருப்பதாக வேதம் கூறும். மாரி என்று போற்றப்படும் கருமாரி, முத்துமாரி போன்ற தெய்வங்களின் முகத்தில் முத்துமுத்தாக நீர் அரும்பிப் பெருகி வருவதாக இத் தெய்வங்கள் பற்றிய தொன்மக் கதைகள் கூறுகின்றன.

பக்திப் பனுவல்களைப் ஊடுருவிப் பார்த்தால் நீரின் பெருமையைப் பல்வேறு நிலைகளில் வருணித்திருப்பதைக் காணலாம்.

நலம் தரும் வாவிகள் என்றும் புண்ணியம் சேகரிக்கும் பொய்கைகள் என்றும், பாவம் அகற்றும் ஆறுகள் என்றும் பக்தி இலக்கியங்கள் நீரின் சிறப்புக் குறித்துப் பேசுவதை அங்கங்கே காணலாம். பாற்கடலின் பெருமையை நாலாயிர திவ்விய பிரபந்தமும் கயிலையின் பனிநீரின் தன்மையைப் பன்னிரு திருமுறையும் சிறப்பாக எடுத்துரைக்கும்.

பொதுவாக ஆறுகள், நீர்நிலைகள் போன்றன மக்கள் வாழ்க்கையில் தொழில் வளத்திற்குப் பெரிதும் பயன்பட்டு வருவன. காட்டு மரங்களை நாட்டிற்குக் கொண்டுவர மனித சமூகம் ஆற்றை நம்பியது என சமூகவியலார் கூறுவர்.

ஆகவேதான் பிற்காலத்துச் சிற்றிலக்கியங்களில் குறிப்பாகப் பள்ளு மற்றும் குறவஞ்சி போன்றன மழையின் வருகை, ஆற்றின் வெள்ளப் பெருக்கு போன்றவற்றைத் தங்கள் படைப்பில் சிறப்பாகப் பயன்படுத்திப் பேசியுள்ளன.

வேளாண் தொழிலுக்கு நீரின் முக்கியத்துவம் எத்தனைத் தேவையானது என்பதைப் பள்ளு இலக்கியப் புலவர்களால் உணரப் பட்டதால்தான் பள்ளு இலக்கியத்தில் மழை வருகை குறித்தும், ஆற்றின் வெள்ளப் பெருக்குக் குறித்தும் குயிற் கூவுதல் குறித்தும் சில செய்திகள் மிகச் சிறப்பாகப் பேசப்படுவதைக் காணலாம். பொதுவாக எல்லாப் பள்ளு நூல்களிலும் மழை வருகை, குயிற் கூவுதல், ஆற்றின் வெள்ளப் பெருக்கு ஆகியனபற்றிப் பாராட்டிப் பாடுதல் ஒரு மரபாக அமைந்துள்ளது.

இச்சாமிநாதப் பள்ளு இலக்கியத்தில் இம்மூன்றின் திறம்பற்றி இனிக் காண்போம்.

பள்ளு இலக்கியத்தில் அதில் பவனி வரும் பாத்திரங்களை அறிமுகப்படுத்துவதுபோல நூலாசிரியர் மழையின் வருகைக்கான கட்டியங் கூறும் பாடலை அமைத்து மழையின் வருகையைச் சிறப்பிக்கிறார். அப்பாடல் வருமாறு:

தாராருந் திண்புயத்தான் சாமிநாதேந்திர வேள்
ளேராருங் கைகொடை போலெண்டிசையுங் கொண்டாடச்
சீராருமாம் பொருணை தெள்ளமுதாய் வெள்ளமுறப்
பேராரும் வான்மழை பெய்யத் தொடங்கியதே. (பா.38)

என்ற பாடலின் மூலம் மழையின் வருகைக்கு முரசு அறைகிறார் புலவர். அதோடு மட்டுமல்லாது மழையின் அழகைப் பின்வரும் பாடலில் வருணித்திருப்பதைக் காணலாம்.

இந்திர தருவை நிகருஞ் சாமிநா
தேந்திரன் கொடுத்த அமுதொப்பாய்
    யெழுந்த மேகம் உவரி நீரை
    யுண்டீசன் கழுத்துக் குவமையாய்
அந்தரத்தினி லெழுந்து பைந்தமிழ்க்கு
அருளும் நாக மணியைப் போல்
    அடுத்து மின்னல் கொண்டிவன் முன் முரசம்
    ஆர்ப்ப தெனக் கொண்ட திர்ந்துமே
சிந்தை மகிழ்தொண் ணூத்தி யாறு
சீர்த்தி யெண்டிசை யூன்றல் போல்
    சிறந்த பூதலம் நிறைந்து பார்த்த
    திசை யெல்லாம் மழைக்கால் நின்றே

புந்திமகிழ்ந்து சிவபெரு மாள்தன்
புலமைக்குதவும் பொருளைப் போல்
பொன்னூ திகிரி குளிரச் சினந்து
புதுமையாய் மழை பொழிந்ததே (39)

என்ற மேற்சொன்ன பாடலின் வாயிலாக மழை பொலிந்த அழகைப் புலவர் நயம்பட உரைத்ததைக் காணலாம். அது மட்டுமன்று, இதோ! ஆற்றின் வெள்ளப் பெருக்கை வருணிக்கும் அழகை இனிக் காண்போம்.

முன்னர் கூறியதுபோல, பள்ளு இலக்கியங்கள் அத்தனையும் புதுவெள்ளத்தின் புதுப்புனல் வருகையை விரித்துக் கூறுவது ஒரு மரபாய்க் கொண்டுள்ளமையைக் காணலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனப் பயணம் செய்யும் இவ்வாற்றின் வெள்ளப் பெருக்கின் அழகை மிக அழகாக வருணித்திருப்பதைக் காணலாம். இனி, சாமிநாதப் பள்ளு ஆற்றின் வருகையைப் பாராட்டும் அழகை ஈண்டுக் காண்போம்.

உயர்ந்த மலையிற் பெய்த மழையானது ஆறாக உருவெடுத்துக் குறிஞ்சியை நனைத்ததோடு அல்லாது குறவர் குடியிருப்பு, வேடர் குடியிருப்பு என வளைந்து நெளிந்து சென்ற அழகை,

குவடுகந் தாமடங்கு சீர்தனக்
குவடுகந் தாமடங்கவே
கும்பானைக் குடந் தாங்கிக் குறவருக்
கும்பானைக் குடம் போக்கியே
தவழும் வெங்கைக் குலத்தை யுமிகத்
துவளும் வெங்கைக் குலத்தையுஞ்
சாரும் பெருமை நரகமுமதி
லூரும் பெருமை நரகமுங்
கவளக் குஞ்சரக் கோட்டையும் வேடர்
கவளக் குஞ்சரக் கூட்டையுங்
கசித்திடும் பரும் பன்றி யிரங்கி
யுதித்திடும் பரும் பன்றியும்
நவமெயக் கந்தரை பணிந்து மேசிறந்
துவமைக் கந்தரைப் பணிந்துமே
நாலை வனத்திற் புகுதவே வெள்ளம்
பாலை வனத்தில் புகுந்ததே (பா.41)

என மிக விரிவாக ஆற்றின் போக்கை வருணித்திருப்பதைக் காணலாம். இதேபோன்று **வையாபுரிப் பள்ளு** நூல் (பா. 56) குறிஞ்சிப் பகுதியில் ஆற்றின் வருகையைக் கூறும் பாங்கு ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

துறையிற் சிதறி விரவியே தட
வரையைக் கிழியப் பரவியே
துடியிற் குறிஞ்சி வனத்தி லேபுகுந்
தடியிற் குறிஞ்சிப் புனத்திலே
திரையை மோதிப் பெருகி யேயிரு
கரையை மோதித் திருகியே
தினைப் புனத்தையு நிரவியே வொளிர்
கனற்பு னத்தையு நிரவியே
கரிய குறவர் பிரணை யுடவர்க்
குரிய குடிலம் பிரணை யுங்
கானக்களிறு மயிலையுமெடுத்
தேளக் களிறு மயிலையும்
முருக ரைப்போற்றி நாகத் தைத்தடிந்
திருக ரையிற் புன் னாகத்தை
முறித்துச் சாடிப் பாலை நிலத்தைக்
குறித்துத் தேடி நடந்ததே[7]

என்ற இப்பாடலில் ஆறு, வேடுவர், குறவர் குடிலெல்லாம் சுற்றிக் காடுகளைத் துளைத்துக் கொண்டு மலையில் வீழ்ந்து, பெருகி ஆறாய்ப் புறப்பட்டுப் பாலை நிலத்தை நோக்கி ஓடுவதாகக் காட்டியுள்ளார். இவ்விரு பாடல்களிலும் அமைந்துள்ள பொருள், வருணனை போன்றன எத்தனை ஒத்துள்ளன.

குறிஞ்சி விட்டுப் பாலைபுகும் ஆற்றை, **சாமிநாதப் பள்ளு** ஆசிரியர், அடுத்து அது சொல்லும் மண்ணின் மணம் கமழப் பாடுவதைக் காணலாம்.

சேரும் பாலை வளங்க ளேறி
நேரும் பாலை வனத்திலே
செல்லும் வேலை வேரை யென்று பின்
சொல்லும் வேலை வேரையும்
பாரு மறவ ரம்பையு மதில்
சாரு மறவ ரம்பையும்

பருத்த முண்ட கத்தூ ரையுமதில்
வறுத்து முண்டத் தூரையுஞ்
சாருங் கானத் தேறலைக் கொண்டு
மீறுங் கானத் தேறலைச்
சாடியே பள்ளம் நிரப்பியே சுழிச்
சாடியே வெள்ளம் பரப்பியே
நேரும் பத்திரகாளி பதத்தில்
ஆரும் பத்திரந் தூவியே
நிலைவ னங்கடந் தேறி நீற்ற
முல்லை வனந் தனிற் சார்ந்ததே (பா.43)

மேற்சொன்ன பாடலுக்கு ஒப்பாக இதோ **திருமலை முருகன் பள்ளு** நூலில் இருந்து ஒரு பாடல்:

முன்னாய் திரியும் பட்டியும் - சில
செந்நாய் திரளுங் குட்டியும்
பழுத்த மருப்புக் கலைகளும் - சினை
வகுத்த இருப்பை நிலைகளும்
தொகுந்தி ரைக்கரம் பரப்பி மலைக்கச்
சுருட்டி யழுத்திட டுரப்பியே
நடந்த முல்லையி னிடத்திலே - இடை
கிடந்த சொல்லையர் தடத்திலே
நறிய குல்லையைப் பறிக்குமாம் - கமர்
வெறிகொள் முல்லையை முறிக்குமாம்
மருத வனத்தில் ஓடுமாம் - கதிர்
தருத வனத்தை மூடுமாம்
ஊழைக் குலையைத் தள்ளுமாம் - நெடுந்
தாழைக் குலையில் துள்ளுமாம்
தொடர்ந்தலைக் கரம் வீசியே - இழுத்(து)
அடர்ந்த லைக் கடல் ஈசனைத்
தொழுது வணங்கி யிணங்கி யக்கடல்
அகடு கிழியப் புகுந்ததே[8]

பாலை நிலத்தில் ஆற்று வெள்ளம் எவ்வாறு எல்லாம் புகுந்தது எனக் கண்டோம். இனி முல்லை நிலக் காட்சியைக் காண்போம்.

**சாமிநாதப் பள்ளுவில்** காணும் முல்லை நிலத்தில் புதுப் புனற் வெள்ளம் நுழைந்த அழகு பின்வருமாறு புலவரால் வருணிக்கப்படுகிறது.

சாடுமுல்லை யங்கா வையும் புகழ்
கூடு முல்லை யங்கா வையுந்
தருவெனப் பொருந்து வரையுமதி
உருவெனப் பொருந்து வரையும்
நாடும் ஆட்டுப்பட்டி யுங்குளிர்
மூடு மாட்டுப் பட்டியும்
நட்டு மெருக் காளையுங் கயர்
கட்டு மெருக்காளை யும்
ஆடுஞ் சாமைக் காவையுந் தினம்
ஆடுஞ் சாமைக் காவையும்
ஆயர் நாட்டுப் பயிரையுமவர்
தாயர் ஆட்டுந் தயிரையும்
நீடுங் கைக்குருந் தடியையும்
தோயுங் கைக்குருந் தடியையும்
நேரு முகந்தன் பதத்தில் சேத்து
சாரு மருதந் தோய்ந்ததே

இதேபோன்ற முல்லை நிலத்தில் ஆற்று வெள்ளம் புகுந்த காட்சி ஒன்றைக் **குருகூர்ப் பள்ளு அல்லது பராங்குசப் பள்ளும்** வருணிக்கிறது. அவ்வொப்புடைப் பாடலை ஈண்டுக் காண்போம்.

“..... ..... .....
முல்லை வனத்துப் புகுந்து
..... ..... .....
வல்லையிற் கொன்றைக் கொலையிற் சென்று
மறியு முறியுந் தறியும் பால்
மாடு மாயர் வீடுங் கூடும்
மண்டி யெடுத்துக் கொண்டு போய்ச்
செல்வ மிகுந்த மருத நிலத்தி
னெல்லை புகுந்து”[9]

என்ற மேற்சொன்ன பாடல்களுக்கு ஒப்ப **வையாபுரிப் பள்ளு** கூறும் பிரிதொரு காட்சி வருமாறு:

..... ..... .....
மல்லிகைப் புதையுஞ் சமிதை யுமதில்
இல்லிற்கு டத்தில் வைத் தழுதையும்
வாரிச் சுருட்டிக் கவனத்தைக்

கொல்லையில் நடுந் தறியை யுமெடுத்
தொல்லையும் புகப்பத் தறியையுந்
குலவு வேணுக் குழலை யும்பட்டி
யுலவு மாப்பொறுக் குழலையுந்
தொல்லைத் தாம்புக் கயிற்றை யுமுறல்
கல்லைச்சு வறிலங் கயிற்றையுங்
துலங்கு மேருவை லிருக்கி யேவெள்ளம்
இலங்கு மருதம் புகுந்ததே.[10]

என்ற பாடல் மூலம் ஆற்றின் வெள்ளப் போக்கை முல்லை நிலத்தில் கண்ட நாம் இனி மருத நிலத்தில் ஏற்படுத்திய விளைவுகளைக் காண்போம்.

**சாமிநாதப் பள்ளு** மருதக் காட்சியை இவ்வாறு கூறுகிறது:

நின்ற மருதங்களே மிகச்
சென்ற மருதம் பொங்கவே
நீடிடும் பழனத்தையு மதிற்
கூடிடும் பழனத்தையும்
சென்று கூடுமத் தவளையும் பள்ளி
யன்று போடுமத் தவளையுஞ்
சேரு மந்திர னண்டையு மிகச்
சாருந் தந்திர நண்டையுந்
துன்று பள்ளியர் பானையுஞ் செலத்
தன்று துள்ளிய மீனையுஞ்
துலங்கிடுங் கரும் பகட்டையும் வய
லிலங்கிடுஞ் கரும் பகட்டையும்
மன்றிலே மிகச் சிதறிய வெள்ள
மொன்றிலா தெடுத் துதரியே
வாய்த்த செய்நிலஞ் சார்ந்து மேநதி
ஆர்த்த நெய்தலிற் சாய்த்ததே (பா.47)

இவ்வாறு மருத நிலத்தில் ஆற்று வெள்ளம் துள்ளித் திரிந்த அழகிய காட்சியைக் கண்டோம். இதனை **வையாபுரிப் பள்ளு** காட்டும் காட்சியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இக்கொள்கையில் பள்ளு ஆசிரியர்கள் எந்த அளவிற்கு ஒத்த கருத்துடைய வர்களாக விளங்கினர் என்பது தெரியவரும். அவ் **வையாபுரிப் பள்ளுப்** பாடல் வருமாறு:

மருத நிலத்திற் சாடியே கயல்
பொருத லிஞ்சுழிச் சாடி யே
வாழை யுமரிச் சுனத்தை பாம்பூகப்
பாளை யுமரிச் சுனத்தையுங்
இறுதிவேண்கரக் கரும்பை யுநனி
குருமு ருகனார் கரும்பையும்
ஈந்து கதலித் தண்டை யும்புனல்
மேய்ந்த கதலித் தண்டையும்
அரிக்க திரையே சுருட்டி யேபயிர்
அரிக்க திரையே சுருட்டியே
அறுகு கன்றன்னைப் பணிந்து மேவெள்ளம்
மறுகு நெய்தலம் புகுந்ததே[11]

என்ற இப்பாடல் சாமிநாதப் பள்ளுப் பாடலுடன் எத்தனை ஒத்துள்ளது என்பதை அறியலாம்.

இறுதியாக, இவ்வாற்று வெள்ளம் நெய்தலைக் கண்ட போது எவ்வாறெல்லாம் ஆறு அதிற் சென்றது என்பதனை இனிவரும் **சாமிநாதப் பள்ளு** பாடல் வழியாகக் காண்போம்.

பாயும் நெய்தலைக் சாடியே பயந்
தோயுங் கைதையைச் சாடியே
பகரு முப்பக் கோட்டை யுமலை
நிகரு முப்பளக் கோட்டையும்
ஆயும் பரவர் சனத்தை யுங்கறி
சாயும் பிறர் சனத்தையும்
ஆய்ந்திட ராமன் வஞ்சமுந் தமிழ்க்
கீய்ந்திடாத கல்நெஞ்சமுஞ்
சாயு முவற்கொள் பங்கமுங் கரை
ஆயுஞ் சுவர்கொள் வங்கமுஞ்
சார்ந்த நானிலப் பொருளெல் லாந்திரை
தள்ளித் தள்ளித் துள்ளியே
தோயும் வருணன் பதத்தைப் போற்றிச்
சுரந்திடும் வெள்ளம் பரந்துமே
துலங்கும் பொருணை பெருகிவார
சுகிர்தம் பாடும் பள்ளீரே.

என்ற பாடல் வழி நெய்தற் காட்சியைக் கண்டோம். இதேபோன்ற ஒத்த பிரிதொரு காட்சியைக் **குருகூர்ப் பள்ளு** வாயிலாகக் காண்போம்.

..... ..... .....

வாரி நெய்தற் பாரி லான
வருணன் றருணச் சரணமே

..... ..... .....

பூரித் துயர் நன்னீரில் மீனும்
புணரி மீனு மனைவியே
பொருணை யாறு பெருகி வார
புதுமை பாரும் பள்ளீரே.[12]

என்ற பாடல் வாயிலாக ஆற்று வெள்ளக் காட்சியை வருணிப்பதில் ஒத்த கருத்துடையவர்களாகப் பள்ளுப் புலவர்கள் விளங்குவதைக் காணலாம். ஆற்று வெள்ளப் பெருக்கைப் பள்ளு இலக்கியங்கள் ஒத்த கருத்துடன் கூறியதைக் கண்ட நாம் அப்புலவர்கள், நீரின் இன்றியமை யாமையை எந்த அளவிற்கு உணர்ந்துள்ளனர் என்பது மட்டுமல்லாது வேளாண் தொழில் மீது எந்த அளவிற்கு மரியாதை கொண்டு விளங்கினர் என்பதையும் அறியலாம். அதேபோன்று, மழைக்குறி பற்றியும் குயிற் செய்திகள் பற்றியும் **சாமிநாதபள்ளு** இலக்கியம் கூறும் செய்திகளை இனித் தொகுத்துக் காண்போம்.

**மழைக்குறி காணல் :** மழைக்குறி காணும்போது நடை பெறும் இயற்கை நிகழ்வுகள், மற்றும் மழை பொழியும் அழகு என்ற நிலைகளில் மழை பற்றிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் வானத்தில் மேகக் கூட்டங்கள் உலா வரும் காட்சியைக் கீழ்வரும் பாடல் சுட்டுகிறது.

பரும்மதக் கருணியேர்ப் பாங்கரிய கொட்டுப்
பகடு பிடித்தாடி நின்ற பள்ளர் யாவும்
பெருமை பொருந்திய காளி யாட்டஞ் செய்த
பரபவத்தால் கருணை வெள்ளம் பெருக்க மோங்கி
துருவனென வருசாமி நாத யோக்கியன்
சுகம் பெருகி வளர் நாட்டில் சோம்பு கூர்ந்து
கருமுகில் வானுலக மெங்கும் படர்ந்தே மேலுங்
காலூன்று மழைக்குறியைக் கண்கண் பாரே (பா. 35)

கருமுகில் வானகமெங்கும் படர்ந்த நிலையில் இந் நிலவுலகில் நடந்த சில இயற்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருகிறார் சாமிநாதப் பள்ளு ஆசிரியர்.

வட்ட மதி யொட்டிப் பரிவட்டங் கூறுது - நீல
வர்ண மணியென்ன மழைமின்னி யேறுது
முட்டை கொண்டு கட்டெறும்பு னெட்டி வோடுது - நாளு
மோகமாய் யனேகப் பொன் மண்டுகம் பாடுது. (பா. 36)

என்ற இந்தப் பாடலில் வானிற் காணும் வான்மதியைச் சுற்றி வட்டமான பரிவட்டம் அமைவதும், மின்னற் கீற்றுகள் வானத்தில் தோன்றி மறைவதும், எறும்புகள் தனது முட்டைகளை வாயிற் சுமந்து கொண்டு, தக்க பாதுகாப்பான இடங்களுக்கு விரைவதும், தவளைகள் மழைநீரை எதிர் நோக்கிப் பரவசத்துடன் கத்துவதும் மட்டுமல்லாது,

தொட்டபனை யன்றில் குரல்விட்டு மொய்க்கிது - கடல்
தோய் மதில் மேயுஞ் சிப்பி வாய் திறக்குது
அட்டதிசை யோர் புகழுஞ் சாமிநாதவேள் நினைக்க
அன்புபெறும் பள்ள ரெல்லாங் கும்மி செய்வீரே (பா.36)

என்ற பாடல் வழியாக, அன்றில் பறவை அன்போடு தன் பெடையுடன் மழைக்காலம் எண்ணி மகிழ்ந்து பாடுவதும், முத்துச்சிப்பி மழைநீருக்காக வாய் திறந்து வான் நோக்கி யிருப்பதும் போன்ற இயற்கை நிகழ்வுகள் பல நிகழ்வதைத் தொகுத்துத் தந்துள்ள அருமை எண்ணிப் போற்றுதற்குரியது.

இனி மழை மண்ணில் பதிந்த காட்சியை அழகியல் வனப்போடு ஆசிரியர் இயம்புகிறார். அது வருமாறு:

இந்திர தருவை நிகருஞ் சாமிநா
தேந்திரன் கொடுத்த அமுதொப்பாய்
யெழுந்த மேகம் உவரி நீரை
யுண்டீசன் கழுத்துக் குவமையாய்
அந்தரத்தினி லெழுந்து பைந்தமிழ்க்கு
அருளும் நாக மணியைப் போல்
அடுத்து மின்னல் கொண்டிவன் முன்முரசம்
ஆர்ப்ப தெனக் கொண்ட திர்ந்துமே
சிந்தைமகிழ் தொண் ணூத்தி யாறு
சீர்த்தி யெண்டிசை யூன்றல் போல்
சிறந்த பூதலம் நிறைந்து பார்த்த
திசை யெல்லாம் மழைக்கால் நின்றே

புந்தி மகிழ்ந்து சிவபெரு மாள்தன்
புலமைக் குதவும் பொருளைப் போல்
பொன்னூ திகிரி குளிரச் சினந்து
புதுமையாய் மழை பொழிந்தே. (பா.39)

என்ற பாடலின் வழியாக வான்மழை பெய்து, பூமி எவ்வாறு குளிர்ந்தது என்பதனைக் கண்டோம். இனி, இத்தருணத்தில் குயில்கள் எவ்வாறெல்லாம் மகிழ்ந்தன என்றபோது அக்குயில்களின் வாயிலாகக் குயிற் செய்தியாக ஆசிரியர்தரும் செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

சிற்றிலக்கிய வகைகளில் ஒவ்வொரு இலக்கியத்திற்கும் அதன் உள்ளடக்கம் மற்றும் வெளிப்பாடு என்ற நிலையில் ஒவ்வொரு சிறப்புத் தன்மை உண்டு. குறிப்பாக இச் சிற்றிலக்கிய நூல்கள் தனது உள்ளடக்கத்தின் கண் ஏதேனும் ஒரு பகுதியைப் புதுமையானதாகவும், எடுத்துக்கொண்ட பொருண்மைக்கு ஒப்ப அமையும்படியாகவும் அதே வேளையில் அவ்விலக்கியப் படைப்பாளி தனது நுண்மான் நுழைபுலத்தை வெளிக்காட்டிக் கொள்ளும்படியாகவும் அமைப்பது என்பது பொது மரபாக உள்ளது. எடுத்துக் காட்டாக, பரணி பாடும் புலவர்கள் தங்கள் புலமையைக் **கடைத்திறப்புப் பகுதியிலும்**, கோவை செய்த வல்லோர் தங்கள் வல்லன்மையை **'நாணிக் கண்புதைத்தல்'** என்ற பகுதியிலும் பிள்ளைத்தமிழ் பாடிய பாவலர்கள் தங்கள் திறமையை **அம்புலிப் பருவத்திலும்** அந்தாதி பாடிய புலவர்கள் தங்கள் திறமையை **அடியும் முடியும் தொட்டு வரும்படியாகப் பாடும்** ஆற்றலிலும், குறவஞ்சி பாடிய நாவலர்கள் தங்கள் குன்றாப் புலமையைத் **தலைமகள் பந்தாடுதல்** என்ற பகுதியிலும் நொண்டி பாடிய புலவர்கள் **முன்நடந்த நிகழ்வுகளை** ஒருங்கு கூட்டிக் கூறும் (Flash back) உத்தியிலும் என்று அமைத்துக் கொள்வது போல, பள்ளு இலக்கியம் பாடிய புலவர்கள் தங்கள் ஆற்றலை **இக்குயில் கூவுதல்** என்ற பகுதியில் வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

பொதுவாக, குயில் தமிழகத்துப் பாடும் பறவையாகக் கருதப்படுவது. மனித சமூகத்துடன் சில பறவைகளுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு என்பதைத் தொன்மக்

கதைகளைக் கொண்டும் பண்பாட்டுச் செய்திகளைக் கொண்டும் இலக்கியத் தரவுகளைக் கொண்டும் உணரலாம்.

குயிலைப் பாடும் பறவையாகத் தமிழ் இலக்கியம் கூறும். சங்க காலத்திலிருந்தே அதற்கான ஆதாரங்கள் உண்டு. பொதுவாகக் குயிலை அன்றில் என்றும் கூறுவர். இனிமையாகப் பாடும் தன்மை கொண்டது குயில். குயிலைப்போல பாட வல்லதாக நாட்டுப்புற இலக்கியங்கள் மைனாவைக் கூறும். 'ஆனைச்சாத்தன்' என்ற பறவை பேசும் ஆற்றல் படைத்ததாகத் திருப்பாவையில் 'ஆண்டாள்' நாச்சியார் கூறியுள்ளார். கிளி சொன்னதைச் சொல்லும் ஆற்றல் படைத்தது என்பது குறித்து இலக்கியத்தில் பல தகவல்கள் உண்டு. ஆகவேதான் கிளியை வைத்துத் தூது என்ற சிற்றிலக்கியம் எழுந்துள்ளது.

இவையன்றி, காக்கை மனித குலத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்பது குழந்தை இலக்கியங்கள் வழியாக காக்கை - நரிக்கதை மூலம் அறியலாம்.

பண்பாட்டு வழியாக சில பறவைகள் பற்றிய நம்பிக்கைகள் நம் மக்களிடையே வேர் ஊன்றிவிட்டதைக் காண முடிகிறது. காக்கை கரைந்தால் உறவினர் வருவர். சிட்டுக்குருவி வீட்டு மோட்டத்தில் கூடு கட்டினால் வீட்டில் குழந்தை பிறக்கும். வீட்டில் புறா வளர்த்தால் நச்சு உயிரினங்கள் அணுகாது. கின்னிக் கோழி அல்லது வான்கோழி வீட்டில் வளர்த்தால் பாம்பு போன்ற உயிரினங்கள் அப்பகுதியில் வராது. சாகுருவி எனப்படும் ஆந்தை இரவில் வீட்டின் கூரையில் இருந்து ஒலித்தால் மரணச் செய்தி கேட்க வேண்டி வரும் போன்ற நம்பிக்கைகள் பண்பாட்டின் வழி நமக்குக் கிடைக்கும் தகவல்கள்.

தொன்மச் செய்தியாக மதுரை மீனாட்சி அம்மன் கையில் கிளி இருப்பதும், நவகோள்களில் சனி பகவானுக்குக் காக்கை அரியணை ஆவதும், முருகப் பெருமானுக்கு மயில் வாகன மாகவும், சேவல் கொடியாக அமைவதும், காக்கும் கடவுள் திருமால் கருடனைத் தனது வாகனமாகக் கொண்டிருப்பதாகக் கூறுவதும், பருந்தை சிவபிரானின் அடையாளமாகக் கருதுவதும், நோன்புக் காலங்களின் முன்னோர் வழிபாடு செய்யும்போது காக்கைக்குப் படைக்க வேண்டும் என்ற

கோட்பாடு ஆகியன தொன்மக் கருத்துக்களால் நாம் அறிந்து கொண்டவைகளாகும்.

இப்படி, பறவைகளின் செயற்பாடு மனித சமூகத்துடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகும். தொன்மத் தகவல்களை விட நம்பத் தகுந்த தகவல்களாக நாம் இலக்கியம் பகரும் செய்திகளை ஏற்றுக் கொள்ளலாம். அவ்வகையில் குயில் பாடும் என்ற கருத்துக் காலங்காலமாக நமது இலக்கியங்கள் சொல்லி வருவன.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் புவியியல் நோக்கோடு முதல், கரு, உரிப்பொருள்களைப் பிரித்துக் காட்டும்போது இன்ன இன்ன நிலத்திற்கு உரியன இன்னின்ன பறவைகள் என வகைப்படுத்தினார். அவ்வகையில் அந்த அந்த நிலத்திற்குரிய பறவைகளையும் நமக்குச் சுட்டிச் சென்றுள்ளார். அவர் காட்டிய பறவைகளில் குயிலும் அடங்கும். இயற்கையாக இயற்கையோடு இயைந்து வாழும் பறவையான குயில், கார்காலத்தின்போது மகிழ்ச்சி கொண்டு முன்னிலும் இனிமையாகப் பாடும் தன்மையது என்பதனை நம் அறிஞர்கள் கண்டனர்.

புராண இதிகாச இலக்கிய காலத்தில்தான் குயில் மன்மதனுக்கு உரிய தளவாடங்களில் ஒன்றாகக் கருதப்பட்டு வசந்த காலத்தில் மன்மதனின் தூதனாகக் குயில் செயல்படும் எனத் தொன்மக் கதைகள் கூறுகின்றன. இலக்கியங்களாக உருவான புராண, தல புராண நூல்களும் இதனை வலி யுறுத்தின. திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் போன்ற சிறப்புடைய புராண நூல்கள் குயிலை மன்மதனின் படைகளில் ஒன்றாக வருணித்தன. அதையே பின்னால் வந்த நூல்கள் ஒரு மரபாக ஏற்றன.

ஆனால் பள்ளு இலக்கியம் பண்டைய மரபைப் புறக்கணிக்காமலும் அதே சமயத்தில் புதுமையைப் புகுத்தும் நோக்கோடு வரலாற்றுச் செய்திக் குறிப்புகளைச் சொல்லும் வாழ்த்துப் பகுதிக்குக் குயிலின் இனிய குரலோசையைப் பயன்படுத்திக் கொண்டது. பள்ளு இலக்கியங்கள் அத்தனையிலுமே இப்போக்கே காணப்படுகிறது. இனி, சாமிநாதப் பள்ளு தரும் அத்தகைய செய்தியைக் காண்போம்.

கார்காலம் வந்துவிட்டது. இதோ புலவர் குயிலின் வருகைக்குக் கட்டியம் கூறுகிறார்.

தண்பாண மதிமுகத்தான் சாமி நாதேந்திர வேள்
எண்பார் புகழ் நாட்டி லெல்லோருங் கொண்டாட
விண்பாயந்திலகு பொழில் மீதே மிக மகிழ்ந்து
பண்பார் குயிற் கூவும் பான்மை தனைச் சொல்வோமே

என்ற இப்பாடல் வாயிலாக இறைவன் விநாயகனின் திருவடியை வணங்கிப் போற்றி மகிழ்ந்து ஏத்தியும், ஆடல் வல்லான் நடராசப் பெருமானைத் துதித்தும், இந்நிலவுலகு நீடு வாழ அருள் பாலிக்கும் கண்ணன்பதம் இறைஞ்சியும், இந்நூலாசிரியர் இன்ன இன்ன காரியம் கருதி குயில் கூவுதல் வேண்டும் எனப் பட்டியல் இடுகிறார். அதனை ஈண்டுத் தொகுத்துக் காண்போம். மக்கள் செழிக்க குயிலே நீ கூவ வேண்டும். காமாட்சி, வெங்கமலைநாயகி, பத்திரகாளி ஆகியோர் அருள் பாலிக்கக் கூவ வேண்டும். பொருணை நதி பெருக அனுமந்தராயர் அருளும் பருத்திக் காட்டு நாச்சியார் பாத கமலமும் துணை நிற்கக் குயிலே கூவ வேண்டும். மருதமலை அய்யர், வீராச்சிமங்கை நகர் வன்னிராயன் அண்ணாவி, துரைசாமி நரேந்திரன், சிங்கேறு சாமிநாதேந்திர முகில், மன்னு மறையோர்கள், குல நாரணாசாரி முகில், மணியமார் மயன், வெங்கிட்ட ரங்கய்யன், துரைராயன், வெங்கிட்ட ரமணய்யன் அனவரத கலியாணன், நரசயன், நீதிபதி கல்லாசாரி, சொன்னமொழி தப்பாத முகில் கிருஷ்ணப்பேந்திரன், சுப்பராயர், வேங்கணய்யன், குப்பய்யன், தளபதி நிகரான சாமிநாதேந்திரமுகில், கொற்றை நகராதிபன் குமாரர் ரற்றின வேணாட்கோவேந்தன், கற்ற தமிழாளி முத்தணேந்திரயூகி, முருகய்யன், விபேகி, ஆண்டியப்ப வில் விசையன், முத்தனேந்திர தீரன், முத்துச்சாமி, பெரிய கருப்பன்தீரன், புவிபுகழ் தம்பாப் பிள்ளை, மருதநாயக யோக்கியபோசன், சிவனடி மறவாத செட்டியப்பன், வைசியர் குலச் சிங்கேறு, ராமசாமி முகில், சுடலைமுத்துப் பூபாலன், பேச்சிமுத்து, மருதமலைத் தாட்டீகன், பொருளூர் முத்துச்சாமி வெங்கடாசலம், கருப்பண்ணன், தடிக்காரன், மருதப்பன், கருப்பண்ணன் கொற்றை நகர் முத்துக்கருப்பன் தீரன், முத்துக் குமாரேந்திரன், சுடலையாதித்தர், இருளப்பேந்திரன், ஆறுமுக தீரன், பற்றலர் குடோரி என வந்துதித்த செயலாளிபட்டன்

சேருவை, சிந்தாமணிஉருசாமிநாதேந்திரன் என்ற நீண்ட பெயர் பட்டியலைக் கொடுத்து இவர்கள் எல்லாம் சிறக்க, நீடு வாழக் குயில் கூவ வேண்டும் என்று பட்டியலிடுகிறார் ஆசிரியர்.

குயிலின் இயற்கையான கூவலை, அந்நாடு செழிக்கப் பாடுபட்ட முன்னோர்களை நினைவு கொள்வதற்கும் நன்றி செலுத்துவதற்கும் இக்குயில் கூவுதலைப் பள்ளுப் புலவர்கள் ஒரு உத்தியாக் கையாண்டுள்ளனர்.

பள்ளு இலக்கியத்தில் இப்பகுதியில்லையேல் அப்பள்ளு நூல் எழுந்த காலம், அம்மண்ணின் மைந்தர் பற்றிய செய்திகள் முதலியன நமக்குக் கிடைக்காமல் போய்விடும். வரலாற்று விழிப்புணர்வுக்கு அடிப்படையிட்டது பள்ளு நூலின் இப்பகுதியே என்றால் மிகையாகாது. அவ்வகையில் இப்பகுதி நூலின்கண் சிறப்புறு இடத்தைப் பெறுகிறது.

இலக்கியம் என்பது கருத்து வடிவம், கற்பனை, நடை என்று நான்கு பொருண்மைகளைக் கொண்டு இலங்குவது என்பது திறனாய்வாளர் தம் முடிபு. இந்த விதிக்கு எந்த இலக்கியமும் விதிவிலக்கு அன்று. பேரிலக்கியம் என்றாலும் சிற்றிலக்கியம் என்றாலும் மனித சமூகத்திற்கு ஏதேனும் ஒருவகையில் ஒரு செய்தியை எடுத்துச் செல்லும் ஊடகங்களே. இவ்வூடகங்களின் பயன்பாடு அதன் மேற்சொன்ன நான்கு பண்புகளைக் கொண்டே விளங்கும்.

பள்ளு இலக்கியம் மக்கள் இலக்கியமாகத் திகழ அது ஏற்றுக்கொண்டபொருள் வேளாண் தொழில் செய்யும் எளியோர் வாழ்வியல் பற்றிக் கூறுவதே. எந்த ஒரு செய்தியை யும் கற்பனைத்திறம் இன்றி, ஆசிரியன் தனக்கென்று ஒரு நடையை மேற்கொள்ளாது சொல்லிச் சென்றால் அச்செய்தி நுகர்வோரான படிப்பாளிகளைச் சென்று ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆகவே நெடிய காப்பியம் பாடும் புலவனும், சிறிய சிறுகதை படைக்கும் எழுத்தாளனும் கற்பனை என்ற தூரிகையைக் கொண்டு, தங்களின் வசப்பட்ட மொழி நடையில் தங்கள் கருத்தைச் சொல்ல முயல்கின்றனர். அதில் பலர் வெற்றியும் பெற்றுள்ளனர்.

அழகியல் உணர்வு என்பது ஒரு புலவனுக்கு எடுத்துக் கொண்ட கருத்தைத் தெளிவுபடுத்த மிகவும் துணை நிற்கும்

சாதனமாகும். பொதுவாகப் பள்ளு இலக்கியத்தில் சந்தச் சலங்கையொலிக்குக் குறைவிருக்காது. இயற்கை வருணனை தனிச் சிறப்போடு அமைந்திருக்கும். அவ்வகையில் நாட்டு வளம், மழைக்குறியில் நிகழும் நிகழ்வுகள், கார்கால வருணனை போன்ற பகுதிகள் பெற்றுள்ள சிறப்பான, அழகியல் நுட்பங்கள் படித்து இன்புறத்தக்கன. மேற்சொன்ன கூறுகள் இச்சாமிநாதப் பள்ளு நூலில் இடம்பெற்றுள்ள பான்மையை இனிக் காண்போம்.

**நாட்டு வளம்:** சுவாமிநாதப் பள்ளுவின் பாட்டுடைத் தலைவனான சுவாமி நாதேந்திரன் வாழ் தென்கரை நாட்டின் சிறப்புக்குக் கட்டியம் கூறும் பாட்டில் ஆசிரியர் தென்கரை நாட்டுக் காவலனின் சிறப்பை முதலில் உவந்து சிறப்பித்துள்ள அழகைக் காணலாம்.

'தேட்டு வளங்காத புல்லர் தென்கடற் கப்பாலேகத்
தாட்டு வனத் தெற்றென சொல் சாமிநாதேந்திரன் வெற்பில்
வாட்டுவளம் பொருக்க கன பள்ளியர்கள் வாய் மலர்ந்து
நாட்டுவளஞ் சொல்லி மணி நாறுக.... தோன்றினரே' (பா.17)

என்ற இப்பாடலில் நாட்டு வளத்திற்குக் காரணமாக விளங்கும். மன்னவனை 'தேட்டு வளங்காத புல்லர் தென்கடற் கப்பாலேகத் தாட்டுவனத் தெற்றென சொல்' என்ற வரிகளின் வாயிலாகத் தென்கரை நாட்டுக் காவலனின் வீரமும் அவன் வீறு கொண்டு எழுந்தால் பகைவர்களை முன்னீர் சூழ் தென் பெருங்கடலில் வீசும் வல்லமை பெற்றவன் எனக் கூறுகிறார். இந்நூலாசிரியர். முதலில் மன்னனின் வீரச்சிறப்பை இயல்பாகக் கூறிய புலவர் அடுத்துத் தன் கற்பனைத் தூரிகையின் வீச்சைக் காட்ட முனைகிறார். அவ்வகையில் கற்போரின் நெஞ்சத்தைச் சுண்டி யிழுக்கும் அப்பாடல் அழகு வருமாறு:

கஞ்சரம் பூத்த தடத்தனங் காட்டுமெய்
கன்னி மாதர் தடந் தனங் காட்டு
வஞ்ச மாரன் முலைக் கிணை தேடு.... ம்
. மாதராரு முலைக் கணை தேடுஞ்
செஞ்சம்பாவும் பழனத் திருக்குந்
திரள முத்தினற் பழனத் திருக்கும்
அஞ்சலார் பணிமால் சாமிநாத
அதுலன் தென்கரை நாடெங்கள் நாடே. (பா : 20)

பெண்டிதர் தம் பெருத்த தனங்கள் வசந்தனின் வண்கணைகளாக ஆடவரைத் தாக்கப் பயன்படுவதாகவும், கழனியிற் செஞ்சம்பா முதிர்ந்து அறுவடைக்கு ஏற்ப பழனித்திருக்கும் என்று அற்புதமாகத் தென்கரை நாட்டின் வளத்தை வாழ்த்துகிறார் புலவர்.

பிரிதொரு பாடலில்,

அந்தணஞ் சக்கரங்களை நேருமனப்
பெண்ணார் சக்கரங்களை நேரும்
சந்தனத் தழுவித் தத்தை மேவ வளைக்குமாச்
சந்தனந் தத்தை மேல் வளைக்கு
கந்தரங்கச் சத்தந் திக்கு மேவு
முகந்தரங்கச் சத்தந் திக்கு மேவும்
அயந்தாரு நிகர்சாமிநாத
அதுலன் வாழ்வள நாடெங்கள் நாடே (பா.21)

தென்கரை நாட்டின் சிறப்பைச் சொற் சித்திரத்தால் விளக்குவதைக் காணலாம். சந்தனத்தை நறுமணத்திற்காகத் தத்தையார் பூசிக் கொள்ள வேண்டி நறுமணம் மிக்க சந்தனக் கட்டையை அறைக்க, இப்படி அந்நாட்டில் செழிப்பான வளத்தை எடுத்துரைக்கும் நிகழ்வுகள் பல உண்டு எனக் கூறுவார் புலவர்.

தான வாரணன் சாமிநாதேந்திர தயாலுவின் நாடு இயற்கை வளம் எழில் கொஞ்சும் நாடு. வானரங்கள் புளி அல்லது மா மரத்தில் உள்ள பழங்களை உண்ண வேண்டி அங்கேக் குழுமியிருக்கும் கிளியை தத்திக் குதித்து அச்சப்பட்டுத்தி அவைகளை அவ்விடத்தில் இருந்து அகற்ற முயலும். இச் செயல் கண்டு அஞ்சிய கிளிகள் கூட்டாகப் பறப்பதைக் கண்டு குரங்குகள் தத்தை எனக் குதிக்கும்.

தென்கரை நாட்டில் சாமிநாத வேள் ஆட்சியில் வானம் பொய்க்காது மூன்று மழையைக் கொடையாக நல்கும். பெரும் பறவைகளையும் மறைக்கும்படியான வயல்வெளிகளில் செந்நெல் வளர்ந்து அழகுறக் காட்சித் தரும். அம்மாட்சியைச் சொல்லி மாளாது. பசி என வந்தவர்க்கு தாயெனச்சாலப் பரிந்து வேண்டுவன செய்யும் நன்மக்கள் வாழும் நாடு என்பதனை வரும் பாடல் வழி விளக்குவார்.

வான்மூன்று மழைபெய்து காற்கும்
வயலிற் சாலிமணி முத்தைச் சேர்க்குந்
தான்மீய் வ ரென்றுந்த பேற்குந்
தரள மெய்வரதன் கலிதீர்க்கும்
மேனிலா மணிமாடத் துள்ளோர்க்கு
மிவ் வெண்மை க்ணடு மிகும் புனலாற்குஞ்
சேனை காவலன் மால் சாமிநாத வசீகரன்
தென்கரை நாடு எங்கள் நாடே. (பா.18)

மேலும் இன்னும் சற்றுக் கவிதைச் சுவையோடு இப்பாடலின் வருணிப்புத் தான் வாழும் வளநாட்டை வாழ்த்த விரும்பிய புலவர் தன் கற்பனைச் சிறகை அகல விரிக்கிறார். அது ஒரு வித்தியாசமானது. தென்கரை நாட்டில் பழுத்த கதளிப் பழங்களுக்காக மந்திகள் ஒன்றை ஒன்று முந்திக் கொள்ளும். நீர்நிலைகளைச் சுற்றியுள்ள சோலைகளில் ஓங்கி உயர்ந்து நிற்கும் நற்பழ மரங்களின் கனிகள் பழுத்து அந்நீர்நிலைகளைச் சாறும் அதன் காரணமாகத் தென்கரை நாட்டு நீர்நிலை களெல்லாம் மதுரப் புனலாக விளங்கும் எனக் கூறுகிறார் புலவர்.

கன்னிவாழைப் பழுத்ததை நாடுங்
கவிக்கு முன்னங் கருமந்தி யாடும்
மன்னியே அக்கினியிற் கைபோடும்
வயலெல்லாம் பின்மதுப் புனலோடும்
மின்னும் வான்மழைத் துளி சாடும்
விபரத்தால் நெல் விளைந்துற நீடுந்
துன்னலார் பணிமால் சாமிநாத சுமுகன்
வாழ்வள நாடு எங்கள் நாடே. (பா: 19)

தென்கரை நாட்டின் வளத்தைச் சொல்வதென்றால் புலவருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி. கீழ்வரும் பாடலில் காமச்சுவை ததும்ப ஆசிரியர் கூறும் அவ் அழகுப் பாடலைக் காண்போம்.

**இதோ அப்பாடல்:**

வானரந் தத்தை யோட்டிய சூதத்தில்
வானரந் தத்தை யென்று குதிக்கும்
பானமா விரசக்கனி கேறவும்
பானமா விரசக்கனி யோடும்

மேனகைக் கஞ்சிடாத மின்னார் சித்திர
மேனகைக் கஞ்சி வேர்வை சொலிக்குந்
தானவாரணன் சாமிநாதேந்திர தயாலு
தென்கரை நாடெங்கள் நாடே. (பா.22)

மேலும் இயற்கையின் செல்வச் செழிப்பைப் பிறிதொரு விதமாகக் கூறுகிறது கீழ்வரும் பாடல். மஞ்சளும் இஞ்சியும் விளையும் நாடு அது. மேகக் கூட்டங்கள் கொண்டலைச்சாரும் நாடு. அந்நாட்டில் கன்னிமாடங்களில் உறையும் பெண்டிர்தம் முகங்களில் மஞ்சளின் ஒளி பதிந்திருக்கும். சோலைகள் நிறைந்துள்ள நாடு என்பதால் தென்றல் அங்கே அசைந்தாடும் என்ற பொருளில் அமைந்த பாடல் இது.

மன்னு மாதளைக் கொண்டலைச் சாடும்
வலுத்தயூகங் கைகொண்டலைச் சாடுந்
தன்னு மிஞ்சியு மஞ்சளைச் சேருங்
சூதமிஞ்சியு மஞ்சளைச் சேருங்
கன்னி மாடங்கள் நெல்லி வந்தாடும்
நற்காவி லாருங் களனெல்லி வந்தாடும்
அ னதாரும் நிகர் சாமிநாத
அதுலன் வாழ்வள நாடெங்கள் நாடே. (பா.23)

இது மட்டுமா! மற்றொரு பாடல் இன்னும் ஒருபடி மேலே போய் நாட்டின் வளத்தை இவ்வாறு வருணிக்கிறது.

சோலைதோறுங் கருங்குயில் பாடுந்
சுகத்தினாற் பசுந்தோகை நின்றாடும்
மாலைதோறும் வசந்தனைத் தேடும்
மாதர்மீதில் மலர்க்கணை சாடுங்
காலைதோறும் மணாளரைக் கூடும்
கருத்தினா லுங் கனமலர் சூடும்
ஞாலமேழும் புகழ்சாமிநாத நரேந்திரன்
தென்கரை நாடெங்கள் நாடே. (பா.24)

இந்நூலின் சிறப்புறு பாடலாகவும், இனிய சந்தமுடைய பாடலாகவும் அமைவது கீழ்வரும் பாடல். இப்பாடலில் புலவர் தன் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டியுள்ளார் எனலாம்.

கார மென்பது சேலை யெழுத்துக்
களங்க ளென்பதி ராக்கதி ராகும்

ஓரமென்ப திருப்பதின் கோடு நல்
லோட்ட மென்பது யர்ந்த பலவீடு
சோர மென்பது வாவியில் தீர்த்தம்
பின் அட்டி யென்பது மாதர் சிரத்தில்
கோர வரம் பரிமால் சாமிநாத குபேரன்
வாழ்வள நாடெங்கள் நாடே. (பா.25)

என வருணிப்பதில் இருந்து அழுத்தமான வரைபடங்களைக் கொண்ட சித்திரச் சேலைகள் அணிந்தவர் தென்கரைப் பெண்டிர்; ஓரம் என்பது வளைந்த கோடுகள் நல்ல ஓட்டம் என்பது காற்றோட்டம் மிகுந்த உயரமான வீடுகள்; குற்றங்களைக் களைவது தீர்த்தம் எனப்படும் கோயிற் குளங்கள் போன்ற நாட்டுக்கு வளமை சேர்க்கும் செய்திகள் இன்னின்னவை என்பதனை நம்மால் அறிய முடிகிறது.

மக்களின் இயற்கையோடு இயைந்து வாழும் ஆற்றலை நாட்டின் வளம் கூறும் பாடல்கள் மூலம் நாம் அறிய முடிகிறது. "மன்னர் அனைத்தே மலர்தலை உலகம்" என்பது முதுமொழி. ஆறு போவது கிழக்கு அரசன் சொல்வது வழக்கு என்பதும் ஒரு மரபுத் தொடரே. ஆகவே, காப்பியத்தில் இருந்து நாட்டு வளம் கூறுதல் ஒரு பண்பாகவே இலக்கியத்தில் இடம் பெற்றது. அவ்வகையில் தென்கரை நாட்டின் சிறப்பைக் கண்டோம்.

**சாமிநாதப் பள்ளு நூலிற் காணும் சிறப்புத் தகவல்கள்**

பள்ளு நூல் என்பதால் மேழித் தொழில் பற்றிய பல்வேறு தகவல்களை உள்ளடக்கி இயங்குகிறது. அவற்றில் முக்கியமானவைகளாகத் திகழ்பவை 1. நெல் பற்றிய தகவல்; 2. மாடுகள் பற்றிய தகவல்; 3. கட்டளைகள்; 4. பிற மேழிச் செய்திகள் எனப் பகுத்துக் காணலாம்.

**நெல் பற்றிய தகவல் :**

நெல்லின் தோற்றம் ஏறத்தாழ 7000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பது அறிஞர்கள் கணிப்பு. தென்கிழக்கு ஆசியாவில் கிழக்கு இந்தியா, இந்தோனேசியா, தென் சீனப் பகுதிகளில் நெல் முதலில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. உலகில் உணவுக்காகப் பயிரிடப்படும் தானிய வகைகளில் நெல் முதன்மையான இடத்தைப் பெறுகின்ற புல் குடும்பத்தைச் சார்ந்த முக்கிய உணவுப் பயிராகும்.[13]

தொல்காப்பியம் பயிர் வகைகளில் ‘நெல்லும்’ எண்ணெய் வித்துகளில் ‘எள்ளும்’ போத்து என்னும் பெயரில் கரும்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. வேளாண் தொழிலின் பொற்காலமாகப் புகழப்படும் சங்க காலத்தில் வேளாண் நுட்பங்கள் சிறப்பாக வளர்ந்திருந்தன.

‘செந்நெல்லை’ நீர்வளஞ் சான்ற கழனியில் விளைவிப்பர். விளைந்த செந்நெல் சிவந்து கதிர்கள் வளைந்து இருக்கும். நெல்லின்சிவந்த நெல் சிறந்தததாகும் எனக் கூறப்பட்டுள்ளது. (அகம். 126-11) வெண்ணெல் பற்றிய குறிப்பு ஒன்று குறுந்தொகையிற் காணப்படுகிறது. வெண்ணெல்லைக் குளத்துப் பாசனத்தில் விளைவிப்பர். (புறம் 33-5) வெண்ணெல்லில் விளைந்த நெற்கதிர்கள் வெண்மையாக இருக்கும். அகம் (204-10-12) சேரநாட்டில் தொண்டித் துறைமுகப் பட்டினத்தில் வெண்ணெல் மிகுவாக விளைந்தது என்ற குறிப்பு (290:2-3) குறுந்தொகைப் பாடலில் காணப் படுகிறது. சாலிநெல் என்ற ஒருவகை நெல்லைப் பற்றி ஒரு குறிப்பு வருமாறு. ‘சாலி’ என்பது ஒரு நெல்வகை. இது ஆற்றுப் பாசனத்தில் விளைவது. சாலி என்ற சிறந்த நெல்லின் பெயரில் சாலியூர் என்ற ஓர் நகரம் இருந்ததாக மதுரைக் காஞ்,87-88 காவிரி பாயும் சோழ நாட்டில் சாலி நெல்லைப் பயிர் செய்து ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். (பதிற்.29-3) குறிஞ்சியில் விளையும் ஒருவகை நெல் ஐவன நெல் என்னும் மலை நெல் என்று வழங்கப்படுகிறது. நற். (973-74) குறுந் 101-1) ஆகிய நூல்கள் ஐவன நெல்லோடு தினையையும் சேர்ப்ப விதைப்பர் என்று குறிப்பிடுகிறது. புறநானூற்றில் (119-15-17) பாடல் வரி இதனை வலியுறுத்தும். மருத நிலத்தில் முடந்தை நெல் என்பது விளையும் எனக் கூறுவர்.

இந்நெல் வளைந்த கதிர்களை யுடையதாய் இருக்கும். இதன் தாள் மூங்கில் போல் நீண்டும் பருத்தும் இருக்கும் என்பதை நற். 29-3, 32-12-14 வாயிலாக அறியுலாம்.

மேட்டு நிலத்தில் விளைகின்ற நெல் வகைகளுள் தோரை நெல் என்பதும் ஒன்று. குட்டையான கதிர்களைப் பெற்றிருக்கும் என (மதுரை 286-8) பருவ மழையில் விதைத்த தோரை நெல் மழை நீரைக் கொண்டே அழகிய கதிர்களோடு

முற்றி விளையும் மலைபடு (120-1) கூறுவது காணலாம். குளநெல் என்பது குறிஞ்சியில் விளையும் நெல் வகை. பருவ மழையில் விதைத்துச் சுனைநீர் பாய்ச்சி விளைவிப்பர் என (நற்.1-2) நற்றிணை கூறுகிறது.

தோப்பி என்ற நெல்வகை புன்செய்யில் விளையும். இந் நெல்லானது சோறு சிவந்து பெரியதாக இருக்கும் என பெரும்பாணாற்றுப்படை (130-1) என்பதன் மூலம் அறியலாம். மூங்கில்நெல் மூங்கில் நெல்லைப் பிற நெற்பயிர்கள் போல் வளர்கக முடியாது. மூங்கில் நெல் வெண்மை நிறமுடையதாக இருக்கும். இதனை 'வெதிர்நெல்' என்றும் வழங்குவர் என அகநானூறு (207:10-11) வரிகள் மூலம் அறியலாம்.

பள்ளு இலக்கியங்கள் வேளாண் தொழில் பற்றி நமக்குத் தகவல்களை அள்ளித் தரும் பெட்டகங்கள் ஆகும். இவ்விலக்கியங்களில் பலவித மண்ணியல்புக்கும் தட்பவெப்ப சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பல்வேறு நெல்வகைகள் மிகுதியாக உருவாக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. நெல் வகைகளுக்கு இடப்பட்டுள்ள பெயர்களை நோக்கும்போது தமிழர்தம் இயற்கையோடு இயைந்த வாழ்வுநெறி நன்கு புலப்படும். அவர்கள் தாங்கள் கண்ட இயற்கைப் பொருளையும் வேளாண் தொழிலோடு தொடர்புடைய பொருள்களையும் சமுதாய வாழ்வில் இடம் பெறும் இன்றியமையாப் பொருள்களையும், சமுதாய வாழ்வில் இடம் பெறும் இன்றியமையாப் பொருள்களையும், தெய்வங் களையும் மக்களில் சிறந்தாரையும் நினைவுபடுத்தியும் இயைவுபடுத்தியும் தாங்கள் விளைவிக்கும் நெல் வகையின் வண்ணம் வடிவம், சுவை, இயல்பு, இவற்றிற்கு ஏற்பப் பொருத்திப் பெயரிட்டுள்ளமை இங்கு நோக்கற்பாலது.

'திருவாரூர் பள்ளு' நூலில் காணப்பெறும் அரியநாகம், அழகியவாணன், தில்லை நாயகன், இரங்கல் மீட்டான் என்னும் நெல்வகையின் பெயர்களும், வையாபுரிப் பள்ளு நூலில் காணப்பெறும் ஆட்சி நாராயணன், அழகிய மணவாளன், காலிங்கராயன் என்னும் நெல்வகைப் பெயர்களும் திருமலை முருகன் பள்ளு நூலில் அமைந்த குற்றாலன், அரியநாயகன், சிறைமீட்டான் முதலிய நெற் பெயர்களும் செம்பகராமன் பள்ளு என்ற நூலில் அமைந்த

காலிங்கராயன், காணியாளன், மதுரைவாணன், கந்தூரி வாணன், செண்டலங்காரன் திறைக் கொண்டான், இராசராசவாணன் என்னும் நெல் வகைப் பெயர்களும் அந்த அந்தப் பகுதியில் சிறப்புற்று அமைந்தது போல[14] கொங்கு நாட்டில் சிறப்புற்று விளங்கும். நெல் வகைகள் பற்றி ஈண்டுக் காணலாம்.

**சம்பா மிளகி யன்னதாளி சித்திரக்காலி**
**சன்னப் பூம்பாளை முத்து வர்ணச் சம்பா**
**கொம்பானை வெள்ளைமலை மீண்டஎரிக் கிராவி**
**கொதும்பை சீதா போகங் குளிதித்தான்**
**அம்பொருக நின்ற செந்தாழை காடைக் கழுத்தான்**
**அழகிய மணவாளன் குளவாழை நெல்**
**வெம்பா தாம்பான் வீதிவிடங்கன் மரு**
**வில்லி பனை முகரன் வெந்தயச் சம்பான் (பா.115)**

மற்றும்,

**மன்னுஞ் சேர்குரும்பை மணல்வாரி பாரக் கடுக்கன்**
**மல்லி பிறங்கலமிட்டான் மாலைப் புத்தன்**
**பன்னுங் கஸ்த்தூரி வர்ணன் அம்பலவாணன்**
**பூசைப்பாடி கடுகு சம்பாக் கொடைக் கழகன்**
**புன்னை வனச்சம்பா நற்பொசும்பா விங்கி நாரணன்**
**புளுகு சீரகச் சம்பாக்கள் வாரிநெல்**
**தன்மையாக யிந்த வகைக் கன்பது சலாளகை**
**தம்பா பிள்ளை பாலுண்டு தெம்பு கா ணாண்டே.**
**(பா.116)**

சம்பா, மிளகி, அன்னதானி, சித்திரக்காலி, அன்னப் பூம்பாளை, முத்து வர்ணச் சம்பா, கொம்பானை, வெள்ளை மலைமீண்டான், அன்னிக்கிராவி, கொதும்பை, சீதாபோகம், குளிதித்தான், அம்பொருக நின்றான், செந்தாழை காடைக் கருத்தான், அழகிய மணவாளன், குளவாழை நெல், வெம்பா தாம்பான், வீதிவிடங்கன், மருவல்லி, பனைமுகரன், வெந்தயச் சம்பா, குரும்பை, மணல்வாரி, பாரதக் குருக்கன், மல்லி, பிறங்கல மிட்டான், மாலை புத்தன், கார்த்தூளி வர்ணன், அம்பல வாணன், பூசைப்பாடி, கடுகுச் சம்பா, கொடைக் கழகன், புன்னை வனச்சம்பா, நற்பொசும்பா, விங்கி, நாரணன் புளு, சீரகச் சம்பா, வாரிநெல் என்ற பெயர்கள் இந்நூலிற் காணும் நெற் பெயர்கள் ஆகும்.

நெல்லின் வண்ணம், அரிசியின் நிறம் இவற்றின் இயல்புக்கு ஏற்ப நெல் வகைகளுக்குப் பெயரிட்டு அழைத்தனர். நிறத்தைக் கொண்டு வெள்ளை நிறம் கொண்டதால் வெள்ளை என்றும், முத்துநிறம் கொண்டவை முத்துவர்ணன் என்றும் செம்மை நிறம் கொண்டதால் செந்தாழை என்றும் கஸ்தூரி நிறம் கொண்டதால் கஸ்தூரி வர்ணன் என்றும், பெயர்கள் சூட்டப்படும் முறைகளைக் காணலாம். மிளகைப் போன்ற வடிவம் உடைய நெல்லை மிளகி என்றும் கூறுவதைக் காண முடிகிறது.

**மாடுகள் பற்றிய குறிப்புகள்**

வேளாண் தொழிலில் உழவர்களுக்கு உறுதுணையாக இருப்பது கால்நடையாகும். மனிதனைப் போல மேழித் தொழிலில் மாடுகளின் பங்களிப்பு ஏற்றமுடையது; போற்றுதற்குரியது. கழனிப் பணியில் தொடக்கம் முதல் அறுவடை வரைக் காளைகள் இன்றி எதுவும் நடைபெறு வதில்லை. உழுதல், பரம்பு அடித்தல், ஏர் இடுதல், போரடித்தல், அறுவடை ஆகிய தானியங்களைக் களத்து மேட்டில் இருந்து வீட்டுக்கு கொணரவும், தானியங்களை ஏற்றிக் கொண்டு நகரத்திற்குச் செல்லவும் கால்நடைகளே போக்குவரத்து ஊடகங்களாக விளங்குவன.

உழவனின் சொத்தில் கால்நடைகளும் ஒன்றாகக் கருதப்படுவது காணத் தக்கது. ஆகவேதான் அசையும் அசையாப் பொருள்கள் என்று கூறப்படும் சொத்தில் அசையும் சொத்தில் மாடுகள் இடம் பெறுகின்றன. ஆகவேதான் மாடுகளை மேழிச் செல்வம் எனப் போற்றுவர். இதனாலேயே ஔவை 'மேழிச் செல்வம் கோழைபடாது எனச் சிறப்பித்துக் கூறுவதும் காணத்தக்கது.

செல்வம் என்பதற்கு மாடு என்ற பொருளும் உண்டு. ஆகவேதான் உழவு மாடுகள் மன்பதையில் சிறப்பிடம் பெறுகின்றன. நமது விழாக்களில் சிறப்புறு பண்டிகையாக கருதப்படும் பொங்கல் அன்று மனிதர்கள் காணும் கடவுள் எனப் போற்றப்படும் கதிரோனுக்குப் புது நெல் கொண்டு புதுப் பானையிற் பொங்கல் சமைத்து அதனைப் பக்தியுடன் படைத்துப் போற்றி வணங்குவது போல, உழவுக்கு உழைப்புத் தந்த உன்னத கால்நடைக்கும் நன்றி செலுத்தும் வகையில் மாடு அல்லது கால் நடை வழிபாடு 'மாட்டுப்

பொங்கல்' என்ற பெயரில் காலங்காலமாக நடைபெற்று வரும் பண்டிகையாக விளங்குகிறது. ஆகவேதான் இத்தனைச் சிறப்புமிக்க மாடுகள் பற்றிய செய்திகளைப் பள்ளு நூல்களில் மிகவும் பேசக் காண்கிறோம்.

சுவாமிநாதப்பள்ளுவிலும் பலவகையான மாடுகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். வெள்ளை, சிவளை, கருமரையான், படலைக் கொம்பன், மேகவர்ணன், பனைங்காரி, வெடிவாலன், குள்ளமணிப் பூதன், முத்து நிறத்தான், பெரிய மோளை, குட்டைக் கொம்பன், கூடுகொம்பன், கூனவாளன், துள்ளுங் கபாடப் புல்லன், எள்ளுப்பூ நிறத்தான், பசுத்தொடுத்தான், கடுக்காய் வெள்ளை, தொழுப்புகுந்தான், பண்ணை நிறத்தான் எனப் பலவகையான மாடுகள் பற்றிப் பேசுகிறது. அப்பாடல் வருமாறு:

வெள்ளை சிவலை கருமரையன் படலைக் கொம்பன்
மேகவர்ணன் பனைங்காரி வெடிவாலன்
குள்ளைமணிப் பூதன் முத்துநிறத்தான் பெரிய மோளை
குட்டைக் கொம்பன் கூடு கொம்பன் கூனவாளன்
துள்ளுங் கபாடப் புல்லை யெள்ளுப்பூப் பூநிறத்தான் பசுத்
தொடுத்தான் கடுக்காய் வெள்ளை தொழுப் புகுந்தான்
பள்ளை நிறத் தானிந்த விதத்தி லுண்டாயிரமே
பண்ணைக் குழவு மாடும் பாரீராண்டே. (பா:118)

என்ற இப்பாடலின் வாயிலாக மாடுகளின் பல்வேறு வகையான பெயர்கள் அதற்குரிய காரணங்கள் அம்மாடுகளின் இயல்புகள் குறித்து மிகத் தெளிவாக அறிந்தோம்.

**வயற் பெயர்கள் :** ஊருக்குப் பெயரிடுதல், தனி நபர்க்குப் பெயர் இடுதல் போன்றவைகள் காலம் காலமாக நடந்து வருவன. ஊருக்குப் பெயர் அமைவது போன்று ஒவ்வொருவருடைய நிலத்திற்கும் ஒரு பெயர் உண்டு. இப்பண்பு இன்றுவரை நடைமுறையில் உள்ளதைக் காணலாம். பள்ளு நூல்களில் இத்தகைய பெயர்கள் பழகி வருவதைக் காண முடிகிறது. அதேபோன்று இச்சாமிநாதப் பள்ளு இலக்கியத்திலும் பல பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

துலங்கும் பெரிய நல்லிகாணியுஞ் சுப்பய்யன் காணி
தோற்றும் பெருமாள் கோயிற் காணி ஆற்றடி வயலும்

இலங்கி வளரும் புளியடி வயலும் நாவலடியும்
இஷ்ட்டம் பெருகுங் குட்டக்குளமுங் கட்டை வெட்டியும்
பலன் பொருந்திய திருவண்டி வயலும் மஞ்சள்காணியும்
பூலாவடியுஞ் சோழவயலும் வேலாங் காணியும்
பலன்பெருஞ் சிவனா பட்டாரமுந் தோணிக் காணியும்
பசற்றெல்லாம் பட்டி வைத்ததே வெகுதிட்டங்
காணாண்டே. (பா : 102)

என்ற இப்பாடல் வழியாகப் பெரிய நல்லிக்காணி, சுப்பய்யன் காணி, பெருமாள் கோயில் காணி, ஆற்றடி வயல், புளியடிவயல், நாவலடி வயல், நாவலடி, குட்டக்குளம், கட்டைவெட்டி, திருவண்டி வயல், மஞ்சள் காணி, துலாவடி, சோடிவயல், வேலாங்காணி, தோணிக்காணி என பலவகையான நிலங்களின் பெயர்களைத் தொகுத்து இந்நூல் கூறியுள்ள தைக் காணலாம்.

**மீன்களின் பெயர் :** மீன் என்பது பொருளாதாரத்தில் கீழ்த்தட்டில் உள்ள மக்களின் இன்றியமையாத உணவுப் பொருள்களில் ஒன்று என்றால் மிகையாகாது. பொதுவாக இன்றுகூட புலாலின் விலையை விட மீனின் விலை மலிவாக உள்ளதைக் காணலாம். ‘உள்ளதைவிற்று ஊடகம் உண்ண வேண்டும்’ என்ற முதுமொழியும் ஆற்று மீனில் அயிரை மீனும், ஆரா மீனும் விரால் மீனும் சுவைக்குச் சிறந்த மீன் வகைகளாகப் பேசவர் நம் மக்கள். அது இன்றும் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதைக் காணலாம்.

அந்த அந்தப் பகுதியில் தோன்றிய பள்ளு நூல்கள் அவ்வப்பகுதிக்குரிய மீன்களின் பெயர்களைப் பட்டியல் இட்டுக் கூறுவதைக் காணலாம். அதுபோல இந்நூலிலும் கூறப்பட்டுள்ள மீன் குறிப்பு பற்றி ஈண்டு இப்பாடல் வழியாகக் காண்போம்.

செஞ்சிலைக் குரவை கெளிறு மசரி
சீரால் நெட்டுட லாறா மீன்
திமிங்கிலம் பருந்து மிங்கிலஞ்
சினைத் தெளி கூளிச் சீளியும்
பஞ்சிலைப் பறவை யஞ்சிலைக் குரவை
பன்னாக ககலி யுன்னாவும்
பருக்குஞ் சாளை திருக்கை வாளை
பாங்கு பெறு விலாங்கு மீன்

குஞ்சரக்கை மீன்கட்டாக கோவஞ்சி
கூட்டமிடு விறாட்டுடன்
கோளாமசரி சேலுக் கல்லனடி
கோலானும் வண்ண வாலனும்
மஞ்சினக் கெளுத்தி கருமணிப் பொட்டு
வாலி மீனெல்லாந் தாவவே
வாய்த்த பொருமைக் கடலில் புகுந்தண
வளமை பாரும் பள்ளீரே (53)

என்ற இப்பாடலில் செஞ்சிலை, குரவை, கென்று, சிரால், நெட்டுடல் ஆறா, திமிங்கிலம், பருந்திமிங்கிலம், சீளி, தெளி, சீளி, பஞ்சலை, குரவை, பின்னாகம், ககலி, உன்னி, சாளை, திருக்கை, வாளை, விலாங்கு, குச்சரக்கை, கோவஞ்சி, விராட்டு, கோளா, மசரி, சேறு எனக் கொங்கு நாட்டில் அன்றைக்கு மக்கள் புழக்கத்தில் இருந்த மீன் வகைகளைப் பற்றி இந்நூல் பட்டியல் இடுகிறது.

பொதுவாக மீன்கள் ஆற்றுப்படுகை, குளம், ஏரி போன்ற நீர்நிலைகள் மட்டுமன்றி மருத நிலங்களில் (வயலிலும்) கிடைக்கும் என்பதைப் பள்ளு நூல்களின் வாயிலாகக் காணலாம்.

**பண்ணைப் பணிப்பெண்கள் பெயர் குறிப்பு**

பள்ளு இலக்கியம் இலக்கிய வகைகளிலேயே குறிப்பாகச் சிற்றிலக்கிய வகைகளிலே தனித்து நிற்பது. எளிய பொதுமக்களைக் கதைமாந்தராக ஏற்று பெருமை செய்தது. பொதுவாக பொதுப்பாத்திரங்களை அறிமுகப்படுத்த, படைப்பாளர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. முதன்முதலாகக் காப்பியத்தில் இப்புரட்சியைச் செய்து முன்னின்றார் இளங்கோ அடிகள். அதற்கு அடுத்துப் பக்தி இலக்கியத்தில் பெருமையோடு விளங்கும் பெரியபுராணம் எளிய இறை நேயச் செல்வர்களைச் சாதி வேற்றுமையின்றிப் பாராட்டி உயர்வுபடுத்தியது. சீவக சிந்தாமணியில் சீவகனின் துணைவியராகக் காட்டப்படும் எண் மரின் தோழியர் சிலர் உயர்நிலையில் போற்றப்படுவதைக் காணமுடிகிறது. இதே போன்று பள்ளு இலக்கியம் மேழித் தொழிலில் ஈடுபட்டுள்ள பண்ணைப் பெண்டிரைப் போற்றும் வகையில் அவர்களின் பெயர்களைத் தொகுத்துத் தந்துள்ளது. மேழித் தொழில் செய்வோர் இடத்து இவ்விலக்கியம் கொண்டுள்ள

பற்றினையும் பாசத்தினையும் கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

விருப்ப மிகுந்த கருப்பிக் கன்னி
வேலாயுத பிரமி பள்ளியும்
வீரி பேச்சி மாரி னாச்சி
வெகுளிலா மனத் திருளியும்
பொருப்பு முலைத் தெய்வானை யாண்டிச்சி
புள்ளினா னென்ற வள்ளியும்
பூவை காளி சாத்தி வெனாள்
பூத்த னேரிடக் காத்தியும்
திருப்பொலி சிவனடியாள் சிவனாள்
சீராள பெரிய வீரானு
தெள்ளிமை பெரும் பள்ளிய ரெல்லாரும்
சொந்த குறவை முழக்கியே
தருப்பொலி கரன் சாமிநாத
சங்கிராமன் றனைத்து தித்துமே
சாற்றி மந்தனில் நாற்றை யெடுத்து
தடவியே மெல்ல நடுவரே. (பா : 131)

கருப்பக்கண்ணி, வேலாயுத பிரமி, வீரி, பேச்சி, மாரி, நாச்சி, திருளி பொருப்பு முலை தெய்வானை, ஆண்டிச்சி, வள்ளி, பூவைகாளி, சாத்திவெனாள், பூவை, காளி, சாத்தி, திருப்பொலி, சிவனடியாள், சிவனாள், வீராளு என்ற பெயர்கள் ஈண்டுக் குறிப்பிடத்தக்க பெயர்கள்.

**கட்டளைக் கணக்கு அல்லது நெற்கணக்கு :**

பள்ளு இலக்கியங்கள் தரும் பல்வேறு தகவல்களில் வரலாற்றுத் தொடர்புடைய தகவல்களும் உண்டு. அவற்றில் இன்றியமையாதது, இந்த நெற்கணக்கு ஆகும். ஒவ்வொரு பள்ளும் அது சார்ந்த மண்ணிற் அரசு சலுகை பெற்றவர் பற்றிய குறிப்பைத் தருவதைக் காணலாம். இவ்விலக்கியமும் அதுபோன்றே குறிப்பைத் தருகிறது. அதனை ஈண்டுக் காண்போம்.

விக்கின விநாயகர் நித்திய பூசைக்குச் சித்திரசாலி நெல்லில் ஐந்து சலுகை நெல்லும், சங்கக் குழையர் சபாபதி மற்றும் கிட்டிணசாமி ஆகியோர்க்கு அறுபத்தியேழு சலகை நெல்லும் வல்லி வடபத்திர காளி, காமாட்சி, வேங்கமலைக் கடவுள் ஆகியோர்க்குத் தனித்தனியே பதினாறு சலகை சம்பா

நெல்லும், தென்பழனியாண்டவரான முருகக் கடவுளுக்குத் தினக் கட்டளை நடத்த முப்பத்தியாறு சலகை நெல்லும், நற்கவிராசன் சிவபெருமாள் கவிராசன் தமிழ்ப்பணிக்கு நாற்பத்தியஞ்சு சலகை வெந்தயச்சம்பா நெல்லும், போலீசுதார் பட்டன் சேருவைக்காரனுக்கு அவன் பணிகருதி வங்கி நாராயணன் நெல்லிற் பதினாறு சலகையும், சித்திரைத் திங்களில் நடைபெறும் பொதுத்திருவிழாவிற்காக உள்ளூர் கொட்டகைக் காரியால் கோதும்பைச் சம்பாவில் பத்து சலகை நெல்லும், விள்ளும் புகழ் சோணையேற்றஞ் செய்யும் விபரஞ் தனக்கொரு துகையாய்த் தம்பா பிள்ளை தன் சொற்படி பிரமிப்பண்ணாடியிடம் ஆறு சலகை நெல்லும், நீலநகரில் எழுந்தருளியுள்ள காளி விமலி தன் நித்திய பூசைக் கென முத்துச்சம்பாவில் அஞ்சு சலகை நெல்லும், அரசு களஞ்சியத்தில் இரண்டாயிரம் சலகை நெல்லை அளந்து சேர்த்ததாகப் பண்ணைப் பணியாளன் குடும்பன் கூறுவதி லிருந்து தனியாருக்கும், அரசு சார்ந்தார்க்கும், அறிஞர் களுக்கும், ஆண்டவர்களுக்கும் நெல் அளந்த செய்தி மூலம் கட்டளை என்ற பெயரில் அரசு நல்கி வந்த தானியக் கொடைகள் பற்றி அறிய முடிகிறது.

செப்பேடு கல்வெட்டு, காசு, அகழ் ஆய்வு என ஆவணங்கள் பற்றி வரலாறு வகைபடுத்திக்கூறும். இலக்கியத்தில் வரும் இது போன்ற குறிப்புகளை வரலாற்று அறிஞர்கள் முதன்மைத் தரவுகளாக ஏற்பதில்லை. ஆனால் பள்ளு இலக்கியம் போன்ற சமூக இலக்கியங்கள் தரும் செய்திகள் முதன்மைத் தரவுகளுக்கு அடுத்த துணைத் தரவுகளாகக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. இது போன்ற செய்திகள் புறக்கணிக்கப்படாது மக்கள் தகவல்களாக நாம் ஏற்பதன் மூலம் இலக்கியத்திற்கும் அதனைப் படைத்த புலவருக்கும் நாம் செய்யும் சிறப்பு என உணர்ந்து இவற்றை மறைந்து கிடக்கும் நூல்களில் வெளிக்கொணர வேண்டும்.

**கப்பற்பாட்டு தரும் செய்திகள் :**

பள்ளு நூலில் கப்பற்பாட்டு அல்லது தோணிப்பாட்டு என்ற வகையில் சில செய்திகள் தரப்படுவது மரபு. அவ்வகையில் இந்நூலிலும் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஈண்டுக் காணலாம்.

நூல் ஆசிரியர் இப்பாடலின் தொடக்கத்திற்கு ஒரு கட்டியப் பாடல் அமைக்கிறார். பாடல் வருமாறு:

'பூவேருஞ் செல்வம் புகழ் சாமி நாதேந்திர
தேவேந்திரன் வளருந் தென்ககரை நன்னா டோங்க
ஆவேற வந்த நதியாம் பொருணை யாற்று வெள்ளங்
காவேரி கண்டதற்பின் கப்பல் கொண்டு வந்தானே.' (பா : 54)

பெருமைமிகு சாமி நாதேந்திரன் தன் நாடு சிறக்கக் கப்பலில் கொணர்ந்த பொருள்கள் வருமாறு : வச்சிரம், கோமேதகம், தரளம், வயிடூரியம், முழுநீலம், பச்சை, புற்பராகம், திரண்ட பவளம் மற்றும் மணி, நாகரத்தினம், போன்ற வகை வகையான உயர் சாதி கற்கள், தங்கநிறச் சாலுவை, தகட்டுச் சரிகை இணைய இழைத்த பீதாம்பரம், அழகிய சகாலத்து, மேக வர்ணம் கொண்ட அழகிய ஆடைகள் வங்கரொடு சிங்களர் கலிங்கர் நிவாங்கர் தந்தவை கவரி வெண்கவிகை, மஞ்சரிகள் பொன்சிவிகை, பொங்கு மிலங்கு முயர் தங்க மகுடங்களொடு புரவலர் கொடுத்த பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்ததாகப் பட்டியல் இட்டுக் காட்டுகிறது இக்கப்பறகட்டு.

**மொழிப்பாங்கு :**

ஒரு நூலின் சிறப்பு அந்நூல் கையாளும் மொழி வளத்தைப் பொறுத்தே அமைகிறது. பொதுவாக மொழி வளம் என்பது அதன் நடையைக் கொண்டே அமைகிறது. நடை என்பது புலவன் தான் கற்ற ஏட்டறிவுடன் பட்டறிவையும் இணைத்து இடத்திற்குத் தகுந்தாற்போல எழுதும் ஆற்றல் ஆகும். அவ்வகையில் இந்நூற் புலவரும் தன் நுண்மாண் நுழை புலத்திறத்தைப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுவாகத் தமிழகத்தில் எழுந்த பள்ளு இலக்கியங்களில் வழக்குச் சொற்கள் அதிகம் பழகி வருவதாகவும் ஆனால் ஈழத்தெழுந்த பள்ளு நூல்கள் எல்லாவற்றிலுமே சேரி மொழியின் மணம் குறைந்து காணும் என்று ஞானப்பள்ளு நூலின் பதிப்புரையில் அதன் ஆசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் (அரசு வெளியீடு கொழும்பு, இலங்கை, *1968*) என்ற நூலில் குறிப்பிட்டிருப்பது காணத்தக்கது.

சாமிநாதப்பள்ளு ஆசிரியர் கற்ற கல்வியாளர். சிறந்த பட்டறிவாளர் என்பது அவரது படைப்புத்திறன் கொண்டு காணலாம். இந்நூலாசிரியன் நடையழை இலக்கியப்

புலமையை அறிய சிறு எடுத்துக்காட்டு மழை வரும் முன் மண்ணகத்தில் நடைபெறும் காட்சியை அவரது சொல்லிற் காண்போம். நாட்டின் வளம் பற்றிக் கூறப்புகுந்த ஆசிரியர் எளிய சொற்களைக் கொண்டு சந்தம் கமழப் பாடியுள்ள பாடலைக் காணலாம்.

**வீசக் கண்டது தென்மலைத் தென்றல் - பின்**
**வீங்கக் கண்டது மெல்லியர் கொங்கை**
**பேசக் கண்டது மன்மதன் தன்னை**
**இரையக் கண்ட தெழும்புனல் வெள்ளம்**
**பேசக்கண்டது மங்கள வார்த்தை**
**பிரட்டக் கண்டது நெய்ப்பல காரம்**
**ராசர்க்கே நிகர்மால் சாமிநாத தேந்திரன்**
**தென்கரை நாடெங்கள் நாடே.** (பா : 26)

அடுத்து மூத்த பள்ளி இளைய பள்ளி மீது ஏற்பட்ட சினத்தால் பள்ளனைப் பற்றிப் பண்ணைக்காரனிடம் முறையிடும் பகுதியைக் காண்போம். இலக்கிய நயம் மட்டும் ஒரு படைப்பாளனை முழுமையான திறமையாளனாகக் காட்டி விடுவது இல்லை நடைமுறை வாழ்க்கையில் வழக்குச் சொற்களை மக்கள் எப்படிக் கையாளுகிறார்கள் என்பதற் கேற்ப அதனை நன்கு அறிந்து அப்படிப்பட்ட சொற்களைத் தன் படைப்பில் பயன்படுத்திக் காட்டும் போது அவனது திறன் தெளிவாக உணரப்படுகிறது.

தென்புடன் குடும்பனுக்குச் சம்பிரமாகவே - நேற்றுச்
சின்னப்பள்ளி செய்த காரியம் என்னத்தைச் சொல்வேன்
வன்பு சொல்வதேது நீ திரும்பிப் பாரடி யுன்போல்
வஞ்சக முண்டோ வீராச்சி மங்கையிற் பள்ளி (150)

..... ..... ..... .....

உன்னியுன்னிச் சொல்வ தெல்லாஞ் சின்னத்தனமே - உந்தன்
உக்கிரம் அறிவேனடி தாழைக்கரைப் பள்ளி
சன்னையுஞ் சடையும் நீதர சொன்ன லென்னடி - யுந்தன்
சங்கையறிவேன் வீராச்சி மங்கையிற் பள்ளி (150)

..... ..... ..... .....

என்ன சொல்லப் போறனடி சின்னச் சிறுக்கி - உனக்
கிந்தவூர் குடும்ப ரெல்லாஞ் சொந்த மல்லவோ
செப்பமுடன் சொன்னதை நிசப்படியல்லோ - யென்னூர்
செட்டிக் குடும்பனுக்கஞ்சு சூட்டிப்போட்டாயே. (150)

..... ..... ..... .....

முட்டாளு நீதானோ பல்லைத் தட்டுவதடா - உந்தன்
மூக்கு முலையு மறுத்து தூக்கு வேனடி
நட்டணைப் பேசுவதென்ன முட்டிக்கால் பள்ளி உந்தன்
நாக்கும் மயிறும் அறுத்து சாக்கிறேனடி (150)

இப்பாடல்களில் நடைமுறை வழக்குகள் யதார்த்தத்துடன் ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். பள்ளு இலக்கியத்தில் இதுபோன்ற பாடல்கள் அப்பாத்திரங்கள் மூலம் வெளிப்படும்போது நாடகத் தன்மையப் பெறுகின்றன. அதன் வழியாகப் பாத்திரங்கள் வளமை அடைகின்றன. மக்கள் மனத்திலும் நிற்கின்றன.

**மரபுத் தொடர்கள்:**

காலங் காலமாக நிலை பெற்றுவரும் தொடர்களே மரபுத் தொடர்கள் என வழங்கப்படுகின்றன. இத்தொடர்கள் நம்முன்னோர்கள் வாழ்க்கைப் பயணத்தில் கண்ட பட்டறிவின் வெளிப்பாடே ஆகும். இது எந்தப் படைப்பாளனுக்கும் உரியதாகக் கருத முடியாது. வழிவழியாக அவன் கேட்டு அனுபவித்தவையே அவன் எழுத்திலும் இடம் பெறக் காரணமாக அமைவது. செந்நெறி இலக்கியம் மற்றும் வழக்காற்று இலக்கியம் என்று எந்த வகை இலக்கியமானாலும் இத்தொடர்கள் பழகி வருதல் இயல்பு. சங்க இலக்கியத்தில் அத்தகைய தொடர்கள் பெரிதும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். பொதுவாக, வாழ்க்கையைப் பற்றிப் பேசும் காஞ்சித்திணை, வாழ்க்கைக்கு வேண்டிய அறிவுரைகளை உணர்த்தும் செவியறிவு றூஉ போன்ற பொருண்மைகள் வாயிலாக நம் முன்னோர்கள் தாம் பெற்ற அனுபவத்தைப் பிறர்க்கு வழங்கியுள்ளனர். சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கணக்கு நூல்களில் குறிப்பாகப் பழமொழி நானூறு இப் பணியைச் செய்தது. பக்தி இலக்கிய காலத்தில் பெரியோர்கள் பெரும்பாலும் தம் பட்டறிவையே நன்னெறி களாக நமக்குத் தொகுத்துத் தந்துள்ளனர். அப்படித் தரும் போது தம்முன்னோர்கள் தந்த மரபுத் தொடர்களை மறவாமல் தேவையான இடங்களில் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அவர்தம் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

அவ்வகையில் சிற்றிலக்கியமும் நமக்கு அதிகமாகவே இவ்வகைத் தொடர்களை வெளிப்படுத்தியுள்ளன. இவற்றில்

பள்ளு இலக்கியம் இன்னும் சிறப்பாக இப்பணியை ஏற்றுச் செய்துள்ளது.

பொதுவாக 'விதி' என்ற எண்ணை நம்புவது மனித சமூக மரபு. மதியால் விதியை வெல்ல முடியும் என்பதும் விதி வலியது எனவும் இலக்கியம் இரண்டு நிலைகளையும் கூறும். எதனை எவர் ஏற்றுக் கொள்கிறார்களோ அதற்கொப்ப அவர் மனம் உறுதி பெறும். இங்கும் பாடல் 50 ல் விதியை எண்ணி வேதனைப்பட முடியுமா. அது அதன் வழி இயங்கட்டும். நாம் அதைக் கருதாது உழைக்க வேண்டும் என்ற பாடல் தரும் செய்தியை வலியுறுத்த 'விதி வெருத்த வனலில் நொந்து மெலிவ தெந்த வகை விளம்பு' என்ற அழகிய தொடரை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

நாம் பிறந்தது முதல் பணிகளைச் தொடர்ந்து செய்யவே பிறந்துள்ளோம். கீதை இதைத்தான் கடமையைச் செய் பலனை நோக்காதே என வலியுறுத்துகிறது. நம் பள்ளு ஆசிரியரும் நடைமுறையில் இதே பொருண்மையில் அமைந்த பிறிதொரு தொடரைக் கையாளுகிறார்.

ஒழிக்கக் காரியமேது (74) என்பதே அத்தொடர். நடப்பது சரியாக அமைந்தால் அஃதாவது தேர்வு செய்த நோக்கு நேர் வழியில் அமையுமேயானால் இப்புவியில் தங்கு தடையின்றி அதனை நிறைவேற்ற முடியும் என்பதை ஆசிரியர் 'நடக்குஞ்சீர் நடந்தாலே முற்றும் நடக்கலாம் புவிமேலே (74) எனக் கூறுவதன் மூலம் காணலாம்.

மழைக்காலம் வந்துற்றபோது எறும்புகள் தனது முட்டைகளைத் தக்கப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுதல் என்பது இயற்கை. இதனை முட்டை கொண்டு தட்டை எறும்பு னெட்ட ஓடுது (34) எனக் கூறுவதன் மூலம் அறியலாம். இனி இந்நூலில் இடம் பெறும் சில தொடர்களை ஈண்டுத் தொகுத்துக் காண்போம்.

புத்தி தானும் எள்ளத் தனையு மில்லை (68)

பாம்பின் வாய்த் தேரையது போலே (72)

மருந்தில் விஷங்கலந்த நிலைபோலே (73)

துள்ளின மாடு மேலே பொதி சுமக்கு மென்பது போலே (74)

ஊசி கொல்லர் தெருவில் வில்லாது (74)

உழக்குள்ளே கிழக்கும் மேற்குஞ் சொல்லிக்
கொண்டால் எவருக்குக் கேக்கும் (74)

உதித்த பொழுதும் போமோ எனக்குன்
னோடே வழக்காமோ (74)

உடற்குள்ளே காலுங் கையும் வேறென்று
உரைப்பதோ பலஞ் செய்யும் (74)

வாடிக்கை சொல்லைப் போகும் வகை
யெல்லாம் வச்சு மூடும் (74)

வாழை நோக்கியா மானிலம் பணம்
வைத்து வாங்கும் (76)

பின் னொண்டியைக் காகம் எடுத்துப்
போன மியலறி யீரோ (85)

பிறர்மனை நீடுங்கால் புழுக்கக் குட்டையில் போடு (96)

தீட்டின மரத்தில் கதுமை
காட்டு வனுரத்தில் நானிவன் (100)

கைப்புண்ணுக்குண்டோ பெருங் கண்ணாடி (105)

தலைமுறையில் வாராத குறை வரவு மாச்சு (175)

அடையாத முதலைக் கடித்தாலே - கடி நீக்க
அடிவயிற்றைத் தடவு மது போலே (107)

சின்னத் தொண்டி யிங்கே சோறு கொண்டு வந்தாளோ (109)

கையாரக் கண்ட களவுஞ் சகிப்பீரே (113)

வடித்திடுங் கள்ளைக் குடித்திடும் பேர்க் கெல்லாம் - புத்தி
பட்டென்று சொல்வது திட்டமல்லோ (113)

பிள்ளைத் தொட்டிலற்றால் பூமி கிட்டிய தாயல்லோ (113)

விடும் பயிருக்கும் சாடிய மேகம் போல் (113)

வாய்த்தது என்றே அணை ஏத்தஞ் செய்தார் (113)

பள்ளன் இல்லாமலே ஏருழும் வல்லாருண்டோ (113)

போன்ற தொடர்கள் மரபு வழி வந்தவைகள் ஆகும். ஒருவனை ஏசும்போது அவர் மனம் புண்பட வேண்டும் என்ற நோக்கில் பேசும்போது அதிலும் சில மரபுத் தொடர்கள் மொழிக்கு மொழி

அமைந்து விடுவது உண்டு. அவ்வாறு அமையும் வசை மொழிகளில் சில மரபுத் தொடர்புடைய சில சொற்களைக் காண்போம்.

நட்டனைப் பேசுவ தென்ன முட்டிக்கால் பள்ளி (150)

நாக்கும் மயிறும் அறுத்து சாக்கிறேனடி (150)

சோத்துக்குக் கெஞ்சித் திரிந்தாள் குள்ளச் சிறுக்கி (150)

லண்டிச் சிறுக்கி (100)

தொண்டனமே துனக்கு லண்டிச் சிறுக்கித்
தொக்காகப் பேசுறா (150)

மனது ஆறாமலு மூப்பிளமை பாரா தென்னடி (150)

போன்ற தொடர்கள் மக்கள் யதார்த்தமாகப் பேசிக் கொள்ளும் பிற தொடர்கள் ஆகும்.

இதுவரை கண்ட ஆய்வில் இச்சாமிநாதப் பள்ளு ஏனைய பள்ளு இலக்கியங்கள் போன்றே கொங்கு நாட்டின் சிறப்பை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ள பாங்கைக் காணலாம். அப்பகுதி மக்கள் பெரிதும் போற்றும் மருதமலை முருகன், தென்பழனியிற் எழுந்தருளி இருக்கும் தண்டாயுத பாணி போன்ற கடவுளர்கள் போற்றப்பட்டுள்ளனர்.

மாமன்னன் சாமிநாதேந்திரனின் புகழ் மிக்க முன்னோர்களும் சிறப்பு மிக்க அவன் அவையை நிறைவு செய்யும் புலவர் பெருமான் சிவப்பெருமாள் பற்றியும், பெருமைக்குரிய நகர்ப் பெருமக்கள் பற்றியும் கொங்கு நாட்டு வேளாண் முறைகள் பற்றியும் கொங்கு நாட்டு சிறப்புறு கால்நடைகள் பற்றியும் மக்கள் விரும்பும் மீன்வகைகள் பற்றியும் பல்வேறு விதமான தகவல்கள் கண்டோம்.

கட்டளையாக நெல் யார்யாருக்கு அளக்கப்பட்டது என்ற அட்டவணையும் கண்டோம்.

தென்பாண்டி நாட்டுப் பள்ளுகள் போன்று கொங்கு நாட்டில் கிடைத்த செங்கோட்டுப் பள்ளுக்கு அடுத்து, கொங்கு நாட்டின் பெருமை பேசும் இப்பள்ளு நூல், வேளாண் தொழிலையும் மேழிச் செல்வத்தையும் போற்றும் பொதுப் பண்போடு இலக்கிய நயமும் கொண்டு இலங்குவது என்பதனை இதனைப் படிப்போர் நன்கு அறிவர்; அறிந்தவர் போற்றுவர்.

## அடிக் குறிப்புக்கள்

1. கொங்கு நாட்டு வரலாறு, கோவை கிழார் சோ.ம. இராமச்சந்திரன் செட்டியார், பேரூர், கோவை. 1987. (ப. 372)
2. கொங்கு நாட்டு வரலாறு, மயிலை சீனி வேங்கடசாமி நியு செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. 1974. (ப.18)
3. கொங்கு மண்டல வரலாறுகள், (பதி.அ.) முனைவர் சு. சௌந்திர பாண்டியன், அரசினர்கீழ்த்திசைச்சுவடி நூலகம், சென்னை. 1987. ப.17.
4. மேலது ப - 17
5. மேலது ப - 17
6. மேலது ப - 17
7. வையாபுரிப் பள்ளு (பதி.ஆ) சோமசுந்தரம், உடுமலை கோபால் எலக்டிக் பதிப்பகம், உடுமலை. 1943 (பாட்டு - 56)
8. திருமலை முருகன் பள்ளு, (பதி.ஆ.) அ.மு. அருணாசலம், சக்தி காரியாலயம், 1944. (பாடல் 63)
9. குருகூர்ப் பள்ளு அல்லது பராங்குசப் பள்ளு, (பதி.ஆ) பெரியன் வெ.நா. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஆழ்வார் திருநகரி. 1932
10. வையாபுரிப் பள்ளு, (பதி.ஆ.) சோமசுந்தரம், உடுமலை கோபால் எலக்டிக் பதிப்பகம், உடுமலை 1943 (பாடல் 20)
11. மேலது பாடல் 62
12. குருகூர்ப் பள்ளு அல்லது பராங்குசப் பள்ளு (பதி.ஆ.) பெரியன் வெ.நா. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஆழ்வார் திருநகரி. 1932 (பாடல் 19)
13. இலக்கியமும் வேளாண்மையும் (பதி.ஆர்.) முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி, முனைவர் கா. உதயசூரியன், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர். 2000 ப - 99
14. மேலது - ப 102

# சுவாமிநாதப் பள்ளு

## மூலமும் அருஞ்சொற் பொருளும்

## ஹரி ஓம் நன்றாக
## குரு வாழ்க குருவே துணை

1. மாமினா ளோங்கு மணிப்புய மாலன்ன வந்த
சாமினா தேந்.... மேல் சாற்றுமியல் பள்ளிசைக்கே
கோமினாள் வேணியன்சொற் குஞ்சரமுங் கஞ்சமலர்ப்
பாமினாள் விந்தைப் பதாம்புயமுங் காப்பாமே.

2. பார்பூத்தி டுந்திருல பூமன்
படிபோற்றுதிண் புயபெல வீரமன்
பகர்சீர்த்தி கொண்டிலங்
பனிமலர் காமன்

வார்பூத்திடு முலையினர் மோகன
வடிவேற்குக னருள்பெரு யோகன்
மழை பெ... முதவு தியாகன்
வழுத்து விபேகன்

---

| | | |
|---|---|---|
| மணிப்புயம் | - | மணிகள் அணிந்த தோள் |
| சாற்றும் | - | கூறும் |
| வேணியன் | - | சடைமுடியன்; சிவபிரான் |
| குஞ்சரம் | - | யானை |
| கஞ்சமலர் | - | தாமரை மலர் |
| பதாம்புயம் | - | வணக்கத்திற்குரிய தோள் |
| பூமன் | - | அரசன் |
| புயபெலம் | - | தோள் வலிமை |
| சீர்த்தி | - | மிகுபுகழ் |
| பனிமலர்காமன் | - | குளிர்ந்த மலரம்பினை உடைய காமன் என்னும் கடவுள் |
| வார்பூத்திடு | - | வரிசையாக மலரும் மலர் |
| வடிவேற்குகன் | - | வேல்தனைக் கையிற் கொண்ட முருகப் பெருமான் |
| யோகன் | - | நற்பேறு பெற்றவன் |
| தியாகன் | - | தன்னலமற்றோன் |

தார்பூத்த சுந்தர குணசீலன்
சகலோற்கு மன்புரு மனுகூலன்
தருசாமினா தேந்திர பூபாலன்
தழைக்கும் பள்ளிசைக்கே.

கார்பூத்த மும்மதம் புனைநேசன்
கலைவாணர் கட்குதவு முலாசன்
கனியால்கர மேந்திய அரசடிக்
கற்பகந் துணையே.

3. தண்ணார்ந்தி லகியமதி முகத்தான்
பண்ணார்ந்து சோம் புலவுகந் தகத்தான்
தண்டாமரை மலர்திரு வாசன்
தழைக்கு முலாசன்

கண்ணாயிரத் திறையவன் போலுங்
கண்ணார்ந்த சொல்லிசைவது னாலுங்
கார்காத்த வல்லவனென்ற சேந்தன்
கனிரதி காந்தன்

யெண்ணார்பணிந் தேற்றிய போசன்
யெண்ணாங்கா மியற்று விலாசன்
யெங்கோபி சாமினாத குபேரன்மே
லிசைக்கும் பள்ளிசைக்கே

---

| | | |
|---|---|---|
| தண்ணார்ந்து | - | குளிர்ச்சியால் நிறைந்த |
| மதிமுகத்தான் | - | நிலவு ஒத்த முகத்தான் |
| சோம்புலவு கந்தகத்தான் | - | நன்மணம் சூழப் பெற்றவன் |
| தண்டாமரை மலர்திரு வாசன் | - | திருமால் |
| கண்ணாயிரத்திறைவன் | - | இந்திரன் |
| கார்காத்த வல்லவன் | - | உலகிற்கு மும்மழை தரவல்ல தேவேந்திரன் |
| சேந்தன் | - | முருகன் |
| கனிரதி காந்தன் | - | ரதியின் கணவன் காமன் |
| போசன் | - | தலைவன் |
| விலாசன் | - | காமன் |
| கோபி | - | சந்தனம் அணிந்தவன் |
| குபேரன் | - | நிதிக்கடவுள் |

பெண்ணார்துதி வேணியர் பாணியர்
பிறைகூ விளைமுடித்தவர் நடித்தவர்
பெம்மான்சிவ காமிதன் பால்வளர்
பிஞ்ஞகன் துணையே.

4. மதியூகி யுத்தம குணதீரன்
மகமேரு வொற்றிடு புயபாரன்
வடிவேறு பொற்பில கியமாரன்
வளரதி காரன்

ததிபால்நெய் துய்த்திடு கனிவாயன்
தரியாரை வெற்றிகள் புரிதூயன்
தருசாமி னாதேந்திர சகராயன்
தழைக்கும் பள்ளிசைக்கே.

---

| | | |
|---|---|---|
| பெண்ணார் துதி வேணியர் | - | உமையை இடப்பக்கம் பூண்ட சிவபெருமான் |
| பாணியர் | - | இசைஞர் |
| பிறை கூவிளை முடித்தவர் | - | பிறையைத் தன் சடைமுடியில் தரித்தவர்; சிவபிரான். |
| பெம்மான் | - | இறைவன் |
| சிவகாமி | - | அன்னை உமாதேவி |
| பிஞ்ஞகன் | - | சிவபிரான் |
| மதியூகி | - | அறிவாளி |
| உத்தமன் | - | சிறந்தவன் |
| குணதீரன் | - | நற்குணத்தான் |
| மகமேரு | - | பெருமலை மேருமலை |
| புயபாரன் | - | தோள்வலி மிக்கவன் |
| மாரன் | - | காமன் என்ற காமக்கடவுள் |
| வளரதி காரன் | - | உயர்ந்த மக்கட் தலைவன் |
| ததி | - | தயிர்சோறு |
| கனிவாயன் | - | இனிய மொழி பேசுபவன் |
| தூயன் | - | நல்லவன் |
| சகராயன் | - | பிறர்க்கு நன்மை செய்பவன் |

துதிசாற்று தண்மல ருறைவேதன்
தன்துதிவாய்த் தருளுத வியபாதன்
துடர்பூத்திடு துளவணி னாதன்
சொலுமைவர் தூதன்

பதிபோற்று நன்னய மிகுநேமிப்
படைகாத்திடு கார.... மாமி
பணிபார்கட லுயர்கிஷ் டிணசாமி
பதமலர் துணையே.

5. பால லோசனர் வேணியர் ....
....ாதி சூடியருத் திரரொரு
பார்மேரு விலாக வளைத்தகார்
பார்ப்பதி பாகர் வல்லோர்
தா .....ா ரப் பரமர்பா
தனாளும னோரத முற்றதிதி
சாமிநாத வசீகர கர்த்தன்மிசை
சாற்று பள்ளே சலையே
மேலு...வாக வழுத்துமியல்
வாகிலாத சொலாகினு முத்தமிழ் சொல்
மேன்மையாளர் தயவுபெறப் புகழ்வர்
மேட்டிமை கோது சொலார்

---

| | | |
|---|---|---|
| தண்மலருறை வேதன் | - | வெண்டாமரையில் உறையும் பிரமன் |
| துடர் பூத்திடு துளவணி நாதன் | - | துளசி மாலை விரும்பி அணியும் நாரணன் |
| ஐவர்தூதன் | - | கிருட்டிணன் |
| மிகுநேமிப் படை | - | சக்கரத்தைத் தனது ஆயுத மாகப் பெற்ற திருமால் |
| பாலலோசனர் | - | சிறு அணிகலன் அணிந்தவன் |
| ருத்திரர் | - | சிவன் அல்லது பதினொரு உருத்திரர்களில் ஒருவன் |
| பார்மேரு விலாக வளைத்த | - | மேருவை வில்லாக வளைத்த |
| பார்ப்பதி பாகர் | - | சிவபிரான் |
| வசீகரகர்த்தன் | - | அழகியவன் |
| மேட்டிமை | - | சிறப்பு |
| கோதுசொலார் | - | குற்றம் கூறார் |

சீலமான பயோதர புத்தமுர்த்த
வாணிமாது மேனாவி லுதித்தவளை
சொல் சீர்மை யாகையினா லுமியற்றுவகை
சேர்கையிதா மியலே

6. அம்புய மானோங்கு புயத்தன் அண்ண(ல்) ரானா ரருளே
நம்பியே மாலாஞ் சாமி னாத முகிலைப் பணிந்தே
செம்ப வளமோ யிலவோ செவ்வா யென்றாய்ந் துசெக
மும்புகழ் வீராச்சி மங்கை மூத்த பள்ளி தோன்றினளே

7. அஞ்சுகம் போலக் கொஞ்சிய பேச்சுங்
கஞ்சனஞ் சனஞ்சூழ மஞ்சனைப் பூச்சும்
ஆய்ந்தெழில் சேர்பூந் துகிலுடையும்
மயில் விழிக் கடையும்

மிஞ்சியு தித்திடு தடமலை போல
நெஞ்சில் மத்த தேழு குடமுலை மேல்
மிக்க மணித் தாவட மசைய
மைக்குழலிசைய

| | | |
|---|---|---|
| பயோதரமே | - | மேகம் |
| புத்தமுர்த்த வாணிமது | - | கலைமகள் |
| அம்புயம் | - | அழகிய தோள்கள் |
| அண்ணல் | - | அரசன்; கடவுள் |
| இலவு | - | மென்மையான பஞ்சு |
| செகம் | - | பூமி |
| வீராச்சிமங்கை | - | ஓர் ஊர் |
| அஞ்சுகம் | - | கிளி |
| கஞ்சனம் | - | கரிக்குருவி |
| மஞ்சனைப்பூச்சு | - | மஞ்சள் பூசி |
| மயில்விழி | - | மயில் போன்ற கண்கள் |
| மஞ்சு | - | மேகம் |
| மஞ்சு உதித்திடு தடமலை | - | மேகம் சூழ்ந்த பெருமலை |
| மணித்தாவடம் | - | மணிகள்பதித்தகழுத்தணிமாலை |
| மைக்குழல் | - | கரிய கூந்தல் |

கஞ்ச மிலங்கி யபத மெல்ல
அஞ்சி நடந்த திரச வெல்லக்
கட்டியெனத்தனி ரசங் காட்டிக்
கனபனி பூட்டி

மஞ்சி னஞ்சூழ்ந் திலகு வீராச்சி
மங்கை நகர்க்கி சைந்திடும் பண்ணை
மள்ள னுக்கே மனமகிழ் மூத்த
பள்ளி வந்தனளே.

8. வர்ணமயில் போலும் மதரதி போலுந் துதிசேர்
கன்னியெனுந் தாழைக் கரைநிகர் பள்ளியவள்
சின்னயிடை துவள சித்திர முலைக் கோட்டையை
அன்ன மெனக் காமுகர்கொண் டாசை கொள்ள வந்தாளே.

9. வாசமிகு.....ய சவாது
மகாபுனுகுங் கமகம கமவென
வனமணி மேகலை மருங்கில
கமதாதி விலக

| | | |
|---|---|---|
| கஞ்சம் | - | இசைநயம் மிக்க |
| கனபணி | - | நிறைந்த அணிகலன்கள் |
| மதரதி | - | மதனும் ரதியும் |
| காமுகர் | - | காமஇச்சை கொண்டோர் |
| சித்திரமுலை | - | அழகிய வேலைப்பாடுகள் அமைந்தஆடைமறைத்தமுலை |
| அன்னமென | - | அன்னம் போன்று அழகிய நடை. |
| வாசமிகு | - | மணம் மிகு |
| சவாது | - | நறுமணப் பொருள் |
| புனுகு | - | காட்டுக் கடுவன் பூனை யிடத்து இருந்து கிடைக்கும் நறுமணப் பொருள் |
| கமகம | - | வாசம் வீசும் |
| வனமணிமேகலை | - | அழகிய மேகலை |
| மருங்கில் | - | பக்கத்தில் |

தேசுல..... ..... எட்டி
செழுமர கதவணி வடம் பூட்டி
திருக்கனி வாயிதழ் மெல்லப் பேசி
செங்கையை வீசி

நேசமிகுந் .....பை யோங்க
ஆசை பொருந் தாடவ ரேங்க
நீலநிறக் குழல் வகுப்பெடுத்து
நேர்பெற முடிந்தது

பூசிய மஞ்சணை நிரந்து லங்கப்
போர்மத வேழ தனிமனங் கலங்க
புள்ளுயர் தடமுயர் தாழைக்கரைப்
பள்ளி வந்தனளே.

10. மருக்கமழ்சிந் தாமணியூர் பெரிய திருவடி யுதவுவர்க்கு மாரன்
தருக்குலவு காதலத்தான் சாமினாதேந்திரவேள் தனைக்
கொண்டாடி

---

| | | |
|---|---|---|
| செழுமரகத மணிவடம் | - | நவரத்தினங்களில் ஒன்றான மரகத்தால் ஆன ஓர் அணிகலன் |
| திருக்கனி வாயிதழ் | - | காமச்சுவையூட்டும் வாயிதழ் |
| செங்கை | - | அழகிய பொன்வண்ணக் கை |
| நேசம் | - | அன்பு |
| நீலநிறக் குழல் | - | சுருண்டு நீண்ட கருநீலக் குழல் |
| வகுப்பெடுத்து | - | ஆகிய தலைமுடி |
| பூசிய மஞ்சணை | - | மஞ்சள் பூசிய முகத்தாள் |
| போர்மதவேழம் | - | போரில் பயன்படும் யானை |
| புள்ளுயர் தடமுயர் தாழைக்கரை | - | பெரிய பறவைகள் கூடிக் களித்து விளையாடும்படியான தடாகங்களைப் பெற்ற தாழைக்கரை என்னும் ஊர் |
| மருக்கமழ் | - | மருக்கொழுந்து மணக்கும் படியான |
| சிந்தாமணியூர் | - | ஓர் ஊர் |
| பெரிய திருவடி | - | வணக்கத்திற்குரிய திருமால் திருப்பாதம் |
| மாரன் | - | காடன் |

பெருக்கமிடும் பண்ணைதனைக் காவித்தியாய் வந்த
மள்ளன் பிரபலமோங்கு
திருக்குலவு வீராச்சிமங்கை நகர்க்குடும்பன் வந்ததிரஞ்
சொல்வோமே.

11\. மொய்த்தி டுங்கருங் கொண்டையை முடித்து
மேல்வீசை நன்றாய் முருக்கிக் கண்டையுரு
மாலி றுக்கிக் கட்டி சித்திர
வர்ணச் சோமனை வெளுத்துமே யிடையிற்

சேர்த்துச் செண்டு போலெ ழுந்து
தடிகொண் டுலாவியே துத்தியம் பெருகும்
நாச்சி முத்தன் வளவிலச்
சாராயச் சொம்புடன் குடித்து

மத்த தும்பி போலவே அஷ்த்திர
வேள்சாமி னாதேந்திர புத்திமான்
தென்கரை நாட்டி லடும்புகழ் சேரும்
பண்ணைக் குடும்பன் வந்தான்

---

| | | |
|---|---|---|
| குடும்பன் | - | தலைவன் |
| மொய்த்திடு | - | சூழ்ந்திடு |
| கருங்கொண்டை | - | கரிய கொண்டை |
| வீசை | - | மீசை |
| கண்டை உருமா | - | தங்கச்சரிகை தெரியும்படியாக அமைந்த தலைப்பாகை |
| சித்திரவர்ண சோமனை | - | அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த ஆடை |
| வெளுத்து | - | துவைத்து |
| செண்டுபோலே | | மலர்போலே |
| துத்தியம் | - | புகழ்ச்சி |
| நாச்சிமுத்தன் | - | பெயர்ச்சொல்; ஒருவன் பெயர் |
| சாராயச் சொம்பு | - | மதுபானம் குடிக்கப் பயன் படும் சொல் |
| தும்பி | - | வண்டு |
| அஷ்த்திரம் | - | ஆயுதம் |

12. சாமி னாதேந் திரசிங் கார
நேம வான்பெரும் புகழைத்
தான்படி யார்கள் நெஞ்சில்
தாம் படிப்பேன்

காம னாந்தம் பாபள்ளையை
பூமி யில்வணங் கார்மேனி
களைப்பாச் சோவென்றுளக் கோல்
களைப் பாச்சுவேன்

கோம னோர் புகழ் மருதனாய்
கந்தனைத் துதியாக் கொடுங்
கோல்மன் னரெலும் பைக்கொடுங்
கோல் செய்வேன்

நாம மேவீ ராச்சி மங்கை
நகரிற் பண்ணை தழைக்க
நலம்பெறும் பண்ணைப் பள்ளன்
நானே யாண்டே.

13. கார்குலவு தின்புயமால் சாமிநாதேந்திர திட
தீரகன மகிழ்பண்ணை சிறக்க வரும் பள்ளியர்கள்
பார்குழினி தான்.... பாகமென வாய்திறந்து
மார்க்கமதாய் தங்கள் வரன்முறைகள் சொல்வாரே.

---

| | | |
|---|---|---|
| கோமனோர் | - | பெரியோர் |
| கந்தன் | - | முருகன் |
| துதி | - | போற்றுதல் |
| கொடுங்கோல் மன்னர் | - | நேர்மையற்ற மன்னர் |
| நாமம் மேவி | - | பெயர் விளங்க |
| கார் குலவு | - | அழகு மிக்க |
| திண்புயமால் | - | திரண்ட தோள்வலி பெற்றவன் |
| திடதீரன் | - | சிறந்த வீரன் |
| மார்க்கமதாய் | - | நல்வழி |

14. மன்னும் வீராச்சிமங்கை தன்னி லென்னாண்டவர்தான்
வந்து முகிற்தஞ் செய்த அந்த நாளினில்
கன்னல் செரிவயலிற் பொன்னேரிடும் பேர்தன்பாய்க்
கண்டு சரடுகட்டிக் கொண்டா னென்னைச்
சொன்ன மொழி கடந்த ஒன்னலார் தம்மை வென்ற
துடிப்பள் ளனுக்கு மூத்தகுடி பள்ளினான்
நன்னயஞ் சேருஞ் சாமிநாத மகிபன் பண்ணை
நடத்தும் பெரியபள்ளி னானே யாண்டே.

15. தங்காம தேனு சாமினாத குபேரன் பண்ணை
நாட்கொண்டு பள்ளடுமையாள் கொண்டனாள்
சிங்காரமாக எந்தன் கொங்கைக் குடத்தைப் பார்த்து
தேட்டியே மகிழ்ந்து தாலிகட்டினா னென்னை
துங்கமிகும் பொருளை தங்குங்குண பால்கறைத்
துரைப் புள்ளுலாவுந் தாழைக் கரைப் பள்ளினான்
பங்கயஞ்சேர் வீராச்சி மங்கை நகரிற் பண்ணைப்
பள்ளன் தனக்குச் சின்னப்பள்ளினா னாண்டே.

---

| | | |
|---|---|---|
| முகிந்தம் | - | அரும்பு |
| கன்னல் | - | கரும்பு |
| செறிவயல் | - | உழுநிலம் |
| பொன்னேர் | - | முதல் ஏர் |
| சரடுகட்டி | - | கயிற்றால் பிணைத்து |
| ஒன்னலார் | - | பகைவர் |
| நன்னயம் | - | இன்சொற் செயல்கள் |
| காமதேனு | - | உம்பர் உலகப் பசு |
| அடுமையாள் | - | அடிமை |
| கொங்கைக்குடம் | - | குடம்போன்று பெருத்த முலை |
| தேட்டியே | - | விரும்பியே |
| தாலி | - | திருமணம் ஆனதைத் தெரிவிக்கக் கழுத்தில் பெண்கள் அணியும் புனித அணிகலன் |
| துங்கமிகும் | - | சிறப்புமிகும் |
| புள்ளுலாவும் தாழைக்கரை | - | பறவைகள் நடமாடும் கரை |
| பங்கயம் சேர் வீராச்சி மங்கை நகர் | - | தாமரை நிறைந்த வீராச்சி மங்கை நகர் |

16. தோற்று மருவலார் களுற்றம் பறித் தெரியுஞ்
சுற்றம் போல் செய்யில் நாற்று முற்றும் பறிப்பேன்
கூற்றந் தொண்ணூத்தியாறும் நாற்றிசையில்
வாள்வோங்கிக் குடிகட்டும் போல்
நாற்றைமுடி கட்டுவேன் நீற்றொளி மேனியற்குச்
சோற்றை இட்டேன் ஆண்டவர்நிலை நாட்டும் போல்
நாற்றை மேல் நாட்டுவேன் பாற்றிரண்ட வசனம் பகர்
சாமிநாத சிங்கம் பண்ணைக் கியல்பு தங்கும்
பள்ளினா னாண்டே

17. தேட்டு வளங்காத புல்லர் தென்கடற் கப்பாலேகத்
தாட்டு வணத் தெற்றென சொல் சாமிநாதேந்திரன் வெற்பில்
வாட்டுவளம் பொருக் ககன பள்ளியர்கள் வாய் மலர்ந்து
நாட்டுவளஞ் சொல்லி மணி நாறுக... தோன்றினரே.

18. வான்மூன்று மழை பெய்து காற்கும்
வயலிற் சாலிமணி முத்தைச் சேர்க்குந்
தான்மீய்வ ரென்றுந்த பேற்குந்
தரள மெய்வரதன் கலிதீர்க்கும்

---

| | | |
|---|---|---|
| மருவலார் | - | குற்றமற்றார் |
| பறி | - | பிடுங்குகை |
| செய்யில் | - | வயல் |
| கூற்றம் | - | இயமன் |
| நீற்றொளிமேனியர் | - | திருநீறு அணிந்த சிவபிரான் |
| பாற்றிரண்ட வசனம்போல் | - | பால் திரண்டாற் போல ஆற்றொழுக்கான பேச்சு |
| தேட்டு | - | பாதுகாப்பு |
| புல்லர் | - | இழினர் |
| தென்கடல் | - | இந்தியப் பெருங்கடல் |
| வான்மூன்று மழை | - | பருவமழை |
| காற்கும்; காக்கும் | - | காப்பாற்றும் |
| சாலிமணி | - | செந்நெல் |
| சாலிமணிமுத்து | - | செந்நெல் |
| கலி | - | துன்பம் |

மேனிலா மணிமாடத் துள்ளோர்க்கு
மிவ்வெண்மை கண்டு மிகும் புனலாற்குஞ்
சேனை காவலன் மால்சாமிநாத வசிரன்
தென்கரை நாடு எங்கள் நாடே.

19. கன்னிவாழைப் பழுத்ததை நாடுங்
கவிக்கு முன்னங் கருமந்தி யாடும்
மன்னியே அக்னியிற் கைபோடும்
வயலெல்லாம் பின்மதுப் புனலோடும்
மின்னும் வான்மழைத் துளி சாடும்
விபரத்தால் நெல் விளைந்துற நீடுந்
துன்னலார் பணிமால் சாமிநாத சுமுகன்
வாழ்வள நாடு எங்கள் நாடே.

20. கஞ்சரம் பூத்த தடத்தனங் காட்டுமெய்
கன்னி மாதர் தடந்தனங் காட்டு
வஞ்ச மாரன் முலைக் கணை தேடு..ம்
மாதராரு முலைக் களவு தேடுஞ்

---

| | | |
|---|---|---|
| சேனை காவலன் | - | காவற்றலைவன் |
| கன்னி வாழை | - | காய்க்காத வாழை |
| நாடுங்கவி | - | விரும்பும் குரங்கு |
| கருமந்தி | - | கரிய ஆண் குரங்கு |
| அக்கினி | - | நெருப்பு |
| மதுப்புனல் | - | இனிய வெள்ளநீர் |
| வான்மழைத் துளி | - | மழைநீர் |
| துன்னலார் | - | பகைவர் |
| பணிமால் | - | அணிகலன் அணிந்த தலைவன் |
| சுமுகன் | - | இனியவன் |
| கஞ்சரம் | - | சூரியன் |
| கன்னிமாதர் | - | திருமணம் ஆகாத மகளிர் |
| தடத்தனம் | - | சிறப்புடைய கொங்கை |
| வஞ்சமாரன் | - | துன்பம் தரும் காமன் |
| முலைக்கணை | - | கூரிய அம்பு போன்ற காமத்தை எழுப்பும் சீரிய முலைகள் |

செஞ்சம்பாவும் பழனத்திருக்குந்
திரள முத்தினற் பழனத் திருக்கும்
அஞ்சலார் பணிமால் சாமிநாத
அதுலன் தென்கரை நாடெங்கள் நாடே.

21. அந்தளஞ் சக்கரங்களை நேரு மனப்
பெண்ணார் சக்கரங்களை நேரும்
சந்தனந் தழுவித் தத்தை மேவ வளைக்குமரச்
சந்தனந் தத்தை மேல் வளைக்கு
கந்தரங்கச் சந்தந் திக்கு மேவு
முகந்தரங் கச்சத்தந் திக்கு மேவும்
அயந்தாரு நிகர்சாமி நாத
அதுலன் வாழ்வள நாடெங்கள் நாடே.

22. வானரந் தத்தை யோட்டிய சூதத்தில்
வானரந் தத்தை யென்று குதிக்கும்
பானமா விரசக்கனி கேறவும்
பானமா விரசக்கனி யோடும்

---

| | | |
|---|---|---|
| செஞ்சம்பா | - | சம்பா நெல் |
| பழனத்திருக்கு | - | வயல் |
| முத்தி - முற்றி | - | முதிர்ந்து |
| அஞ்சலார் | - | அஞ்சாதவர் |
| அதுலன் | - | உவமையில்லாதவன் |
| தென்கரைநாடு | - | ஓர் நாடு |
| அந்தளஞ் சக்கரங்கள் | - | கவசச் சக்கரம் |
| தத்தை | - | கிளி |
| கந்தரங்கச் சத்தம் | - | அந்தரங்கச் சத்தம் |
| சத்தம் | - | ஒலி |
| வானரம் | - | குரங்கு |
| தத்தை | - | கிளி |
| சூதம் | - | மரம் (புளி அல்லது மா) |
| தத்தையென்று | - | குதித்துக் குதித்து |
| பானம் | - | பருகும் உணவு |
| பானமாம் விரசக்கனி | - | கொங்கையை காமத்தைத் தூண்டும் ஒருவகை ஆயுத மாகக் கூறுகிறார். |

மேனகைக் கஞ்சிடாத மின்னார் சித்திர
மேனகைக் கஞ்சி வேர்வை சொலிக்குந்
தானவாரணன் சாமிநாதேந் திரதயாலு
தென்கரை நாடெங்கள் நாடே.

23. மன்னு மாதனைக் கொண்டலைச் சாடும்
வலுத்த யூகங் கைகொண்டலைச் சாடுந்
துன்னு மிஞ்சியு மஞ்சளைச் சேருங்
சூதமிஞ்சியு மஞ்சளைச் சேருங்
கன்னிமாடங்கள் நெல்லி வந்தாடும்
நிற்காவி லாருங் களனெல்லி வந்தாடும்
அன்னதாரும் நிகர்சாமி நாத
அதுலன் வாழ்வள நாடெங்கள் நாடே.

24. சோலை தோறுங் கருங்குயில் பாடுஞ்
சுகத்தினாற் பசுந்தோகை நின்றாடும்
மாலைதோறும் வசந்தனைத் தேடும்
மாதர்மீதில் மலர்க்கணை சாடுங்

---

| | | |
|---|---|---|
| மேனகை | - | உம்பர் உலக ஆடலழகி |
| சொலிக்கும் | - | மின்னும் |
| தானவாரணன் | - | யானைமீது அமர்ந்து வரும் கொடை குணம் கொண்ட தலைவன் |
| மன்னு | - | புகழ் |
| கொண்டல் | - | காற்று |
| யூகம் | - | துணிபு |
| துன்னு | - | தசை |
| இஞ்சி | - | பூடுவகை |
| கன்னிமாடங்கள் | - | கன்னியர் உறையும் மாடம் |
| காவில் | - | சோலையில் |
| அதுலன் | - | நிகரற்றவன் |
| சோலை | - | நிழல் மிகு இடம் |
| கருங்குயில் | - | குயில் வகையில் ஒன்று |
| பசுந்தோகை | - | பசுமையான தோகை |
| வசந்தன் | - | மன்மதன்; காமன் |
| மலர்க்கணை | - | மலரால் ஆன மன்மதனின் மலர் அம்பு |

காலைதோறும் மணாளரைக் கூடும்
கருத்தினாலுங் கனமலர் சூடும்
ஞாலமேழும் புகழ்சாமிநாத நரேந்திரன்
தென்கரை நாடெங்கள் நாடே.

25. காரமென்பது சேலை யெழுத்துக்
களங்க ளென்பதி ராக்கதி ராகும்
ஓரமென்ப திருப்பதின் கோடுநல்
லோட்ட மென்பது யர்ந்த பல வீடு
சோரமென்பது வாவியில் தீர்த்தம்
பின்அட்டி யென்பது மாதர் சிரத்தில்
கோர வரம் பரிமால் சாமிநாத குபேரன்
வாழ்வள நாடெங்கள் நாடே.

26. வீசக்கண்டது தென்மலைத் தென்றல் பின்
வீங்கக் கண்டது மெல்லியர் கொங்கை
பேசக் கண்டது மன்மதன் தன்னை
இரையக் கண்ட தெழும் புனல் வெள்ளம்

---

| | | |
|---|---|---|
| மணாளர் | - | கணவர் |
| கனமலர் | - | நிறைமலர் |
| சூடும் | - | அணியும் |
| ஞாலம் ஏழு | - | ஏழுஉலகம் |
| காரம் | - | உறுதி |
| சேலை எழுத்து | - | சேலையிற் காணும் சித்திரம் |
| ஓரம் | - | விளிம்பு அல்லது பக்கம் |
| கோடு | - | வளைவு |
| சோரம் | - | குற்றம் |
| வாவி | - | குளம் |
| தீர்த்தம் | - | புனித நீராடு குளம் |
| பின்அட்டி | - | ஒருவகை அணி |
| மாதர் சிரம் | - | மங்கையர் தலை |
| குபேரன் | - | நிதிக் கடவுள் |
| வீசக்கண்டது | - | வீசுவது |
| தென்மலைத் தென்றல் | - | பொதிகைக் காற்று |
| வீங்கக் கண்டது | - | பெருகக்கண்டது |
| கொங்கை | - | முலை |
| மன்மதன் | - | காமக்கடவுள் |
| இரையக் கண்டது | - | ஒலிக்கக் கண்டது |
| எழும்புனல் வெள்ளம் | - | ஆர்த்து எழும் வெள்ளம் |

பேசக்கண்டது மங்கள வார்த்தை
பிரட்டக் கண்டது நெய்ப்பலகாரம்
ராசர்க்கே நிகர்மால் சாமிநா தேந்திரன்
தென்கரை நாடெங்கள் நாடே.

27. தண்பான மதிமுகத்தான் சாமிநாதேந்திர வேள்
எண்பார் புகழ் நாட்டி லெல்லோருங் கொண்டாட
விண்பாய்ந் திலகுபொழில் மீதேமிக மகிழ்ந்து
பண்பார் குயிற்கூவும் பான்மைதனைச் சொல்வோமே.

28. பொன்னரசி லரசுபுரி விக்கினேசு பரர்பாதம்
போற்றி மகிழ்ந்து தேற்றியே கூவுவாய் குயிலே
நன்னயமு லாவிவளர் சிதம்பரேசுவரர் ஞான
நடராசரருள் சிறக்கக் கூவுவாய் குயிலே

---

| | | |
|---|---|---|
| மங்கள வார்த்தை | - | நல்ல சொல் |
| பிரட்டக் கண்டது | - | திருப்பக் கண்டது |
| நெய்ப் பலகாரம் | - | நெய்யிற் செய்த சிற்றுண்டி |
| ராசர்க்கே நிகர்மால் | - | அரசர்க்கு நிகர் ஆனமால் |
| தண்பான | - | குளிர்ச்சியான |
| மதிமுகத்தான் | - | ஒளிரும் நிலவு போன்ற முக முடையவன் |
| வேள் | - | சிறந்த ஆண்மகன் |
| விண்பாய்ந் திலகுபொழில் | - | உயர்ந்த மரங்களையுடைய சோலை |
| பண்பார் குயில் | - | இனிமையாகப் பாடும் பண்பினைப் பெற்ற குயில் |
| பான்மைதனை | - | முறைமைதனை |
| பொன்னரசி | - | பொன்போன்ற அரசி |
| விக்கினேசுபரர் | - | கணபதி |
| பாதம் | - | திருவடி |
| ஏற்றி | - | துதித்து |
| நன்னயம் | - | இன்சொற் செயல்கள் |
| சிதம்பரேசுவரர் | - | நடராசர் |
| ஞான நடராசர் | - | சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஆடல் வல்லான் |

இந்நிலமெல் லாம்பரவு மெங்கள் கிருஷ்ண
சாமிபாத மிறைஞ்சி மகிழ்ந் தேற்றியே கூவுவாய் குயிலே
கன்னி காமாட்சி வெங்கமலை நாயகி பத்திர
காளி அருளோங்கவே கூவுவாய் குயிலே
பொருநைநதி குணபாலி லனு மந்த ராயரருள்
புகழ்ந்து நித மகிழ்ந்துமே கூவாய் குயிலே
கருணைதர வளர் பருத்திக்காட்டு நாச்சியார் பாத
கமல மலரதனைத் துதித்துக் கூவாய் குயிலே
திருவுலவி வளர் மருதமலை அய்யர் தடிக்கார
திருவருளுந் தழைத் தோங்கக் கூவாய் குயிலே
அருளுதவும் வீராச்சி மங்கையில் வன்னியராயன்
அண்ணாவி தனைப் போற்றி கூவாய் குயிலே

I. பெரிய திருவடியுதவி துரைசாமி நாதேந்திரன்
பிரபலத்தைப் புகழ்ந்துமே கூவாய் குயிலே
தரியலர்சிங் கேறுதுரை சாமிநாதேந்திர முகில்
தன்கிளையெல்லாந் தழைக்கக் கூவாய் குயிலே

---

| | | |
|---|---|---|
| கிருஷ்ணசாமி பதம் | - | திருமால் திருவடி |
| கன்னி காமாட்சி | - | அன்னை காமாட்சி |
| வெங்கமலை நாயகி | - | வெங்கமலையில் எழுந்தருளி யுள்ள இறைவி |
| பத்திரகாளி | - | கொற்றவை |
| பொருணைபதி | - | ஓர் நதி |
| குணபாலி | - | நற்குணவான் |
| அனுமந்தராயர் | - | ஒருவன் பெயர் |
| பருத்திக்காட்டு நாச்சியார் | - | ஒருவருடைய பெயர் |
| பாதகமல மலர் | - | திருவடி மலர் |
| திருவுலவு வீராச்சி மங்கை | - | செல்வச் செழிப்பான வீராச்சி மங்கை |
| வன்னியராயன் | - | ஒரு வீரனின் பெயர் |
| அண்ணாவி | - | ஆசிரியன் |
| பெரிய திருவடி | - | வணக்கத்திற்குரிய திருமால் பாதம் |
| துரைசாமி நரேந்திரன் | - | அழகிற் சிறந்த நரேந்திரன் |
| பிரபலம் | - | நன்கறிமுகமான |
| தரியலர் | - | பகைவர் |
| சிங்கேறு | - | சிங்கம் போன்ற வீரம் மிக்க |
| முகில் | - | மேகம் |
| தன்கிளை | - | தனதினம், தன்சுற்றம் |

வரிசை பெறு கங்கை குலி மால் சாமி நாதேந்திர
மன்னவனை வாழ்த்தியே கூவாய் குயிலே
பரிசனமெலாந் துதிக்குஞ் சாமிநாதேந் திரமுகில்
பண்ணைகளெல் லாந்தழைக்கக் கூவாய் குயிலே
மன்னுமறையோர்கள் குல நாரணா சாரிமுகில்
வண்மையுடன் வாழ்கவே கூவாய் குயிலே
நன்னலமுஞ் சேர்மணியமார் மயனும் வெங்கிட்ட
ரங்கயனும் வாழ்கவே கூவாய் குயிலே
துன்னுபுகழ் துரைராயன் வெங்கிட்ட ரமணய்யன்
சுகம்பெருகி வாழ்கவே கூவாய் குயிலே
அனவரத கலியாணன் நரசயனும் நீதிபதிகல்
லாசாரி வாழ்கவே கூவாய் குயிலே
சொன்மொழி தப்பாத முகில் கிஷ்டிணப்பேந் திரநிதியுஞ்
சுப்பராயருந் தழைக்கக் கூவாய் குயிலே

---

| | | |
|---|---|---|
| வரிசைபெறு | - | சிறப்பு பெறு |
| கங்கை குலமாய் | - | கங்கை குலத்தைச் சார்ந்த |
| பரிசனம் | - | உறவினர், பிரிவாரம் |
| மன்னுமறையோர் | - | வேத விற்பனர் |
| நாராணாசாரிமுகில் | - | ஒருவர் பெயர் |
| வண்மையுடன் | - | கொடை மறத்துடன் |
| மயன் | - | தச்சன் |
| வெங்கிட்ட ரங்கயன் | - | ஒருவன் பெயர் |
| துன்னுபுகழ் | - | சிறப்புறு புகழ் |
| துரைராயன் | - | ஒருவர் பெயர் |
| வெங்கிட்ட ரமணய்யன் | - | ஒருவர் பெயர் |
| அனவரத கலியாணன் | - | ஒருவர் பெயர் |
| நரசயன் | - | ஒருவர் பெயர் |
| நீதிமதி | - | நீதி அரசர் |
| கல்லாசாரி | - | கல்தச்சர் |
| சொன்னமொழி தப்பாத | - | சொன்னபடி நடக்கும்படியான |
| கிருஷ்ணபேந்திர நிதி | - | பெருநிதியாளன் கிருஷ்ண பேந்திரன் |
| சுப்பராயர் | - | ஒருவர் பெயர் |

11. மனது மகிழ் வேங்கணய்யன் பொய்யனுங் குப்பய்யனும்
வரிசையுடன் வாழ்கவே கூவாய் குயிலே
தனபதியை நிகரான சாமிநாதேந் திரமுகில்
சவு பாக்கியம் பெருகவே கூவாய் குயிலே
கொற்றைநக ராதிபன்கு மாரர்ஏற் றின வேணாட்
கோவேந்தன் தழைக்கவே கூவாய் குயிலே
சொற்றமிழ்வல் லோர்க்குதவுஞ் சாமிநாதேந் திரமுகில்
துத்தியமுற வாழ்கவே கூவாய் குயிலே
கற்றதமி ழாளியெங்கள் முத்தணேந் திரயூகி
கனபுகழை வாழ்த்தியே கூவாய் குயிலே
வெற்றிபுனை முருகய்யவி பேகியெங்கள் ஆண்டியப்ப
வில்விசையன் வளர்ந்தேறக் கூவாய் குயிலே
தவசிமுகில் தானுதவு முத்தனேந் திரதீரன்
தரணிதனில் வாழ்கவே கூவாய் குயிலே

---

| | | |
|---|---|---|
| வேங்கணய்யன் | - | ஒருவர் பெயர் |
| வரிசையுடன் | - | சீருடன் |
| தளபதி | - | நீதிக்குரியவன் |
| சவுபாக்கியம் | - | நிறைந்த நலம் |
| கொற்றை நகராதிபன் | - | கொற்றை நகர்த்தலைவன் |
| கோவேந்தன் | - | அரசர்க் கரசன் |
| சொற்றமிழ் வல்லோர் | - | தமிழ்நூல் ஆய்ந்தோர் |
| துத்தியமுறை | - | சிறப்புற |
| கற்ற தமிழாளி | - | தமிழ் கற்றவர் |
| முத்தனேந்திரயூகி | - | அறிவிற் சிறந்த மன்னவன் |
| கனபுகழ் | - | நிறைந்த புகழ் |
| விபேகி | - | கூர்மதியாளர் |
| ஆண்டியப்பன் | - | ஒருவர் பெயர் |
| வில்விசையன் | - | அர்ச்சுனன் |
| வளர்ந்தேற | - | உயர |
| தவசி முகில் | - | மாமுனிவர் |
| தீரன் | - | செயற்கரிய செய்தோன் |
| தரணி | - | பூவுகு |

தவமிகு முத்துச்சாமி பெரிய கருப்பன் தீரன்
நானிலத்தில் வாழ்கவே கூவாய் குயிலே
புவிபுகழ் தம்பாபிள்ளை மருதநாயக யோக்கிய
போகன் வளர்ந்தேறவே கூவாய் குயிலே

III. சிவனடியை மறவாத செட்டியப்பன் வைசியர்குலச்
சிங்கேறும் வாழ்கவே கூவாய் குயிலே
வருராம சாமிமுகில் சுடலைமுத்துப் பூபாலன்
மருதநாயகந் தழைக்கக் கூவாய் குயிலே
தருநிகரும் பேச்சிமுத்துப் பேச்சிமுத்து மருதமலைத்
தாட்டீகன் வாழ்கவே கூவாய் குயிலே
பொருளூரில் வந்த முத்துச் சாமி வெங்கடாசலத்தைப்
புதுமையுடன் வாழ்த்தியே கூவாய் குயிலே
கருணைதரு கருப்பண்ணனும் தடிக்காரன் மருதப்பன்
கருப்பண்ணனும் வாழ்கவே கூவாய் குயிலே
கொற்றை நகர் முத்துக்கருப் பணதீரன் யெங்கள் முத்துக்
குமாரேந்திரன் வாழ்கவே கூவாய் குயிலே

---

| | | |
|---|---|---|
| தவமிகு முத்துச்சாமி | - | சிறப்புடைய முத்துச்சாமி |
| பெரிய கருப்பன், தம்பா பிள்ளை | - | அரசு அதிகாரிகள் |
| மருதநாயக யோக்கியன் | - | நல்லோன் மருதநாயகம் |
| சிவனடி | - | சிவபிரான் திருவடி |
| செட்டியப்பன் | - | ஒருவன் பெயர் |
| வைசியர் குலம் | - | வணிகர் குலம் |
| சிங்கேறு | - | சிங்கம் போன்ற வீரம் மிக்க |
| ராமசாமி முகில் | - | ஒருவர் பெயர் |
| பூபாலன் | - | ஒருவர் வெயர் |
| மருத நாயகன் | - | ஒருவர் பெயர் |
| பேச்சிமுத்து | - | ஒருவர் வெயர் |
| மருதமலை தாட்டீகன் | - | மருதமலைத் தலைவன் |
| பொருளூர் | - | ஊர்ப்பெயர் |
| முத்துச்சாமி வெங்கடாசலம் | - | ஒருவர் பெயர் |
| கருப்பண்ணன் | - | ஒருவர் பெயர் |
| கொற்றை | - | ஓர் ஊர் |
| முத்துக்கருப்பண்ணதீரன் | - | ஒருவர் பெயர் |

யெற்றிசை யும்புகழ் சுடலையா தித்தர்யுடன்
இருளப்பேந்திரன் வாழ்க கூவாய் குயிலே
முற்றறிவுளோர் புகழ்மொய்ய னேந்திர னாறு
முகதீரன் வாழ்கவே கூவாய் குயிலே

IV. பற்றலர் குடோரியென வந்துநித்த செயலானிப்
பட்டன் சேருவை தழைக்கக் கூவாய் குயிலே
வளம்புனை சிந்தாமணியில் வருசாமி னாதேந்திர
மன்னவனை வாழ்த்தியே கூவாய் குயிலே
செழுந்தமிழ் வல்லோர்க்குத வுஞ்சாமி நாதேந்திர
திடசிங்கேறு வாழ்கவே கூவாய் குயிலே
உளம்புகழ் தம்பாபிள்ளை மருதநாயக வேந்தன்
உசிதமுற வாழ்கவே கூவாய் குயிலே
இளங்குயில் மின்னார் மோ கனசாமிநா தேந்திரமுகில்
யென்னாளும் வாழ்கவே கூவாய் குயிலே.

---

| | | |
|---|---|---|
| சுடலை யாதித்தர் | - | ஒருவர் பெயர் |
| இருளப்பேந்திரன் | - | ஒருவர் பெயர் |
| மொய்யனேந்திரன் | - | ஒருவர் பெயர் |
| ஆறுமுக தீரன் | - | ஒருவர் பெயர் |
| பற்றலர் | - | பிடிக்காதவர் |
| குடோரி | - | விடமருந்து |
| செயலாளி | - | செயல்வீரன் |
| பட்டன் சேருவை | - | ஒருவன் பெயர் |
| வளம்புனை சிந்தாமணி | - | பெயர் |
| சாமிநாதேந்திர மன்னன் | - | பெயர் |
| செழுந்தமிழ் வல்லோர்க் குவுதவும் | - | தமிழ் அறிந்தார்க்கு உதவும் |
| திடசிங்கேது | - | வன்மைமிக்க சிங்கம் போன்ற வீரன் |
| உசிதமுற | - | மேன்மையுடன் |
| மின்னார் மோகன நாதேந்திர முகில் | - | கண்டார் விரும்பும் நாதேந்திர முகில் |

29. தான கர்ண ஏனை வந்த சாமிநாதேந்திர திட
மான பரன் வீராச்சி மங்கை நகர் பள்ளரெல்லாம்
நானிலமெல் லாந்தழைக்க நல்லமழை பெய்ய வென்றே
ஆனைமுகன் பூசைமுதல் யாவருக்குஞ் செய்வாரே.

30. வையம்புகழ் மழை பெய்யும் படியாய்த் தெய்வ
மகவானை நோக்கிப் பொங்கல் மிகவே செய்யும்
மெய்யர் விக்னேசுவரர்க்குச் செய்யும்பணி
விடைகள் விடலைக் கடலை அவலுடனே
வையும் வாழுஞ் சிதம்பரேசன் நாளுங் கருணைதர
வாய்ப்புடன் மகிழ்ந்து முழுக் காப்பு நடத்தும்
நீளும் வீராச்சி மங்கை யாளுங் கிருஷ்ணசாமிக்கு
நினைத்து சமராதனை தனித்து
செய்யுங் கொற்றை நகரில் வளர் தென்னீசர்ப்
பரமர் கொண்டாட அபிஷேகங் கண்டு நடத்தும்
நற்றமிழோர் துதிக்கும் நீலநகரில் காளி
நாயகிக் க்ன்பது பொன் போதவே கொடுக்கும்

---

| | | |
|---|---|---|
| தானகர்ணன் | - | தர்மம் செய்யும் கர்ணன் |
| திடமான பரன் | - | திறமையானவன் |
| வீராச்சி மங்கை நகர் | - | ஓர் ஊர் |
| ஆனைமுகன் பூசை | - | விநாயகர் பூசை |
| விக்னேசுவரர் | - | விநாயகர் |
| விடலை | - | சிதறு தேங்காய் |
| கடலை | - | விநாயகருக்குப் பிடித்த பொறி கடலை |
| அவல் | - | அரிசியில் இருந்து தயாரிக்கப் படும் உண்ணுபொருள் |
| சிதம்பரேசர் | - | சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் நடராசப் பெருமாள் |
| கொற்றைநகர்த் தென்னீசர் | - | கொற்றை நகரில் எழுந்தருளி யுள்ள சிவபெருமான் |
| அபிஷேகம் | - | நறுமணப் பொருளால் செய்யப்படும் நன்னீராட்டு |
| நீல நகர்க் காளி | - | நீல நகரில் எழுந்தருளியிருக்கும் காளி |

மெய்யான தெய்வமாமெங்கள் காமாட்சி
அம்மனுக்கும் வெங்கமல னாச்சிக்கும் பொங்கலிடும்
அய்யர் பொருணைநதி அனுமந்த ராயருக்கும்
அன்பாக அபிஷேகர் தெம்பாய்ச் செய்யும்
பணிந்து பொன்னேரு முகத் துணிந்தந்த கன்னிமார்க்கும்
பச்சை வாழை செங்கரும்பு மிச்சமாய் வையும்
அணிந்தபுகழ் சேரிருளப்பனுக்கு வேண்டிப் பூசை
ஆட்டுக்கிடாயை வெட்டியூட்டங் கொடும் பலன்சேர்
குருக்குறாஞ்சி யண்ணாவித் தெய்வத்துக்குப்
பன்னியை வெட்டிப் பெலிகள் திண்ணமாய் செய்யும்
நலன்சேர் மழைகள் பெய்ய மாரியம்மன் பதத்தை
நம்புதலாகத் தங்கக்கும்பம் வைய்யு மென்றே
குடும்ப ரெல்லா நின்றே மழைகள் பெய்ய
ஏற்றி நீரைப் பூசைகளாற்றிய பின் மன்றோர்
புகழுமெங்கள் வடபத்திர காளியம்மன்
வாய்த்திடும் படங்கண்ணி நெற்றியாய்ச் செய்வார்

31. தாதுபுனை திண் புயத்தான் சாமிநாதேந்திர திட
மாதவன் வாழ் வீராச்சி மங்கை நகர் பள்ளிரெல்லாம்
நீதிபுனை காளியம்மன் நேந்தப்படங் கண்ணிக்குக்
காது சினக்கே வட்டுக் கடாக்கள் பிடிப்பாரே.

---

| | | |
|---|---|---|
| தெம்பாய் | - | உற்சாகமாய் |
| பொன்னேர் | - | முதல் ஏர் |
| ஊட்டம் | - | சிறு தெய்வ வழிப்பாட்டிற் செய்யப்படும் பலி பூசை |
| குருக்குறாஞ்சி அண்ணாச்சி | - | குருக்குளாஞ்சியிற் வணங்கப் படும் தெய்வமாகிய சிறப்புறு ஆசான் |
| நலன்சேர் மழை | - | பயிர் செழிக்கப் பெய்யும் பருவ மழை |
| வட பத்திர காளி | - | உச்சணி மாகாளி |
| புனைதின்புயத்தான் | - | உலோகம் போன்ற திரண்ட தோள்வலி பெற்றவன் |
| திடமாதவன் | - | வலிமையானவன் |
| நீதீபுனை காளியம்மன் | - | நீதி செய்யும் கொற்றவை |
| நேந்த | - | நேர்ந்த - வணங்கிட்ட |
| வட்டுக் கடாக்கள் | - | திரண்டு கொழுத்த ஆண் ஆடுகள் |

32. தண்ணார் முகப்பிர தாபன் பிறமிப்
பண்ணாடி கண்ணன் றனக்குமே
சந்தனத்துடன் மாலை கொடுத்து
கந்தபொழுது விந்தையாய்ப்
பெண்ணா ரமுர்தங் காளி னாயகிக்
கண்ணாயிரத்தின் கருணை யால்
பெருகும் பெரிய பழனி யாண்டிக்
கருகி லொருவன் பரிசனுந்
தூண்டும் பழனியாண்டி யும்புகழ்
வேண்டும் பழனி யாண்டியுஞ்
சொல்லும் பொருப்பை வெல்லும் கருப்பன்
துன்னார் புகழும் வன்னியன்
பாண்டி னாட்டில் கூண்ட வீரப்
பண்ணாடி மகன் கண்ணனும்
பற்றலார் மீதிற் சினக்கும் புலிபோல்
பாஞ்ச குருக்கு ராஞ்சியும்
விற்ப னன்சிவ னடியான் குழந்தை
வேலன் குருக்கு ராஞ்சியும்
விருது புனைமுத் திருளன் குழந்தை
வேலன் கருப்பக் குடும்பனுங்

---

| | | |
|---|---|---|
| தண்ணார் | - | குளிர்ந்த |
| முகப்பிரதாபன் | - | முக வசீகர முடையவன் |
| பண்ணாடி | - | பண்ணைத் தொழிலாளி |
| பெண்ணாரமுர்தம் | - | இனிய பெண்மகன் |
| காளி நாயகி | - | காளிதேவி |
| கண்ணாயிரம் | - | இந்திரன் |
| பெரிய பழனியாண்டி | - | பழனியில் எழுந்தருளியுள்ள முருகப் பிரான் |
| பரிசனம் | - | உறவினர்; பரிவாரம் |
| துன்னார் | - | பகைவர் |
| அன்னியன் | - | அயலவர் |
| புலிபோல் பாஞ்ச | - | புலியெனச் சீரிய |
| விருது புனை முத்திருளன் | - | வீரப்பதக்கங்கள்அணிந்திருக்கும் முத்திருளன் |
| புகழ் பொருந்தினான் | - | இணைந்து சிறப்புகள் செய்தார் |

கற்பகம் பெரும னஞ்சான் சொல்லுப
காரன் பெரிய வீரனுங்
கதித்த வேலன் பிரமனு மடைக்கலனுங்
குமரன் வீரனும் பார்புக ழும்பண் ணாடிக் கறுப்பன்

பார்புகழும்பண் ணாடி கருப்பன்
சீர் சிறந்திரு மணஞ்சான் வன்னியன்
செட்டி சின்ன ணஞ் சானுடன்
செல்லாரும் பள்ளரெல்லா ருங் கூடித்
திருந்தினார் புகழ் பொருந்தினார்

33. மிக்க விதுரர்க் குநிகர் மெய்ப்புகழ் மிகப் பெருகு
சக்கிரபதி சக்கிரதர் சாமிநாதேந்திரன் மெய்க்க
சிக்கென முழக்க மொடு செப்பமு மிகப் பெருகு
குகைக் களிரெனப் பகடு கட்டத் துணிந்தனரே

**சிந்து:**

மன்றலர்சேர் மலர்சூடி பள்ளர்
வென்றி கூறி நின்றாடி
வெகுவள மாய்ச்சுத் தக்குழ லூதியே
மட்டிலா மேளங் கொட்டினான்

நன்றியாய் நிலைநாடி மனதொன்று போலும்
பண்ணாடி வந்து நடந்தான்
பகடிடந்தான் வெகு திடந்தா
னென்று துடந்தான்

---

| | | |
|---|---|---|
| மிக்க விதுரர் | - | மிகக் கற்றவன் |
| சர்கிறபதி | - | சக்கரவர்த்தி - மாமன்னர் |
| குகைக்களிறென | - | குகையிலிருந்து புறப்பட்ட கடாக்களிறுபோல |
| மன்றவர் சேர்மலர்சூடி | - | நிறைந்த மணம் கொண்ட மலர்களைச் சூடி |
| வென்றி | - | வெற்றி |
| சத்தக்குழல் ஊதி | - | இசைக்கருவிகள் முழக்கி |
| மட்டிலாமேளம் | - | இணையிலாமேளம் |
| பண்ணாடி | - | பண்ணைத் தொழிலாளி |
| பகடு | - | பெரும் |

கன்றி டாமலே பேசினான் செம்பொற்
குன்றுபோல் வெள்ளை வீசினான் கச்சைக்
கட்டினான் புயந்தட்டினான் மெள்ளக்
கால்வைத்தான் மீசைமேல் வைத்தான்

துன்று சோமனை யெடுத்தா துனக்கு
என்று வேலன் கைகொடுத் தான் திடஞ்
சொன்னான் பயல்சின்னா னும் வந்து
தொட்டினான் கச்சங் கட்டினான்

34. கொம்பிற் கூர்ந்த கடாவே மெள்ளச்
சிம்பிப் பாய்ந்து தடாவே மனங்
குறித்துப் பின்சிரித்து சஞ்
சரித்து, சம்பரித்து கை

கொட்டி நீடு பகட்டையே தளை
கட்டியே பின்னக் கட்டு வேனென
வம்புற் றேபல் லைக்கடித் தான்மன
தன்புற்றே மெல்ல நடித்தான் பின்னும்
மாசற்று முலாசத் தோடு
பேசித் திரல் வாசிக்கிணை

---

| | | |
|---|---|---|
| செம்பொற்குன்று | - | செவ்விய நிறக்குன்று |
| வெள்ளை வீசினான் | - | துணி அசைத்தான் |
| கச்சை | - | துணி |
| சோமன் | - | உடை |
| பயல் சின்னான் | - | இளையவன் |
| கச்சங் கட்டினான் | - | ஆடை வுடுத்தான் |
| கொம்பிற்கூர்ந்த கடா | - | கூரிய கொம்புடையகானை |
| சிம்பிப் பாய்ந்து | - | சிளிர்த்துப் பாய்ந்து |
| சஞ்சரித்து | - | அசைகை |
| துசம் | - | கொடி, பல், உமி, குங்கிலியம் |
| உலாசம் | - | மகிழ்ச்சி |

வடிவு பெற்றொரு தடிசுழற்றி நல்
லடிபெ யர்த்தொரு துடிதுடித்துடன்
சோமனைக் கட்டினான் யிருகொம்புக்கே
கய ரோட்டினான் மனதாவித்

திடமே வைத்து நடாவிச் செல் கடாவைக்
கையில் சமற்றுப் பிடித்துச்
சுழித்திட்டவன் தம்பிக் காதரவு
ரைத்தான் அவன் சோம்புற்றே மெள்ளச் சிரித்தான்

பின்னுஞ் சதிரிட் டொருவனுக் கொருவன்
வெற்றி சொலிமிகத் தானே கட்டினானே.

35. **விருத்தம்**

பரும் மதக் கருணியேர்ப் பாங்கரிய கொட்டுப்
பகடு பிடித்தாடி நின்ற பள்ளர்யாவும்
பெருமை பொருந்திய காளியாட்டஞ் செய்த
பிரபவத்தால் கருணைவெள்ளம் பெருக்க மோங்கி
துருவனென வருசாமி நாத யோக்கியன்
சுகம்பெருகி வளர்நாட்டில் சோம்பு கூர்ந்து
கருமுகில் வானுலக மெங்கும் படர்ந்தே மேலுங்
காலூன்று மழைக்குறியைக் கண்கண் பாரே

---

| | | |
|---|---|---|
| தடி சுழற்றி | - | தடியைச் சுழற்றி |
| சோமன் | - | ஆடை |
| நடாவி | - | நட்டு |
| அழித்திட்டவன் | - | அழித்தவன் |
| சோம்புற்றே | - | சோம்பலுற்றே |
| சதிரிட்டு | - | நடனமிட்டு |
| வெற்றிச் சொலி | - | வெற்றியென வாழ்த்தி |
| பரும் மதக் கருணை ஏர் | - | உயர்ந்த ஏர் |
| பகடு | - | ஏர் |
| காளியாட்டம் | - | காளிக்கூத்து |
| பிரபவம் | - | பிரபாவம் - வலிமை, புகழ் |
| துருவன் | - | ஓர் நட்சத்திரம் |
| கருமுகில் | - | நீருண்ட மேகம் |
| காலூன்று மழைக்குறி | - | மழைபெய்ய மேகம் தேர்வு செய்யும் இடம் |

36. **தரு**

வட்டமதி யொட்டிப் பரிவட்டங் கூறுது - நீல
வர்ண மணியென்ன மழைமின்னி யேறுது
முட்டை கொண்டு கட்டெறும்பு னெட்டி வோடுது - நாளு
மோகமாய் யனேகப் பொன் மண்டூகம் பாடுது

தொட்ட பனை யன்றில் குரல்விட்டு மொய்க்கிது - கடல்
தோய்மதில் மேயுஞ் சிப்பி வாய்திறக்குது
அட்டதிசையோர் புகழுஞ் சாமிநாதவேள் நினைக்க
அன்புபெறும் பள்ள ரெல்லாங் கும்பு செய்வீரே

37. நேத்தியே பொருந்திய கூட்டாத்து முலைக்கே - சென்று
நீள் கரை யடைக்க வேளையாள்களும் வேணும்
வாய்த்த விளக்கெண்ணெய் பந்தம் நேத்தியாய் வேணும் - மழை
வாடையை மறைத்திடக் கொங்காடையும் வேணும்

---

| | | |
|---|---|---|
| வட்டமதி | - | முழுநிலா |
| பரிவட்டம் | - | நிலா வட்டம் |
| நீலவர்ணமணி | - | நீலநிறமான ஆபரணக்கல் |
| மழை மின்னி | - | மழை பெய்யும்போது முன்னும் பின்னும் மின்னும் மின்னல் |
| மண்டூகம் | - | தவளை |
| அன்றில் | - | ஒரு பறவை; மயிலையும் குறிக்கும் |
| மொய்க்குது | - | கூடுதல் |
| கடல் தோய்மதில் | - | கடல் அலை தொடும்படியான மதில் |
| சிப்பி | - | முத்தின் ஒரு |
| கும்பு | - | கூட்டம் |
| நீள்கரையடைக்க | - | பெரிய கறையை மறைக்க |
| விளக்கெண்ணெய் பந்தம் | - | தீப்பந்தம் |
| மழை வாடை | - | மழை வருவதைக் குறிக்கும் மண்வாசனை |
| கொங்காடை | - | ஆயர்கள் பயன்படுத்தும் மழைக்குடை; சம்பங்கூடை |

சேர்த்திடு கொல்வாய் வழி நீரேத்தவே வேணும் - பருந்
திட்டெல்லாம் நகத்திட மண்வெட்டியும் வேணும்
பார்த்திபன் சாமிநாதேந்திர கீர்த்திமான் பண்ணை - தன்னிற்
பள்ளரே இவ்வார்த்தை மனதுளங் கொள்வீரே

38. தாராருந் திண்புயத்தான் சாமிநாதேந்திரவேள்
ளேராருங்கைக்கொடை போலெண்டிசையுங் கொண்டாடச்
சீராருமாம் பொருணை தெள்ளமுதாய் வெள்ளமுறப்
பேராரும் வான்மழை பெய்யத் தொடங்கியதே.

39. **சிந்து**
இந்திர தருவை நிகருஞ் சாமிநா
தேந்திரன் கொடுத்த அமுதொப்பாய்
யெழுந்த மேகம் உவரி நீரை
யுண்டீசன் கழுத்துக் குவமையாய்

அந்தரத்தினி லெழுந்து பைந்தமிழ்க்கு
அருளும் நாக மணியைப் போல்
அடுத்து மின்னல் கொண்டிவன் முன்முரசம்
ஆர்ப்ப தெனக் கொண்ட தீர்ந்துமே

---

| | | |
|---|---|---|
| பருந்திட்டு | - | பெரிய தட்டு |
| நகத்திட | - | நகற்றிட |
| பார்த்திபன் | - | கண்ணன் |
| கீர்த்திமான் | - | புகழ்மிக்கவன் |
| தாராருந் திண்புயத்தான் | - | எதிர்க்கமுடியாதபடியான தோள் வலிமை பெற்றவன் |
| கொடை | - | நற்பரிசு |
| பொருணை | - | ஆறு |
| இந்திரதரு | - | கற்பக மரம் |
| அமுது | - | தேவலோகத்து சிறப்புணவு |
| உவரி நீர் | - | உப்பு நீர் |
| ஈசன் கழுத்து | - | சிவபிரான் நஞ்சுண்டதால் அவர் கழுத்து இயற்கை நிறம் விட்டு மாறியது. |
| அந்தரம் | - | வான்வெளி |
| பைந்தமிழ் | - | பசுமையாய் விளங்கும் தமிழ் |
| நாகமணி | - | நாகம் ஈன்ற விலைமதிப்பில்லா மாணிக்கம் |
| முரசம் ஆர்ப்ப | - | இடி என முரசு முழங்க |

சிந்தை மகிழ்தொண் ணூத்தி யாறு
சீர்த்தி யெண்டிசை யூன்றல் போல்
சிறந்த பூதலம் நிறைந்து பார்த்த
திசையெல்லா மழைக்கால் நின்றே

புந்தி மகிழ்ந்து சிவபெரு மாள்தான்
புலமைக் குதவும் பொருளைப் போல்
பொன்னூ திகிரி குளிர்ச் சினந்து
புதுமையாய் மழை பொழிந்ததே

40. சொக்கரை மீனாம்பிகையைச் சொம்புடனே தான் துதிக்கும்
சக்கரை நேர் போன்ற செஞ்சொற் சாமிநாதேந்திரன் வெற்பிற்
சுக்கரையாமல் கொடுத்ததித் தோகைதுய ராற்றுவதோ
அக்கரை யாயிக்கரைக் கண்டஞ்சி மெலிந்தாளே

41. குவடுகந் தாம டங்கு சீர்தனக்
குவடுகந் தாமடங்கவே
கும்பானைக்குடந் தாங்கிக் குறவருக்
கும்பானைக் குடம் போக்கியே

தவழும் வெங்கைக் குலத்தை யுமிகத்
துவளும் வெங்கைக் குலத்தையுஞ்
சாரும் பெருமை நரகமுமதி
லூரும் பெருமை நாரகமுங்

| | | |
|---|---|---|
| தொண்ணூத்தி ஆறுசீர்த்தி | - | 96 வகையான புகழ் |
| சொக்கன் | - | மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபிரான் பெயர் |
| மீனாம்பிகை | - | மதுரையில் எழுந்தருளியுள்ள உமை அன்னையின் பெயர் |
| வெற்பு | - | மலை |
| தோகை | - | பெண் |
| அக்கறை | - | பொறுப்பு |
| குவடு | - | மலையுச்சி |
| சீர்தனக் குவடு | - | பெண்ணின் தனம் |
| கும்பிரானைக் குடம் | - | பெருத்துக் காணப்படும் மங்கையர் கொங்கை |
| நரகம் | - | பாவிகள் இறந்தபின் செல்லும் உலகு |

கவளக் குஞ்சரக் கோட்டையும் வேடர்
கவளக் குஞ்சரக் கூட்டையுங்
கசித்திடும் பரும் பன்றி யிரங்கி
யுதித்திடும் பரும் பன்றியும்

நவமெய்க் கந்தரை பணிந்து மேசிறந்
துவமைக் கந்தரைப் பணிந்துமே
நாலை வனத்திற் புகுதவே வெள்ளம்
பாலை வனத்தில் புகுந்ததே

42. கொட்டமிட்ட துட்டரிட்ட கொத்தனத்திரட்டை எட்டி
மட்டறப் புடைத்தே துரத்த மக்களைச் சேருந் துளக்கி
அட்டதிக்கினிற் சிதைத்த தட்டுகைக் களிற்று யர்த்த
சட்டமிட்ட சொற் பிரசித்த சாமிநாதேந்திரனே

43. **சிந்து**
சேரும் பாலை வனங்க ளேறி
நேரும் பாலை வனத்திலே
செல்லும் வேலை வேரை யென்று பின்
சொல்லும் வேலை வேரையும்

---

| | | |
|---|---|---|
| குஞ்சரம் | - | யானை |
| வேடர் | - | காட்டில் வாழும் மாந்தர் |
| பரும் பன்றி | - | பெருத்த பன்றி |
| நவமெய்க்கந்தர் | - | முருகப்பிரான் |
| பணிந்து | - | வணங்கி |
| வெள்ளம் | - | புனல் |
| பாலை வனம் | - | தரிசு நிலம் |
| கொட்டமிட்ட | - | முழக்கமிட்ட |
| துட்டர் | - | கயவர் |
| எட்டி | - | காஞ்சி மரம் |
| அட்டதிக்கு | - | எண்திசை |
| தட்டுகை | - | வள்ளந்த சுரத்தையுடைய |
| களிறு | - | யானை |
| சட்டமிட்ட | - | வரையறை செய்யப்பட்ட |
| சொற்பிரசித்த | - | சொற்சிறப்புப் பெற்ற |

பாரு மறவ ரம்பையு மதில்
சாரு மறவ ரம்பையும்
பருத்த முண்ட கத்தூ ரையுமதில்
வறுத்து முண்டத் தூரையுஞ்

சாருங் கானத் தேறலைக் கொண்டு
மீறுங் கானத் தேறலைச்
சாடியே பள்ளம் நிரப்பியே சுழிச்
சாடியே வெள்ளம் பரப்பியே

நேரும் பத்திரகாளி பதத்தில்
ஆரும் பத்திரந் தூவியே
நிலைவ னங்கடந் தேறி நீற்ற
முல்லை வனந் தனிற் சார்ந்த தே

44. மழைக்குழலி யிவளுக்குனது மயற்பெருகி மயக்கமுற
விளைக்கு மதன் மலற் பகனி விடுக்க மனதுனைக் கருதி
அழைத்துவர விருத்தன்றாள் அலற் குவளை கொடுத்தருள் செய்
தழைத்த புகழ் செழித்த முகில் சாமிநா தேந்திரனே

---

| | | |
|---|---|---|
| முண்டகத்தூர் | - | தாமரையின் கிழங்கு |
| கானத்தேறல் | - | இசைத்தேன் |
| சுழி சாயுமே | - | நீர்ப்போக்கில் ஏற்படும் குழியில் சுழித்தே |
| பத்திரகாளி பதம் | - | கொற்றவையின் இணையடி |
| பத்திரமாய் | - | பாதுகாப்பாய் |
| தூவியே | - | பரப்பியே |
| முல்லை வளம் | - | முல்லை வனம் - முல்லைக்காடு |
| மழைக்குழலி | - | கார் குழலி |
| மயற்பெருகி | - | காமம் பெருகி |
| மதன்மலர் | - | காமன் மலர்க்கணைக்குப் பயன்படும் மலர் |
| அலர்குவளை | - | பூக்கும் குவளை மலர் |
| செழித்த முகில் | - | நீர் சுமந்த மேகக் கூட்டம் |

45. **சிந்து**

சாடு முல்லை யங்கா வையும்புகழ்
கூடு முல்லை யங்கா வையுந்
தருவெனப் பொருந்து வரையுமதி
உருவெனப் பொருந்து வரையும்

நாடும் ஆட்டுப்பட்டி யுங்குளிர்
மூடு மாட்டுப் பட்டியும்
நட்டு மெருக்காளையுங் கயர்
கட்டு மெருக்காளையும்

ஆடுஞ் சாமைக் காவையுந் தினம்
ஆடுஞ் சாமைக்கா வையும்
ஆயர் நாட்டுப் பயிரை யுமவர்
தாயர் ஆட்டுந் தயிரையும்

நீடுங் கைக்குருந் தடியையும்
தோயுங் கைக்குருந் தடியையும்
நேரு முகுந்தன் பதத்தில் சேத்தும்
சாரு மருதந் தோய்ந்தே

---

| | | |
|---|---|---|
| முல்லையங்கா | - | முல்லைப் பூக்காடு |
| வரை | - | மலை |
| ஆட்டுப்பட்டி | - | ஆடுகள் அடையும் இடம் |
| குளிர்மூடும் | - | பனிமூடும் |
| மாட்டுப்பட்டி | - | மாடுகள் அடையும் இடம் |
| ஆடுஞ்சாமை | - | காற்றில் ஆடும் சாமைக்காதர் |
| ஆயர் நாட்டுப்பயிர் | - | ஆயர் விளைவிக்கும் பயிர்கள் |
| தாயார் | - | அய்ச்சியர் |
| ஆட்டுந் தயிர் | - | கடையும் தயிர் |
| கைக் குறுந்தடி | - | சிறுகைத்தடி |
| முகுந்தன்பதம் | - | திருமால் பதம் |
| மருதம் | - | உழவுநிலம் |

46. **கலிப்பா**

அங்ககன் சினந்தெழுந் தடா்ந் தேயுஞ் சரங்கள் தங்கு
கொங்கையின் புறஞ்செல்லுஞ் குணந்தெரிந் துளந்தயங்கி
மங்கையிங்கு வந்த துந்தன் வன்புயம் பொருந்தி வென்று
சங்கரன் பதம் புகழிந்த சாமிநா தேந்திரனே

47. **சிந்து**

நின்ற மருதங்களே மிகச்
சென்ற மருதம் பொங்கவே
    நீடிடும் பழனத்தையு மதிற்
    கூடிடும் பழனத்தையும்

சென்று கூடுமத் தவளையும் பள்ளி
யன்று போடுமத் தவளையுஞ்
    சேரு மித்திர னண்டையுமிகச்
    சாருந் தந்திர நண்டையுந்

துன்று பள்ளியர் பானையுஞ் செலத்
தன்று துள்ளிய மீனையுஞ்
    துலங்கி டுங்கரும் பகட்டை யும்வய
    விலங்கிடுஞ் கரும்பகட்டையும்

---

| | | |
|---|---|---|
| அங்கசன் | - | அங்கஜன்-காமன் |
| அடர்ந்தே | - | அடர்த்தியாய் |
| சரங்கள் | - | அம்பு |
| கொங்கை | - | முலை |
| வண்புயம் | - | வலிமையான தோள் |
| சங்கரன் பதம் | - | சிவபெருமான் திருவடி |
| நின்ற மருதங்கள் | - | நின்ற உழவு நிலங்கள் |
| பழனம் | - | வயல் |
| கூடிடும் பழனம் | - | பொய்கை |
| தவளை | - | நீர் வாழ் பிராணி |
| மத்தவளை | - | மற்றவளை |
| மித்திரநண்டையும் | - | நட்புடைய நண்டு |
| செலம் | - | தண்ணீர் |
| துள்ளியமின் | - | பாயும் மீன் |
| கரும்பகடு | - | எருமை அல்லது யானை |

மன்றிலே மிகச் சிதறிய வெள்ள
மொன்றிலா தெடுத் துதரியே
வாய்த்த செய்நிலஞ் சார்ந்து மேநதி
ஆர்த்த நெய்தலிற் சாய்த்ததே

48. **கலிப்பா**

வீர தந்தியெரி வென்றி மீறி அஞ்சலார் புரிந்த
போரில் நின்று உரசியன்று போர் புரிந்த சூரர் மண்டை
சோரி கண்டு வீழ வென்றி சூடி நன் கிரீடி யென்ற
சார மெங்குமே துலங்கு சாமிநா தேந்திரனே.

49. **சிந்து**

பாயும் நெய்தலைக் கூடியே பயந்
தோயுங் கைதையைச் சாடியே
பகரு முப்பக் கோட்டை யுமலை
நிகரு முப்பளக் கோட்டையும்

ஆயும் பரவர் சனத்தை யுங்கறி
சாயும் பிறர் சனத்தையும்
ஆய்ந்திட ராமன் வஞ்சமுந் தமிழ்க்
கீய்ந்திடாத கல் நெஞ்சமுஞ்

---

| | | |
|---|---|---|
| மன்றில் - முன்றில் | - | வாயில் முற்றம் |
| வாயத்த செய்நிலம் | - | நல்ல விளைவு தரும் வயல் |
| ஆர்த்த நெய்தல் | - | கடல் ஓசை கேட்டுக் கொண்டிருக்கும் நெய்தல் |
| வென்றி | - | வெற்றி |
| அஞ்சலார் | - | அஞ்சாதவர் |
| உரசி | - | உராய்ந்து |
| சூறர் மண்டை | - | படைவீரர்தம் தலைகள் |
| சோரி | - | உதிரம்-இரத்தம் |
| வென்றிசூடி | - | வெற்றி சூடி |
| நன்கிரிடி | - | வெற்றிக் கீரிடம் |
| துலங்கு | - | விளங்கும் |
| பாயும் நெய்தல் | - | கடல் அலைபாயும் நெய்தல் |
| கைதை | - | தாழை அல்லது வயல் |
| முப்பக்கோட்டை | - | மூன்று கோட்டை |
| முப்பளக்கோட்டை | - | முப்பளக்கோட்டை |
| பரவர்சனம் | - | மீனவ மக்கள் |

சாயு முவற்கொள் பங்கமுங் கரை
ஆயுஞ் சுவர்கொள் வங்கமுஞ்
சார்ந்த நானிலப் பொருளெல் லாந்திரை
தள்ளித் தள்ளித் துள்ளியே

தோயும் வருணன் பதத்தைப் போற்றிச்
சுரந்திடும் வெள்ளம் பரந்துமே
துலங்கும் பொருணை பெருகி வார
சுகிர்தம் பாரும் பள்ளீரே.

50. மதுர மிஞ்சு வசன மங்கை மயல் மிகுந்துன் அருகில் வந்து
விதி வெழுத்த வனலில் னொந்து மெலிவ தெந்த வகை விளம்பு
வது நிசந்த னமுமமுந்த மருவியன்பு புரிமகிழ்ந்து
சதுர் பொருந்து விதுர னென்று சாமிநா தேந்தரனே

51. கோட்டி லிருந்த தேனையும் மலைக்
காட்டி லிருந்த யானையுங்
கொடிய முள்ளியஞ் சூரையும் அதில்
நெடிய கள்ளியந் தூரையும்

---

| | | |
|---|---|---|
| பங்கம் | - | சேதம் |
| வங்கம் | - | ஒரு நாடு |
| தள்ளித்தள்ளி | - | அடுக்குத்தொடர் |
| தோயும் வருணன் பதம் | - | மழைக் கடவுள் இணையடி |
| சுகிர்தம் | - | இன்பம் |
| மதுரம் | - | இனிமை அல்லது தித்திப்பு |
| மயல் | - | காம விருப்பம் |
| விதிவெழுத்த வனலில் னொந்து | - | விதியின் பிடியில் துன்புற்று |
| நிசம் | - | உண்மை |
| தனமு மழுந்த | - | கொங்கைகள் அழுந்த |
| சதுர்பொருந்து | - | மேலான அறிவு பொருந்திய |
| விதூன் | - | அறிஞன் |
| கோடு | - | மலை உச்சி |
| கொடியமுள்ளி | - | முள்ளிச் செடி |
| சூரை | - | தூதுளை - ஒரு செடி |
| நெடிய கள்ளி | - | கள்ளிச்செடி |

ஆட்டுக் கிடையும் பாடியுஞ் - தயிர்
பூட்டிக் கடையுஞ் சாடியும்
அனல் வற்றி ருந்த மாலையும் - பள்ளி
கலசத் திருந்த மீனையும்

மோட்டி நுழையாங் கழுந்தின்
மோட்டும் பழைய வங்கமும்
முழங்கு மைந்திணைப் பொருளெலாங் கொண்டு
முந்து முந்தி யுந்தியே

பூட்டும் புகழ்சேர் வருண ராசர்க்குப்
பொங்கமே பெருந்திரையைப் போல்
பொருணை மாநதி பெருகி வார
புதுமை பாடும் பள்ளீரே

52. தோயம் புகுந்த தாராவே
சோகம் புகுந்த தாராவே
சோம்பே பெருகு மனத்தின் மே(ல்)
துயரம் பெருகு மனத்தின் மேல்

நேய முகந்த தனிக்கடலிலே
நினைத்தான் மதனுந்தனிக் கடலே
நெடிய வானத் தவளைகளே
நிலங்கண்டது மத்தவளைகளை

---

| | | |
|---|---|---|
| ஆட்டுக்கிடை | - | ஆடு அடைக்கும் இடம் |
| பாடி | - | முல்லை நிலத்தூர் |
| தயிர்பூட்டிக்கடையும்சாடி | - | தயிர் கடையும் மட்கலம் |
| கலசம் | - | பானை |
| மோட்டு | - | முகரு |
| வருணராசர் | - | மழைக் கடவுள் வருணன் |
| பொங்கம் | - | மகிழ்ச்சி |
| பெருந்திரை | - | பெரிய அலை |
| தோயம் | - | கடல் |
| தாரா | - | குருகு |
| சோம்பு | - | அழுங்கல் |
| நேயம் | - | அன்பு |
| மதன் | - | காமன் |
| வானத்தவளை | - | மழைத் துளி |

ஆயுஞ் சலசம் பொருந்தேனே
யானும் அலர்கண் பொருந்தேனே
அறுங் காடு கந்த அம்பரமே
அனங்கன் விடுத்த அம்பரமே

சாயும் வாலி நடுக்காதே
தாயர் வசைக்கும் நடுக்காதே
சாமிநாத துரை யெனக்கே
தழுவ வரச்செய்துரை யெனக்கே.

53. **சிந்து**
செஞ்சிலைக் குரவை கெளிறு மசரி
சீரால் நெட்டுட லாறா மீன்
திமிங்கிலம் பருந்து மிங்கிலஞ்
சினைத் தெளி கூளிச் சீளியும்

பஞ்சிலைப் பறவை யஞ்சிலைக் குரவை
பன்னாக கசலி யுன்னாவும்
பருக்குஞ் சாளை திருக்கை வாளை
பாங்கு பெறு விலங்குமீன்

---

| | | |
|---|---|---|
| சலசம் | - | தாமரை |
| அலர்கண் | - | பூப் போன்ற கண் |
| அம்பரம் | - | வான் / திசை |
| அனங்கன் | - | மன்மதன், காமன் |
| அனங்கன் விருத்த அம்பரம் | - | மன்மதன் விட்ட திசை |
| சாயும் சாலி | - | முற்றிய கதிர்நெல் |
| தாயர் வசை | - | தாய் ஏசல் |

செஞ்சிலை, குரவை, கெளிறு, சிரால், நெட்டுடல் ஆறா, திமிங்கலம், பருந்திமங்கலம், சினை, கூளி, சீளி, பஞ்சிலை, குறவை, பன்னாகம், கசலி, உன்னா, திருக்கை, வாளை, விலாங்கு — மீன்களின் பெயர்

குஞ்சரக்கை மீன்கட் டாக கோ வஞ்சி
கூட்டமிடு விறாட்டுடன்
கோளா மசரி சேலுக் கல்லணடி
கோலானும் வண்ண வாலனும்

மஞ்சினக் கெளுத்தி கருமணிப் பொட்டு
வாலி மீனெல்லாந் தாவவே
வாய்த்த பொருணைக் கடலில்ப் புகுந்த
வளமை பாரும் பள்ளீரே

54. **கலிப்பா**
பூவேருஞ் செல்வம் புகழ் சாமிநாதேந்திர
தேவேந்திரன் வளருந் தென்கரை நன்னா டோங்க
ஆவேற வந்தநதியாம் பொருணை யாற்று வெள்ளங்
காவேரி கண்ட தற்பின் கப்பல் கொண்டு வந்தானே.

55. **சிந்து** (ஏலேலோ யேலேலோ)
தீட்டு புகழ் கனுகூலன் - பெரிய
திருவடி தந்தருள் பால்
தாஷ்டிக வானென்ன வந்த
துரைச்சாமி நாதேந்திரவேள் - யேலேலோ

நாட்டி லிசை தீட்டு புகளீட்டமுற மீட்டு
நிலை நாட்டியே பெய லாட்டிய தென்
னாட்டரசு தேட்டதிக நோட்டு மலர்
பூட்டிய மா மூட்டியகி

---

குஞ்சரக் கை, கோவஞ்சி
விறாட்டு, கோளா
மசரி, சேலு, கோலா
வண்ணவாலா
சினக்கெளுத்தி
கருமணிப் பொட்டு, வாலி — மீன்களின் பெயர்

| | | |
|---|---|---|
| தேவேந்திரன் | - | இந்திரன் |
| ஆவேறு | - | இடபம் |
| தீட்டுபுகழ் | - | பெருமை மிகு |
| அனுகூலன் | - | உதவி செய்பவன் |
| பெரிய திருவடி | - | திருமால் திருவடி |
| தாஷ்டிகன் | - | செல்வாக்குள்ளவன் |
| வேள் | - | சிறப்பிற்குரியவன் |

நீட்டி நிகர்சுப் பிரமணி தீபன்
றனது கப்பல் வருதண்ணே - (ஏலே)
வச்சிரங் கோமே தகமும் தரளம்
வயிடூ ரியமுழு நீலம்
பச்சை புற்பராக முதல் திரண்ட
பவளமணி நாகரற்றினம் - ஏலேலோ
கச்சி தேசத்தின் மாவச்சி
தேசத்து ராயகறகிதே
சச்சு காய மிக்க பாரிக்கை - மர்மச்
சரீரளத்தர சீனத்தை காணிக்கையே
மக்கா பூரிக்கவே வருக தடா கப்பல் - ஏலே

தங்கநிறச் சாலுவையுந் தகட்டுச்
சரிகை பீதாம்பரமும் சுழிகையங்
இதமான சகாலத்தும் நடுக்
கட்டழகு புனை மேக வர்ன்னம் - ஏலே

---

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியன் | - | ஒருவர் பெயர் |
| வருதன்னே | - | வருகிறது அண்ணே |
| வச்சிரம், கோமேதகம் தரளம், வயிடூரியம் நீலம், பச்சை புற்பராகம், பவளம் மணி, நாகரற்றினம் | | அணிகலக் கற்களின் வகை |
| அச்சிதேசம் | - | ஒரு நாட்டின் பெயர் |
| மாவச்சிதேசம் | - | ஒரு நாட்டின் பெயர் |
| மர்ம சரீரம் | - | புதிரான உடல் |
| அத்தர் | - | மணப்பொருள் |
| சீனம் | - | ஒரு நாடு |
| மக்கா | - | நபிகள் நாயகம் பிறந்த இடம் |
| தங்க நிற சாலுவை | - | தங்கநிற சால்வை |
| தகட்டு சரிகை பீதாம்பரம் | - | தங்கச் சரிகை வேலைப்பாடுகள் கொண்ட பட்டு உடை |
| மேகவர்ணம் | - | கருநீலம் |

வங்க ரொடு சிங்களர் கலிங்கர்
நிவாங்கர் தருவண கவரி வெண்
கவிகை மஞ்சரிகள் பொன் சிவிகை
பொங்கமு மிலங்கு முயர்
தங்க மகுடங்களோடு
புரவலர் கொடுக்கவே
வருகுதடச கப்பல் - ஏலேலோ

சேரலர் போற்றிய சோமன்
பெரியதிருவடி தந்தருள் வீமன் - ஏலேலோ
தாரணி யெல்லாந் துதிக்குந்
தருமன் சாமினாதேந்திரன் மெய்க்க - ஏலேலோ

பராங்கு னூறிங்கு மோங்க
மாருங் கபாடங்களாங்க
பாரங் கோடே வந்த சாரங்களே
கொங்கு சேருங் குபீரென்று
சாரங்கி வீரஞ்செய் பீரங்கி திரு - ஏலேலோ

---

| | | |
|---|---|---|
| வங்கர், சிங்களர் கலிங்கர், நிவாங்கர் | - | தேசத்தார் பெயர் |
| கவரி | - | மன்னர்க்கு மரியாதை நிமித்த மாக வீசப்படும் விசிறி |
| சிவிகை | - | பல்லக்கு |
| மஞ்சரிகள் | - | பூங்கொத்து |
| பொன் சிவிகை | - | தங்கப் பல்லக்கு |
| தங்க மகுடம் | - | தலைக்கு அணியும் அரசர்தம் கிரீடம் |
| புரவலர் | - | அரசர் |
| சேரலர் | - | பகைவர் |
| சோமன் | - | சிவன் |
| பெரிய திருவடி | - | திருமால் இணையடி |
| வீமன் | - | நளன் மகராசன் மாமன் |
| தாரணி | - | உலகம் |
| தருமன் | - | பாண்டவரில் மூத்தவன் |
| கொங்கு | - | ஒரு நாடு |
| குபீரென்று | - | மிக விரைந்து |

56. தென்டிரை சேர் கப்பல் திரவிய மெல்லாம் பார்த்து
விண்டிதஞ்சேர் பண்ணை விசாரணையுஞ் செய்வதற்காய்த்
தண்டமிழோர் கொண்டாடு சாமிநா தேந்திரமால்
கண்டுளமகிழ் கின்ற பண்ணைக் காரன் வந்து தோன்றினானே

57. **சிந்து**
சிந்திய நடையும் பழங்கந்த லுடையும் மூளிக்
கீரிபோல் முகத்தினி லஞ்சாறு மயிருஞ்
சந்துபோய் முறிந்த கைய்யுஞ் சிந்திய மூக்கும் பருஞ்
சட்டிபோல்தலையும் மாங்காய்க்கொட்டை போல்பல்லும்

வெந்தயங் கடுகு போல் பதிந்த கண்களும்
மேழிபோல் முதுகும் வண்ணான் தாழி வயறுஞ்
சந்ததம் புகழ்ந்திடு வீராச்சி மங்கையூர் தன்னில்
தாறுமாறுக் காரப்பண்ணைக் காரனார் வந்தார்.

---

| | | |
|---|---|---|
| திரவியம் | - | செல்வம் |
| தண்டமிழ் | - | இனிய தமிழ் |
| பண்ணைக்காரன் | - | பண்ணைத் தொழிலாளி |
| கிந்திய நடை | - | முடவன் நடப்பது போல நடத்தல் |
| பழங்கந்தலுடை | - | பழைய ஆடை |
| மூளி கீரி போல் | - | உறுப்புக்குறைந்த கீரிப்பிள்ளை போல |
| சந்து போய்முறிந்தகை | - | ஒடிந்த கை |
| சட்டி போல் தலை | - | மண் சட்டி போல் தலை |
| மாங்காய் கொட்டை போல் பல்லு | - | மாங்காய்க் கொட்டை போன்ற நிறம் கொண்ட பல |
| வெந்தயம், கடுகு | - | சமையற் பொருள் |
| மேழி | - | உழவு |
| வண்ணான் தாழி | - | துணி வெளுக்கப் பயன்படும் பெரும்பானை |
| சந்ததம் | - | எப்பொழுதும் |

58. துத்திய மிகு யோகத்துரை சாமிநா தேந்திர
கர்த்தன் மகிழ்கின்ற பண்ணைக்காரன் வந்த நேரமதில்
குத்துமுலை தான் குலுங்க கொஞ்சு குழற்போல பேசி
முத்துநகைப் பள்ளியர்கள் முன்பு வந்து கண்டாரே.

59. கும்மிடு கிறோமும் மைக் கும்பிடுகிறோம் - வெள்ளைக்
கொக்கு மூஞ்சிப் பண்ணை யாண்டே கும்பிடுகிறோம்
செம்பு நாறித் தம்பிரானே கும்பிடுகிறோ - னெட்ட
செருட்டுக் காதாண்டே கும்பிடுகிறோஞ்
சம்புகண்ணுப் பண்ணை யாண்டே கும்பிடுகிறோ - மொட்டுச்
சண்ணைக் கிடாப் பண்ணையாண்டே கும்பிடுகிறோம்
நம்பினோரைக் காக்குஞ் சாமி நாதேந்திர சீதரன் - பண்ணை
நயினாரே உம்மை நாங்கள் கும்பிடுகிறோம்.

60. வந்துநின்ற பள்ளிகளை வாருமென்பார் - சின்ன
மாடி யெங்கே யென்று விளையாடிக் கொள்வராம்
பிந்தியே அரியாள் வார்த்தை விந்தை யென்பார் - யிந்தப்
பிரமியுஞ் சுத்தமுழுப் பேதையென் பராஞ்

---

| | | |
|---|---|---|
| துத்தியமிகு | - | வணக்கத்திற்குரிய பெருமைமிகு |
| யோகதுரை | - | அதிர்ஷ்டமுடையவன் |
| கர்த்தன் | - | தலைவன் |
| குத்துமுலை | - | உறவு கொள்ளாத பெண்ணின் கொங்கை |
| கொஞ்சுகுழல் | - | அழகிய கூந்தல் |
| முத்து நகை | - | முத்துப் போன்ற புன்னகை |
| கும்பிடுகிறோம் | - | வணங்குகிறோம் |
| வெள்ளைக் கொக்கு மூஞ்சி | - | கொக்கு போன்று கூரிய முகம் |
| செம்புநாறி தம்பிரான் | - | உடல்நாற்றம்கொண்டதலைவன் |
| நெட்ட செருட்டுக்காது | - | நீண்டுயர்ந்த பெரிய காது |
| சம்பு கண்ணு | - | விசித்திரமான கண் |
| மொட்டுச் சண்ணைக்கிடா | - | சண்டை செய்யும் கிடாய் |
| சீதரன் | - | திருமால் |
| நயினாள் | - | தலைவன், இறைவன் |
| பள்ளி | - | பண்ணைப் பணிப்பெண் |
| சின்னமாடி | - | பெண்களின்உயர்ந்து விளங்கும் மார்பகப் பகுதி |
| பிந்தியே | - | பின்னால் |
| பிரமி | - | பண்ணைப் பணிப் பெயர் |
| பேதை | - | அறிவாளி |

சொந்தமாய்க் கனுப்பி வரச்சந்து சொல்வராம் - வெகு
சூரிகோபக் காரி சின்னமாரி யென்பராந்
சந்து சொல்லக் கன்னியை வளைந்து கொள்வராம் - உழுச்
சண்ணைக்கி டாய்போன்ற நடைப்பண்ணைக்காரனார்.

61. வண்டாடும் பூங்குவளை வாய்த்தமணி மார்பன் மலர்
தண்டாமரை முகத்தான் சாமிநாதேந் திரவேள்
கண்டார் தரித்த பண்ணைக் காரனார் முன்பு வந்து
கொண்டாடிப் பள்ளியர்கள் கொண்டலத் தாடினரே.

62. வனக்குடம் போலே திரண்டதனக் குடந் தானே கண்டு
மயக்கமும் போலே நயந்தே உமக்கும் என்மேலே
நினைக்கிறீரே தோயிதெல்லாம் மனக் குரோதமே வந்து
நில்லடி நில்லென்றீர் இதெல்லாஞ் சொல்லவு மாகாதே
பொய்யைச் சூட்டியே சீர்த்தே கையைக் காட்டுறீர் - நித்தம்
போதிக்கும் வார்த்தை நயந்தே சாதிக்காகுமோ
மையல் கொண்டீரோ நைய்ந்தே கையல் கண்டீரோ - சின்ன
மாடி யென்றிரே யவளைத் தேடி வந்தீரோ.

---

| | | |
|---|---|---|
| உழு சண்ணைக்கிடாய் போன்ற நடை | - | உழும் உழவு மாடு போன்ற நடை |
| பூங்குவளை | - | அழகிய குவளை மலர் |
| தண்டாமரை | - | கண்ணுக்கு இனிமை தரும் தாமரை |
| முண்டிவந்து | - | முளைந்து வந்து |
| வனக்குடம் போலே | - | அழகிய வண்ணக்குடம் போல |
| திரண்ட தனம் | | திரண்டு எழுந்து இருக்கும் சீரான கொங்கைகள் |
| நயந்து | - | இரந்து |
| குரோதம் | - | பகை |
| மையல் | - | காமம் |
| சின்னமாடி | - | உயர்ந்து விட்டால் புடைத்திருக்கும் பெண்ணின் கொங்கை. |

63. துள்ளிப் பேசுறீர் நயந்தே பள்ளிக் காசையோ
பின்னுந் தூர நின்றீரே தனித்துச் சேர வந்திரோ
தள்ளிப் போரீரே தனத்தைக் கிள்ளிப் பாரீரோ
பின்னுஞ் சாடை சொன்னீரே யுமைத்தான் தேடி
வந்தோமே
நேமி நீதி மேது திக்குஞ் சாமிநாத வேள்முமை - நித்தம்
மகிழவே சிறந்த கர்த்தனே கேளுங்
காமி என்றீரே யுமைத்தான் சாமி யென்றோமே - மிக்க
கண்ணைக் காட்டுறீர் இதேன்னோ பண்ணைக் காரரே.

64. பார்த்தவுடன் இருவகையே பள்ளியர்கள் மெள்ள நின்று
வார்த்தை சொன்ன போதே மகிழ்ந்து பண்ணைக்காரன் வெகு
நேத்தியிது நேத்தியென்று நின்று சொல்வதன்று முலைக்
கோத்தமணி பூணசைய கும்மியடித்தாடினாரே.

65. **தரு**
ஆதிப் பொருளென வாழ்காளி நாயகி
அம்மன் பொற்பாதந் தனைத் துதித்தே
சோதிப் பிறைநுதல் பள்ளியின் மெள்ளவுந்
துள்ளி யேகும்மி யடித்தனரே

---

| | | |
|---|---|---|
| தனித்துச் சேர | - | யாரும் அறியாமல் இணைய |
| தனத்தைக் கிளறி | - | முலையில் நகக்குறி பதித்து |
| சாடை | - | வாய் பேசாது குறிப்பில் உணர்த்துதல் |
| நேமி நிதி | - | கடல் தரும் செல்வன் |
| கர்த்தன் | - | இறைவன் அல்லது தலைவன் |
| நேத்தியது | - | நேர்த்தி சிறப்பு |
| நேத்தியது நேத்தி | - | சிறப்பிற் சிறப்பு |
| முலைக்கோத்த மணிப் பூணசைய | - | மார்பகத்தில் கொங்கை மேல் படும்படியாக அணியப்பட்ட அணிகலம் |
| கும்மி | - | ஒருவகை பெண்களின் ஆட்டம் |
| ஆதிப்பொருள் | - | மூல முதற் பொருளாக |
| காளிநாயகி | - | கொற்றவை |
| சோதிப்பிறைநுதல் | - | ஒளி மிகுந்த மூன்றாம்பிறை போன்ற நெற்றி |

கருப்பி பேச்சி முத்திருளி - நல்விப
காரிப் பெண்ணே யடிமாரிப் பெண்ணே
வெறுப்பிலா மல்மிகப் பண்ணைக்கார - முன்
வேடிக்கையாய்க் கும்மி பாடுங்கடி.

கொங்கைக் குடந்தனைப் பிடிக்கவோ - உந்தன்
கொவ்வைச் செவ்வாய் ரசங் குடிக்கவோ
செங்கையைத் தட்டிக் கண்ணைச் சுழித்தே
மெள்ளச் சிரிக்கிறார் பண்ணை யாண்டவனார்

65. பார்த்தவுடன் கண்ணைக் காட்டுறீர். சின்னப்
பள்ளிகள் மேலாசை பூட்டிறீர்
வேத்திடம் பாரடி சாத்தி யென்றே - மெள்ள
வேண்டுவதேன் பண்ணை யாண்டவரே.

கெண்டை விரால் நண்டு ஆமை வசமென்று
கேள்க்கிறீர் செங்கை தாள்க்கிறீர்
உண்ட பள்ளன் றனக்கல்லோ - கிடைக்கும்
உமக்குக் கிடைக்குமோ ஆண்டவரே

ஆலிலை விட்டொரு பாம்பிறங்கி - ரண்டு
அரம்பை நடுவே படம் விரித்துச்
சாலவுங்கீழ் நோக்கித் தூங்குவ தேனென்று
சாற்றுரார் பண்ணை யாண்டவனார்

---

| | | |
|---|---|---|
| கருப்பி, பேச்சி, முத்திருளி விபகாரி, மாரி | - | பண்ணைப் பணிப் பெண்களின் பெயர் |
| கொங்கைக் குடம் | - | முலை |
| கொவ்வைச் செவ்வாய் | - | செம்மை படர்ந்த இதழ் |
| ரசம் | - | சுவை |
| செங்கை | - | அழகிய கைகள், செங்காந்தற்கை |
| கண்ணைச் சுழித்தே | - | காமக் குறிப்பு விளங்க கண்ணைச் சுழித்தல் |
| பூட்டிறீர் - பூட்டுகுறீர் | - | பூட்டி வைத்தல் |
| வேந்திடம் - வேற்றிடம் | - | வேறு இடம் |
| சாத்தி - சாற்றி | - | அடைத்து |
| கெண்டை, விரால் நண்டு, ஆமை | - | நீர்வாழ்வன |
| ஆலிலை | - | ஆலமரத்தில் இலைபோன்ற அமைப்புடைய அல்குல் |
| அரம்பை | - | தேவ கன்னி |

கன்னியர் சடிப்பொய்கை - நற்
கயித்தி லிறங்கி வெளியேற
வர்ன்னக் குடந்தந்தால் நீந்தலாமென்று
வழுத்துறார் பண்ணை யாண்டவனார்.

65. **கலிப்பா**

சிட்டபுகழ் சாமிநாதேந் திரவேள் செய்ய பண்ணைக்கு
இட்டமிகும் பள்ளியர்கள் ஏகிய பின் மூத்த பள்ளி
துட்ட னென்ற பள்ளன் துலுக்கு மெலுக்குச் சூதுங்
கட்டுனே வந்த பண்ணைக் காரனிடம் சொல்வாளே.

67. **சிந்து**

உள்ள காரியம் பள்ளனை வைத்த
துழவுகோபின் களவுக்குத் தானோ
கள்ளி னா னென்று துள்ளி யுரைத்ததுங்
கர்த்தனே யுங்கள் சித்த மறியுங்
குள்ளிக் கண்ணியைப் புள்ளி குறித்துக்
குலவி பேனேற சலகை கொடுத்தான்
துள்ளியே யென்னைத் தள்ளி முடுக்க
துடிக்கிறான் தடக்குங் காணாண்டே

---

| | | |
|---|---|---|
| சடி | - | தும்பட்டி |
| கயித்தில் | - | கயிற்றில் - கயிறு |
| வர்ணக்குடம் | - | அழகிய சித்திர வேலைப் பாடுகள் அடைந்த இடம் |
| சிட்டபுகழ் | - | பெருமைக்குரிய புகழ் |
| இட்டமிகும் | - | விருப்பம் மிகும் |
| துட்டன் | - | ஒழுக்கம் குன்றியவன் |
| துலுக்குமெலுக்கு | - | வெளி அலங்காரத்துடன் உடம்பை குலுக்கிக் கொண்டு நடத்தல் |
| சூது | - | உள்நோக்கு |
| உள்ள காரியம் | - | செய்ய வேண்டியதாக எண்ணிய உள்ளத்துக் காரியம் |
| கள்ளி | - | வகைச்சொல் |
| கர்த்தன் | - | தலைவன் |
| குள்ளிக்கண்ணி | - | ஓரக்கண் பெற்றவள் |

68. நித்தமே யுரம்வைத்த வயலுக்கு
நீர்க் கட்டாதின்றைக்கு யோர்கட்டிப் போறான்
மெத்த வேலையில் தந்தரமாய் வாய்க்கால்
வெட்டினா லதற் கெட்டியும் பாரான்
சித்திரக் காலில் பத்துச் சலகை நெல்
செப்பமாய் செட்டியப்பனுக் கீய்ந்தான்
புத்திதானும் எள்ளத்தனையு மில்லைப்
பொறுக்குமோ வைத்திருக்கங் காணாண்டே

69. ஒப்பியே பண்ணைச் சுப்பய்யன் காணி
யுழுதபின்பு பொழுதந்தி நேரம்
மெய்ப்பதர்க் கலப்பை யெடுத்து வெளி
வந்தான் பின்னுழுதவன் போலக்
குப்பிமேலுஞ் சின்னப் பள்ளி - மேலுங்
குறித்த ஆசை வெறுத்திட மாட்டான்
தப்பில்லால் நிதம்படிக் கோல் கொண்டு
சாடினாலும் பள்ளாடுங் காணரண்டே

---

உரம் - நிலத்திற்கு இடும் ஊட்டப் பொருள்
நீர்கட்டாது - வயலிற் நீர் பாய்ச்சாது
ஏர்கட்டி - உழுவதற்கு ஏர்கட்டி
தந்தரமாய் - விவேகமாய்
சித்திரக்கால் - நெல்லின் பெயர்
சலகை - பண்டைக் காலத்து நெல் அளவைப் பெயர்
செப்பமாய் - சரியாக
ஒப்பியே - இசைந்தே
சுப்பய்னகாணி - ஒரு நில்த்தின் பெயர்
கலப்பை - உழுவதற்கான உழவர் கருவி
நிதம்படிக்கோல் - உழவுக்கருவி
சாடினாலும் - பாய்ந்தாலும்

70. தெள்ளியே சின்னப் பள்ளி மதகடிச்
செய்யிலே மனதைரிய மில்லாமல்
பள்ளம் வாய்ப்பென்று மெள்ளக் கொழுவும்
பழுதில்லா மலுழுது சலித்தான்
கள்ளமே யின்றித் துள்ளி யிறங்கிவாய்க்
காலில் நீர்பாச்சிச் சொலி கழித்தான்
மள்ளனே சின்னக் குள்ளியர் மனை
வாய்ப் பென்றே பார்ப்பன் காணாண்டே

71. மூத்தபள்ளி சொன்னமுறை நிசமென்றே யெழுந்துக்
காத்திரங் கொண்டோங்கு பண்ணைக்காரன் மனம்
வெகுண்டே
பாத்தொருமித் தேயிளைய பள்ளியைச் சீறிச் சினத்துத்
தூர்த்தனென்ற பள்ளனெங்கே சொல்லெனவுஞ்
சொல்வாளே

72. **சிந்து**
ஆம் பொருணை நதியில் வெள்ள மேறிக் கூட்
டாத்தின் அணை பெருகிப் பிணையில் கொண்டு மீறி
தேம்பி வருதென்று மொருக் காலே சொலக் கேட்டுச்
சீக்கிரஞ் சென்றான் புலிக்கண் மேலே
மேன்புகழ் சங்கிலி கருப்பன் றானே
பள்ளனை யிவ்வேளை காத்தருள்வ தறியேனே
பாம்பின் வாய்த் தேரையது போலே யெனக்கும் உள்ளம்
பதருதே யென்ன செய்வேனாண்டே

---

| | | |
|---|---|---|
| மதகடி | - | அணையின் நீரை வெளி யேற்றும் சிறுவழி |
| செய் | - | உழவு நிலம் |
| கொழு | - | உழவுக் கருவி |
| சின்னக்குள்ளியர் | - | பண்ணைப் பணி பெண்கள் |
| நிசமென்று | - | உண்மையென்று |
| சீறிச் சினத்து | - | விரைந்து கோபமுற்று |
| தூர்த்தன் | - | கெட்டவன் |
| பிணை | - | கட்டு |
| தேம்பி | - | விம்மி |
| பதருதே | - | துடிக்கிறதே |

73. பரிந்துநான் சோறுகொண்டு நேத்து உப்புத்துறைப்
பாளையத்துப் பெரும்பாதைக் காத்து
வருந்தி வந்த பள்ளர் சொல்லும் வீணே யின்று
வருவானென் றாரின்னம் வரக்காணேன்
திருமெங்கள் வெங்கமலை யாயி காளியம்மன்
திருவரு ளெப்படியோ வென்றறியேன்
மருந்தில் விஷங்கலந்த நிலை போலே யெனக்கும்
மதி மயங்குதே யென்ன செய்வே னாண்டே

74. பள்ள னெங்கடி பள்ளிப் பயல்
பண்ணுறா யென்ன கள்ளி
அணை காக்கப் போனது நிசமே
அணை காக்கப் போனது வசமே

துள்ளின மாடு மேலே பொதி
சுமக்கு மென்பது போலே அந்தத்
துடுக்கன் அவரைச்சொல்லு
முலை துலுக்குகிறாள்.

தள்ளி நில்லு வயலைக்கண்
டறியானே அந்த வயலைக்கண்
டினிநானே குட்டை மரத்தி
லடிக்கு முன்னே

மெள்ள வரச்சொல் வாயடி சொன்னேன
தயவுக் காரிநீ யாமே உந்தன்
செயலைத் தானறியோமே
அந்தத்

---

உப்புத் துறைப் பாளை யத்துப் பெரும்பாதை - பொருட் போக்குவரத்திற்கு ஏற்ற அகலமான சாலை
காத்து வருந்தி - இருந்து வேதனைப்பட்டு
பள்ளிப்பயல் - பண்ணைப் பணியாளன்
நிசமே - உண்மையே
துடுக்கன் - ஆரவாரமாகப் பேசுபவன்
தயவுக்காரி - உதவி செய்யும் குணமுடையவள்.

தாழைக் கரையில் ஆடு மெந்தன்
தடிகண் டால்பயந் தோடுங்
குறித்துப் பேசுற தேது ஊசி
கொல்லர் தெருவில் வில்லாது

உழக்குள் ளேகிழக்கும் மேற்குஞ் சொல்லிக்
கொண்டா லெவர்க்குக் கேக்கும்
உதித்த பொழுதும் போமோ எனக்
குன்னோடே வழக்காமோ - பள்ளன்

ஒழிக்கக் காரிய மேது தலை
யுருங்கே நடவாது நடக்குஞ் சீர் நடந்தாலே
முற்றும் நடக்கலாம் புவிமேலே - இந்த
நாடெல்லாம் பிரசங்கம் - முந்தன்
நடத்தையே பலங்கம்

உடற்குள்ளே காலுங் கையும் வேறென்று
உரைப்பதோ பலஞ்செய்யும் மனத்
துள்ளக் கருத்தின் நேசம்
வள்ளல் கொழிப்பதே பிரயாசஞ்

---

| | | |
|---|---|---|
| தடி | - | கட்டை |
| ஊசி | - | துணியைத் தைக்கப் பயன் படும் கருவி |
| கொல்லர் தெரு | - | கம்மாளர் தெரு |
| வழக்கு | - | முகத்தல் அளவையில் ஒன்று |
| உதித்தபொழுது | - | தோன்றிய பொழுது |
| ஒழிக்கக் காரியமேது | - | கடமைகளுக்கு முடிவேது |
| தலையுருஞ்கே நடவாது | - | தவறான பாதைக்குச் செல்ல இயலாது. |
| புவி | - | உலகம் |
| பிரசங்கம் | - | சொற்பொழிவு |
| பல சங்கம் | - | நல்ல துணை |
| நேசம் | - | அன்பு |
| வள்ளல் | - | கொடைக்குணம் மிக்கவர் |
| கொழிப்பதே | - | சொல்லுதல் |
| பிரயாசம் | - | முயற்சி |

சாடைப் பேச்செல் லாமோடும்...
..... டல் குரங்காடும்
(பள்ளன் றனக்கே வகையுண்டு மிகச்
சாடுகிறேன் தடிகொண்டு

வாடிக்கைச் சொல்லைப் போடும்
வகையெல்லாம் வச்சு மூடும்
நாக்கு வளைக்குறாயென்ன துள்ளி
யிங்கே வரச் சொல் வாயடிப் பள்ளி

75. **விருத்தம்**

வருமருத மலைநாதர் பதத்தைப் போற்றி
வளர்சாமி நாதேந்திரன் வளஞ்சேர் பண்ணைப்
பருவமிகுப் பள்ளிதனைச் சினக்கும் போது
பக்கவழி சுற்றிவரப் பண்ணைக் காரன்
தருணமறிடி யாதபள்ள னாரே வாருஞ்
சம்பாவுக் கேரம் பூட்டித் தருணந் தானே
எருவிரையேற்றினங்க ளெங்கே சொல்லு
எடுத்துரைக்க பள்ளன் மகிழ்ந் தியம்பு வானே.

---

| | | |
|---|---|---|
| சாடைப் பேச்சு | - | அங்கதப் பேச்சு |
| வாடிக்கைச் சொல் | - | வழக்கமாகப் பயன்படுத்தும் சொல் |
| வச்சுமூடும் | - | வைத்து மூடும் |
| நாக்கு வளைக்குறா | - | மனம் நோகப் பேசுகிறாள் |
| மருதமலை நாதர் பதம் | - | மருதமலையில் எழுந்தருளி யிருக்கும் இறைவனுடைய திருவடி |
| வளஞ்சேர் பண்ணை | - | நல்ல வளம் மிக்க பண்ணை |
| பருவமிகு பள்ளி | - | எழிற்கொஞ்சும் இளமையோடு விளங்கும் பள்ளிப் பெண் |
| பக்கவழி சுற்றி வர | - | புறவழியில் வரும் பண்ணைக் காரன் பண்ணைக்காரன் |
| தருணம் | - | சந்தர்ப்பம்; பொழுது |
| எருவிரை | - | உரமும் விதையும் |

76. **சிந்து**

கேளுங் கேளுமென் னாளு மெனை - மிக்க
கேலியே சொல்லிச் சொல்லி கன்னி மெத்தீறம்
நாளுமே பண்ணையாளும் நயினார்க்கு
நாட்டிலில் லாத கோட்டி யுண்டாச்சே
வாழை நோக்கியா மானிலம் பணம்
வைத்து வாங்கும் நிலத்தி லுழுது
தாழ்வி லாமலென் னாளும் பயிரேற்றுந்
தந்திரம் நீரறிவீர் பண்ணையாண்டே

77. கேளுங்காண் சம்பா நெல்லைக் கடலத்துரை
கெட்டிப் பார்க்கக் கண் டிட்டமதாகும்
நாளுமே முத்து வெள்ளை மணியஞ் செய
நாரணா சாரியார் செவிக் காச்சு
வாழுங்கோ தும்பை யண்ணய்யன் கலியாண
வாசல் தோறும் வகைவகையாச்சு
நீளுமோ ரானைக் கொம்பரை சடினோ
நின்றார் பார்க்க வாருங் காணாண்டே

78. நாட்டில் மேவுஞ் செந்தாழை யிவ்வூர்
நடராசர் வேண்டா மெனத் தள்ளிப் போட்டார்
தேட்டி னாளு மிளகி செட்டியப்பன்
செட்டியார் கடைக்கே செல்லுண் டாச்சு
கூட்டிடும் பள்ளையச் சம்பாக் காளிதன்
கோயில்க்கே கட்டளைப் படியாச்சு
மீட்டுமோ ரம்பாண மிலங்கையின்
வீதியெல்லாம் விளையுங் காணாண்டே.

---

| | | |
|---|---|---|
| கேளுங்கேளு | - | அடுக்குத்தொடர் |
| கேலி | - | நகைத்தல் |
| சொல்லிச் சொல்லி | - | அடுக்குத் தொடர் |
| சம்பா நெல்<br>முத்து வெள்ளைமணி<br>மிளகி<br>பள்ளையச் சம்பா | - | நெல்லின் பெயர் |
| கட்டளைப்படி | - | அரசு ஆணைப்படி |
| இலங்கை | - | ஓர் நாடு |

79. தங்குமோர் வங்கி நாராயணன் கிஷ்ண
சாமி யென்பது தானறியீரோ
பங்கு மேது புனுகு சம்பாவும்
பழனியாண்டி மகள்வச மாச்சு
செங்குருகை சிந்தாமணி யாழ்வார்
திருநகரியெனச் சொல்லிக் கொள்வார்
பொங்க மேவி வள்ளரன்ன தானி
புகழு முத்தன பூமன் காணாண்டே.

80. நல்லதோர் நெடுமுக் கணுங் கொற்றை வே
ணாட்ராசன் றன்வாசலில் காணும்
வல்லதோர் மணல் வாரியை ராமன்
வரிசிலை யம்பு வாங்கின துண்டு
கல்லலாகவுமே கிஷ்ட்டிண னெல்லைக்
களத்திலே யொளிந் தானறி யீரோ
சொல்லுறேன் பட்டரை யெல்லாங் கண்ணான
சுப்பிரமணியன் கைதொட்டான் காணாண்டே

81. வாய்ந்த சாமி நாதேந்திரன் பண்ணைக்கு
வளமதாக உழவு மாடெங்கே
காய்ந்துலாவு செங்காளை முன் வீரன்
கதித்துமே பல்லுதிரத் ததறிவீர்
மாய்ந்ததோர் வெள்ளைக் காளை யடிக்கடி
பக்கமேறப் பருமொளை யாச்சு
ஆய்ந்த கொம்பானை வீடுகள் தோறும்
அவரவர்கள் வைத்தர்சித் தாண்டே

| | | |
|---|---|---|
| வங்கி | - | தோளணி |
| நாராயணன் கிருஷ்ணசாமி | - | ஒருவரின் பெயர் |
| பங்கமேது | - | குற்றமேது |
| புனுகு சம்பா | - | நெல்லில் ஒரு வகை |
| செங்குருகை சிந்தாமணி | - | சிவப்பு வண்ண அரிசி |
| உத்தம பூமன் | - | சிறந்த அரசன் |
| கொற்றை வேணாட்டரசன் | - | கொற்றை நாட்டு அரசன் |
| மணல்வாரி | - | நெல்வகை |
| பட்டறை | - | தொழிற்கூடம் |
| உழவு மாடு | - | வேளாண் பணிக்குப் பயன் படும் எருது |
| செங்காளை | - | செந்நிறக் காளை (இதனைச் செவளைக் காளை எனக் கிராமத்து மக்கள் போற்றுவர்) |
| வெள்ளைக்காளை | - | வெண்ணிறக் காளை |

82. வல்லதோர் பசுக்காத் தானு மெங்கள்
காமாச்சி கோயில்முன் மண்டிப் படுக்கு
வெல்லுஞ் செம்மறைக் காளையை முன்னம்
விலாங்கதன் கொண்டு மீண்ட தறிவீர்
முல்லைக் காளையுங் கண்கொண்ட சூட்டால்
முடங்கியே பின்னொ துங்கினதுண்டு
அல்லிக் காளையும் பூமியை விட்ட
தரிகி வீரரெனமோ பண்ணை யாண்டே

83. ஆனதோர் கிடைக்காத்தானைக் கண்டுவந்
தாருமில்லை யதுநிசந் தானே
போனதோர் சின்னக் காளை மச்சாவி
பொருட்டல் வாது பிரட்டுகளுண்டோ
வான மந்தி ராக்காளை தன்மேனி
வடிவுண்டோ கிமதைந் ததறிவீர்
தானஞ் சேவிரொற்றைக் கொம்பனு முத்துபூ
சாரி பூசையைத் தாங்குங் காணாண்டே.

84. தாழ்வி லாத கலப்பை கருவத்
தடியி லார்க்கும் பருவங் களாச்சு
வாழ்வு சேர்பொன் னுகமும் பின்னாலு
வகையெனச் சொல்துகை யீரோ
நாள்விசாரியு மேழி யெல்லாஞ் சாமி
நாதவேள் துசம் நாட்டினதுண்டு
கோளிலாமல் வடத்தைப் பெருமாள்
குடும்பன் பள்ளிக்குங் கோரினா னாண்டே.

---

| | | |
|---|---|---|
| பசுக்காத்தான் | - | பசு மாட்டப் பட்டியை விலங்கு மற்றும் திருடர்களிடமிருந்து காப்பவன் |
| முல்லைக் காளை | - | கானகப் பகுதியைச் சேர்ந்த வெள்ளை எருது |
| அல்லிக் காளை | - | அல்லிப் பூ நிறமுடைய காளை |
| கிடைக் காத்தான் | - | ஆட்டுப்பட்டியை மிருகங்களிடம் இருந்தும் கள்வர்களிடம் இருந்தும் காப்பாற்றுபவன் |
| பிரட்டுகள் | - | பொய் |
| தானம் | - | கொடை |
| பூசாரி | - | இறை பணியாளர் |
| பூசை | - | இறைவனுக்குச்செய்யும்சடங்கு |
| தாழ்விலாத | - | குற்றமில்லாத |
| மேழி | - | வேளாண்மை |
| கோளிலாமல் | - | அளவைக் கோல் இல்லாமல் |

85. ஏது காணும் பின்னொண்டியைக் காகம்
எடுத்துப்போன மியலறி யீரோ
கோதிலாத யிருப்புக் கொழுக்களைக்
கொட்டுக் காளைகட் கூட்டங்கள் போட்டோம்
சாதியான வைசியர்கள் தார்க்கொலைத்
தாங்கட் காமெனத் தான் வைத்துக் கொண்டார்
சூதுபோல்ச் சொல்கிறீர் இனிநானென்ன
சொல்லு வேண்டியின பண்ணை யாண்டே.

86. என்சொலுவே னென்ற பள்ளன் றனையே பார்த்து
எழுந்து பண்ணைக் காரனுமொன் றியம்பி டாமல்
நன்றுநன்று மால்சாமி நாத யோக்கியன்
நல்கு பெரும் பண்ணைவயல் நல்ல நாளில்
இன்றுரம் வைத்திடவேணும் யிடையர் பாற்சென்
றேகியும்நல் லாடுபட்டி யெடுத்து வானுன்
றொன்றுதலாய்ச் சொலக்கேட்டு மகிழ்ந்தே பள்ளன்
ஓடினான்தடி தடி சுழற்றி ஆடி னானே.

87. இப்பொ ருதிலே கியந்த
இடையர் பட்டி யாடு கொண்டு
செப்பமுடன் வருவேன் அறி
சீக்கிரங் காணாண்டே
தினமு மந்தக் கிடை யோட்டிச்
சிறுமை கண்டு பெருமையுடன்

| | | |
|---|---|---|
| கோதிலாத | - | குற்றமில்லாத |
| வைசியர் | - | வணிக குலத்தினர் |
| சூது | - | உபாயம் |
| நன்றுநன்று; நல்லது நல்லது | - | அடுக்குத் தொடர் |
| யோக்கியன் | - | பண்பாளன் |
| ஆடுபட்டி | - | ஆடுகள் மொத்தமாக அடைக்கும் கூடம் |
| தடிதடி | - | அடுக்குத்தொடர் |
| இப்பொருதிலே | - | (பொழுதிலே) இப்பொருத்தமான நேரத்தில் |
| இடையர்பட்டி | - | ஆடுகள்அடைக்கப்படும்கூடம் |
| செப்பமுடன் | - | திருத்தமுடன் |
| சிறுமை கண்டு | - | அற்பம் கண்டு |

மனமகிழ்ந்து மதியஞ் சென்றால்
வருவேன் காணாண்டே.
இனமுடனே கனமுலவி
இங்கு வந்த யிடையருக்கு
மனமகிழ்ந்து மதிகவெகு
மதிசெய் வீராண்டே.

88. கட்டுடனே பள்ளன் கடுகி வரைத்த மொழி
சட்டமுறவே மகிழ்ந்து தால மெல்லாங் கொண்டாடி
இட்டமதா யாடுபட்டி யெல்லாங் கொண் டேகியிச்சிப்
பட்டிதனில் வாழிடையர் பண்புடனே தோன்றினரே.

89. பச்சைப் பாலளைந்த வுடன் - நல்
கொச்சை தான் மிக வீச
பற்று கடக்கால் தூக்கி
சுற்றி மெள்ள நடந்து

தச்சு துணியுறு மாலைக்
குச்சுப் போலச் சேர்த்துத்
தலையசைத்துப் பெரிய பல்லுப்
பல் வரை யைக் காட்டி

அச்சுடனே தடி யூன்றி
மெச்சி நெற்றி நாமமிட்டு
அடுத்து வந்து பள்ளனுடன்
தொடுத்து வந்து பேசி

இச்சிநகர் தனில் வளர்ந்து
உச்சித மெல்லாம் அடைந்த
இடையா ரினத் துடனே
அடவுடன் வந்த னரே

---

கடுகி - விரைந்து
இட்டமதாய் - விருப்பமாய்
இச்சிப்பட்டி - ஓர் ஊர்
இச்சிநகர் - ஓர் இடையர்பாடி
உச்சிதம் - உசிதம் - சிறந்தது
அடவு - ஆடலுடன்

90. உம்பர் கோனாட்டை மனம்
நம்பியே முன்னொருவன்
ஊரை விட்டுப் போன செய்தி
ஆரியர் குடும்பா

சம்புக் கோனா டுமது
வம்புக் கோநிசந் தானோ
தலத்தி லொருக்கால் தூக்கிக்
கிடங்குங் காண் குடும்பா

கொம்புக் கோனாடு மில்லை
வீடுமில்லை சத்தி தோறுங்
குடியாச்சுந் தமக்கு வந்து
விடியுமோ குடும்பா

91. பாந்த மாகக் கோனாட்டை வருத்தாமல் முன்னமொரு
பாம்பு காத்திருக்கு மென்ற அடியல்லோ குடும்பா
பொருந்திய விறகோ னாட்டைத் திருந்தா மலன்னாளில்
பொன்னுலகங் கண்ட செய்தி வின்னமோ குடும்பா
இருந்த பெருங் கோனாட்டை யொருநாளி லெருச் சுமக்க
என்று சின்னக் கன்னியரை யேவினான் குடும்பா
திருந்து மெங்கள் சாமிநாதேந்திர முகில் பண்ணை வயற்
செய்விளையும் மென்றுலகஞ் செப்புமே குடும்பா.

92. **கலிப்பா**
பட்டி வைக்கப்போனான்முன் பட்டி வைத்த தாகவுஞ் சொற்
தட்டி வைத்த பள்ளனுடல் தட்டி தவத்தா லேநிமிருங்
குட்டி வைத்தீரே யவனுங் குட்டி வைத்தா னென்ற சொல்லை
நட்டி வைத்து முத்தபள்ளி.... டிமுறை யிட்டாளே.

---

| | | |
|---|---|---|
| உம்பர் | - | மேல் உலகு |
| ஆரியர் குடும்பா | - | வேதம் போற்றிடும் குடும்பி |
| சம்புகோன் | - | ஒரு ஆயரின் பெயர் |
| பாந்தமாக | - | உறவாக |
| வின்னம் | - | குற்றம் |
| சின்னக்கன்னியர் | - | திருமணமாகாத கன்னியர் |
| வயற்செய் - பழனம் | - | உழுநிலம் |
| பட்டி வைக்க | - | நிலத்திற்கு உரம் இட ஆடு களைப் பட்டியிடுதல் |
| சொற்தட்டி வைத்த | - | சொல்லால்அழகு செய்யப்பட்ட |
| குட்டி வைத்தீரே | - | கண்டித்து வைத்தீரே |

93. **சாடிச் சிந்து**

அடிமையை யாளும் நயினாரைக் கொடுமையைக் கேளும்
இடையர் தானாட்டைக் கண்டானோ... யல்க்
காட்டைக் கண்டானோ
குடியிருந்தேனே யிளையாள் சொற்படி யிருந்தானே
சோற்றுக்குக்
குடுப்பது மில்லை... வளாசை விடுப்பதுந் தொல்லையே
பொடி விடுவானோ நெல்லொருபடி தொடுவானோ
நான் சொல்லும்
பூறாயம் பிடிப்பான்... சாராயங் குடிப்பான்
துடிக்கொண்டும் பேசி அவனைக் கைத்தடிக் கொண்டு வீசி
பிடித்துடன்
சொக்கிட மிதித்தாலக் காரிய... க்குங் காணாண்டே.

94. வேலைக்கு மாகாவைன கரும்
பாலைக்கு போகானவா வர
வெக்கத்தை விடுத்தா னிளையாளைக்
கக்கத்தி கெடுத்தான்

மாலையு முடிப்பா னவள் முலைப்
பாலையுங் குடிப்பா னிது தானே
வாடிக்கை யாச்சுக் கெறுவித
வேடிக்கை போச்சு

சேலைத் துண்டுடுத்தான் தினந்தினம்
வாலைப் பெண் டெடுத்தான் யிளையவள்
சிறைப்பிணி போச்சே அவனுக்குச்
சரப்பணி யாச்சே

---

இடையர் - முல்லைநில மக்கள்
யிளையாள் - இளைய பள்ளி
பூராயம் - வீண் பேச்சு
கைத்தடி - தண்டிக்கும் கைக் கொம்பு
சொக்கிட - மயங்கிட
வேலைக்குமாகானவன - எந்தச் செயலுக்கும் பயன் படாதவன்
வெக்கம் - வெட்கம்
கக்கம் - கையும் உடலும் இணையும் பகுதி
தினந்தினம் - அடுக்குத்தொடர்
வாலைப் பெண் - குமரிப்பெண்

காலைக் கண்டானே யிளையுரு
மாலைக் கொண்டானே அவன்றனைக்
கடுக்கெனப் பேசி(த்) தின மடித்
தொடுக்கு வீராண்டே.

95. தெந்தனப் பேச்சு மார்பினில்
சந்தனப் பூச்சுங் குடப் பணத்
தேட்டின் விசேடங் குடிலத்தை
நாட்டுங் கிரீடம்

முந்தியைப் பிடித்தான் நேற்றென்னை
சந்திலடித்தான் வெகுதுடி
முனைமுகமாச்சு அவனுடி
னியென்ன பேச்சு

எத்தனை யேழை யெனச் சொல்லி
வந்தருள் தாழைக் கரைப் பள்ளிக்
கினித் திருந்தானே யுமக்கவ
னினித் திருந்தானே

சந்தடி விலக்கி அவன் மீதி
லுன்தடி குலுக்கி சினங்கொண்டு
சாடுவி ராளுலக் காரியங்
கூடுங் காணாண்டே.

---

உருமா - தலையிற் கட்டும் தலைப் பாகை
கடுக்கென - மன்திற் தைக்கும்படியாக
தெந்தனப் பேச்சு - குத்தல் பேச்சு
குடிலம் - வஞ்சகம்
கிரீடம் - தலையில் அணியும் அணிகலன்
முந்தி - முன்னோடி
தாழைக்கரைப் பள்ளி - தாழைக்கரையைச் சேர்ந்த பள்ளிப்பெண்
சந்தடி - சத்தம்
சாடு - திட்டு

96. வித்தென் றுபாயஞ் சொலினாச்சி
முத்தன் சாராயம் மேல்முக
வேலையிற் சுள்ளுந் தினசரி
மூனூர்க் கள்ளும்

பத்தரைச் சலகை அளந்து கொ
டுத்திரச் சலகை கூட்டம் போல்
பணப்படி கொடுத்தா னிளையவள்
குணப்படி முடித்தான்

இத்தனை நேர மவள்க் கம்பு
வைத்துப சாரஞ் சொல்லி வந்
தெந்தனை யடித்தா னிளையவள்
மைந்தனை யெடுத்தான்

நித்தமும் வாது அவனக்குச்
சத்திய மேது பிறர்மனை
நீடுங்கால் புழுக்கக் குட்டையில்
போடுங் காணாண்டே

97. சிகையொரு பாக மிளையவள்
தகையதி மோகங் கொண்டு நைந்
தேங்கியும் நலியா னவள் தலை
தாங்கவுஞ் சலியான

---

| | | |
|---|---|---|
| வித்து | - | விதை |
| உபாயம் | - | உதவி |
| நாச்சிமுத்தன் | - | ஒருவன் பெயர் |
| சாராயம் | - | போதைப்பொருள் |
| மூனூர்கள் | - | ஊரின் பெயர் |
| பத்தரைசலகை | - | பத்தரை சலகை என்ற அளவீடு |
| பணப்படி | - | செலவுப்பணம் |
| உபசாரம் | - | வரவேற்பு |
| குட்டை | - | தண்டனை (பண்ணையிற் பணியாளர் தவறு செய்தால் அவர்கள் காலில் கட்டப்படும் விலங்குக் கட்டை.) |
| சிகை | - | முடி |
| அதிமோகம் | - | அதிக விருப்பம் |

புகையிலைக் கண்ணிக் கவனொரு
வகைதுகை பண்ணிக் குழி நெல்லைப்
பொட்டியி லளந்தான் சிதம்பரஞ்
செட்டியி லளர்ந்தான்

நகை பத்துப் பொன்னு மதற்கொரு
துகை வத்துப் பின்னுஞ் செயத்தை
ராசியில் நாளும் வேல
னாசாரியைக் கேளுஞ்

சகலமுந் தனக்கு ஒருமுழத்
தகலமுண் டெனக்குக் கொடுத்திட்ட
சடக்கனைக் காண்டே தினமடி
தொடுக்கு வீராண்டே.

98. வைப்பென்று பேணி வடகரைச்
சுப்பய்யன் காணி நெல்லஞ்சு
மாட்டினில் பிடித்தா னிளையவள்
வீட்டினில் கொடுத்தான்

மெய்ப்புறத் தோணும் ராசிநெல்
லப்படிக் காணுமவன் சொல்லை
மெய்யென்று குறிப்பீர் நான் சொன்னால்
பொய்யென்று சிரிப்பீர்

தப்பரை யாச்சே தவனுக்கு
செப்பரை யாச்சே தமிழ்க் கேட்டுச்
சலகை நெல் லெடுத் தான் கருந்தம்பிப்
புலவர்க்குக் கொடுத்தான்

---

| | | |
|---|---|---|
| குழிநெல் | - | நெல் அளவு |
| பொட்டி | - | பெட்டி |
| சகலம் | - | அனைத்தும் |
| வைப்பு | - | விருப்பத் துணைவி |
| மெய்ப்புறம் | - | உண்மையின் பக்கம் |
| தப்பரை | - | தப்பறை - கபடம் (பொய்) |
| செப்பரை; செப்புரை | - | சொல்லும் செய்தி |

கைப்பில னாலே பள்ளன்
னுள்ப்புலன் மேலே தெரிந்துடன்
கண்டிப்பாய்ப் பிடித்தே சிக்கெனத்
தெண்டிப்பீ ராண்டே.

99. வடகரைப் பள்ளி! யாசையின்
றிடையர்த் தள்ளி னாலன்றி
மாட்டையும் பாரான் உழுவயற்
காட்டையுங் காரான்

குடையொன்று பிடித்தான் கெருவித
நடை யொன்று படித்தான் பணமுண்டு
கோடிக்குந் துதித்தா பிரமிப்பண்
ணாடிக்குங் கதித்தான்

தடையில்லைச் சொல்லும் புகையிலைக்
கடைவிலை நெல்லுஞ் சரியென்று
சம்பா நெல்லளந்தா னவனுக்குத்
தென்பாந் துளந்தான்

விடையமு மிலையே யவனுக்குத்
தடையமு மலையே முதுகடி
வெடித்திடச் சினத்தே மரத்திலிட்
டடித்திடி ராண்டே.

---

| | | |
|---|---|---|
| கைப்பிலன்; கைப்பலன் | - | உடனடி பலன் |
| சிக்கென | - | உறுதியாக |
| வடகரைப் பள்ளி யாசையின்றி | - | வடகரைப் பள்ளி விருப்பின்றி |
| கெருவி நடை | - | மிடுக்கான நடை |
| கதித்தான் | - | கூறினான் |
| விடையமுமிலையே | - | செய்தியேதும் இல்லையே |
| தடையமுமிலையே | - | அடையாளமும் இல்லை |
| முதுகடிவெடித்திட | - | முதுகில் அடி பலமாக விழ |

100. தீட்டின மரத்தில் கதுமை
காட்டுவ னுரத்தில் நாணிவன்
தெட்டுக்கும் விலக்கா மெனக்கவ
னெட்டுக்கு மிலக்கான்

தாட்டிமை யோங்கிக் கண்ணப்பன்
வேட்டியை வாங்கி யிளையவன்
தம்பிக்குக் கொடுத்தா னான் சொல்லும்
நம்பிக்கை விடுத்தான்

ஆட்டின யெள்ளும் அதிரசங்
காட்டி நெய்துள்ளு மென்பதும்
அறிந்தறி யீரோ ஊர்க் கெல்லாம்
பொருந்தவ தூரோ

மேட்டிமை போக புளியாக்கை
வாட்டிமெய் னோக முதுகெல்லாம்
வெடித்திட அறைந்தேன் குட்டையில்
அடித்திடி ராண்டே.

101. கோடுவைத்த மூத்தபள்ளி கூறிநடந் தாள்னத்தின்
பேடுவைத்த பள்ளன் பிரதியுடனே கீர்த்தி
நாடுவைத்த மால்சாமி நாதேந்திரன் பண்ணைவயல்
ஆடுவைத்த சேதிதங்க ளாண்டையுடன் சொல்வானே.

---

| | |
|---|---|
| தெட்டு | - எத்து |
| கவன் | - ஓர் கருவி |
| தாட்டிமை | - சாமர்த்தியம் |
| ஆட்டின எள்ளும் அதிரசம் | - ஆட்டின் எள்ளில் கிடைக்கும் பிண்ணாக்கும், சுவையான அதிரசம் |
| புளியாக்கை | - புளியங்குச்சி அல்லது புளிய வார் |
| வாட்டி மெய்நோக | - உடல் நோகும்படியாக |
| கோடுவைத்த | - வஞ்சனை எண்ணம் கொண்ட |
| பேடு வைத்த | - காமம் கொண்ட |
| கீர்த்தி | - புகழ், சீர்த்தி |

102. துலங்கும் பெரிய நல்லி காணியுஞ் சுப்பய்யன் காணி
தோற்றும் பெருமாள் கோயிற் காணி ஆற்றடி வயலும்
இலங்கி வளரும் புளியடி வயலும் நாவலடியும்
இஷ்ட்டம்பெருகுங் குட்டக்குள முங் கட்டை வெட்டியும்
பலன் பொருந்திய திருவண்டி வயலும் மஞ்சள் காணியும்
பூலாவடியுஞ் சோழ வயலும் வேலாங் காணியும்
பலன்பெருஞ் சிவனா பட்டாரமுந் தோணிக் காணியும்
பசற்றெல்லாம் பட்டி வைத்ததே வெகுதிட்டங்
காணாண்டே.

103. பாரிரண்டு வைத்த பள்ளன் பண்புநிச மென்றுமதி
காரிரண்டு வார்த்தை கடவாமலே விரைந்து
பேரிரண்டு பள்ளர் பிடித்து வரவே கொடுபோய்
கூறிரண்டு கால்க் குமரக் குட்டை யடித்தானே.

104. பள்ளனையுங் குட்டைதனிற் போட்டா - னென்ற செய்தி
பண்புடனே யிளைய பள்ளி கேட்டாள்
தள்ளரிய துயரமுற்றுக் கொண்டாள் - சீக்கிரத்தில்
தானோடி வந்தவனைக் கண்டாள்

---

பெரிய நல்லிகாணி
சுப்பய்யன் காணி
பெருமாள் கோயிற் காணி
ஆற்றடி வயல்
புளியடி வயல்
நாவலடி, குட்டகுளம்
கட்டைவெட்டி
திருவண்டி வயல்
மஞ்சள் காணி
துலாவடி, சோழ வயல்
வேலாங் காணி
தோணிக்காணி
— வயற் பெயர்கள்

வார்த்தை கடவாமல் - பேச்சு மாறாமல்

குட்டை - விலங்கு

தள்ளரிய துயர் - தவிர்க்கமுடியாத துன்பம்

வள்ளமுலை மீது கண்ணீர் வடித்தாள் - மூத்தபள்ளி
வஞ்சினை யிதென்று பல்லைக் கடித்தாள்
மெள்ளவந்து பள்ளனிடந் துரைப்பாள் - உனக்கு வந்த
வின்னய மறிந் திலனெனக்கை நெறிப்பாள்

105. கொண்ட தொரு கணவனென்று மிலையே - சக்களத்தி
கூறினாள் திகழ் பொய்யும் புலையே
கண்டவர்கள் விண்டு சொல்வார் கோடி - சொன்னாலுங்
கைப்புண்ணுக்குண்டோ பெருங் கண்ணாடி
பண்டுமைக் கொண்ட பண்ணைக்காரன் - மூத்தபள்ளி
பச்சமுற நடக்குமதி சூரன்
மண்டலத்தி லறியேனிய பேச்சு - தலைமுறையில்
வாராத குறை வரவு மாச்சு

106. குட்டைதனில் அடிக்க வந்த சாரமெதிர்த்து நின்று
கூறினால் தெரியும் விப காரங்
கட்டுடனு னதுபரையெல்லாம் வெல்வேன்போ வீசுக்
கச்சேரிக் கேகியப்பால் சொல்வேன்
நட்டனை செய்தானினப் பங் கண்டோ - நமது குற்றம்
நாலுபேர் சொலுஞ் சாட்சி யுண்டோ
தட்டி வைத்தி டாதை யென்ன யிடும்பா - யெங்கள்துரைச்
சாமிநா தேந்திரன் பண்ணைக் குடும்பா.

---

| | | |
|---|---|---|
| வள்ளமுலை | - | வளமான கொங்கை |
| வஞ்சினை; வஞ்சனை | - | உள்நோக்கு |
| சக்களத்தி | - | மாற்றாளான மனைவி |
| விண்டு சொல்வார் | - | விதந்து கூறுவர் |
| பச்சமுற | - | ஒருபக்கமாக |
| அதிசூரன் | - | பெருவீரன் |
| தலைமுறை | - | பரம்பரை |
| விபகாரம்; விவகாரம் | - | பிரச்சனை |
| கச்சேரி | - | ஆடற்பாடல் |

107. சமைய மிதுவல்ல வடிமின்னே - மூத்தபள்ளி
தான் வரு முன்னே நடனான் சொன்னே
அமையாத முதலைக் கடித்தாலே - கடிநீக்க
அடிவயிற்றைத் தடவுமது போலே
நமை வேண்டிச் சொலும்படி யுண்பதாக்கி - நமது பண்ணை
நயினார் சொற்படி சிறையை நீக்கி
இமையாமல் விழித்திரு நீ கண்ணே - உன் வீட்டில்
இப்பொழுது வருவனடி பெண்ணே.

108. தாதுகொண்ட திண்புயமே சார்ந்த பண்ணைக் காரனிடங்
கோதுகொண்ட குண்டனிகள் கூறிமன தாராமல்
வாதுகொண்ட பள்ளனையும் மரத்தினிற் போடென்று மகா
சூதுகொண்ட மூத்தபள்ளி சோறுகொண்டு வந்தாளே.

109. ஆதியிலே மரியாதி வைத்தீரே குடும்பனாரே - பின்
அடிக்கடி கண்ணத் திடிக்கவு மானீர் குடும்பனாரே
நாதியிலாத அனாதியைக் கொண்டீர் குடும்பனாரே - உம்மை
நாடிவந்தே மனம்வாடி நொந்தாளோ குடும்பனாரே.

கட்டுடனே மாக்குட்டைக் கண்ணனீர் குடும்பனாரே - யெந்தன்
கண்ணீர் ஏழுகலத் தண்ணீக் குண்டே குடும்பனாரே
தொட்ட கணவனென்றிட்ட மராகக் குடும்பனாரே - சின்னத்
தொண்டியிங்கே சோறு கொண்டு வந்தாளோ
குடும்பனாரே.

---

| | | |
|---|---|---|
| சமையம் | - | நேரம் |
| பண்ணை நயினார் | - | பண்ணை முதலாளி |
| நமை வேண்டி | - | நம்மை வேண்டி |
| திண்புயம் | - | வளமை மிக்க தேதள் |
| குண்டனிகள் | - | குறளை |
| மனதாராமல் | - | மனது பொறுக்காமல் |
| மகா சூது | - | பெருஞ் சூழ்ச்சி |
| கண்ணடித்திடிக்கவுமானீர் | - | காமச் சேட்டையில் கண்களைச் சிமிட்டுதல் |
| நாதியில்லாத | - | துணையில்லாத |
| அனாதை | - | யாரும் அற்ற |
| சின்னத் தொண்டி; சின்னத் தொண்டிச்சி | - | சின்ன அடியாள்; இளையவள் |

110. **கலிப்பா**

சொந்தமதாய் மூத்தபள்ளி சொன்னமொழி யத்தனையும்
விந்தையாய்க் கேட்ட பள்ளன் மெல்லமணி நாவசைத்தே
பைந்தொடியே வுன்சொற்படி நடப்பே னாகையினால்
எந்தனை யிவ்வேளை கண்பா ரென்றுகந்து சொல் வானே.

111. **சிந்து**

செய்ததல்லாங் குற்றமடி மூத்த பள்ளி - யுந்தன்
சித்த மன்புவைத்திடடி மூத்த பள்ளி
அய்யய்யோ யென்செய்வேனடி மூத்த பள்ளி - பண்ணை
யாண்டவர்க்குச் சொல்ல வேணு மூத்தபள்ளி

தேக மெல்லாம் நோகுதடி மூத்த பள்ளி - என்னைச்
சிக்கென லட்சிக்க வேணு மூத்த பள்ளி
ஆகஞ்சி னேக மெல்லா மூத்தபள்ளி - தெரி
யாத மெய் விரோதங் கொண்டாய் மூத்தபள்ளி

அன்பில்லாது வன்புசெய்தாய் மூத்தபள்ளி - யுன்னை
ஆளும் மணவாள னல்லோ மூத்த பள்ளி
தன் பருந்தன தநம்பமடி மூத்த பள்ளி - யின்னந்
தர்க்கமிட்டால் வெக்கமல்லோ மூத்த பள்ளி

துலங்கும் பெரிய நல்லி காணியுஞ் சுப்பையன் காணி
தோற்றும் பெருமாள் கோயிற் காணி
ஆற்றடி வயலும் நாவலடியும்
மிஷ்ட்டம் பெருகுங் குட்டக்
குளமுங் கட்டை வெட்டியும்

---

| | | |
|---|---|---|
| மெல்லமணி நாவசைத்தே | - | மெதுவாகத் தன்னுடைய நாவசைத்து |
| பைந்தொடி | - | பசுந்தொடி |
| சித்தம் | - | உள்ளம் |
| அய்யய்யோ | - | வியப்புச் சொல் |
| நோகுதடி | - | வலிக்குதடி |
| சிக்கென லட்சிக்க | - | முறையாக அருள்புரிய |
| மணவாளன் | - | கணவன் |
| பருந்தனம் | - | பெருத்த கொங்கை |
| தர்க்கமிட்டால் | - | வாதம் செய்தால் |

பலன் பொருந்திய திருவண்டி வயலும் மஞ்சள் காணியும்
பூலா வடியுஞ் சோழவயலும் வேலாங் காணியும்
பலன் பெருஞ் சிவனா பட்டார முந் தோணிக்காணியும்
பசற்றெல்லாம் பட்டி வைத்ததே வெகு திட்டங்
காணாண்டே.

பள்ளனையுங் குட்டைதனிற் போட்டா - னென்ற செய்தி
பண்புடனே யிளையபள்ளி கேட்டாள்
தள்ளரிய துயரமுற்றுக் கொண்டாள் - சீக்கிரத்தில்
தானோடி வந்தவனைக் கண்டாள்
வள்ள முலைமீது கண்ணீர் வடித்தாள் - மூத்தபள்ளி
வஞ்சினை யிதென்று பல்லைக் கடித்தாள்
மெள்ள வந்து பள்ளனிடந் துரைப்பாள் - உனக்கு வந்த
வினையை மறிந்தில னெனக் கைநெறிப்பாள்

என்னிடத்தில் சொன்னதினால் பண்ணக் குடும்பா - காரியம்
எப்படி வசப்படுங்காண் பண்ணைக் குடும்பா
கள்ளிச் சின்னப் பொன்னிக் கென்றால் பண்ணைக் குடும்பா
பண்ணைக் காரனுட சாரமுண்டு பண்ணைக் குடும்பா

அந்த லண்டி வந்து கண்டால் மூத்த பள்ளி - யெனக்கா
காது சுபாகஞ் சொன்னேன் மூத்தபள்ளி
சொந்த மென்றி டசைந்திடாமல் மூத்த பள்ளி - நீதான்
தூரநிற்கக் காரியமோ மூத்த பள்ளி

---

| | |
|---|---|
| திருவண்டிவயல்<br>மஞ்சள் காணி, பூலாவடி<br>கோடி வயல்<br>வேளாங்காணி<br>தோணிக்காணி | - வயல் பெயர் |
| பட்டி வைத்து | - உரத்திற்காக ஆட்டை கிடை விட்டு |
| குட்டைதனிற் | - கட்டைகட்டிடும்தண்டனையிற் |
| தள்ளரிய துயரம் | - தவிர்க்க முடியாத துன்பம் |
| வள்ள முலை | - கனத்த கொங்கை |
| வஞ்சினை | - வஞ்சனை |
| கள்ளி சின்னப் பொன்னி | - இட்ட பணி செய்யாது சோம்பலாய்த் திரியும் பெண் |
| லண்டி | - வாயாடி |
| சுபாகம்; சுபானம் | - இயல்பு |

வேண்டும் பண்ணை யாண்டவர்தான் பண்ணைக் குடும்பா
- குட்டை
வெட்டிடயென் கட்டளையோ பண்ணைக் குடும்பா
தூண்டியென பால்க்கூண்டுரைத்தாய் பண்ணைக் குடும்பா
செய்தி சொல்ல யெந்தன் வல்லமையோ
பண்ணைக் குடும்பா

எவ்விதமுஞ் செவ்விதமாய் மூத்த பள்ளி வேணி
ஏற்றியன்பு சாற்றிடியோ மூத்த பள்ளி
பவ்வியங் கொண் டொவ்விச் சொல்வேன்
பண்ணைக் குடும்பா - தெய்வம்
பாருக்குள் நம்மைக் காக்க வேணும்
பண்ணைக் குடும்பா.

112. **கலிப்பா**

என்று மந்த மூத்த பள்ளி யின்பமுறக் கூறிப்பால்
சென்று குட்டை நீக்கிச் சிறைவிடுவிப் பேனெனவே
மன்னுலகெல் லாமறிய மன்னனுட் வார்த்தையினால்
அன்றிசைந்து தங்கள் பண்ணை யாண்டவனைக் கண்டாளே

113. **சிந்து**

ஆண்டவனே யென்னை யாண்டவனே பண்ணை நாயனே
- யெனக்
காதரவே யுந்தன் பாத மல்லா தில்லை நாயனே
கூண்டுமன்பாய் மனம்பூண்டு வந்தேன் பண்ணை நாயனே
- செய்த
குற்றமெல்லா மனதுற்றுப் பொறும் பண்ணை நாயனே

செய்யாத குற்றங்கள் மெய்யாகச்செய்தாலும் நாயனே - தங்கள்
சித்தம் பொறுத்தன்பு வைத்திட வேணுமென் னாயனே
கையாரக் கண்ட களவுஞ் சகிப்பீரே நாயனே - பள்ளன்
காவிலினால் விருதாவில் னொந்தான் பண்ணை
நாயனே.

---

தூண்டியென - தூண்டில் என
வல்லமை - வலிமை
செவ்விதம் - நல்ல விதம்
மன்னுலகம் - இவ்வுலகம்
நாயனே - நாயகனே
ஆதரவு - துணை
பாதம் - அடி
சித்தம் - உள்ளம்

வடித்திடுங் கள்ளைக் குடித்திடும் பேர்க்கெல்லாம் நாயனே - புத்தி
மட்டென்று சொல்வதுதிட்டமல்லோ பண்ணை நாயனே
துடித்துமுன் சொன்னேன் குடித்திடும் புத்தியால் நாயனே மிகச்
சொன்னதினால் மனவின்ன முண்டா பண்ணை நாயனே.

தூங்கிய கொங்கைக்குத் தாங்கல்வ யால்லோ நாயனே - பிள்ளைத்
தொட்டிலற்றால் பூமி கிட்டிய தாயல்லோ நாயனே
நீங்கிய றியாத்துயர் தாங்குவனோ பண்ணை நாயனே - பள்ளன்
நித்தமும் வாடிமலைத் தன்னகாண் பண்ணை நாயனே.

நாடுங்கணவர்கு மன்றோடிச் சொன்னாளென்று நாயனே - யிந்த
நாட்டிலுள்ளோர் வசை சூட்டுவரோ பண்ணை நாயனே
வாடும் பயிருக்குச் சாடிய மேகம்போல் நாயனே - குட்டை
மாற்றிவைத் தேவெளி யேற்றிட வேணுமே நாயனே

வாய்(த்த)து தென்றே யணை யேத்தஞ் செய்தாரின்று நாயனே தண்ணீர்
மால் வழியாக வாய்க் கால்வழி வந்துதென் நாயனே
ஏத்தபொன் னேர்க்கட்ட மூர்த்தமிட்டால் பண்ணை நாயனே - பள்ளன்
இல்லாமலே ஏருழும் வல்லாருண்டோ பண்ணை நாயனே

---

| | | |
|---|---|---|
| கள் | - | பனைமரத்தில் இருந்து பெறப்படும் மது |
| மட்டு | - | குறைவு |
| மனவின்னம் | - | மன வருத்தம் |
| தூங்கிய கொங்கை | - | வயது முதிர்ச்சியினால் தளர்ந்த முலைகள் |
| நீங்கியறியத்தார் | - | போகாத் துன்பம் |
| பொன்னேர் | - | முதல் ஏர் (உழவு தொடங்க நடத்தப்படும் முதல் ஏர்) |

அப்பணை வேணுமுத லப்பிணை நானல்லோ நாயனே - மேலும்
அக்கரை யேது தாழ்க்கரைப் பள்ளிக்கு நாயனே
குப்பய்யர் பஞ்சாங்கச் செப்பமென்றா ரின்று நாயனே - பள்ளக்
குட்டையை வெட்டியே விட்டிட வேணுமென் நாயனே.

114. **விருத்தம்**
மண்டலத் தோர்புகழ் சாமிநாத யோக்கியன்
மனமகிழ் பண்ணைக்காரன் மகிழ்ச்சி கூர்ந்து
பண்டுவந்த மூத்தபள்ளி மொழிதப் பாமல்
பருமரக் குட்டையை நீக்கிப் பள்ளன் றன்பால்
விண்டிதஞ் சேர்மொழி யுரைத்துச் சந்தம் பூசி
வெகுமானங் கொடுக்குமந்தப் பகுமானத்தால்
கண்டுழ வெற்றினங்கள் விரை டீ தெல்லாங்
கைவசமுண் டாச்சு தென்று கருதினானே.

115. சம்பா மிளகி யன்னதாளி சித்திரக்காலி
சன்னப் பூம்பாளை முத்து வர்ணச் சம்பா
கொம்பாளை வெள்ளை மலை மீண்டளரிக் கிராவி
கொதும்பை சீதா போகங் குளித்தான்
அம்பொருக நின்ற செந்தாழை காடைக் கழுத்தான்
அழகிய மணவாளன் குளவாழை நெல்
வெம்பா தாம்பான் வீதி விடங் கன்மரு
வில்லி பனை முகரன் வெந்தயச் சம்பான்

---

| | | |
|---|---|---|
| முதல்பிணை | - | முதல் உத்திரவாதம் |
| குப்பய்யர் பஞ்சாங்கம் | - | குப்பய்யர் கணித்த பஞ்சாங்கம் |
| மண்டலத்தோர் | - | இம்மண்ணின் மக்கள் |
| சாமிநாத யோக்கியன் | - | தென்கரை நாட்டு அரசன் |
| பருமரக் கட்டை | - | பருமரத்தால் செய்யப்பட்ட தண்டனைக் கட்டை |
| விண்டிதஞ்சேர் மொழி | - | கன்னல் மொழி |
| வெகுமானம் | - | பரிசு |

**நெற்பெயர்கள்:** சம்பா, மிளகி, அன்னதாளி, சித்திரக்காலி, சன்னப் பூம்பாளை, முத்துவர்ணச் சம்பா, கொம்பாளை, வெள்ளைமலை, சீதாபோகம், குளித்தான், செந்தாழை, காடைக் கழுத்தான், அழகிய மணவாளன், குளவாழை, வெம்பா, தம்பான், வீதிவிடங்கன், மருவில்லி, பனைமுகரன், வெந்தயச் சம்பான்

116. மன்னுஞ் சேர்குரும்பை மணல்வாரி பாரக் கடுக்கன்
மல்லி பிறங் கலமிட்டான் மாலைப் புத்தன்
பன்னுங் கஷ்த்தூரி வர்ணன் அம்பலாவணன்
பூசைப்பாடி கடுகு சம்பாக் கொடைக் கழகன்
புன்னை வனச் சம்பா நற் பொசும்பா விங்கி நாரணன்
புளுகு சீரகச் சம்பாக்கள் வாரி நெல்
தன்மையாக யிந்த வகைக் கன்பது சலகை
தம்பா பிள்ளை பாலுண்டு தெம்புகா ணாண்டே.

117. வெற்றிபுனை வித்துவகை மேவும் பெருங் கவுண்டென
உற்றமொழி சொன்ன பள்ளன் உம்மைக்கண்டு வண்மையதாய்
நற்றபுகழ்சேர் சாமிநாத வேளைத் துதித்து
மற்றுமுள வெற்றினமும் மாட்டியல்பு சொல்வானே.

118. வெள்ளை சிவலை கருமரையன் படலைக் கொம்பன்
மேகவர்ணன் பனைங்காரி வெடிவாலன்
குள்ளைமணிப் பூதன்முத்து நிறத்தான் பெரிய மோளை
குட்டைக் கொம்பன் கூடு கொம்பன் கூனவாலன்
துள்ளுங் கபாடப் புல்லை யெள்ளுப் பூ நிறத்தான் பசுத்
தொடுத்தான் கடுக்காய் வெள்ளை தொழுப் புகுந்தான்
பள்ளை நிறத் தானிந்த விதத்திலுண் டாயிரமே
பண்ணைக் குழவு மாடும் பாரீ ராண்டே.

---

**நெற் பெயர்கள்:** குரும்பை, மணல்வாரி, பாரக்கருக்கன், மல்லி, பிறங்கலமிட்டான், மாலைப்புத்தன், கஷ்தூரி வர்ணன், அம்பலவாணன், பூசைப்பாடி, கடுகுசம்பா, கொடைக்கழகன், புன்னைவனச் சம்பா, நற்பொசும்பா, விங்கி நாராயணன், புளுகு சீரக சம்பா வாரி நெல்.

| | | |
|---|---|---|
| வெற்றிபுனை வித்துவகை | - | ஊன்றினால் முளைக்கும் திறம் படைத்த விதைகள் |
| உற்ற மொழி சொன்ன | - | மனதுக்கேற்றபடி சொன்ன |
| மாட்டியல்பு | - | மாட்டின் இனம், வகை, தரம் போன்றவை |

**உழவு மாட்டின் பெயர்கள் :** வெள்ளை, சிவளை, கருமரையான், படலைக் கொம்பன், மேகவர்ணன், பனைங்காரி, வெடிவாலன், குள்ளைமணி, மணிப்பூதன், முத்துநிறத்தான், பெரிய மோளை, குட்டைக் கொம்பன், கூடு கொம்பன், கூன வாளன், துள்ளுங் கபாடப் புல்லை, எள்ளுப்பூ நிறத்தான், பசுத்தொடுத்தான், கடுக்காய் வெள்ளை, தொழுப் புகுந்தான், பள்ளை நிறத்தான்.

119. **தரவு**

உந்தளைக் குமரவேளர்குவன் மூவேந்தர் தம்மை வென்ற
தாஷ்ட்டிகம் போலெங்கள் துரைசாமி நாதவேள்
விளைக்குஞ் சகர்பு
ரிந்த மாற்றலர்தம்மை வென்று மேழிக்கொடி பிடித்த காளையிலே
உழைக்குலம் போல வாடி யொளித்தவ ராயிரத்தை
ஒண்டிகொழு மண்வெட்டிகள் கண்டுமே செய்தேன்
விளைக்கும் பல்லர்க்குக் கொம்பு தண்டிகை சூரிய பானை
வகையாயுள வெற்றினம் வைத்தேன் காணாண்டே.

(நாளேரிட அழைத்தல்)

120. செந்தமிழ்க் கீயாலோபர் முதுகு நரம்பை யெல்லாந்
திருத்தி வடக்க யறாய்ப் பொருத்திக் கொண்டேன்
முந்திச் சமர்க் காற்றாமலேறிந்தவ ரீட்டியெல்லாம்
முறித்துப் படல்க் கம்பையாய்த் திருத்தி வைத்தேன்
ஐந்தருக நிகருஞ் சாமிநாதவேள் பண்ணை தனக்
காருமுஷ்தெதிகள னேகமுண்டு
வந்து முகிர்தம் பார்த்து நமது சுப்பய்யன் காணி
வயலிலே நாளேரிட வாரீராண்டே.

---

| | | |
|---|---|---|
| தாஷ்டிகம் | - | அகந்தை |
| சமர் | - | போர் |
| மாற்றலர் | - | எதிரி |
| மேழிக்கொடி | - | வேளாண் கொடி |
| கொழு, மண்வெட்டி | - | வேளாண் கருவிகள் |
| செந்தமிழ்க் கீயா லோபர் | - | தமிழ் கற்றோருக்கு உதவாத கருமிகள் |
| முதுகு நரம்பையெல்லாந் திருத்தி | - | முது நரம்பை முறுக்கேற்றி ஒடித்துத் திருத்தி |
| வடக்கயிறு | - | தடித்த கயிறு |
| படல்கம்பு | - | கூரைக்கம்பு |
| சுப்பய்யன் காணிவயல் நாளேரிட | - | சுப்பய்யரின் காணி வயலுக்கு உழவு செய்ய |

121. **கலியப்பா**

தோய்த்துழவு மாடுவிரைச் சொல்லெற்றினங் கள்முதல்
சோந்துதென்று பள்ளன்மிகச் செப்பியபோ தென மகிழ்ந்து
வாய்ந்த சுப யோகம் நலமான நல்நாள் தனைக் கண்
பாய்ந்த பண்ணைக் காரன்முன் பஞ்சாங்கம் படிக்க வந்தாரே.

122. **தரவு**

சுக்கிரவாரஞ் சதுர்த்தி யுத்திராடம் நன்மை யென்று
சுப்பய்ய னமுர்த யோக மிப்போ தென்னவே
மிக்காகவே பஞ்சாங்கந் தனைப் பார்த்துச் சொல்லும்போது
மேஷம் பண்ணைக்காரன் றன்னேவலினால்த்
தொக்காகப் பள்ளரெல்லாங் கலப்பைச் சஞ்சீவங் கொண்டு
சொம்பா யெடுத்து வரத் தென்பாகவே
முக்காலும் நஞ்சு குணங் கண்டே சுப்பய்யன் காணி
முகர்தமாய் நாளேரிடத் தொகுத்தனரே.

123. நல்லசுப வேளையில் நாளேரிட்டிடும் பள்ளர்
நன்மையாக விரைதன்னை நாற்றுப் பாவவே
வல்லமைசேர் பிரமிப் பண்ணாடி கண்ணன் புகழ்
வாய்த்த பழனியாண்டி நேர்த்தியதாய்
சொல்லும் பருசனம் கனபழனி யாண்டி கருப்பன்
துலங்கும் பழனியாண்டி நலங் கொண்டுமே
குல்லை மலரைச் சூடிச் செல்வம் பெருகும் பள்ளர்
கூட்டமுடன் மாட்டை யேரு பூட்டி யுழுதார்

---

| | | |
|---|---|---|
| சோந்துதென்று | - | சோர்ந்தது என்று |
| சுபயோகம் | - | நல்ல யோகம் |
| சுக்கிரவார் | - | வெள்ளிக்கிழமை |
| சதுர்த்தி | - | நான்காம் பிறைநாள் |
| உத்திராடம் | - | 27 நட்சத்தஙர்களில் ஒன்று |
| மேஷம் | - | பன்னிரு ராசியில் முதல் ராசி |
| நல்ல சுபவேளை | - | நற்காலம் |
| குல்லை மலர் | - | வெட்சி மலர் |

124\. பூட்டும் நுகத்தைக் காளை மேட்டிமை யாகச் சிம்பிப்
புலிபோலெழுந்து மீறிப் போகும் போது
வாட்டமில்லாமல் பண்ணைக் குடும்பன் சினந்து சுற்றி
வட்டமிட்டு காளை தன்னைக் கிட்டி மிகவே
கூட்டிப் பிடிக்க வெகு தாட்டிமையாகக் காளை
கொம்பினாலே முடிக்கிச் சிம்பும் போதலே
தீட்டும் புகழ்சேர் பள்ளன் மீட்டு மனந் தழன்று
தியங்கி யகவுமதி மயங்கினனே

125\. **கலிப்பா**

கள்ளமுற வோயருது கைக்கடங்கா மல்பாயப்
பள்ளன் மதி சோர்ந்த நிலை பார்த்துமந்த மூத்தபள்ளி
மெள்ள வரும் போது விளங்கு தாழைக் கரையில்
குள்ளி சின்னப் பள்ளி மிகக் கூடிவர நாடினனே.

126\. **சிந்து**

காராணை தனைப் பாய்ந்து பிடித்தாயின்று பசுங்
கன்று பாய்ந்ததற்கு மனந் துடித்தாய்
வாராத வருசை வரலாச்சே வீமனுக்கும்
வலுவான பிலனோடிப் போச்சே
பாராம லுனக்களித்த விருந்தோம்(ப) தாழைக்கரை
பள்ளி சின்னக்குள்ளி யிட்ட மருந்தோ
சாராயங் குடியெழுந்து கொள்ளாய் எங்கள் துரைச்
சாமிநாதேந்திரன் பண்ணைப் பள்ளா.

---

| | | |
|---|---|---|
| நுகம் | - | நுகத்தடி |
| மேட்டிமை | - | அகந்தை |
| தாட்டிமை | - | அகந்தை |
| சிம்பும் | - | சிலிர்க்கும் |
| கள்ளமுற | - | குற்றமுற அல்லது கபடமுற |
| குள்ளி | - | குட்டையானவள் |
| காராணை | - | யானை |
| பசுங்கன்று | - | இளையகன்று |
| வீமன் | - | பஞ்சபாண்டவரில் ஒருவன் |
| சாராயம் | - | மதுவகை |

127. வலிய புலிதனைப் பிடித்துக் கொல்வாய் - யெருது குத்த
மதிமயங்கி வீழ்வ தென்ன சொல்வாய்
கலிகால மகிமை செய்த வாதோ - வருமூத்த
கள்ளி யந்தப் பள்ளி செய்த சூதோ
நலியாமல் எழுந்திருக்க வேணும் - வளர்காளி
நாயகி தன்கிறுபை யென்று தோணும்
சொலுவாய்மை தெரிந்து மனங் கொள்ளாய் - கங்கை குலத்
துரைசாமி நாதன்றன் பண்ணை பள்ளா

128. இவ்வாறு பள்ளியர்கள் ஏங்கி மிகவே யியம்புஞ்
செவ்வாய் அமுர்தஞ் செவியில் துளைந் தொழுமே
அவ்வார்த்தைக் காதுக்கு அவுஷதம் போ லோயெழுந்து
வெவ்வாய்ப் புலிபோல் மிகச்சீறி நின்றானே

129. **தரவு**
சீற்றமுடன் எழுந்து
தோற்றும் படியே வார்த்தை விண்டான் - பக்கஞ்
சேர்ந்த பள்ளரைப் பார்த்துச்
சார்ந்த பழமை சொல்லிக் கொண்டான்
காற்றின் விசைபோ லோடிக் கடந்த காளையைப்
பூட்டிப்பிடித்தான் - கங்
கழுத்திற் சேர்த்து தாருக்கம் பினால் தட்டி யடித்தான்

வையகம்புகழுந்தங்கள் தெய்வந்தனை வணங்கித்தொழுவான்
உழுவார் சினந்து தன்தேரைப் புகழ்ந்து கட்டியுருவான்
தொய்யுஞ் சேருழுத செய்யிலே பரம்பு கட்டினான் - மலர்
சூடியே பெருங் கண்ணாடி போல் வரப்பு வெட்டினான்

---

| | | |
|---|---|---|
| எருதுகுத்த | - | மாடு முட்ட |
| கலிகால மகிமை | - | காலத்தின் மாட்சி |
| கிறுபை; கிருபை | - | அருள் |
| செவ்வாய் அமுக்தம் | - | இதழால் தரப்படும் முத்த |
| அவுஷதம்; ஒளடதம் | - | மருந்து |
| வெவ்வாய்ப்புலி | - | கொடிய வேங்கை |
| விண்டான் | - | சொன்னான். |
| தாருக்கம்பு | - | மாட்டை அதட்டி ஓட்டப் பயன்படும் கம்பு |
| தொய்யும் சேருழுத செய் | - | பிரம்பப்பிடிப்பதற்கு தயார் செய்ய வேண்டி சேறு போல நிலத்தை உழுதல் |
| பரம்பு கட்டினான் | - | சேறாக உள்ள வயலை சமதள மாகச் செய்யும் வேளாண் பணி |

ஏக மாகவு மனேக வேலை யாளை யேவினான் - மனது
இன்பமாகச் சன்னச்சம்பா விரையை நாற்றுப் பாவினான்
வாரு பொருந்து நாற்றுச்சாய்கை யெறிந்து துடிமீறினான் - மன
வாரம் படைத்துப் பண்ணைக்காரனிடத்தில் வந்து
கூறினான்

மாற்றவர் போற்றிய ராமன் சாமிநாத
மன்மதவேள் - தனது பண்ணை வயல்கள் தோறும்
நாற்றை யெல்லாம் நடவேணு யென்றே பள்ளன் - நயி
னார்க்குச் சொல்லி மற்றை நாளில் தானே

தோற்று மயில் பள்ளரெல்லாம் ஏருங் கொண்டே
சுப்பய்யன் காணி வயல்கள் தோறும் நீர்விட்
டேற்றி யிருசாருழவில் நறு தொழிகளாக்கி
எல்லோரும் நடப் பருவ மெனச் சொல்வாரே

130. **தரவு**

சந்த(னா) சலத்தைப் போற்றினோன் - எங்கள்
சித்தர் குலத்தை யாற்றினோன்
சாமிநாத வசீகரன் பண்ணைத்
தனது வயலிலு ழுகவே

வந்தார் வெற்றி யுகந்தார் - முற்றும்
மகிழ்ந்தார் பள்ள ரெல்லோருமே
வரம்பு திருத்திப் பரம்பு நிரத்தி
வளர்ந்த நாற்றைப் பிடிங்கியே

முந்தாமல் பயிர் சிந்தாமல் பின்
வருந்தாமல் திறமாகவே
முடிகளே கூட்டிச் சுமந்து குவிந்த
முயற்சி தெரிந்து முயற்சியாய்

சொந்த பொற்குழல் பந்தோநற்
றமைந்தோ செப்பி தாமெனுங்
குமரிப் பள்ளியர் குரவை ளோக்கிதரு
திக்கின்றாரே தெய்வந் துதிக்கின்றார்

---

| | | |
|---|---|---|
| *மாற்றவர்* | - | பகைவன் |
| *மன்மத வேள்* | - | காமன் |
| *சந்தா சலம்* | - | பொதிகை மலை |
| *சித்தர் குலம்* | - | பதினெண் சித்தர்கள் |
| *வரம்பு திருத்தி பரம்பு நிரத்தி* | - | வரம்பைச் சீர் செய்து பிரம்பு அடித்து |

131. விருப்ப மிகுந்த கருப்பிக் கன்னி
வேலாயுத பிரமி பள்ளியும்
வீரிபேச்சி மாரி ளாச்சி
வெருளிலா மனத் திருளியும்

பொருப்பு முலைத் தெய்வானை யாண்டிச்சி
புள்ளினா னென்ற வள்ளியும்
பூவை காளி சாத்தி வெனாள்
பூத்த னேரிடக் காத்தியும்

திருப்பொலி சிவனடியாள் சிவனாள்
சீராள பெரிய வீராளு
தெள்ளிமை பெரும்பள்ளிய ரெல்லாரும்
சொந்த குரவை முழக்கியே

தருப்பொலி கரன் சாமி நாத
சங்கிராமன் நனைத்து தித்துமே
சாற்றி மந்தனில் நாற்றை யெடுத்துத்
தடவியே மெல்ல நடுவரே

132. கார்க்கக்கால் வெள்ளமும் வாய்க்கால் நிரம்ப வந்த தினால்
நீர்க்கக் லேர்ப்பூட்டி நின்ற பள்ளர் சென்ற நற்பின்
பார்க்கக் காலால் நடந்து பள்ளியர்கள் நாற்று நடுத்
தீர்க்கக்கால் கண்டு பக்கஞ் செல்லக் கா லேறாதே.

133. **சிந்து**
பற்றா ரும்பணி பாதத்தான் தமிழ்க்
கற்றாரு நதி நீதத்தான்
பங்கையச் செந்திரு நிறைந்தவன் முன்பு
மூங்கையைச் சந்தன முரைத்தவன்

---

**பண்ணைப் பணி செய்யும்**
**பள்ளியர் பெயர் :** கருப்பிக்கன்னி, வேலாயுத பிரமி, வீரி, பேச்சி, மாரி, நாச்சி, திருளி, பொருப்பு முலை தெய்வானை, ஆண்டாச்சி, வள்ளி, பூவைகாளி, சாத்தி, வெணாள், பூவை, காளி, காத்தி, திருப்பொலி, சிவனடியாள், சிவனாள், வீராளு

கார்கால வெள்ளம் - மழைக்கால வெள்ளம்
பற்றாரும் பணி - மனதிற்குப் பிடித்த பணி
பங்கைய - தாமரை

சற்றா தரித்துக் காத்தவன் புகழ்
நற்றா ரனைத்துஞ் சேர்ந்தவன்
தாருனே றொற்ற காபாரி ஞாலத்
தார்புகழ் சாமிநாதப் பிரபல சீதரன்

சிற்றா லடியுஞ் சுப்பய்யன் காணியுந்
தெம்பாய் விளையச் சம்பாவைச்
செல்ல கரத்தில் நாற்றை யெடுத்து
மெல்லப் பதித்து நடச் செய்தேன்

முற்றா முனைப்பெண் காத்தியைப் பயல்
சிற்றா ளொருத்தன் சேர்த்துமே
முலையை னோக்கி கலையை நீக்கி
மேலவே பார்க்கிறான் பள்ளீரே

134. துலங்கு வல்லமைக் கிந்திரன் புக
ழிலங்கு சொல்லரிச் சந்திரன்
துத்திய மிகுந்த வசீகரன் கனமுத்
தமிழுக் கரிவாகரன்

நலஞ்சொல் லன்பரை நாட்டி னான் துதி
துலங்கு தென்கரை நாட்டினான்
நந்தா மணியை யீந்தவன் முன்பு
சிந்தாமணி யில் வாய்ந்தனன்

| | | |
|---|---|---|
| காமாரி | - | பாதுகாவலன் |
| சிற்றாலடி, சுப்பய்யன் காணி | - | உடற் பெயர்கள் |
| தெம்பாய் விளையும் | - | செழிப்பாய் விளையும் |
| முற்றா முகாலப் பெண் | - | பருவம் எய்தாத நிறிய பெண் |
| இந்திரன் | - | மருத நிலக் காட்டில் தேவர்கள் தலைவன் |
| அரிச்சந்திரன் | - | உண்மை பேசுதலைக் குறிக் கோளாகக் கொண்டவன் |
| துத்தியமிகுந்த | - | துதிமிகுந்த |
| வசீகரன் | - | அழகன் |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |

இலங்கை நகருக் கரசு நாட்டிய
யெங்கோன் சாமிநா தேந்திரன்
எல்லோரும்புகழ் நல்லி காணியில்
இசைய நாற்றை நடச் செய்தே

குலுங்க முலைப்பெண் கருப்பி யேவரும
புலன்க ளறிந்து வரப்பிலே
குருக்கு ராஞ்சி தனவாணாத் தடிவைத்
திருக்கிறான் பாரும் பள்ளீரே

135. துங்கன் ராம சுவாமி பூபதி
சுடலைமுத்து வசீகரன்
சோம மருத நாயகத் துக்கு
மாம னெனச் சொல்லி வீமனான

சங்கனி திக்கு நிகரெனச் சொலு
மெங்கள் சாமிநாத தேந்திரன்
சம்பா வயலில் நாற்றைப் பள்ளியன்
தென்பாய் மகிழ்ந்து நடச் செய்தேன்

மங்கை குப்பியை நோக்கியே முத்தன்
கொங்கையில் துயில் நீக்கியே
வாச்சு தென்றவன் பிடிக்கிறான் வெகு
கூச்சம் போல் முகத் திடிக்கிறாள்

புங்கடிச் செய் கிடங்கிதற் கோண
மங்கு சிக்கி நீ வாவென்றே
போக்கிலே வைத்து நடத்தும் வேடிக்கை
பார்க்கலாம் வாரும் பள்ளீரே

---

| | | |
|---|---|---|
| கோன் | - | ஆயன் |
| நல்லிக்காணி | - | ஒரு நிலத்தின் பெயர் |
| துங்கன் | - | மேன்மையுடையவன் |
| பூபதி | - | அரசன் |
| சம்பா வயல் | - | ரெஷ்வயல் |
| கொங்கையில் துயில் நீக்கியே | - | காமச் சேட்டையின் காரணமாக பெண்ணின் மார்பில் தலை வைத்துப் படுத்தல் அரவம் கேட்டு மயக்கம் நீங்குதல் |
| வாச்சு தென்றவன் | - | வாய்த்தது என்றவன் |
| புங்கடிச் செய் | - | ஒரு நிலத்தின் பெயர் |

136. போரேறு பரிதாண்டி னோன் கஞ்சி
ரேறும் புகழை வேண்டி னோன்
பூமன் சாமிநாதேந்திரன் பண்ணைப்
புளியடி வயற் புரவிலே

சாராயங் கொண்ட வெளியோ பள்ளி
பூராயங் கொண்ட குறியோ
சொலுஞ் சாடைக் கோமஞ்சள் வாடைக்கோ நின்ற
தன்மைக்கோ மனதுண்மைக்கோ பள்ளன்

நேரே வாவென்று மரித்தா னுங்கள்
ஊரே போவென்று சிரித்தாள் செங்கை
நீட்டினாள் மயில் பூட்டினாள் குளிர்
ஆட்டினான் அன்பு

பாரா யுத்தர மென்றாள் பயல்
பேரே சித்திர னென்றான் திட
பாக்கிறான் கலை நீக்கிறான் வைச்சு
தாக்குறான் பாரும் பள்ளீரே.

137. புத்தி மிகத்திறம் படைத்தவன் முன்பு
சத்த சமுத்திரம் அடைத்தவன்
பொன்னார் சிலையும் வாங்கினோன் அதன்
பின்னோர் மலையுந் தாங்கினோன்

நித்தம் மலர்ப்பதம் பூண்டவன் தள
கர்த்த னெனப் புவி யாண்டவன்
நிருபன் சாமிநாத தேந்திரன் பண்ணைப்
புரசடி வயல் நடச் செய்தே

---

| | | |
|---|---|---|
| போரேறு | - | போரிடும் காளை |
| புலியவி வயிற் புரவு | - | ஒரு நிலத்தின் பெயர் |
| செங்கை | - | செவ்விய கை |
| மயில் | - | அழகிய கன்னி |
| சத்த சமுத்திரம் | - | ஓர் ஊர் பெயர் |
| தளகார்த்தன் | - | தளபதி |
| நிருபன் | - | அரசன் |
| பண்ணைப் புரசடி வயல் | - | ஒரு நிலத்தின் பெயர் |

குத்து முலைக்கனி ராக்கியைப் பயன்
முத்த னெதிர்த் துறவாக்கியே
கொண்டையை முடிக்கத் துடிக்கிறான் முலை
ரண்டையும் பிடித்துக் கடிக்கிறான்

தத்தர மிப்படி யோனென் றாள தறி
குத்தர மிப்படித் தாளென்றான்
தடத்திலே மன திடத்திலே வச்சு
நடத்துறான் பாரும் பள்ளீரே

138. கரனை யுந்திரி சரனையுந் தச
தரனையும் வென்ற ராகவன்
கர்த்தனெனச் சொல்லும் முத்து மகீபதி
மைத்துன னாகிய சீதரன்

அரனையுங் குபேரனையுந் தின
சுரனையும் பணி யோகவான்
அதுலன் சாமிநாதேந்திரன் பண்ணை
யாத்தியடி வயல் நடச் செய்தேன்

திரைபொருங் கடலென நிறைந் தொரு
பரவில் வந்தனர் புரவிலே
சேம்படி தனைக் கண்டே யிருளி
பாம்படி யென்று திரும்பியே

கரையி லிருந்த பரம னொருவன்
பதறி யெழுந்து முதரியே
கடிக்கும் பாம்பை யடிக்கத் தடிக்கம்
பெடுக்குறான் பாரும் பள்ளீரே

---

| | | |
|---|---|---|
| குத்து முலைக்கனிராக்கி | - | கூர்முனை கொண்ட மாங்கனி போன்ற கொங்கைகளைப் பெற்ற ராக்கி என்ற பண்ணைப் பணிப்பெண். |
| தசரதன்னயும் வென்ற ராகவன் | - | அன்பினால் தசரதனை வென்ற இராமபிரான் |
| சீதரன் | - | திருமால் |
| அதுலன் | - | ஒப்புமை யில்லாதவன் |

139. வள்ளர்க் கிசைந்த தன்னவன் புகழ்
விள்ளத் துயர்ந்த மன்னவன்
வாய்த்த சாமி நாதேந்திரன் பண்ணை
மதகடி கடி வயல் நடச் செய்தே

குள்ளத் திருவணை யடுத்தான் நம்பப்
பிரமி கைக் கொடுத்தான் வயல்
கோட்டிலே தெக்கு மேட்டிலே தட்டைக்
காட்டிலே மெள்ளத் தாட்டியே பய

லுள்ள முரண்டையும் பிடித்தான் முலை
வள்ள மிரண்டையும் பிடித்தான்
சினத் துன்னினான் துயில் மின்னினான்
இனிதழ்உண் டான்சுகங் கண்டான் - திலத்

துள்ளுக் கிராவொருக் காலே சிக்கி
தள்ளு கிராளே யப்பாலே பயல்
சொத்தை விசாரித்து மின்னே ரத்தில் மெய்பூ
நித்தென் சொல்லலாஞ் சொல்லும் பள்ளீரே

140. சொம்பாரும் புகழ்த் தம்பா பிள்ளையைச்
சுகிர்த மருந் .... கம்
துத்தியன் பேச்சி முத்தய்யன் றனையுந்
தேர்கின்ற லேற்றிடு சுகிர்தவான்

கொம் பருந்திடக் கருணி யாதிபன்
கோமான் சாமிநாதேந்திரன்
குலவும் பண்ணைக்கு வாய்த்த பெருமாள்
கோயில் காணி வயலிலே

---

| | | |
|---|---|---|
| மதகடி வயல் | - | ஒரு வயலின் யெர் |
| விள்ள | - | சொல்ல |
| தெக்கு மேட்டிலே | - | தெற்குப் பக்கத்து மேட்டிலே |
| கருணி | - | கருணையுள்ளவன் |
| கோமான் | - | அரசன் |

சம்பா நாற்றை யெடுத்துப் பள்ளியின்
வம்பார் தனத்தைக் குலுக்கியே
சதிரிட் டொருத்திக் கொருதியி சலித்
தானே மகிழ்ந்து நடச் செய்தே

அம்போ ருகத்தின் அரும்பைத் தனத்துக்
கடாசெய் தாயென்று மாரி போய்
அடுத்துப் பிடிங்கிச் சினத்து நிலத்தி
லடிக்கிறான் பாரும் பள்ளீரே.

141. வேந்தன் பெரிய கறுப்பண னேந்திரனை
மிகவும் தனது மக வென்றோன்
வெங்கடா சலவேளக்கு மைத்துன
னெங்கள் சாமிநா தேந்திரன்

பூந்தன் பாமரைக் குளத்து வயலில்
சாந்த மாகவு மிறங்கியே
பொங்க முலவும் பள்ளியே நெல்லாஞ்
செங்கை குவித்து நடச் செய்தே

ஏந்து தனத்தைக் கண்டு அணஞ்சி
இரண்டு பந்துனக் கேதென்றே
இருள னெழுந்து சொல்லவே - பவுன்
யாளி யறிந்து மெல்லவே

கூந்தல் அவிழ்த்து முடிக்கிறாளவள்
சோர்ந்து மேமனந் துடிக்கிறான்
கூச்ச மேதடி யென்றே யிருத்திப்
பாச்சரான் பாரும் பள்ளீரே

---

வம்பார் தனத்தைக் குலுக்கியே - ஆடவரை வட்டி செய்யும் பெருங்கொங்கையை ஆட்டியே
சதிரிட்டு - நடனமாடி
வேந்தன் - மன்னவன்
மைத்துனன் - மனைவியின் சகோதரன்
பாமரைக்குளத்து வயல் - ஒரு வயலின் பெயர்
சாந்தமாக - நிதானமாக
ஏந்து தனம் - விம்மி நிற்கும் தனம்
இரண்டு பந்து - பெண்ணின் மார்பகம்
கூச்சம் - வெட்கம்

142. கந்தணையு முகந்தனை மகிழ்ந்து
பணி சுகந்தனாங்
காமனா முத்துச் சாமிவேள் பெற்ற
கருப்பணன் வயல் வரப்பிலே

விந்தை பெற்ற குழந்தை வேலன் - கை
வீச்சிலே பொடி பூச்சிலே
வெகுளில்லாமல் முத்திருளி தான்வந்து
விரும்பவே முகந் திரும்பவே

அந்தியம் பொழு தாச்சென் றாளிது
தெந்தன் முந்தன் பேச்சென்றாள்
அரவமப் படத்தைக் காட்டென்றானுன
துறவை நடத்தி யாட் டென்றான்

பந்தடிக் கிசை சூதென் றானிது
சந்தடிக் கிசை யா தென்றாள்
படிக்குள் ளேவரப் படிக்குள்ளே சினத்
தடிக்கிறான் பாரும் பள்ளீரே

143. செஞ்சொல் பெற்ற தியாகி வெகு
நஞ்சிதஞ் சொல்லி பேகிகன்
சித்திர ரதத்தை வறுத்து நடத்தி
யெதிர்த்து மிகுத்த பரித்திரளுற்றவுடன்

அஞ்சிலர்க் கிடியேறு புகழ்
மிஞ்சு கற்பக தாரு வளர்
அங்கசன் சாமி நாதேந்திர தெய்வேந்திரன்
புங்கடி வயலில் நடச் செய்தே

---

| | | |
|---|---|---|
| கந்தன் | - | முருகன் |
| சுகந்தன் | - | மணம் மிக்கவன் |
| வெருளில்லாமல் | - | பயமில்லாமல் |
| அந்தி | - | மாலைப் பொழுது |
| அரவமப் படம் | - | பெண்ணின் அருகில் |
| ரஞ்சிதம் | - | இன்பம் |
| இடிமோது | - | இடியோசை போன்று எழுகின்ற காளை |
| கற்பகத்தாரு | - | உம்பர் உலகத்து தெய்வீக மரம் |
| அங்கசன் | - | உயர்வானவன் |

மஞ்சள் மணத்தையும் பாருங் கண்ணி
கொஞ்சுங் குணத்தையும் பாரும் ஒரு
மாதத்தினிலெதித்திய நீதத்தினைலே
முத்தனை வரச் சொன்னாள் செங்கை
தரச் சொன்னாளவன்

தஞ்சமென்ற யெட்டி வாறான் மயல்
மிஞ்சி யென்றே கிட்டி யோறான் மெள்ளச்
சாய்ந்த சனத்தி லெடுத்துத் துடையிட்
டேந்திறான் பாரும் பள்ளீரே

144. **தரவு**

நடுகை வயல் யாவும் வேரூன்றித் - தமிழ்க்குதவி
நலம் பெற் றோ ரென்னத் தழைத் தோங்கி
விடுகுறித்தும் பசலை நிறங் கொண்டு - கதிர் வாங்கி
மிக்கபால் கோதிமிக வளைந்து
தொடு பெருமைக் கற்புடைய மடவார் தனம் போலத்
துல விளைவே நித்தலை கவிழ்த்து
படிமிதிற் கதிர் சாய்தல் கண்டான் - பண்ணையர்முன்
பள்ளன் மகிழ்ந்தேகி யுரை விண்டான்

145. **கலிப்பா**

சீரார் பெரிய திருவடி நரேந்திரனருள்
தாரார் மணிபு யத்தான் சாமா நாதேந்திர வேள்
ஏராரும் பண்ணை வயலெல்லாம் விளைந்து தென்றே
காரார் முகிர்த்தக் கதிரு கொண்டு வந்தானே.

---

| | | |
|---|---|---|
| சாய்ந்த சனத்திலெடுத்து துடையிட் டேந்திரான் | - | காமச் சேட்டையில் தன்னை அணைந்த பெண்ணின் மார்பை ஏற்றித் தழுவுகிறான். |
| பசலை நிறம் | - | வெளிர் நிறம் |
| தொழு பெருமைக் கற்புடைய மடவர் தனம் போல | - | கணவன் மட்டும் கண்டு மகிழும் படியாகப் பிறர் காணதவாறு தனது அங்கங்களைப் போற்றிக் காக்கும் கற்புடைய பெண்ணின் சிறப்புறு முலை |
| மணிபுயத்தான் | - | திரண்ட தோள் வலியன் |

146. அன்று பள்ளன் கதிரு கொண்டு வந்
தன்று களித்து மற்றை நாள்
அடுத்த பள்ளியன் - பிள்ள ரெல்லாந்
சென்றன் பாய் வயலிலிரங்கியே

குன்று முலைகள் குலுங்க மகிழ்ந்து
குரவை முழக்கிப் பரவிலே
கும்பு கும்பலாய் நிரை நிரை யிட்டுக்
கொய்தார் களத்திரக் கொடு வந்தார்

நின்ற பள்ளனுங் கதிரை யடித்து
நெடிய மலைபோல் குவித்த பின்
நேய மாகவே கைமரக்கால் - கொண்டு
நினைத்து ராசி யழைத்துமே

நன்றி யர்களவே யனைந்து சேர்கட்டி
நடத்துஞ் சிலவு கொண்டு...
நலம் பெறும் பண்ணை..த்தில்
நாடிச் சொலுவன் குடும்பனே.

147. **கலிப்பா**

**தார்மலிந்த திண்புயத்தான் சாமிநா தேந்திரவேள்**
**போர் மலிந்த பண்ணைதனைப் பொங்கமிகு... யெல்லாங்**
**கார்மலிந்த தியாகி பண்ணைக் காரனிடமே கடுகி**
**நேர்மலிந்து பள்ளன்வந்து நெல்கணக்குச் சொல்வானே**

---

| | | |
|---|---|---|
| குன்று முலைகள் | - | பண்ணைப் பணிப் பெயர்கள் |
| குலுங்க | | தங்களது பெருந் தனம் குலுங்க அசைக்க |
| குரவை முழக்கி | - | குலவை முழக்கி - புனித ஒலி ஒலித்து |
| கும்பு கும்பலாய் | - | கூட்டமாய் |
| தார்மலிந்த திண்புயத்தார் | - | அழகிய மாலைகள் அணியப் பெற்ற தடந்தோள் பெற்றவன் |
| போர் மலர்ந்த பண்ணை | - | நெற் போர்கள் சூழப் பெற்ற பெரிய பண்ணை |
| பொங்க மிகு | - | பரிம மிகுந்த |

148. வேண்டும் புகழ்சேர் அரசடி விக்கின
விநாயகர் பூசைதனை தனக்கே காளி
யாண்டி யிடத்தினில் சித்திரக் காவி
யிலஞ்சு சலகை நெல்லளந்தேன் 1

சங்க குழையர் சபாபதிக்குங் - கிட்டின
சாமிபடித் தரந்தனக்கும் புவி
யெங்கும் புகழ்ந்திடத் தானே யறுபத்தி
யேழு சலகை நெல்லளந் தேன் 2

வல்லி வடபத்திர காளி காமாச்சி
வளர் வேங்கமலை மன்னாட்டுத் தனி
நல்ல சம்பாவில் தயவுடனே - பதி
நாலு சலகை நெல்லளந்தேன் 3

தென் பழனாபுரி யாண்டவர் - கட்டளை
செய்யும் படித்தரந் தனக்கே மன
தன்புடனே சன்னச் சம்பாவில் முப்பத்தி
யாறு சலகை நெல்லளந்தேன் 4

ரஞ்சித மோங்குஞ் சிவப்பெருமாள் கவி
ராசன் றமிழ் தனைக்கேட்டே புகழ்
மிஞ்சவே நாற்பத்தி யஞ்சு சலகை நெல்
வெந்தயச் சம்பாவி லளந்தேன் 5

தட்டும்புகழ் கொண்ட போலிசுதார் பட்டன்
சேருவை காரனுக்கன்பாய் மன
நாட்டமதாய் வங்கி நாராயணன் பதி
நாலு சலகை நெல்வளந்தேன் 6

இட்டமதாய் சித்திரை மாசம் பவாணைக்
கெல்லாற்குமே விருந்தென்றே உள்ளூறி
கொட்டணக் காரிபால் பத்துச் சலகை நெல்
கோதும்பைச் சம்பா விலளந்தேன் 7

---

வல்லி வடபத்திர காளி - வல்லி நகரில் எழுந்தருளி யிருக்கும் காளி

காமாச்சி - அருள்மிகு காமாச்சி

ரஞ்சித மோங்குர் சிவபெருமாள் - இனிமை நிறைந்த சிவப் பெருமாள்

கிட்டமதாய் - விருப்பமதாய்

விள்ளும் புகழ் சோணை யேற்றஞ் செய்யும்
விபரந் தனக்கொரு துகையாய்த் தம்பா
பிள்ளைதன் சொற்படி யாறு சலகைப்
பிரமிப் பண்ணாடி பாலளந்தேன். 8

வேண்டிய நீலநகர் வந்தகாளி
விமலிதன் பூசனை தனக்கே வெள்ளை
யாண்டி வசத்திலே முத்துச்சம்பா வினில்
அஞ்சு சலகை நெல்லளந்தேன் 9

சல்லாப மாக ரண்டாயிரஞ் சலகை
தானே களஞ்சியம் சேர்த்தேன் கணக்
கெல்லாம் விபரித்துச் சொல்லவும் பள்ளனுக்
கென்ன தெரியுங் காணாண்டே 10

149. **கலிப்பா**

இட்டமதாய் பள்ளன் இயம்புமொழி யத்தனையுங்
கட்டுடனே கேட்ட பண்ணைக் காரனின்று சென்றதற்பின்
திட்டமதாய் நீடியபூச் சேரில்தனில் வீரியம் போல்
மட்டங்கா மூத்தபள்ளி வந்து முறை யிட்டாளே

150. **தரவு**

ஞாயங் கேளாரோ அன்பினார் ஞாயங் கேளாரோ - இன்று
தானொரு பெண் பிறந்த ஞாயங் கேளாரோ
தூயங்கண்ட பண்ணை யாண்டார் ஞாயங்கேளாரோ - நானுஞ்
சொன்ன மொழி தன்னீவந்து ஞாயங் கேளாரோ 1

---

விள்ளும்புகழ் - சொல்லும்படியான புகழ்
நீல நகர் வந்த காளி - நீல நகரில் எழுந்தருளியுள்ள காளி
சல்லாபமாக - இன்பமாக
இட்டமதாய் - விருப்பமாய்
இயம்புமொழி - சொல்லும் மொழி
திட்டமாய் - தீர்க்கமாய்
மட்டங்கள் - சினம் தராத
ஞாயம் - நியாயம். - நீதி
தூயம் - சுத்தம்

பெண்டிரண்டு வைத்த பேரைக் கண்டதில்லையோ - யிந்தப்
பித்தன் தப்பிதஞ் செய்திக் கண்டதில்லையோ
மண்டலத்தில் கண்டு மெச்சிக் கொண்ட பள்ளனா - ரென்பால்
வாழும் செய்தி நாளும் அன்பாய்க் கேளும் பள்ளீரே 2

பண்ணைக்காரன் கண்ணைப் பார்த்து விண்ணப்பஞ்
செய்தால் - அந்தப்
பள்ளன் மொழி தெள்ளிமை யென்றுள்ளங்
கொள்ளுவான்
எண்ணைக்கும் நான் சொன்ன தோர்க்கு மண்ணைப்
பார்க்கிறான் - இதை
எப்படிச் சகிப்பதினிச் செப்பும் பள்ளீரே. 3

இச்சையுடன் பள்ளன் தேடிவச்ச நெல்லிலே - வழக்
கெப்படிச் சொன்னா லென்பீர் அன்பு லொன்றுண்டே
பச்சமதயாய் தாழைக்கரைப் பள்ளி தனக்கே - நட்டி
பட்டரை நெல்லாஞ் சேருக் கட்டியே வைத்தான் 4

சொம்படனே பள்ளனுக்குச் சம்பிரமாகவே - யென்னைச்
சொக்குப் பொடித்தூவினாளோ சிக்கிக் கொண்டானே
வம்பினானென வந்துக் கும்புகூடு ரானிது
மட்டுமோ யென்மீது மல்லுக்குக் கட்டு ரானடி 5

தென்புடன் குடும்பனுக்குச் சம்பிரமாகவே - நேற்றுச்
சின்னப் பள்ளி செய்த காரியம் என்னத்தைச் சொல்வேன்
வன்பு சொல்வ தேது நீ திரும்பிப் பாரடி யுன்போல்
வஞ்சக முண்டோ வீராச்சி மங்கையிற் பள்ளிச் 6

---

| | | |
|---|---|---|
| பித்தன் | - | மனநிலை சரியற்றவன் |
| மெச்சி | - | புகழ்ந்து |
| விண்ணப்பம் | - | பெரியோர் முன் பணிந்து கூறும் அறிவிப்பு |
| தெள்ளிமை | - | தெளிவு |
| சகித்தல் | - | பொறுத்தல் |
| இச்சையுடன் | - | ஆசையுடன் |
| பச்சுமதாய் | - | அன்பாய் |
| சொக்குப் பொடி | - | மயக்கி |
| மல்லுக்கு | - | சண்டைக்கு |
| தெம்புடன் | - | உற்சாகத்தோடு |
| சம்பிரன் | - | மகிழ்ச்சி மிக்கவன் |

சக்களத்திக் கேளடி தாழைக்கரைப் பள்ளி - நேற்றுச்
சம்பா நெல்லைக் கொண்டு வந்த தென்பாய்ப் பேசுகிறாய்
வக்கனையே சொல்கிறாய் துலக்கமாகவே - போட்டி
வச்சுமூட்டி வீராச்சி மங்கையிற் பள்ளி 7

உன்னியுன்னிச் சொல்வதெல்லாஞ் சின்னத்தனமே - உந்தன்
உக்கிரம் அறிவேனடி தாழைக் கரைப்பள்ளி
சன்னையுஞ் சடையும் நிதர சொன்னா லென்னடி - யுந்தன்
சங்கை யறிவேன் வீராச்சி மங்கையிற் பள்ளி 8

சங்கை யறிவே னென்ன முழங்குவ தென்னோ - உந்தன்
சன்னையெல்லாந் தாழக்கரை வள்ளியஞ் சொல்வாள்
வள்ளியனைக் கேழ்க்கு மந்தத் தன்மையைப் போலுந்தன்
வண்ண மெல்லாங் கேள் பிரமிப் பண்ணாடி
சொல்வான் 9

என்ன சொல்லப் போறனடி சின்னச் சிறுக்கி - உனக்
கிந்தவூர் குடும்ப ரெல்லாஞ் சொந்தமல்லோ
செப்பமுடன் சொன்னதை நிசப்படியல்லோ - யென்னூர்
செட்டிக் குடும்பனுக் கஞ்சு சூட்டடிப் போட்டாயே 10

துப்புடனிச் செய்தி யெல்லா மொப்பி வைப்பாயோ - சின்னச்
சுப்பக் குடும்பனைச் சொந்த வைப்பு வைத்தாயோ
அப்படிக்கி நானுட வெடுப்பதில்லையே - உன் போல்
அஞ்சு பேரை வீட்டில் வைத்துக் கொஞ்சின துண்டோ 11

---

| | | |
|---|---|---|
| சக்களத்தி | - | மாற்றாளான மனைவி |
| வக்கனை | - | சமத்காரப் பேச்சு |
| உன்னியுன்னி | - | அடுக்குத் தொடர் |
| சன்னை | - | சமிக்கை அல்லது குறிப்பு |
| சங்கை யறிவே | - | சங்கை அறுத்து |
| கேழ்க்கு - கேட்கும் | - | செவி மடுக்கும் |
| சின்னச் சிறுக்கி | - | வசைச் சொல் |
| நிசப்படி | - | உண்மைப்படி |
| துப்புடன் | - | அறிவுடன் |
| அஞ்சுபேர் | - | ஐந்து மாந்தர்கள் |

கொஞ்சமான வார்த்தை மட்டும் மிஞ்சிப் பேசுறாய் - நீதான்
குக்கல் போலக் குலையாதே தாழ்க்கரைப் பள்ளி
கெஞ்சித் திரிந்தவள் மெந்தக் கொஞ்சிப் பேசுறாய் - நானுங்
கெட்டியாக உந்தன் பல்லைத் தட்டுவேண்டி 12

முட்டாளு நீதானோ பல்லைத் தட்டுவதடி - யுந்தன்
மூக்கு முலையு மறுத்து தூக்குவேணடி
நட்டணைப் பேசுவ தென்ன முட்டிக்கால் பள்ளி - உந்தன்
நாக்கும் மயிரும் அறுத்து சாக்கிறேனடி 13

சோத்துக்குக் கெஞ்சித் திரிந்தாள் குள்ளச் சிறுக்கி - உன்னைத்
துள்ளி விழவே உதைத்துத் தள்ளுவேனடி
மூத்த குரங்கென்றும் உன்னைப் பாத்திடாமலே - ரெண்டு
முட்டிக்கால்த் தெறிக்கவே நெட்டுவேனடி 14

தொண்டன மேதுனக்கு லண்டிச் சிறுக்கி - தொண்டத்
தனமேதுனக்கு லண்டிச் சிறுக்கித் தொக்காகப்
பேசுறா யுனக் காளல்லவோ
லண்டித் தனக்காரி யென்றால் தெண்டிக்க வேணும் - பின்னும்
லட்சை கெடச் சொல்கிறாய் தங்கச்சி யல்லவோ 15

அக்கச்சி யென்றும் பாராமல் லொக்கச் சொல்கிறாய் - மனது
ஆராமலு மூப்பிளமை பாரா தென்னடி
பக்கத்தி லுள்ளோரெல்லாம் நகைக்கச் சொன்னதால் - கோபம்
பாராம லுனைத் தான்வைத பூராயமல்லோ 16

சொன்ன வசனம் பொறுத்தேன் முன்னம் போலவே - வெகு
சொந்தமாயிருக்க வேணும் விந்தையாகவே
மன்னவன் சாமிநா தேந்திர கர்ணன் பண்ணையே - அன்பாய்
வாழ்க்கிளை சூழ நன்றாய் வாழி சொல்வாயே 17

---

| | | |
|---|---|---|
| குக்கல் | - | நாய் |
| நட்டணை | - | ஆக டியம் |
| சோத்துக்கு | - | சோற்றுக்கு - உணவுக்கு |
| லண்டிச் சிறுக்கி | - | வசைச் சொல் (அடங்காப் பிடாரி) |
| லண்டி தனக்காரி | - | வாயாடி; (வாய்ச் சண்டையின் போது மாராப்பு விலகுவதையும் அறியாதவள்) பெருங் கொங்கைக்காரி |
| லட்சை கெட | - | மானம் கெட |

151. நங்கையா -வேள் மால்சாமி நாத முகிலே தழைக்கப்
பங்கையஞ்சேர் பண்ணைப் பள்ளன் பலம் பெருக
பொங்கமிகு செல்வம் பொருந்திவளர் வீராச்சி
மங்கை நகர் செல்வரே மங்களஞ் சொல் லென்றாளே

152. **மங்களம்**

மங்களம் மங்களம் - மருதானுக்கு
மங்களம் - மங்களம்
பொங்கு போதனுக்குப் புகழ் வினோதனுக்குத்
தங்கு நீதனுக்கு சாமிநாத னுக்கு (மங்களம்)

நேசனுக்குச் சருவேசனுக்குச் - சுதன்
சீசனுக்குப் பவ நேசனுக்குச் சத்தி
வாசனுக்குச் செக தீசனுக்குக்க யி
லாசனுக்குச் செய செய மங்களம் (மங்களம்)

சீவனுக்கு அனு கூலனுக்கு வளர்
ஞாலனுக்குத் தண்டைக் காலனுக்கு நம்ம
லோலனுக்கு வள்ளி லீலனுக்கு உமை
பாலனுக்கு வடிவேலனுக்கு செய மங்களம் (மங்களம்)

---

| | | |
|---|---|---|
| பங்கையம் | - | தாமரை |
| பொங்கமிகு | - | ஏற்றமாகு |
